திருத்தலப் பெருமை

தஞ்சைக் கோயில்கள்

பாகம் – 2





கல்யாணசுந்தர மூர்த்தி சுவாமி

(தண்டன்தோட்டம்)

பரணீதரன்

திருத்தலப் பெருமை

பாகம் இரண்டு

பரணீதரன்

கலைஞன் பதிப்பகம்
10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை - 600 107

Price Rs. 30

Thiruthala Perumai (Part II)

by

Bharanidharan ©

First Edition December 1991

Published by

Kalaignaan Pathipagam

T. Nagar Madras - 600 017.

Printed at :

Alaigal Achagam

Madras - 600 024.

இந்நூலில்...

'திருத்தலப் பெருமை' என்ற தலைப்பில் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஏறக்குறைய ஐம்பத்தெட்டு தலங்கள் அடங்கிய இந்தத் தொகுப்பு இரண்டாம் பாகமாக வெளி வந்துள்ளது.

பார்வதி தேவி பசுவாக உருமாறி, பூமியில் அலைந்து திரிந்துவிட்டு, இறுதியில் தம்மை வந்தடைய வேண்டும் என்ற சிவபெருமானின் கட்டளையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள தலபுராண வரலாறுகளை சங்கிலித் தொடர் போன்று இணைக்கும் பல்வேறு தலங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

குத்தாலம், தேரழுந்தூர், திருமணஞ்சேரி, கோமல், திருவாவடுதுறை போன்ற பலரும் அறிந்த தலங்களோடு, இவற்றைச் சுற்றியுள்ள சிறு சிறு ஆலயங்களைப் பற்றிய விவரங்களும் இதில் அடங்கியுள்ளன.

இவற்றுடன் திருநாகேச்வரம், உப்பிலியப்பன் கோயில், திருவாலங்காடு, சாத்தனூர், திருநீலக்குடி, கோனேரி ராஜபுரம், திருவைகல், ஆடுதுறை போன்ற தலங்களை யும். இவற்றைச் சுற்றிலும் தேடிச் சென்று தரிசிக்க வேண்டிய ஆலயங்களைப் பற்றி பெரும அறியவும் இந் நூல் உதவியாயிருக்கும்.

பரணிதரன்

இந்நூலில் இடம்பெறும் திருத்தலங்கள்

தலம்	பக்கம்
1. திருமணஞ்சேரி	5
2. தேரழுந்தூர்	18
3. தொழுதாலங்குடி	38
4. க்ஷேத்திரபாலபுரம்	40
5. கோமல்	43
6. நச்சினார்குடி—	
7. இடைக்கம்—	
8. ஸ்ரீகண்டபுரம்	48
9. மாந்தை	50
10. புல்லூர்	54
11. மேக்கிரிமங்கலம்—	
12. திருக்குளம்பியம்	55
13. திருவாவடுதுறை	56
14. பேராவூர்—	
15. கருப்பூர்	64
16. அசிக்காடு	68
17. குத்தாலம்	69
18. திருவேள்விக்குடி	80
19. குறுமுளைப்பாடி	83
20. வில்லிய நல்லூர்	84
21. சோழம்பேட்டை	85
22. மூவலூர்	87
23. கோழ்குத்தி	91
24. ஆனைமேலகரம்	96
25. அரையபுரம்	97
26. வாணாதிராஜ புரம்	100
27. திருவாலங்காடு	104
28. நரசிங்கம்பேட்டை	110
29. சாத்தனூர்	114
30. திருநாகேச்வரம்	118
31. ஸ்ரீ உப்பிலியப்பன் கோவில்	131
32. தண்டந்தோட்டம்	148
33. ஐவர்பாடி	155
34. ஏனாதிமங்கலம்	157
35. திருநீலக்குடி	159
36. விட்டலூர்	164
37. இலந்துறை	167
38. அம்மன்குடி	172
39. துக்காச்சி	181
40. இரண்டாம் கட்டளை	186
41. புத்தகரம்	188
42. நடார்	189
43. மேலூர்	189
44. மேல அகலங்கன்	192
45. ஆடுதுறை	192
46. மருத்துவக்குடி	198
47. கோனேரி ராஜபுரம்	218
48. திருவைகல்	229
49. புதூர்	233
50. கோடிமங்கலம்	234
51. நல்லாவூர்	236
52. நாகம்பாடி	237
53. அன்னியூர்	239
54. பூங்குடி	241
55. கருவேலி	242
56. பரவக்கரை	243
57. வயலூர்	244
58. சிவனாரகரம்	245

திருமணஞ்சேரி

மயிலாடுதுறைக்கு அருகேயுள்ள திருத்துருத்தி என்ற குத்தாலத்திலிருந்து வடக்கே சென்றால், காவிரிக்கு அக்கரையில், மூன்றாவது மைலில் உள்ளது திருமணஞ்சேரி திருத்தலம். அப்பெயரைச் சொன்னால் வாய் மணக்கும்; நினைத்தால் நெஞ்சு மணக்கும். சிவபெருமான் உமாதேவியை மறுமுறை திருமணம் புரிந்து கொண்ட திருத்தலம் அது. திருமணமாகாத பெண்கள் அங்கு சென்று கல்யாணசுந்தரரின் சந்நிதியில் பிரார்த்தனை செய்து கொண்டால், அவர்களுக்கு விரைவிலேயே திருமணம் நிச்சயமாகிறது.

ஒரு நாள் காலையில் உமையவளுக்குத் திடீரென்று ஓர் ஆசை ஏற்பட்டது. சிவபெருமானிடம் சென்றாள்; அருகில் அமர்ந்தாள்; நாணிக்கோணிக் கொண்டு குழைந்தாள்; மிருதுவாகப் பேசினாள்.

''நாதா, எனக்கொரு ஆசை, தங்களிடம் கூறலாமா?''

''சொல்லம்மா.''

''மற்றுமொரு முறை தங்களை மணக்க வேண்டும் என்று விருப்பமாக இருக்கிறது.''

"இப்படியொரு ஆசையா?"

"ஆம், பிரபு. தங்களை மாப்பிள்ளைக் கோலத்தில் காண வேண்டும் போலிருக்கிறது. நான் இடும் மலர் மாலை தங்கள் திருமார்பில் புரள்வதைக் காணவேண்டும் என்று ஆசையாயிருக்கிறது."

"ஏன் தேவி?"

"நம் திருக்கல்யாணம்தானே சகல ஜீவராசிகளின் கல்யாணங்களுக்கும் காரணமாகிறது! அவற்றின் ஆனந்தம் தானே நம் ஆனந்தமும்!"

"இதில் சந்தேகமென்ன...? நம் சுயநலத்தில் பொதுநல லட்சியம்தானே கலந்திருக்கிறது. நீ விரும்பியபடியே உன்னை மீண்டும் திருமணம் புரிந்து கொள்வேன். ஆனால் அதற்கு சற்றுக் காலதாமதம் ஆகும்."

"எத்தனை நாட்கள்?"

"நாட்களா? வரும் பிரும்ம கற்பத்தில் நமது மறு திருமணம் நடைபெறும்."

"ஏன் அத்தனை காலதாமதம் சுவாமி?"

பெருமான் இதற்குப் பதில் கூறவில்லை. புன்முறுவல் ஒன்றே அவரது பதிலாக அமைந்தது.

ஆனால், அம்பிகைக்குச் சற்று ஏமாற்றமே. விரும்பியது உடனே நடைபெறவில்லையே என்ற பெண்களுக்குரிய வருத்தம், எரிச்சலாக வெடிக்க, சிணுங்கத் தொடங்கினாள் தேவி. பெருமானிடம் சற்று அலட்சியமாக நடந்து கொண்டாள். திருவிளையாடலுக்குத் தக்கதொரு சூழ்நிலை உருவாகி விட்டது. சிவபெருமான் பொய்க் கோபம் கொண்டார். பசுவாக வடிவமெடுத்துப் பூவுலகில் சுற்றித் திரியும்படி உமையவளைச் சபித்தார்.

பசு உருக்கொண்ட அம்பிகை தன் செயல் குறித்து வருந்தினாள். சாப விமோசனம் கேட்டு சிவபெருமானிடம் மன்றாடினாள். மாலையிட்டவள் கண் கலங்கினால், மகாதேவனானாலும் மனமிரங்க வேண்டியவன்தானே! பெருமானின் திருவுளப்படி திருமகள், கலைமகள், இந்திராணி முதலியோரும் பசு வடிவமெடுத்து, தேவியாருடன் பூவுலகில் அசிக்காடு, அரசங்காடு ஆகிய இடங்களில் உலவி வந்தனர். சகோதரியிடம் ஓடோடியும் வந்தார் திருமால். மாடு மேய்ப்பவனாக உருவெடுத்து, அப்பசுக்களை மேய்த்து வந்தார் கோபாலன்.

கணவனின் மனம் குளிர வேண்டுமே; சாப விமோசனம் பெற்று அவர் கரம் பற்ற வேண்டுமே. அதற்காகப் பசு வடிவத்திலிருந்த உமாதேவியார் சிவலிங்க வடிவத்திலிருந்த சிவபெருமானின் திருமேனி மீது பாலைப் பொழிந்தார், தனது குளம்பால் அவரைத் தீண்டினார். பாலபிஷேகமும் குளம்பு ஸ்பரிசமும் சிவபெருமானின் உள்ளத்தில் உவகை பெருகச் செய்தன. அம்பிகைக்கு மாலையிடுவது என்று திருவுளம் கொண்டார். சாபம் நீங்கியதன் அறிகுறியாகப் பரத மகரிஷியின் ஆச்ரமத்திலிருந்த யாக குண்டத்திலிருந்து தேவியை வெளிவரச் செய்தார்.

இறுதியாக, திருமணஞ்சேரியில் விண்ணோர் புகழ, மண்ணோர் மகிழ தேவியைத் திருமணம் செய்து கொண்டார் முக்கண்ணன்.

இந்தப் புராணக் கதையைச் சுருக்கமாகக் கூறிய திருமணஞ்சேரி ஆலய அர்ச்சகர் சாமிநாத குருக்கள், இக் கதையுடன் தொடர்பு கொண்ட வேறு பல தலங்களைப் பற்றியும் குறிப்பிட்டார். தல புராணக் கதையை கோயிலுக்குக் கோயில் இணைத்து, அழகுற அமைத்து பக்தியை வளர்த்த நம் முன்னோர்கள் போற்றுதற்குரியவர்கள். அவ்வகையில் திருமணஞ்சேரி தல புராணம், சுற்றியுமுள்ள பல கோயில்களுடன் இணைக்கப்பட்டுள்ளதை அறியும்போது உவகை மேலிடுகிறது.

தேரழுந்தூர், மல்லிகார்ஜுனம் (மல்லியம்), அகரு வனம் (அசிக்காடு), கோமால் (கோமல்), பில்லூர், ஸ்ரீகண்டபுரம், இடைக்கம், நச்சினார்குடி, திருக்குளம்பம், திருவாவடுதுறை, திருத்துருத்தி (குத்தாலம்), திருவேள்விக் குடி, குறுமுலைப்பாடி, செம்பியன் வில்லியநல்லூர் முதலிய தலங்களுக்கு நாம் பயணம் செய்யவிருக்கிறோம்.

குத்தாலத்திலிருந்து திருமணஞ்சேரிக்குச் செல்லும் பாதை சற்றுக் கடினமாகத்தான் இருக்கிறது. சுற்றிச் சுற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. கோபுர தரிசனம் ஆகிறது. 'இதோ வந்து விட்டோம்' என்று நினைக்கிறோம். ஆனால், போய்க் கொண்டேயிருக்கிறோம்! கிராமப்புறச் சூழ்நிலையில், குறுகிய சாலைகளைக் கடந்து ஒரு கிலோ மீட்டர்சென்ற பிறகுதான் கோபுரவாசலை அடைகிறோம். அமைதிச் சோலையில்தான் ஆனந்தம் தவழ்ந்து விளையாடு கிறது என்பதற்கு, திருமணஞ்சேரியின் அமைதியான சூழலும், அங்கு சென்றதுமே நம் மனத்தில் ஆனந்தம் குடி கொள்வதுமே ஓர் உதாரணம். சிவபெருமான், தேவியின் ஆனந்தத்திற்காகக் கைத்தலம் பற்றிய திருத்தலம் அல்லவா? அப்பரும் ஞானசம்பந்தரும் பாடிப் பரவிய திருத்தலம் அன்றோ?

பழைய கோயில். செம்பியன் மாதேவியரால் திருப்பணி செய்யப்பட்டக் கோயில். இதில் சோழர் காலத்தின் 28 கல் வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டிருக்கின்றன.

ராஜகோபுரம் கிழக்கு நோக்கி உயர்ந்து நிற்கிறது. மல்லப்ப நாயக்கர் கட்டியது. செங்கல் கட்டடம். அங் கொன்றும் இங்கொன்றுமாகச் சுதை பிம்பங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ராஜகோபுரத்தைக் கடந்து சென்றால் கணபதி நமக்குக் காட்சி தந்தருளுகிறார். அடுத்து, துவஜஸ்தம்ப பீடம், பலிபீடம், மகாநந்தி மண்டபம். பெருமை வாய்ந்த இக்கோயிலில் துவஜஸ்தம்பம் இல்லாதது பெரும் குறையாகத்தான் இருக்கிறது.

அடுத்து, கட்டைக் கோபுரம். அதைக் கடந்து சென்றதும் விநாயகப் பெருமான், சோபன மண்டபத்தின் முன்புற வாசலில் வரமளிக்கும் வரசித்தி விநாயகராக அமர்ந்திருக்கிறார்.

உட்புறம் செல்கிறோம். துவார மண்டபத்தில் துவார பாலக, நந்தியம் பெருமானுடன் கருவறையில் ஸ்ரீ உத்வாக நாதர் என்னும் அருள் வள்ளநாதர் அழகுற எழுந்தருளி யிருக்கிறார். நிருத்த மண்டபத்தில் நடராஜர் ஆனந்தத் தாண்டவத்தில் ஆழ்ந்திருக்கிறார். அவருக்கு எதிர்ப்புறம், கிழக்கு நோக்கி ஸ்ரீ கல்யாணசுந்தரர் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார். உள்ளத்தைக் கொள்ளைக்கொள்ளும் ஐம்பொன்னாலான எழிற் சிலையைக் காண்கிறோம். திருமணப் பிரார்த்தனைக்காக வருவோரும், பலனடைந்து பிரார்த்தனையைச் செலுத்த வருவோருமாக, கல்யாண சுந்தரரும் உமாதேவியாரும் நித்தியாலங்கார தம்பதியாக அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ கோயில்களில் எத்தனையோ உற்சவ மூர்த்திகளைப் பார்த் தாலும், ஒரு சில மூர்த்திகள் நம் கண்ணையும் கருத்தையும் விட்டு அகலாமல் நெஞ்சில் நிரந்தரமாகத் தங்கி விடு கின்றன. அவற்றில் ஒன்று, திருமணஞ்சேரியில் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ கல்யாணசுந்தரரின் உற்சவமூர்த்தியாகும். வர்ணிக்க முடியாத அந்த வனப்பும் வசிகரமும் காந்த சக்தியாகக் நம்மைக் கவர்ந்து இழுக் கின்றது.

நடராஜர் சபையின் நேர் எதிர்ப்புறம் சமயக் குரவர் நால்வர் எழுந்தருளியுள்ள மண்டபம் இருக்கிறது. தேவ கோஷ்டத்தில் தென்புறம் பிட்சாடனர், பாலகணபதி, நடராஜர். யோக வடிவில் தட்சிணாமூர்த்தி, மேற்கே லிங்கோற்பவர், வடக்கே பிரும்மா, ராகு பகவான், துர்க்கை, பழையாந்தகர் முதலியோர் இருக்கிறார்கள். திருமாலைப்பத்தியில் சுப்ரமணியர் சந்நிதி, ஸ்ரீதேவி,

பூதேவியுடன் மகாவிஷ்ணு சந்நிதி, லட்சுமி சந்நிதிகளைத் தரிசிக்கிறோம். பரத மகரிஷி. செம்பியன் மாதேவி, மல்லப்ப நாய்க்கர் திருவுருவங்களும் உள்ளன.

திருமணஞ்சேரி ஸ்ரீ உத்வாகநாதர் என்னும் அருள் வல்லநாதர் ஆலயத்தின் கிழக்கு திருமாலைப்பத்தியில் பைரவர். சூரியன், சனீச்வரர், பச்சையப்பநாதர் என்ற ருத்ரவனேச்வரர், பச்சையம்மைநாயகி என்ற ருத்ர வனேச்வரி முதலியோர் இருக்கின்றனர்.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி இருக்கிறது. சின்ன அம்பாள், திருமண மேடையில் மணப்பெண் அமர்ந் திருப்பது போல் சுகாசனத்தில் அமர்ந்திருக்கிறாள். வலக் காலை மடித்து, இடக் காலைத் தொங்கவிட்டுக் கொண் டிருக்கும் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண் டிருக்கலாம். கோகிலாம்பாள் என்ற யாழினும் மென் மொழியாளுக்கு எட்டு வயதுதானாம். சுவாமிக்குப் பதினாறு வயதாம். சுவாமிநாத குருக்கள் சொன்னார்

இந்த வட்டார மக்கள் சுவாமிநாத குருக்கள் மீது எல்லையற்ற நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர் பிரசாதம் கொடுத்தால் நோய் நீங்கும், இடர் அகலும், நன்மை பிறக்கும் என்றும், அவர் வாக்கு நிச்சயம் பலிக்கும் என்றும் நம்புகிறார்கள். ஏழை எளியவர்கள் தங்கள் குடும்பப் பிரச்னைகளோடு அவரை அணுகுகிறார்கள்.

நாங்கள் சென்றிருந்த சமயம். ஒரு பெண் வந்து ''முகத்தில் கட்டியாக இருக்கிறது, ஏதாவது மருந்து கொடுங்கள்'' என்று கேட்டாள். மஞ்சளை எடுத்துக் கொடுத்து, தேய்த்து நீராடச் சொன்னார் குருக்கள். நம்பிக்கையோடு அதைப் பெற்றுக் கொண்டு சென்றாள் அந்தப் பெண். அடுத்து, வயதான ஒரு அம்மாள் வந்தார். அவருக்கும் நாட்டுப் பெண்ணுக்கும் பூசல். கோபித்துக் கொண்டு பிறந்தகத்துக்கு சென்று விட்டாள். கணவன்

போய்க் கூப்பிட்டால் முரண்டுபிடிக்கிறாள். அவளை வழிக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு வழியென்ன?

''கவலைப்படாதேம்மா. எல்லாம் சரியா போயிடும். இந்த எலுமிச்சம்பழத்தை எடுத்துக்கிட்டுப் போய் வீட்டில் வெச்சுக்க. நீயும் உன் பிள்ளையும் இந்தத் திருநீறை இட்டுக்கோங்க'' என்று கூறி, சுவாமிநாத குருக்கள் அவர்களை அனுப்பி வைக்கிறார். நாள் முழுவதும் இவர் உதவியை நாடி இப்படி யாராவது வந்து கொண்டேயிருப்பார்களாம்.

என் யாத்திரையில் ஒன்று நிதர்சனமாகப் பார்க்கிறேன். அர்ச்சகர்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டு விட்டால், அக்கோயிலில் உறையும் தெய்வங்களின்மீதும் பக்தர்களுக்கு நம்பிக்கை பிறந்து விடுகிறது. அர்ச்சகர், ஆசார அனுஷ்டானத்தோடும் சிரத்தையோடும் ஆண் வனுக்கு ஆராதனைகள் செய்து வந்தால், அக்கோயிலில் சாந்நித்யம் ஏற்படுவதோடு, அவரது கையால் பிரசாதம் பெற்றால் சகல நன்மைகளும் ஏற்படும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டு விடுகிறது. ஞான மார்க்கத்திற்கு உத்தம குரு எத்தனை அவசியமோ, அதே போன்று பக்தி மார்க்கமான ஆலய வழிபாட்டுக்கு உத்தம அர்ச்சகரும் அவசியமாகிறார். அர்ச்சகர்களின் பொருளாதார நிலை உயர வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. ஆனால், தன் பணியில் அவர் உயர்ந்தவராக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். அர்ச்சகரைப் பட்டினி போடுவது மகா பாவம் என்றால், கோயில் பணியில் அர்ச்சகர் அசிரத்தையாக இருப்பதோ, மனத்தாலும் வாக்காலும் உழைப்பாலும் அவர் தன்னை ஆண்டவனின் ஆராதனையில் ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருப்பதோ அதை விடப் பாவமாகும். கோயில் அர்ச்சகரை அரசு ஊழியராக மட்டும் நினைத்து, அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரிகளும் அவரை அடிமையாக நடத்த நினைப்பது தவறு; அர்ச்சகர்கள், மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்திவிட்டு,

கிடைக்கும் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, பூஜை களிலும் இதர பணிகளிலும் சிரத்தையில்லாமல் ஏனோ தானோ என்று இருப்பதும் தவறு நெறியான நிர்வாகமும் முறை தவறாத ஆராதனையும் இணைந்தால்தான் ஆலய வழிபாடு சிறக்க முடியும். அதனால் சமுதாயத்திற்குப் பலன் ஏற்படும். தேவாலயங்களும் ஊழல்களின் இருப்பிட மாகி விட்டால் ஊழல் மலிந்த வெளியுலகத்திலிருந்து அமைதி பெற நமக்கு ஒரு புகலிடமில்லாமலே போய்விடும்.

திருமணஞ்சேரிக்கு வந்து ஸ்ரீ கல்யாண் சுந்தரேச்வர ரையும் உமையவளையும் வழிபட்டால் திருமணமாகாதவர் களுக்கு மண வாழ்க்கை கைகூடுகிறது என்றும், குழந்தை இல்லாதவர்களுக்குப் புத்திர சந்தானம் கிட்டுகிறது என்றும் உறுதியாகக் கூறிய சுவாமிநாத குருக்கள் ஒரு பழைய கதையை உதாரணமாகக் கூறினார்.

பராந்தகச் சோழன் காலத்தில், ராஜ குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்மணிகள் குழந்தைச் செல்வம் வேண்டி திருமணஞ்சேரியில் பிரார்த்தனை செய்து கொண்டார்கள். இவர்கள் தங்களுக்குப் பெண்ணும் பிள்ளையும் பிறந்தால் சம்பந்தம் செய்து கொள்வதாகச் சங்கல்பம் செய்து கொண் டார்கள். இவர்களில், நாத்தனார் நிச்சயம் குழந்தை பிறக்கும் என்று நம்பினாள். அண்ணியோ 'குழந்தை பிறந்தால் பார்த்துக் கொள்ளலாம்' என்று அவநம்பிக்கை யோடு இருந்தாள். நாத்தனாருக்குப் பெண் குழந்தை பிறந்தது. அண்ணிக்கு ஆமை பிறந்தது!

இருவருமாக ஆண்டவன் சந்நிதிக்கு வந்து தங்கள் குறையைக் கூறி அழுதனர். மனத்தால் குற்றம் செய்திருந் தாலும் தன்னை மன்னித்து, ஆமையுருவை மாற்றி, திருமணத்தை முடித்து வைக்கும்படி அண்ணி பிரார்த்தித் தாள். அதன் படியே சுவாமி, ஆமையைத் திருக்குளத்தில் மூழ்கும்படி செய்தார். ஆமை ஒரு வாலிபனாக மாறியது. திருமணமும் இனிதே நிறைவேறியது.

திருமணம் ஆக வேண்டி பிரார்த்தித்துக் கொள்ள வருபவர்கள் மஞ்சள், குங்குமம், சூடம், பத்தி, சர்க்கரை, தீப எண்ணெய், வெற்றிலை பாக்கு, வாழைப்பழம், எலுமிச்சம் பழம் 2, மாலைகள் 3, சைலிபுஷ்பம் 50 காசு, உதிரி புஷ்பம், சந்தனம், தேங்காய் 3 முதலியன கொண்டு வர வேண்டும்.

பூஜை முடிந்து போகும்போது அர்ச்சகர் பெண்ணிடம் இரண்டு மாலைகள் கொடுத்து அனுப்புவார். திருமண மாகிப் பிரார்த்தனையைச் செலுத்த வரும்போது மண மகளும் மணமகனும் அம்மாலைகளை அணிந்து வர வேண்டும். அப்போது மேற்கண்ட பொருட்களுடன் சர்க்கரைப் பொங்கல், நிவேதனத்திற்கு வேண்டிய பொருட்களையும் எடுத்து வரவேண்டும்.

இந்தக் கோயிலில் ராகு பகவானுக்குத் தேவ கோஷ் டத்தில் இடம் அளிக்கப் பட்டிருப்பது மற்றொரு சிறப் பாகும். இவரை வழிபட்டால் சந்தான பாக்கியம் ஏற் படும் என்று சுவாமிநாத குருக்கள் கூறினார்.

குழந்தையில்லாதவர்கள், அமாவாசையன்று காலையில் ஆகாரம் எதுவும் செய்யாமல், திருக்குளத்தில் நீராட வேண்டும். பின்னர் ராகு பகவான் சந்நிதியில் வழிபாடு முடித்து, எலுமிச்சம் பழமும் மஞ்சளும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மனைவி தினமும் மஞ்சளை பூசிக் கொண்டு நீராட வேண்டும். எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து நீர் மட்டும் கலந்து (வேறு எதுவும் சேர்க்கக்கூடாது) காலையில்வெறும் வயிற்றில் கணவர் முதலில் சாப்பிட்டு, மீதியை மனைவி சாப்பிட வேண்டும். இதே போல், மூன்று அமாவாசைகள் தொடர்ந்து கோயிலுக்கு வந்து ராகு பகவானை வழி பட்டால் புத்திரப்பேறு கிட்டுமென்று நம்பிக்கையோடு கூறுகிறார் அர்ச்சகர்.

இவை மட்டுமா? வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவும் சுவாமிநாத குருக்கள் இந்தக் கோயிலில் ஒரு வழிகாட்டுகிறார். சுவாமியை உள்ளத் தூய்மையோடு வழிபட்டு, நம்பிக்கையோடு வலம் வந்தவர்களுக்கு ஓரிரு வாரங்களில் வேலை கிடைத்திருக்கிறதாம். அதற்கு 'கைலாசப் பிரதட்சிணம்' என்று பெயர் வைத்திருக்கிறார் இவர். ஞாயிறு காலை 6 மணி முதல் 7-30க்குள் திருக்குளத்தில் நீராடிவிட்டு, ஸ்ரீ செல்வ விநாயகர் திருச்சந்நிதியில் தொடங்கி, ஒவ்வொரு சந்நிதியாக வழிபட்டுக்கொண்டு, மீண்டும் விநாயகர் முன்பாகவே பிரதட்சிணத்தை முடிக்க வேண்டும். இவ்வாறு பன்னிரண்டு பிரதட்சிணங்கள் செய்யவேண்டும். பன்னிரண்டு ஞாயிறுகள் இவ்விதம் செய்வதால் நமது கேடுகள் நீங்கி பன்னிரண்டு ராசிகளின் நன்மையும் நமக்குக்கிட்டும்; இடர் நீங்கி பயனடையலாம்.

கோயில் கல்வெட்டு ஒன்றில், 'வன்னி கொன்றை மத்தம் சூடி வேதனை நோய் நலிய' என்று இருப்பதை ஆதாரமாக எடுத்துக் காட்டி, இக்கோயிலில் முறையாக வழிபடுபவர்களை வேதனையும் சோதனையும் தீண்டாது என்று கூறுகிறார் சுவாமிநாத குருக்கள்.

'திருமணஞ்சேரி 'வினை தீர்க்கும் திருத்தலம்' என்று தேவாரங்களின் ஆதாரத்தோடு கூறுகிறார் அவர். சம்பந்தர் தேவாரப்பதிகங்களில் காணப்படும் 'மணஞ்சேரிப் பதியானைப் பாட வல்லார் வினைபாறுமே'. 'மணஞ்சேரி அடைவானை அடைய வல்லார்க்கில்லை யல்லலே' மணஞ்சேரி செறிவானைச் செப்பவல்லார்க்கிடர் சேராவே' 'மணஞ்சேரி இழியாமையேத்த வல்லார்க் கெய்தும் இன்பமே' 'மணஞ்சேரி பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே' என்ற வரிகளைச் சுட்டிக் காட்டினார்.

அதே போல் அப்பர் சுவாமிகள் தேவாரத்திலும் 'மணஞ்சேரி மருந்தினை உன்னுவார் வினையாயின

வோயுமே' 'மணஞ்சேரி யெம் அத்தனாரடி யார்க்கல்லல் இல்லையே' என்ற வரிகளை நம்பி நாம் வழிபட்டால் துன்பம் நீங்கி வாழலாம் என்று உறுதியாகக் கூறுகிறார்.

நாயன்மார்களின் பாடல்கள் பக்தியூற்றில் பெருகிய கவிதை வெள்ளம் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவை உணர்ச்சிப் பெருக்கில் தோய்ந்த அமுதம் மட்டுமல்ல; மந்திர சக்தி இணைந்த சூத்திரங்களும் ஆகும். அப்பாடல் கள் நம்மைப் பக்தியில் கரைய வைக்கும்; இறைவனோடு இரண்டறக் கலக்க வைக்கும்; ஞானமோட்சத்தையும் அருளும். அனுபூதி பெற்ற மகான்களின் சத்தியவாக்கு நல் வழிகாட்டி நம்மைக் கரையேற்றவல்ல அரிய சாதனங் களாகும்.

திருமணஞ்சேரியை அடுத்து, நான்குநாள் பயண மாக, தேரழுந்தூர், கோமல், நச்சினார்க்குடி, இடைக்கம், ஸ்ரீகண்டபுரம், மாந்தை, பில்லூர், தொழுதாலங்குடி. க்ஷேத்ரபாலபுரம், மேக்கிரிமங்கலம், திருவாவடுதுறை. திருக்கொளம்பியம், அசிக்காடு, குத்தாலம், வில்லிய நல்லூர், குறுமுளைப்பாலி, சோழப்பேட்டை, திருவேள் விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, மூவலூர் முதலிய ஊர்களுக்குச் சென்று ஆலய தரிசனம் செய்தோம்.

இவற்றில் தென்பகுதி திருத்தலங்கள், பசுவடிவிலிருந்த அம்பாளின் பாதம் பட்டுத் தூய்மையடைந்த மண். உடன் பிறந்தவள் சாபம் நீங்கி மீண்டும் கணவருடன் சேரும் வரை அவளைப் பாதுகாப்பதற்காக உடன் சென்ற கண்ண பிரானின் திருப்பாதங்களும் பட்டுப் புனிதமடைந்த பூமி. எருது வடிவத்தில் சிவபெருமான் நடமாடிய நிலம். வடக்குப் பகுதியோ, சாபம் நீங்கிய அம்பாளை, சுவாமி திருமணம் புரிந்து கொண்டதன் தொடர்பாகப் புகழ்பெற்ற தலங்கள்.

இத் தல புராணக் கதையில் சிறு சிறு வேறுபாடுகள் இருப்பினும், காணப்படும் மாறுபாடுகள் முரண்பாடுகள்

போலத் தோன்றினாலும், இக்கதையின் அடிப்படை அமைப்பும், அதில் புதைந்துள்ள தத்துவங்களும், மெருகூட்டும் கற்பனை வளமும் பொன்னூல் போல் இழையோடி அனைத்துத் தலங்களையும் இணைத்து, பக்தி மணம் பரப்பும் மாலையாகத் தொடுத்திருக்கின்றன.

ஸ்ரீ அம்பாள் பசு உருவமேற்று, பின்னர் பதியை அடைந்த இந்தத் தலபுராணத்தைப் பற்றி முதன் முதலில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் திருவாக்கால் அறிந்துகொள்ளும் பேறு பெற்றதைப் பற்றி 'திருத்தலப் பெருமை' நூலின் முதல் பாகத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

கோடையின் வெப்பம் தணிந்து, மழைச் சிதறல்களால் பூமி சற்றுக் குளிர்ந்திருந்ததால், உடலைப் பொறுத்தவரை இப்பயணம் சுகமாக இருந்தாலும், உள்ளத்தளவில் பெரும் சுமையாக இருந்தது. அதற்குக் காரணம், காமதேனுவாகச் சுற்றிச் சுற்றி, தஞ்சையைக் கொழிக்கச் செய்யும் பொன்னி நதி மணற்பரப்பாய் வறண்டு கிடந்த பரிதாபக் காட்சிதான். ''மைசூரில் மழைபெய்ததா, மேட்டூரில் நீர் மட்டம் ஏறியதா' எந்தத் தேதி தண்ணீரைத் திறந்து விடுவார்கள்?'' என்று வயலில் வேலையின்றி வீதியில் நின்றிருந்த விவசாயிகள் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துப் பார்த்து பெருமூச்சு விட்டது நம் உள்ளத்தில் அனலாய்த் தகித்தது. பம்ப்செட்டுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய், நிலத்தடி நீரை ஆக்ரோஷத்துடன் வெளியே வாரிக் கொட்டி வயல்களை நிரப்பிக் கொண்டிருந்த காட்சி ஒரு புறம் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாலும், ''இந்த பம்ப்செட்டு குளத்துத் தண்ணியை அடியோட உறிஞ்சிடுங்க, எங்க கிணத்திலே ஒரு வாளி தண்ணிகூட இல்லாம செஞ்சிடுச்சு'' என்று சென்றவிடமெல்லாம் மக்கள் ஏக்கக் குரல் எழுப்பியதைக் கேட்ட போது, நம் நெஞ்சு இரும்பாய்க் கனத்தது.

தஞ்சை மாவட்டத்தில், குளங்களும் கிணறுகளும் வற்றிப்போய், குக்கிராமங்களிலெல்லாம் பெண்டிர் கூட்டம்

கூட்டமாய் குடமும் கையுமாகத் தண்ணீரைத் தேடி அலைத்து கொண்டிருந்தது. இந்த ஆண்டு வறட்சியின் கடுமைக்கும் இயற்கையின் கொடுமைக்கும் அடையாளச் சின்னங்களாகும். ஆலயக் குளங்களும் கிணறுகளும் வற்றிப்போய், ஆண்டவன் அபிஷேகத்திற்காக நீர் இருக்கும் இடம் தேடி அர்ச்சகர் அலையும் காட்சி, வற்றிவிட்ட நம் அறப்பண்புகளை நினைவுபடுத்தியது. நெறி தவறிய வாழ்க்கை முறையின் காரணமாக நம் பாவங்கள் பெருகி விட்டதால் பருவங்கள் நிலை தடுமாறி விட்டனவோ? இயற்கை இவ்விதம் நம்மைத் தண்டிக்குமோ?

பூமி வறண்டாலும், தெய்வ நம்பிக்கை வறண்டுவிடக் கூடாது. பசுக்களைப் பதி ஒருபோதும் கைவிடமாட்டான். 'கோ'க்களைக் கோபாலன் காப்பாற்றியே தீருவான். இந்தப் பயணம் இநதச் சத்தியத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

இப்பயணத்தின்போது. இரண்டாவது முறையாகத் திருமணஞ்சேரி ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். இம்முறை சுவாமிநாதக் குருக்களுடன், அவருடைய குமாரர் ராஜு குருக்களையும் சந்தித்தேன். பசு தன் கன்றை அரவணைப்பது போல், மகனைக் கூடவே வைத்துக் கொண்டு, பரிவுடன் பயிற்றுவித்து, அவரை ஆலயப் பணியில் நாட்டம் கொள்ளச், செய்து பூரண ஈடுபாடுடன் பணிபுரியத் தூண்டியது மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. 'இந்தத் தொழிலும் கஷ்டமும் நம்மோடு போகட்டும். பையன் எங்கேயாவது 'டைப் அடித்துக் கொண்டு பிழைக்கட்டும்' என்று அர்ச்சகர்கள் எண்ணும் இந்த நாளில் இத்தொழிலை வாழையடி வாழையாகக் காக்க முன்வந்திருக்கும் சுவாமி நாத குருக்களையும், தந்தையைப் போலவே பக்தர்களிடம் சுமுகமாகப் பழகி, மந்திரங்களைச் சிதைக்காமல் கணீரென்ற குரலில் தெளிவாக உச்சரிக்கும் ராஜு குருக்களையும் நிறைந்த நெஞ்சத்தோடு பாராட்டத் தோன்றுகிறது.

வழக்கம் போல் அன்றும், கல்யாணம் ஆகவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சிலரும், குழந்தை பிறக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சிலரும், திருமணம் முடிந்து பிரார்த்தனை செலுத்துவதற்காகச் சிலரும் அக் கோயிலில் கூடியிருந்தனர். 'கல்யாணம் ஆகவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இங்கு ஆண் பிள்ளைகளும் வருகிறார்களா?' என்று நான் கேட்டுக் கொண்டிருந்த போதே மணச்சநல்லூரிலிருந்து சேகர் என்ற இளைஞர் வந்தார். தன் மனக்குறையைப் பற்றித் தயங்காமல் கூறினார் சேகர். அவருக்கு ரொம்ப பணக்கார இடமாக வருகிறதாம்; அல்லது, ரொம்ப படித்த பெண்களாக வருகிறார்களாம். தன் அந்தஸ்துக்குத் தகுந்த சாதாரண படிப்போடு கூடிய ஒரு பெண் மனைவியாக அமைய வேண்டும் என்று சேகர் பிரார்த்திக்க, அவர் பெயரில் கல்யாணசுந்தரருக்கு அர்ச்சனை செய்துவிட்டு, 'அப்படியே நடக்கட்டும், திருமணம் சீக்கிரமே முடியட்டும்' என்று வாழ்த்தி சேகருக்கு மாலையிட்டு, பிரசாதங்கள் அளித்தார் சுவாமிநாத குருக்கள்.

தேரழுந்தூர்

பல வருடங்களுக்கு முன், முதன் முறையாக நான் தேரழுந்தூருக்குச் சென்றிருந்தபோது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த மண்ணில் ஒரு பிடி எடுத்து வந்து அப்பெரு நிதியை என் உடன்பிறப்புகளுக்குப் பகிர்ந்தளித்தேன். கம்பன் வசித்த இடமான 'கம்பன் மேடு' கேட்பாரற்றுக் கிடக்கும் பரிதாபத்தைக் கண்டு கண் கலங்கினேன். (தற்போது அங்கு ஒரு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது) அருள்மிகு ஆமருவியப்பன் ஆலயத்திற்குச் சென்று,

கோபுர வாயிலையடுத்துள்ள மாடம் ஒன்றில் பகவானை நோக்கிக் கைகூப்பித் தொழுதபடி நின்றிருக்கும் கம்பனையும் அவரது துணைவியாரையும் வணங்கும் நற்பேறு அடைந்தேன்.

அம்பாள் பசு வடிவமேற்று, இறுதியில் திருமணஞ்சேரியில் பரமேச்வரன் கரம் பற்றிய தல புராண வரலாறு தொடர்பாக, இரண்டாம் முறையாக தேரழுந்தூர் சென்றபோது முன்பு நான் கண்ட காட்சிக்கும் தற்போது பார்த்த காட்சிக்கும் மாறுபாடுகள் இருந்தன. அழகிய திருக்குளமும், மதிற்சுவர்களும், கோபுர தரிசனமும் நெஞ்சை நிறைத்து, உள்ளத்தை உயர்த்துவனவாக அமைந்திருக்கக் கண்டேன் அப்போது. இப்போதோ, திருக்குளம் முழுமையாக வற்றிப் போய், வறண்டு பாறையாக வெடித்திருந்த தரையில ஆனிரை மேய்ந்து கொண்டிருக்கும் காட்சியைக் கண்டேன்.

திருமங்கை மன்னன்,

'மன்னுமுதுநீர் அரவிந்தமலர்மேல் வரி வண்டு
இசைபாட
அன்னம் பெடையோடுடன் ஆடும் அணியார் வயல்சூழ்
அழுந்தூர்'

என்று, என்றுமே தண்ணீர் வற்றாத ஆழ்ந்த நீர்நிலைகள் அங்கிருந்தன எனப் பாடி மகிழ்ந்த ஊர் இப்படியொரு வறட்சிக் கோலம் பூண்டுள்ளதே என்று மனம் வெதும்பிப் போனேன்.

அது மட்டுமல்ல; 'தென் அழுந்தை மன்னி நின்ற' 'அணி அழுந்தூர் உடையானை' என்றெல்லாம் ஆழ்வார் அனுபவித்த அழகிய ஊரின் பெயரையே அங்குள்ள ஆங்கில பெயர்ப் பலகைகள் குலைத்து விட்டிருந்ததைக் கண்டு

துணுக்குற்றேன். ஆங்கிலத்தில், தேரழுந்தூரை 'தேரிழந்தூர்' ஆக்கியிருக்கிறார்கள்! தபால் இலாகாவும் இந்தத் தவறைச் செய்திருக்கிறது. முன்பு ஆலயத்தில் தேரோட்டம் இருந்தது என்றும், தற்போது தேர் சின்னாபின்னமாகி அது நின்றுவிட்டது என்றும் கூறினார்கள். அதனால்தான் 'தேரிழந்தூர்' என்று ஊர் பெயரை மாற்றி விட்டார்களோ என்று வேடிக்கையாக, ஆனால் ஆழ்ந்த வேதனையோடு நினைத்துக் கொண்டேன்.

ஆழ்வார் பாசுரங்களிலெல்லாம் 'அழுந்தூர்' என்ற பெயரே காணப்படுகிறது. ஓரிரு இடங்களில் திருவழுந்தூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பெரிய திருமடலில் 'வல்ல வாழ்ப்பின்னை...' என்ற பாசுரத்தில் மட்டும் 'அன்னம் அள்ளல் வாய் இரை தேரழுந்தூர் எழும் சுடரை' என்ற பதப் பிரயோகம் வருகிறது.

மறைந்த மாமேதை பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமி, 'அள்ளல் வாய் அன்னமிரை தேர் அழுந்தூர்' என்பதற்கு விளக்கம் கூறும்போது, 'சேறு கண்டு இறாய்க்கக்கடவ அன்னங்களும் சேற்றைக் கண்டு இறாயாதே மேல்விழுந்து ஸஞ்சரிக்கும்படியான யோக்யதையுடைய திருவழுந்தூரிலே நித்யவாசம் பண்ணுகிற நிரவதிகதேஜோ ரூபனை' என்ற அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் ஸ்ரீ ஸூக்தி காண்க' என்று கூறியுள்ளார். அடுத்து அழுந்தூர் என்பதற்கு, 'தனது தபோபலத்தால் விமானத்துடன் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் தன்மையனான உபரிசரவஸுவென்னும் அரசன் தேவர்கட்கும் முனிவர்கட்கும் நேர்ந்த விவாதத்தில் பட்சபாதமாகத் தீர்ப்புச் சொன்னமையால் ரிஷிகளால் சபிக்கப்பட்டுப் பூமியில் விழுகையில் அவனது தேர் அழுந்தப் பெற்ற இடமானது பற்றி இதற்கு அழுந்தூரென்று பெயர் வந்ததென்பர்; தேரழுந்தூர் எனவும் வழங்குவர். பிரகிருதத்தில் மூலத்திலுள்ள தேர் என்னும் சொல் ரதத்தைச் சொல்வதல்ல;

தேர்தலாவது தேடுதல்; புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும் அழுந்தூர் என்கை' என்று விளக்கமளிக்கிறார்.

இத் திவ்ய தேசத்திற்கு அழுந்தை, அழுந்தூர், திருவழுந்தூர், தேரழுந்தூர் என்ற பெயர்கள் உள்ளன. ஆனால், நிச்சயமாக 'தேரிழந்தூர்' என்ற பெயர் முற்றும் தவறானது. அது உடனடியாக மாற்றப்பட வேண்டும். பெயர்கள் மாறலாம்; மருவலாம். ஆனால் மாறான பொருள் தர நமக்கு உரிமையில்லை. (தற்போது போர்டு திருத்தப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்)

தேரழுந்தூர், மயிலாடுதுறைக்கும் குத்தாலத்திற்கும் இடையேயுள்ள ஊர். மயிலாடுதுறை — கும்பகோணம் ரயில் பாதையில் இரண்டாவது ஸ்டேஷன் தேரழுந்தூர். அங்கிருந்து தெற்கே இரண்டு மைலில் ஊர் இருக்கிறது. மயிலாடுதுறையிலிருந்து பஸ்கள் செல்கின்றன. கோமல் செல்லும் பஸ்ஸில் ஏறினால், அரைமணியில் தேரழுந்தூரை அடையலாம்.

ஊருக்கு வடக்கே மஞ்சளாறும், அதற்கும் வடக்கே காவிரியாறும் ஓடுகின்றன. தெற்கே அரை மைலில் மகிமாலையாறு ஓடுகிறது. இதற்குக் 'கடலாழி' என்று பெயர்.

தேரழுந்தூருக்குக் கிருஷ்ணாரண்யம் என்ற புராணப் பெயர் உண்டு. ஐந்து கிருஷ்ண க்ஷேத்திரங்களில் தேரழுந்தூரும் ஒன்று எனக் கூறப்படுகிறது.

கண்ணபிரான் திருவழுந்தூரில் எழுந்தருளியதற்கு ஒரு புராணக்கதை உண்டு.

கோகுலத்தில் கிருஷ்ணன் தன் தோழர்களுடன் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தாகம் ஏற்படவே, ஆவினங்களை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு,

தோழர்களுடன் நீர் அருந்த யமுனைக் கரைக்குச் சென்றான். அப்போது பிரும்மா, அங்கிருந்த பசுக் கூட்டத்தைத் தேரழுந்தூருக்கு ஓட்டி வந்து மறைத்து வைத்து விட்டார். திரும்பி வந்த கண்ணன், பசுக்களைக் காணாது ஒரு நிமிடம் கலங்கிப் போய், என்ன நடந்திருக்கிறது என்பதைக் கணப் பொழுதில் ஊகித்து விட்டான். அடுத்த கணம் புதியதொரு பசுக் கூட்டத்தையும் கன்றுகளையும் தோற்றுவித்து விட்டான். தோழர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. ஆனால், பிரும்மாவுக்கோ பெரும் ஏமாற்றம். தன் சாமர்த்தியம் தோல்வியடைந்ததைக் கண்ணனிடம் ஒப்புக்கொண்டு, ஒரு பிரார்த்தனை செய்து கொண்டார். தன் விருப்பப்படி தேரழுந்தூருக்கு ஆவினங்களோடு வந்து திருக்கோயில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதைக் கண்ணன் மனமுவந்து ஏற்றுக் கொண்டான். ‘ஆமருவிநிரை மேய்த்த அமரர் கோமான்’ ஆக எழுந்தருளினான்.

கருவறையில் உள்ள கண்ணனது உற்சவமூர்த்தி இக்கதைக்குச் சான்றாகக் காட்சியளிக்கிறது. பசுவொன்று, அவனது ‘திருவடிகளே கதி’ என்று சரணடைய, கன்றோ ‘உன் திருவதனமே பேரமுதம்’ என்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் அழகே அழகு.

பெருமாள் கோயில்களில் பெரிய திருவடியான கருடாழ்வார், திருச்சந்நிதியை நோக்கியவாறு எழுந்தருளியிருப்பதுதான் வழக்கம். ஆனால், தேரழுநதூரில், மூலவருக்கு இடப்பக்கததில் கருடாழ்வார் எழுநதருளியிருக்கும் அபூர்வ காட்சியைக் காண்கிறோம்.

இதற்கான தல புராணக் கதை:

தேவேந்திரன் ஒரு சமயம் கருடாழ்வாரை அழைத்து, ஒரு வைர முடியையும் ஒரு விமானத்தையும் அளித்து, இரண்டையும் அவற்றுக்குரிய பெருமாள்களிடம் சேர்ப்

பித்து விடுமாறு கூறினான். அவ்வாறே கருடாழ்வார், வைரமுடியைக் கர்நாடகாவிலுள்ள திருநாராயணபுரத்தில் எழுந்தருளியுள்ள செல்லப்பிள்ளைப் பெருமாளிடம் அளித்தார். இந்திர விமானத்தை தேரழுந்தூர் தேவாதிராஜனுக்கு அளித்தார். அதை ஏற்றுக்கொண்ட பெருமாள், கருடாழ்வாருக்குத் தம் பக்கத்திலேயே இருக்க இடம் அளித்தாராம்.

தம்மை மணக்கச் சம்மதிக்காத காவிரியை, ஒரு குடத்தில் அடைத்து வைத்தார் கும்ப முனிவரான அகத்தியர். குடம் சாய்ந்ததால், காவிரி அதிலிருந்து வெளியே பாய்ந்தோடினாள். முனிவருக்குக் கோபம் வெடித்தது. காவிரியால் வளம்பெறும் மக்கள் துன்புறட்டும் என்று சபித்தார். அதனால் அன்னையின் மனம் வாடியது. கருணை வடிவானவள். தேவாதிராஜனைக் குறித்துத் தேரழுந்தூரில் தவமியற்றி, அவரிடம் வரம் பெற்று, முனிவரின் சாபத்திலிருந்து மக்களை மீட்டு நல்வாழ்வு அளித்தாள். அந்தக் காவிரி அன்னை பெருமாளை நித்தியம் வழிபட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக, கருவறையில் கருடாழ்வாருக்கு எதிரில் அமர்ந்தபடி பொன்னித்தாய் பரந்தாமனை வழிபட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

தேரழுந்தூருக்கு வடக்கே, குத்தாலத்திலிருந்து பந்தணைநல்லூருக்குச் செல்லும் வழியில் வில்லியநல்லூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. முன்னொரு காலத்தில் அங்கு வில்லவன், வாதாபி என்ற இரு அரக்க சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் வில்லவன் மூத்தவன்; வாதாபி இளையவன். இவர்கள் ஒவ்வொரு நாளும் யாராவது ஒருவரை விருந்துண்ண அழைப்பாரகள், வாதாபியைக் கொன்று கறி சமைத்து விருந்தாளிக்கு அளிப்பான் வில்லவன். அவர் அதை மகிழ்ச்சியுடன் உண்பார். பின்னர். ''ஏ வாதாபி!'' என்று வில்லவன் அழைப்பான். உடனே, உண்டவரின் வயிற்றைக் கிழித்துக்

கொண்டு வாதாபி உயிரோடு வெளியே வந்து விடுவான். இறந்து போன விருந்தாளியை அரக்கர் இருவரும் சமைத்து வயிறு புடைக்க உண்பார்கள்.

இந்த அக்கிரமத்தைக் குறித்து, பலர் அகத்திய முனிவரிடம் முறையிட்டார்கள். அவர்கள் கொட்டத்தை அடக்க உறுதி கொண்ட முனிவர் மாறுவேடத்தில் அங்கு சென்றார். வழக்கப்படியே புதிய விருந்தாளியை விருந்துக்கு அழைத்தனர் அரக்க சகோதரர்கள். வாதாபியைக் கறியாகச் சமைத்து முனிவருக்குப் படைத்தான் வில்லவன். அவரும் கொஞ்சங்கூட மிச்சம் வைக்காமல் உண்டார், களைப்புத் தீர திண்ணையில் போய் அமர்ந்து 'வாதாபி ஜீரணோத்பவ' என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே தன் பெரிய வயிற்றைத் தடவி விட்டுக்கொண்டார். அடுத்த கணம் அகத்தியரின் வயிற்றில் வாதாபி ஜீரணமாகி விட்டான்! அதனால் வழக்கப்படி அவர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு அவனால் வெளியே வர முடியவில்லை. விருந்துக்கு வந்தவர் அகத்திய முனிவர் என்பது தெரிந்ததும், வில்லவன் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

அரக்கர்கள் கொட்டம் அழிந்தாலும், மனித மாமிசத்தை உண்ட பாவம் அகத்தியரைப் பற்றிக் கொண்டது. இந்தப் பாவத்திலிருந்து விமோசனம் பெற, தேரழுந்தூர் திருக்குளத்தில் நீராடிவிட்டுத் தேவாதி ராஜனைக் குறித்துத் தவம் செய்து எம்பெருமானின் அருளாசியைப் பெற்றார். இந்தக் கதையை உறுதிப்படுத்துவதன் அடையாளமாக மகாமண்டபத்தின் வடபுறமுள்ள அகத்தியர் சிலையைக் காட்டுகிறார்கள்.

ஆமருவியப்பன் ஆலயத்திற்கு முன் உள்ள திருக்குளத்திற்குத் தர்ச புஷ்கரணி என்று பெயர். அந்தப் பெயர் ஏற்படுவதற்கானக் காரணத்தை நாம் அறிய வேண்டாமா?

உபரிசரவசு என்று ஓர் அரசன். அவன் ஒரு நாள் தன் துணைவியாருடன் புஷ்பக விமானத்தில் சென்று கொண்டிருந்தான். அவ்விமானம் தேரழுந்தூருக்கு மேல் பறந்து கொண்டிருந்தபோது மகாராணியார், ''நாதா, கீழே இறங்கி தேவாதிராஜனை வழிபட்டு விட்டுச் செல்லலாமே!'' என்று கூறினாள். உபரிசரவசு இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. 'என்னைவிட அவன் பெரிய ராஜனோ?' என்ற அகம்பாவத்தில் ''புஷ்பக விமானம் நிற்காமல் செல்லட்டும்'' என்று உத்தர விட்டான்.

தேவாதிராஜன், அரசனின் செருக்கை அழித்துப் புத்தி புகட்ட வேண்டும் என்று திருவுளம் கொண்டார். கருடாழ்வாரைக் கடைக்கண்ணால் பார்த்தார். பெரிய திருவடி குறிப்பறிந்து கொண்டார். மேலே பறந்து கொண்டிருந்த புஷ்பக விமானத்தின் நிழல் கீழே படிவதைக் கண்டு, அந்த நிழலின் மீது தன் பெருவிரலை வைத்து அழுத்தினார். அடுத்த கணம் விமானம் வேகமாகக் கீழே இறங்கி ஆலயத்தின் முன்னுள்ள திருக்குளத்தில் விழுந்தது. தண்ணீரில் மூழ்கிய உபரிசரவசு நீந்திக் கரைக்கு வந்து, அங்கு அமர்ந்து தவம் இயற்றிக் கொண்டிருந்த அகத்தியரை வணங்கினான். அகங்காரத்தால் தனக்கு நேர்ந்த கதியைக் கூறி வருந்தினான். உய்யும் வழியைக் கூறும்படி வேண்டினான்.

அகத்திய முனிவர், தேவாதிராஜனைக் குறித்துத் தவமிருக்கும்படி உபரிசரவசுவுக்கு ஆலோசனை கூற, அரசனும் அவ்வாறே செய்தான். தேவாதிராஜன் அவனுக்குத் தரிசனம் அளித்து மன்னிப்பு வழங்கினார். அப்போது உபரிசரவசு இரண்டு வரங்கள் கேட்டான். குளத்தில் அழுந்திய விமானம் மீண்டும் கிளம்பி வானில் பறக்க வேண்டும்; அக்குளத்தில் நீராடித் தேவாதிராஜனை வழிபடும் பக்தர்களுக்கு நற்கதியளிக்க வேண்டும். இவ்விரண்டு வரங்களையும் உடனேயே அளித்தார் ரந்தாமன்.

இந்நிகழ்ச்சி நடைபெற்றது தை அமாவாசையன்று. 'தர்சம்' என்றால் அமாவாசை. அதனால் இத்திருக்குளத்திற்குத் 'தர்ச புஷ்கரணி' என்ற பெயர் வழங்கலாயிற்று.

உபரிசரவசு, தேவர்களுக்கும் முனிவர்களுக்குமிடையே நடைபெற்ற விவாதத்தில் ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பளித்ததால், முனிவர்களால் சபிக்கப்பட்டுக் கீழே விழுந்ததாக ஒரு கதை. சுவாமியிடம் வரம் பெற்றுவிட்ட கர்வத்தில், நல்லவர்களையும் வேதவிற்பன்னர்களையும் துன்புறுத்த முனைந்ததால், பகவானே இவன் சென்ற தேரைத் தம் வலக்கால் கட்டை விரலால் அழுத்தினார் என்று மற்றொரு கதை. கதைகளின் வடிவங்கள் மாறினாலும், அரசன் தண்டனை பெற்றான் என்ற கருத்து ஒன்றாகத் தான் இருக்கிறது,

அகத்தியர், உபரிசரவசு இருவர் மட்டுமல்ல; 'என்றும் பதினாறாகவே இருக்கவேண்டும்' என்று வரம் பெற்ற மார்க்கண்டேயரும் வீடுபேற்றைப் பெற வேண்டித் தேவாதி ராஜனைக் குறித்துத் தவமிருந்து நற்கதியடைந்திருக்கிறார். இதற்கு அடையாளமாகக் கருவறையில் மூலவருக்கு முன்னால் வலப்புறம் மார்க்கண்டேயர் அமர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

ஸ்ரீ ஆமருவியப்பன் திருக்கோயில் மூலஸ்தானத்தில், பெருமாளுக்கு இடப்புறம் கருடாழ்வார் நின்ற திருக்கோலத்தில் இருக்கிறார். வலப்புறத்தில் பிரகலாதாழ்வார் வணங்கியபடி நின்று கொண்டிருக்கிறார்.

இரணியனை அழித்து, பிரகலாதனுக்கு அருள்புரிந்த ஸ்ரீ நரசிங்கப்பெருமாள், அவனுக்கு ஆமருவியப்பனாக, ஆவினங்களைக் காக்கும் கண்ணபிரானாகக் காட்சி தந்தாராம்.

கருவறைக்கு வெளியே, இடப்புறமுள்ள சுவர் மாடத்தில் யோக நரசிம்மமூர்த்தியின் சிலை ஒன்றும் இருக்கக்

காணலாம். பிரகலாதனையும் ஸ்ரீ நரசிங்கப்பெருமாளை யும் கண்டதும் நமக்கு இரணிய வதம் நினைவுக்கு வரத் தானே செய்யும்! நமக்கு மட்டுமா? தேரழுந்தூரில் பிறந்து, ஆமருவியப்பன் கோயிலில் தினமும் தரிசனம் செய்த கம்பநாட்டாழ்வாருக்கும் இந்த நினைவு வராமலிருக்குமா? அதனால்தான், அவர் கம்பராமாயணத்தைப் படைத்த போது, வால்மீகி முனிவர் குறிப்பிடாத இரணிய வதத்தை, நாடக நயமும் தத்துவ விளக்கங்களும் நிறைந்த பகுதி யாக யுத்த காண்டத்தில் இணைத்துத் தந்திருக்கிறார். ஆமருவியப்பன் திருச்சந்நிதியில் நின்று, பிரகலாதனைப் போல் நாமும்,

'சாணினும் உளன்; ஓர் தன்மை,
அணுவினைச் சத கூறு இட்ட
கோணினும் உளன்; மாமேருக்
குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன
சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின்...'

என்ற பாசுரத்தைச் சொன்னால் நமது இறைப் பற்று உறுதிப்படும்; தெய்வ நம்பிக்கை உள்ளத்தில் ஆழமாகப் பதியும்; வாழ்வில் இன்பம் கூடும்.

தேரழுந்தூரில் உறையும் தேவாதி ராஜப்பெருமாளுக்கு கோசகன் என்ற பெயரும் வழங்கப்படுகின்றது. கோசகன்தான் தமிழில் ஆமருவியப்பன் ஆயினார். பத்தடி உயரமுள்ள இந்த சாளக்கிராமச் சிலை, கலையழகோடும் ஜீவகளையோடும் திகழ்கிறது. இயற்கையழகைச் செயற்கை யழகுகள் மேலும் அழகுபடுத்துகின்றன. திருமுடியிலே தங்கக் கிரீடம், நெற்றியில் வைரத்திருமண், தோள்களிலே வாகுவலயம், கழுத்திலே சகஸ்ரநாமமாலை, மார்பிலே திருமகள், இடையிலே தசாவதாரச் சித்திரங்கள் கொண்ட அரைக்கச்சை, என்று எழிலோவியமாக ஒளிர்கிறார்

பெருமாள். சங்கு, சக்கர, கதா. அபய முத்திரைக் கரங் களுடன் நம் மீது அருமாரி பொழிகிறார்.

பெருமாள் சந்நிதிக்குத் தெற்கே ஸ்ரீ ராமச் சந்திர மூர்த்தியின் திருச்சந்நிதியிருக்கிறது. ராமர், சீதை, இலக்குவன், அனுமார் — நால்வரின் எழில்மிகு உற்சவ மூர்த்திகளும் உள்ளன.

தாயாருடைய திருநாமம் செங்கமலவல்லி என்பதாகும். சுவாமி கோவிலுக்குத் தென்புறம் கிழக்கு நோக்கி எழுந் தருளியிருக்கிறார் தாயார். இவருடைய எல்லையற்ற கருணையை 'செங்கமலத் திருமகளும்' என்ற பாசுரத்தில் திருமங்கை மன்னன் போற்றிப் புகழ்கிறார்.

இக் கோயிலிலுள்ள சிற்பங்களில் இரண்டு நம் கவனத் தைக் கவராமல் போகாது. தாயார் சந்நிதி விமானத்தின் பின் புறத்தில் மேற்கு நோக்கிப் பத்ம பீடத்தில் திருமகள் அமர்ந்திருக்கும் திருக்கோலம் கண்டு இன்புறத்தக்கது.

இந்த விமானத்தின் வடப்புறம் மேற்குப் பகுதியில் ஓர் அபூர்வ சிலையைக் காணலாம். நான்கு முகங்களோ டும், எட்டு கரங்களோடும் அம்மன் காட்சியளிக்கிறாள். மேலிரு கரங்களில் சங்கும் சக்கரமும் இருக்கின்றன.

திருமங்கை மன்னன் தேரழுந்தூருக்கு வருகிறார். கோயில் கோபுர வாசலில் நிற்கிறார். தன்னை ஒரு பெண்ணாக நினைத்துக் கொள்கிறார். அப்போது ரீங்காரம் செய்து கொண்டே வண்டு ஒன்று உள்ளே செல்கிறது. நேரே கருவறைக்குள் நுழைந்து எம்பிரானனின் திருமார்பை அலங்கரிக்கும் மலர் மாலையின் மீது அமரப் போகிறது அது. அப்போது ஆமருவியப்பனின் செவியருகில் அது அமர்ந்திருக்கும். அதையறிந்த திருமங்கை மன்னன் அதனிடம் தன்னைப் பற்றிச் சொல்கிறார். தன் நிலையை, துயரத்தை பகவானிடம் சொல்லும்படி அதைத் தூது அனுப்புகிறார்......

'தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேனதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும்
பூ மருவி இனிது அமர்ந்து பொறியில் ஆர்ந்த
அறுகால் சிறுவண்டே! தொழுதேன் உன்னை
ஆமருவிநிரை மேய்த்த அமரர் கோமான்
அணியழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று
நீ மருவி அஞ்சாதே நின்றோர் மாது
நின் நயந்தாள் என்று இறையே
இயம்பிக்காணே'

இதற்குப் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் பதவுரை எழுதுகிறார்:

தேன் வெள்ளம் நிறைந்திருக்கப் பெற்ற சோலைப் புறத்திலே மலர்ந்த புஷ்பங்களிலுண்டான தேனைப் பானம் பண்ணி, உனது பேடையும் நீயும் புஷ்பத்திலே பொருந்தி இனிமையாகப் புணர்ந்து மேனியிற்புகர் அதிகரிக்கப்பெற்ற ஆறு கால்களையுடைய சிறிய வண்டே! உன்னை வணங்கி யாசிக்கிறேன். பசுக் கூட்டங்களை விரும்பி மேய்த்தவனும் ('ஆநிரை மருவி மேய்ந்த' என்று பதம் பிரிக்கப்படும் போது 'ஆமருவியப்பன்' என்ற பெயருக்கு விளக்கம் கிடைக்கிறது) நித்திய சூரிகளுக்குத் தலைவனும் அழகிய திருவழுந்தூரிலே நிற்பவனுமான எம்பெருமான் பக்கலிலே இப்போதே போய் பயப்படாமல் பொருந்தி நின்று, ஒரு பெண் பிள்ளை உன்னை ஆசைப்பட்டிருக்கிறாள் என்று சிறியதொரு வார்த்தையைச் சொல்லிப் பார்.

இம்மாதிரி பல பாசுரங்களால் திருமங்கை மன்னன் ஆமருவியப்பனின் அழகிலும் பெருமையிலும் கீர்த்தியிலும் தன்னைப் பறி கொடுத்து நெஞ்சுருகிக் கரைந்திருக்கிறார். மற்றொரு பாசுரத்தைப் பார்ப்போம்.

'திருவுருக்கும் திருவாகிய செல்வா!
தெய்வத்துக்கரசே! செய்யகண்ணா

உருவச் செஞ்சுடராழிவல்லானே!
உலகுண்ட ஒருவா! திருமார்பா!
ஒருவற்காற்றி உய்யும் வகையன்றால்
உடனின்று ஐவரென்புகுந்தொழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின்னடைத்தே
அழுந்தூர்மேல் திரைநின்ற அம்மானே'

ஸ்ரீ மகாலட்சுமிக்கும் லட்சுமிகரனான செல்வனே, நித்யசூரிகளுக்குத் தலைவனே! புண்டரீகாட்சனே! அழகிய வடிவுடைத்தாய் செவ்விய சுடர்மயமான திருவாழியைப் பிரயோகிப்பதில் சமர்த்தனே! பிரளய காலத்தில் உலகங்களை அமுது செய்த அத்விதீயனே? பிராட்டியைத் திருமார்பில் உடையவனே, திருவழுந்தூரில் மேற்குத் திசையில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! ஓர் இந்திரியத்திற்குத் தப்பிப் பிழைக்கவே வழியில்லையென்றால், அந்தோ! ஐந்து இந்திரியங்கள் நெருங்கியிருந்து என் பக்கத்தில் வந்து புகுந்து ஓயாமல் அலைந்து நிற்க, அதற்கு அஞ்சி உன்னைச் சரணம் புகுந்தேன்.

அடுத்த பாசுரத்தில், 'பாவை பூமகள் தன்னோடும் உடனே வந்தாய், என் மனத்தே மன்னி நின்றாய், மால் வண்ணா மழைபோலொளி வண்ணா...நின்னடியன்றி மற்றறியேன்' என்று சரணாகதி தத்துவத்தையே பிழிந்து தந்திருக்கிறார்.

புருஷோத்தமனின் இத்தகைய ஓர் 'அடிமை'யான திருமங்கை மன்னன் எந்நேரமும் எம்பெருமானைச் சேவித்துக் கொண்டிருக்கும் பொருட்டு, தேரழுந்தூர் சந்நிதித் தெருவில், கோபுர வாசலுக்கு நேரே அவருக்கு ஒரு சிறுகோயில் இருப்பது மிகமிக பொருத்தமே.

ஆழ்வாருக்குச் சந்நிதித் தெருவில் இப்படியொரு தனிக் கோயில் அமைந்திருப்பது தேரழுந்தூரின் தனிச் சிறப்பாகும்.

இச்சந்நிதி அங்கு தோன்றியது குறித்துக் கூறப்படும் பழங்கதை:

திருமங்கைமன்னன் இவ்வூருக்கு வந்து, பெருமாள் திருநாமம் என்னவென்று கேட்டாராம். 'தேவாதிராஜன்' என்று மக்கள் கூறவே, 'பெருமாளைப் பாடும் வாயால் பேரரசனைப் பாட மாட்டேன்' என்று சொல்லித் திரும்பினாராம். ஆனால், அவரால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அடுத்தகணம் பரந்தாமனின் திருவுள்ளம் அவருக்குப் புரிந்துவிட்டது. தன் தவற்றை உணர்ந்து வருந்தினார். பக்திப் பரவசத்தில் அமிழ்ந்தார். 'தந்தைக் காலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண் வந்த எந்தை பெருமானார் மருவி நின்ற ஊர் போலும்' என்று தொடங்கி நாற்பது அற்புதமான பாசுரங்களைப் பாடினார். அவர் அன்று நின்று பாடிய இடத்தில்தான், இன்று அவரது தனிக் கோயில் அமைந்திருக்கிறதாம். தினமும் பெரிய கோயிலிலிருந்து மங்கள வாத்தியத்துடன் நைவேத்தியம் கொண்டு வரப்பட்டு இங்கு பூஜை நடைபெறுகிறது.

ஸ்ரீ ஆமருவியப்பன் கோயில் சந்நிதித்தெருவின் நடுவில் தெற்கு நோக்கியவாறு சற்று மேடான இடத்தில் ஸ்ரீ அரங்கநாதரின் கோயில் உள்ளது. மூலவர் அரங்கநாதர். தாயார் அரங்கநாயகி. பள்ளிகொண்ட பெருமானின் பெரிய எழில் திருமேனி தரிசித்துப் பேறு பெறத்தக்கது.

தாயார் சந்நிதிக்குக் கிழக்கில், மண்டபத்திலுள்ள ஆஞ்சநேயமூர்த்தி மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பதால் ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி மாதம் இவருக்கு அவ்வூர் பக்தர்கள் விழா எடுக்கிறார்கள். அச்சமயம் அபிஷேக அலங்கார பூஜைகளுடன், திருவீதி உலாவும் இன்னிசை நாகசுரக் கச்சேரிகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஸ்ரீ அரங்கநாதர் கோயிலில் கிழக்கு நோக்கி ஸ்ரீராமா-சீதை லட்சுமணனுக்குத் தனிச் சந்நிதி ஒன்றும் இருக்கிறது.

தசரதகுமாரனின் திருமுக மண்டலத்தில் அருட்புனல் பொங்கிப் பெருகுகிறது.

ஆமருவியப்பன் கோயில் சந்நிதித் தெருவில் நுழையும் போது தெற்கு நோக்கி 'வழிகாட்டிப் பிள்ளையார்' கோயில் இருக்கிறது. இவருக்கு 'ஞான சம்பந்த விநாயகர்' என்ற பெயரும் உண்டு.

ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான் தேரழுந்தூர் வந்த போது, எதிரும் புதிருமாக இரு கோயில்கள் இருப்பதைக் கண்டு, எது சிவாலயம் என்று தெரியாமல் சிறிது நேரம் தயங்கிவிட்டு, அருகிலிருந்த பிள்ளையாரை வழிபட்டா ராம். அப்போது விநாயகர் 'அதோ, அதுதான் சிவாலயம்' என்று வழிகாட்டினாராம். அதனால் அவருக்கு 'வழி காட்டிப் பிள்ளையார்' என்று பெயர் ஏற்பட்டதாம்.

சிவபெருமான் உமையவளைப் பசு ஆகும்படி சபித்தது தேரழுந்தூரில்தான் என்று அவ்வூர் புராண வரலாறு கூறு கிறது.

ஆமருவியப்பனுக்குச் செய்யப்படும் அஷ்டோத்திரத்தில் 'கோரூப பார்வதீ சம்ரட்சண கிருத்வாய நமஹ' என்று ஒரு நாமாவளி வருகிறது. இதைச் செய்திருப்பவர் புதுக் கோட்டை வித்வான் ரங்காச்சாரிய சுவாமி. சகோதரியின் துயர் கண்டு பொறுக்காமல் திருமால், அவளுக்குத் துணை யாய் இருக்கும் பொருட்டு கண்ணனாக உருவெடுத்து அப்பசுவைக் காப்பாற்றி வந்தார் அல்லவா? பசுக் கூட்டத்தை விரும்பி மேய்த்ததால் இங்கு 'ஆமருவியப்ப' னாகத் திருநாமம் பெற்றார்.

இந் நிகழ்ச்சி குறித்து இவ்வூரில் வழங்கும் கதை:

ஒரு சமயம் சிவபெருமானும் திருமாலும் சொக்கட் டான் ஆடினார்கள். நடுவராக உமையவள் நியமிக்கப் பட்டாள். ஒருபுறம் கணவன், கொண்டவன்; மறுபுறம்

மூத்த சகோதரன், கொடுத்தவன். பார்வதிக்குக் கடின மான பணிதான். ஆட்ட முடிவில், திருமாலிடம் தோற்று விட்டதைச் சுட்டிக் காட்டிய நடுவரான பார்வதி கேலி யாகச் சிரித்தாள். அதைக் கண்டு சினங்கொண்ட சிவபெருமான், பசுவாக உருவெடுத்து, பூமியில் உழன்று, பின்னர் தம்மை அடையும்படி தேவியை சபித்தார்.

துணைவியைப் பிரிந்த சிவபெருமான், அந்தணர் வேடம் பூண்டு, மரத்தின் கீழ் அமர்ந்து வேதம் ஓதி வந்தா ராம். அதனால் அவர் வேதபுரீச்வரர்என்று பெயர் பெற் றார். ஸ்ரீ வேதபுரீச்வரர் ஆலயம், ஆமருவியப்பன் கோவிலுக்கு நேர் எதிரே இரண்டு பர்லாங் தொலைவில் அமைந்துள்ளது.

ஸ்ரீ ஆமருவியப்பன், ஊருக்கு மேற்குப்புறம் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்க, ஸ்ரீ வேதபுரீச்வரர் கிழக்குத் திக்கில், மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். மாப் பிள்ளையும் மைத்துனரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரே தல புராணக் கதையால் இணைக்கப்பட்ட சிவன், பெருமாள் கோயில்கள் எதிரெதிரே அமைந்திருப்பது தேரழுந்தூரின் சிறப்புக்களில் சிகரமானதாகும்.

ஸ்ரீவேதபுரீச்வரர் ஆலய ராஜகோபுர வாசலில் நுழைந்ததும் விநாயகப் பெருமானைத் தரிசித்துக் கொள் கிறோம். அவரையடுத்து ஸ்ரீ நந்திகேச்வரர் த்ரிசனம் அளிக்கிறார். கோயிலில் கொடிக் கம்பம் காணப்பட வில்லை. நிர்வாக அதிகாரி திரு. தண்டபாணியிடம் விசாரித்த போது, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அது விழுந்து விட்டதாகவும், தற்போது மேற்கொள்ளப்பட் டுள்ள திருப்பணியில் இந்தக் குறையும் நிவர்த்தி செய்யப் படும் என்றும் கூறினார்.

ஸ்ரீவேதபுரீச்வரர் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். ஸ்ரீநந்தி மண்டபத்தின் அருகில் நின்று அவரைத் தரிசிக்கும்போது, நமக்கு இடப்புறம்—அதாவது ஆலயத்தின் வடமேற்கு மூலையில் மற்றொரு சிறிய கோயில் இருப்பதைக் காண்கிறோம். அது ஸ்ரீமடேச்வரர் சந்நதி. அம்பாள் திருநாமம் ஸ்ரீமடேச்வரி. அதுதான் ஆதி கோயில் என்றும், வேத புரீச்வரர் திருச் சந்நிதி இதற்குப் பின்னரே தோன்றியதென்றும் கூறுகிறார்கள்.

ஸ்ரீ வேதபுரீச்வரர் ஆலயத்தின் மண்டபம் 'சொக்கட்டான் மண்டபம்' என்று அழைக்கப்படுகிறது. தல புராணப்படி சிவபெருமானும் திருமாலும் சொக்கட்டான் விளையாடியதை நினைவு கூறுகிறது இந்த மண்டபம்.

இந்த மண்டபம் யாகசாலை வடிவத்தில் அமைந்திருக்கிறது. பன்னிரண்டு தூண்கள் உள்ளன. மேல் தளத்தில் எட்டுப்பட்டைகள் கொண்ட மூன்று அடுக்குகள் உள்ளன. நடுவில் சதுரவடிவம். பார்க்கக் கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கும் இந்த மண்டபம், மழை பெய்தால் ஒழுகுகிறது என்று வருத்தப்பட்டுக் கொண்டார் அர்ச்சகர் சாமிநாத சர்மா. இதையும் பழுது பார்க்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறினார் உடனிருந்த நிர்வாக அதிகாரி.

உட்பிராகாரத்தில் வலம் வரும்போது வடமேற்கு மூலையில் வள்ளி, தெய்வயானை உடனுறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருச் சந்நிதியைத் தரிசித்துக கொள்கிறோம். தென்புறம் வடக்கே பார்த்து துர்க்கையம்மன். வடகிழக்குப் புறத்தில் நவக்கிரகம். பக்கத்தில் காவேரியம்மன், பைரவர். அடுத்து சூரியன், காலபைரவர் முதலியவர்கள் இருக்கின்றனர்.

கிழக்குப் பிராகாரத்தில், தல விருட்சமான சந்தன மரம் இருக்கிறது.

அதனடியில்தான் சிவபெருமான் அந்தணர்களுக்கு வேதம் பயிற்றுவித்ததாக தலபுராணம் கூறுகிறது. அதன் அடையாளமாக, பக்கத்திலே இருக்கும், க்ஷேத்திர லிங்கத்தையும் நந்தியையும் வழிபடுகிறோம்.

தட்சிணாமூர்த்தியின் பக்கத்திலுள்ள பிறையொன்றில் அகத்திய முனிவரும் காவேரித்தாயாரும் இருக்கின்றனர்.

தென் பிராகாரத்தில், கிழக்கே பார்த்து, வலஞ்சுழி விநாயகருக்குத் தனிச் சந்நிதி இருக்கிறது. விமானத்தில் ராமாயண நிகழ்ச்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன.

வெளிப் பிராகாரத்தில், தென் மேற்குப் புறத்தில், ஸ்ரீமடேச்வரர் சந்நிதிக்கு எதிரில், ஸ்ரீசௌந்தரநாயகி அம்பாளுக்குத்தனி கோயில் உள்ளது. ஸ்ரீசண்டேச்வரிக்கும் சந்நிதியிருக்கிறது.

திருவழுந்தூர் வேதம் தழைத்த ஊர். வேத முழக்கம் எதிரொலித்த ஊர். ஓமப்புகை எங்கும் பரவிய ஊர். இங்கு அந்தணர்கள் பெருமளவில் வாழ்ந்து வேதம் ஓதி, வேத தர்மத்தில் நிலைத்து, வேத மதத்தைப் பறைசாற்றிய ஊர். சிவன் கோயிலும், திருமால் கோயிலும் எதிரெதிரே அமைந்திருப்பதும், இரண்டு சந்நிதி வீதிகளும் வேற்றுமையின்றி ஒரே நேர்கோட்டில் நீண்டிருப்பதும், இத்தலத்தில் வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட வேதம் தழைத்ததற்குக் கட்டியம் கூறுகின்றன.

இங்கு வருகை தந்த ஸ்ரீ திருஞானசம்பந்தப் பெருமானும், அழுந்தூர்வாழ் மறையவர்களின் பெருமையைப் போற்றி ஒரு பதிகமே பாடியிருக்கின்றார். 'அழுந்தை மறையோர்' என்று ஒவ்வோரு பாட்டிலும் அவர்களுக்குத் தனி ஏற்றம் தருகிறார். பதிகத்தை இப்படித் தொடங்குகிறார்:

'தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபாட விம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம் மன் னினையே'

ஞானசம்பந்தர் மட்டுமா? திருமங்கையாழ்வாரும் அழுந்தூர் அந்தணர்களையும், அவர்கள் வேதம் ஓதியதை யும், வேத கர்மாக்கள் புரிந்ததையும் தமது பாசுரங்களில் அழகாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார். ஏழாம் பத்து-ஐந்தாம் திருமொழி முதல் பாசுரத்தில் 'முந்திவானர மழை பொழிய மூவாவுருவின் மறையாளர் அந்தி மூன்றும் அனலோம்பும் அணியார் வீதி அழுந்தூரே' என்கிறார்.

'யாகம் செய்வதற்கு முன்பே மழை பெய்யப் பெற்றதும், கிழத்தனமற்ற உருவத்தையுடையவரான அந்தணர்கள் முச்சந்தியும் அக்நிஹோத்திரம் செய்யப் பெற்றதுமான அழகுமிக்க திருவீதிகளுடைய திருவழுந்தூர்' என்று அந்த ஊரின் பெருமையைப் பாடுகிறார். அடுத்து வரும் ஒரு பாசுரத்தில் 'அழுந்தூர் மறையோர்கள் அடிபணியும் கரியானை அடியேன் கண்டு கொண்டு களித்தேனே' என்று ஆனந்தப் பரவசம் அடைகிறார். 'செங்கமலத் திருமகளும் புவியும்' என்று தொடங்கும் ஏழாம்பத்து எட்டாம் திருமொழி முதல் பாசுரத்தில் அந்தணர்களின் புகழைவானுயர உயர்த்திப் பேசுகிறார்.

'எங்குமலிநிறைபுகழ்நால் வேதம்
ஐந்து வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை
அங்கமல த்தயனனையார் மயிலும்
செல்வத்து அணிய'ழுந்தூர்
நின்று உகந்த அமரர்கோவே'

எவ்விடத்திலும் நிறைந்து பரவிய கீர்த்தியையுடைய நான்கு வேதங்களும் பஞ்சமகா யக்ஞங்களும் நூற் கேள்விகளும் ஆகியவற்றை இயற்கையாகவே நன்கு அறிந்துள்ள

குணத்தையுடையவர்களும் பரமனை ஒத்தவர்களுமான அந்தணர்கள் தேரழுந்தூரில் நித்திய வாசம் செய்கிறார்களாம். அதனால் சிறப்படைந்து எழில் கூடி விளங்குகின்ற திருத்தலத்தில் வந்து நின்றதாலேயே பெருமான் அக மகிழ்ந்து போகின்றானாம்.

மற்றொரு பாசுரத்தில், 'வீதிச் செழுமாட மாளிகைகள் கூடந்தோறும் ஆன தொல்சீர் மறையாளர் பயிலும் செல்வத்து அணியழுந்தூர் நின்று உகந்த அமர்க்கோவே' என்று வர்ணிக்கிறார்.
அடுத்த பாசுரத்தில்,

'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர்
திசைமுகனையனையவர்கள் செம்மைமிக்க
அந்தணர்தம் ஆகுதியின் புகையார் செல்வத்து,
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே'

என்று புகழ்கிறார்.

அழுந்தூர் அந்தணர்கள், தமிழும் சமஸ்கிருதமும் முழுமையாக அறிந்தவர்களாம். அவர்கள் பிரமனையொத்தவர்களாம். நற்குணம் நிரம்பப் பெற்றவர்களாம்.

அவர்கள் வேள்வி செய்வதனால் ஓமக் குண்டலங்களிலிருந்து கிளம்பும் புகை நிரம்பியதால் அவ்வூர் சிறப்புற்றதாம்.

திருஞானசம்பந்தர் பதிகத்தையும், திருமங்கை மன்னனின் பாசுரங்களையும் படிக்கும் போது, அந்தக் கால திருவழுந்தூர் நம் கண்முன்னே விரிகிறது. வாதிட்டு வம்பு பேசுவதற்கு இடமளிக்காமல், சைவமும் வைணவமும் ஒருங்கே தழைத்த பொன்னான நேரத்தையும், கல்வி வளமும் இயற்கை வளமும் மண்டிக் கிடந்த சூழ்நிலையையும், செந்தமிழும் சம்ஸ்கிருதமும் பகை பாராட்டாமல்

ஒன்றையொன்று தழுவி வளர்ந்த நாட்களையும் மனக் கண்ணில் கண்டு களிக்கிறோம்.

இத்தகைய தனிச் சிறப்புக்களால் உரமிட்டு வளம் சேர்க்கப்பட்ட மண்ணில் தோன்றியதால்தான் கம்பர் பெருமான் சம்ஸ்கிருத மூலக் கதையை எடுத்தாண்டு செந் தமிழுக்கோர் அணிகலனாய் ஓர் அமர காவியம் படைத் தாரோ? சிவ - வைணவ பேதங்கள் பாராட்டாமல், வேத நெறி வழுவாத தத்துவங்களை இடையிடையே பின்னிப் புனைந்து, நற்குணங்களின் இருப்பிடமாயும், நல்லியல்பு களின் உறைவிடமாயும், நற்பண்புகளின் தாயகமாயும் திகழும் ஸ்ரீராமனின் அவதாரக் கதையை உலகோர் உய்யு மாறு வடித்துத் தந்தாரோ?

தேரழுந்தூர் வேதமண்ணில் வேர் விட்டு, வேதத்தின் சத்தியக் குரலாய் வையகம் எங்கும் விழுதுகள் விட்டு, காவியநயத்திற்கும் நாடக இலக்கணத்திற்கும் ஓர் உருவாய் திகழ்ந்து, நாடி வந்தவர்களுக்கெல்லாம் பக்தி நிழல் நல்கி, சாந்தியும் சௌக்கியமும் அளிக்கும் அழிவற்ற ஆலமரமாம் வான் புகழ் கம்பன் நாமம், வையம் உள்ளவரை வாழும்.

தொழுதாலங்குடி

பசுவாக மாறும்படி சிவபெருமானால் சபிக்கப்பட்ட பார்வதி, தேரழுந்தூரின் சுற்றுப்புறங்களில் மேய்ந்து கொண்டிருந்த போது, பசுக் கூட்டங்கள் தங்குவதற்கு ஓர் இடம் தொழுவமாக இருந்தது. அவ்வூருக்குத் 'தொழுதாலங்குடி' என்று பெயர். அது தேரழுந்தூருக்கு வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. அதன் வட்டத்தில் தென்மேற்கில் ஸ்ரீ கோவிந்தராஜப்

பெருமாள் கோயில் இருக்கிறது. தாயாரின் பெயர் புண்டரீகவல்லி.

மாயவரத்திலிருந்து குத்தாலம் செல்லும்போது, தேரழுந்தூர் செல்ல தெற்கே திரும்பும் பாதையில், தேரழுந் தூருக்கு முன்பே இருக்கிறது தொழுதாலங்குடி என்ற சிற்றூர். போர்டு கண்ணில்படும். ஆனால், கிராமம் எங்கிருக்கிறது என்பது புரியச் சிறிது நேரமாகும். விசா ரித்துக் கொண்டு மிகச் சிறிய கிராமத்தின் மிகச் சிறிய அந்தணர் வீதியில் நுழைகிறோம். அதன் வடகோடியில் ஒரு சிறு சிவன் கோயில். அபிமுக்தீச்வரர் என்பது சுவாமி யின் திருநாமம். அம்பாளின் பெயர் அபிராமி அம்பாள்.

கோயில் குடமுழுக்குக் கண்டு எத்தனை ஆண்டுகள் ஆயிற்றோ? விமான கலசங்கள் இல்லை. கோயில் பெரும் பாலும் பூட்டியே இருக்குமாம். அர்ச்சகர் எப்போதோ ஒரு வேளை வந்து பூஜை செய்துவிட்டுப் போவாராம். அந்தச் சமயத்தில் நேரமிருந்தால், யாராவது போய்த் தரிசனம் செய்துவிட்டு வருவார்களாம்!

தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான குக்கிராமங் களில் கோயில்கள் இந்த நிலையில்தான் உள்ளன. காலை யில் கோயில் திறந்தால், மாலையில் இல்லை. மாலையில் சற்று நேரம் திறந்திருந்தால், காலையில் மூடியே கிடக்கும். ஒரே அர்ச்சகர் நாலைந்து கோயில்களைச் சுவனித்துக் கொள்ள வேண்டிய பரிதாப நிலையில் வேறு என்னதான் செய்ய முடியும்? நிரந்தரமான வருவாயோ, நிச்சயமான சம்பளமோ இல்லாத போது அவர்தான் என்ன செய்வார்?

அது மட்டுமா? கோயில் சொத்துக்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போயிருக்கும்; சொந்தமாக உள்ள நிலங்களிலிருந்து குத்தகைக்காரர்கள் நெல் அளக்க மாட் டார்கள்; கிராமத்திலிருந்த செல்வந்தர்கள் பட்டணங்களை நோக்கிப் புறப்பட்டுச் சென்று விட்டிருப்பார்கள். இவ்வாறு

சீர்குலைந்து போயுள்ள கோயில் பொருளாதாரம் அதன் பராமரிப்பில் பிரதிபலிக்காமல் இருக்குமா? இவை அனைத்தையும் மீறி, கிராம மக்கள் ஒரு சிலரிடமாவது, முக்கியமாக இளைஞரிடம், தங்கள் ஊர் கோயில் புதுப்பிக்கப் பட வேண்டும், அங்கு முறைப்படி பூஜைகள் நடைபெற வேண்டும் என்ற ஆர்வம் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பது நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. அதற்கு என்ன வழி என்று புரியாமல் அவர்கள் ஏங்கிக் கொண்டிருப்பதை என் பயணங்களின்போது நான் கண்டேன். அவர்களது உண்மையான உணர்வுகளுக்கு வடிகால் அமைத்துத் தந்து, வழிகாட்டி, ஒரு கை கொடுத்து உதவ அறநெறி அமைப்புகளோ, இறைப் பணி மன்றங்களோ முன் வருமேயானால், நம் கிராமங்களில் சீரழிந்து கொண்டிருக்கும் பல ஆலயங்களில் மீண்டும் ஒளி வீச வாய்ப்பு உண்டு.

க்ஷேத்திரபாலபுரம்

தொழுதாலங்குடியை அடுத்து வடக்கே அமைந்துள்ள க்ஷேத்திரபாலபுரத்தில் பழமையான ஒரு காலபைரவர் கோயில் இருக்கிறது.

அபூர்வமான மூல மூர்த்தி. ஆனால், மதில் சுவரெல்லாம் இடிந்து, விமானத்தில் செடிகள் மண்டி, மண்டபத்தில் விரிசல்கள் ஏற்பட்டு நிராதரவாக நிற்கிறது. அந்தக் கிராம மக்கள் இன்றும் சித்ரா பௌர்ணமியன்று பெருமளவில் விழா எடுக்கிறார்கள். குக்கிராமமாக இருந்தாலும் ஆர்வமுள்ள சில இளைஞர்கள் அந்தக் கோயிலைப் புதுப்பிக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தலத்தின் காவலரையே நாம் காக்கத் தவறி விட்டால் பின்னர், அந்த க்ஷேத்திரத்தின் கதியென்ன? தஞ்சைத்

தரணியில் காலபைரவருக்கு வேறு எங்காவது தனிக் கோயில் உண்டா என்பது தெரியவில்லை. வெளியுலகிற்கு அதிகம் தெரியாமல் உள்ளடங்கியிருக்கும் இந்தக் கோயிலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியது சுற்று வட்டாரத்திலுள்ள மக்களின் தலையாய கடமையாகும்.

தேரழுந்தூரிலிருந்து க்ஷேத்திரபாலபுரம் வரை கம்பன் பிறந்து வளர்ந்த மண் பரந்து விரிந்திருக்கிறது. க்ஷேத்திர பாலபுரத்தை அடுத்துள்ள மாயவரம் - குத்தாலம் பஸ் பாதையில், தேரழுந்தூருக்குத் திரும்புவதற்கு முன்பே, பாதையோரமாக ஓர் அரச மரத்தின் நிழலின் கீழ் ஒரு காளி தேவி எழுந்தருளியிருக்கிறாள். அவள் சிறியதொரு திரிசூல உருவில் விளங்குகிறாள். அந்த மாகாளி, கம்பர் பெருமானுக்குக் கவிதை வரம் அருளிய அம்மன் என்கிறார்கள். செல்லியம்மன் என்ற செல்லப் பெயருடன் திகழ்கிறாள்.

தேரழுந்தூரில் ராமானுஜ நாயுடு என்னும் பெரியவர், இக் காளியைப் பற்றி என்னிடம் கூறி, மறக்காமல் தரிசனம் செய்துவிட்டுப் போகச் சொன்னார். காளிதாசனுக்கு கவித்திறன் அருளிய பராசக்தியேதான் அங்கும் எழுந்தருளி யிருக்க வேண்டும் என்ற உள்ளுணர்வுடன் அம்மனைத் தரிசனம் செய்துக் கொண்டேன். தாயிடம், நான் கவிதை புனையும் வரம் கேட்கவில்லை; 'பட்டி மன்றங்களில் கம்ப ராமாயணம் பற்றிப் பேசும் ஆற்றல் தா' என்று கோர வில்லை. 'கம்ப ராமாயணத்தை முழுவதும் படிக்கும் பேறு பெற வேண்டும். கவிஞனின் உள்ளுணர்வுகளை அடியேனும் அனுபவித்து உய்ய வேணும்' என்றே பிரார்த்தித்துக் கொண்டேன்.

கம்பனின், பிறப்பைப் பற்றியும், வாழ்ந்த விவரங்கள் பற்றியும் பல்வேறு கதைகள் கூறப்படுவது உண்டு. அவற்றில் ஒன்று......

வீரவர்மன் என்னும் ஒரு குறுநில மன்னன் மாற்றார் சதிக்குப் பலியானார். அவரது இளைய மனைவியான

அம்பிகா உடன் மடிய வேண்டும் என்று எண்ணினாள். ஆனால், வயிற்றில் வளர்ந்து வந்த செல்வத்திற்காக உயிர் வாழ்வதென்று முடிவு செய்து, ஓரிரவு நடந்து ஓர் ஊரை யடைந்தாள். அது தேரழுந்தூர். அங்கு தன் குழந்தையை ஈன்றாள். மகவைப் பிரியப் போகும் நேரம் நெருங்கியது. தான் ஈன்ற செல்வத்தைத் துயரத்துடன் நோக்கினாள், அருகிலிருந்த காளி கோயிலுக்கு எடுத்துச் சென்று தேவியின் திருவடிகளில் அவனை ஒப்படைத்துவிட்டு, தன்னுயிரை மாய்த்துக் கொள்ளத் தன்னிச்சையாகப் பயணமானாள்.

மறு நாள் காலை, கோயில் பூசாரியாகிய உவச்சன் அங்கு வந்து குழந்தையைக் கண்டு உளம் மகிழ்ந்து இல்லத்திற்கு எடுத்துச் சென்று மனைவியிடம் தந்தான். காளி உபாசகனான ஆதித்தனுக்குப் குழந்தைச் செல்வம் இல்லாததால், அத் தம்பதி அக் குழந்தையைக் காளியின் பிரசாதமாக நினைத்து, கருத்துடன் வளர்த்து வந்தனர்.

இந்தக் காளிதான் கம்பனைக் கவிச் சக்கரவர்த்தியாக்கினாள் என்று செவி வழி வந்த செய்தி கூறுகிறது.

அந்தக் காளி வெயிலில் காய்ந்து, மழையில் நனையக் கூடாது என்ற நல்லெண்ணத்தில், யாரோ ஒரு புண்ணியவான் சிலையின் மீது சிமெண்டினால் வளைவான கூரையொன்று கட்டி வைத்திருக்கிறார்.

கம்பன் புகழ் பாடுவோரெல்லாருக்கும் வழிபடு தெய்வமாக இருக்கும் தேவிக்கு அங்கு ஒரு பெரிய ஆலயம் எழுப்பப்பட வேண்டாமா? நாளெல்லாம் கம்பனுக்குச் சொற் கோயில் எழுப்பி மகிழ்ந்து கொண்டிருப்பவர்கள் மனம் வைத்தால் இங்கு கற்கோயில் ஒன்று தோன்றாதா? கம்பனைப் பாடி இன்புறுவோம். ஆண்டுதோறும் விழா எடுத்து அவன் புகழ் பாடிக் களிப்போம். பட்டிமன்றங்கள் நடத்தி, பட்டி தொட்டிகளெல்லாம் கம்ப ராமாயணத்தை அலசி அலசி, பாடல்களை அக்குவேறு ஆணி வேறாகப்

பிரித்து, சொற் சிலம்பங்கள் ஆடிக் கும்மாளமிடுவோம். ஆனால், இறையுணர்விலிருந்து கம்பனைப் பிரித்தாலோ, அவனை இயக்கிய தெய்விக சக்தியை மறந்தாலோ, கம்ப னின் நினைவுக்கு நாம் பெருந்தீங்கு இழைத்தவர்களா வோம்.

செல்லியம்மன் காளி கோயிலுக்கு எதிர்ப்புறம் சற்றுக் கிழக்கே 'கம்பன் தோப்பு' என்ற ஓரிடத்தைக் காட்டினார் கள். தென்னையும். வாழையும், இதர மரங்களும் அடங் கிய அந்த சோலை, கம்பனின் காவியச் சோலையாக நம் உள்ளத்தையும் உடலையும் உணர்வையும் குளிர்விக்கிறது. அதனுள் நடந்து கொண்டேயிருந்தோம். எங்களுடன் வந்த திருமணஞ்சேரி சாமிநாத குருக்கள் சட்டென்று நின்றார். 'இந்த இடத்தைப் பாருங்கள்' என்றார். பார்த்தோம். மூன்று புன்னை மரங்கள் ஓங்கி வளர்ந்திருந் தன. 'எனக்கென்னமோ, கம்பர் இங்குதான் அமர்ந்து, காளியைத் தரிசித்தபடியே கம்ப ராமாயணத்தை எழுதி யிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது' என்றார்.

கம்பன் பிறந்த மண் ஆயிற்றே! அம்மண்ணை மிதிப்ப வர்களின் உள்ளத்திலும் கற்பனை வெள்ளம் பெருக் கெடுத்து ஓடுவதில் வியப்பென்ன!

கோமல்

பசுவாக மாறிய அம்பாள் தங்கிய இடங்களில் ஒன்று 'கோ மஹால்' ஆயிற்று. அந்த இடத்தைக் கோமந்தை என்றும் அழைப்பதுண்டு. தற்போது 'கோமல்' ஆகியிருக் கும் இந்த ஊர், வீரசோழன் ஆற்றின் தென்கரையில் தேரழுந்தூருக்கு அடுத்துள்ள ஊர். மூன்று கிலோ மீட்டர் தொலைவிருக்கும்.

ஒரு காலத்தில் அங்கு பன்னிரண்டு சிவன் கோயில்களும் எட்டு திருமால் கோயில்களும் இருந்ததாகக் கூறுகிறார்கள். வேத பண்டிதர்கள் நிறைய பேர் வாழ்ந்திருக்கிறார்கள். திருஞானசம்பந்தர் இவர்களையும் சேர்த்துதான் 'அழுந்தை மறையோர்' என்று அழைத்திருப்பார் போலும்!

அந்தக் காலத்தில் பல தெருக்கள் அடங்கிய பெரிய ஊராக இருந்திருக்கிறது சோமல். கோயில் உற்சவங்களெல்லாம் மிகக் கோலாகலமாக நடந்திருக்கின்றன. கோமலில் உறையும் சுவாமியின் திருநாமம் ஸ்ரீ கிருபா கூபாரேச்வரர். அதாவது, கருணைக் கடலான ஈச்வரன் இந்த ஊரில் அப்பெயரிலேயே எழுந்தருளியிருக்கிறார். அம்பிகை - அத்தனை பேருக்கும் அன்னமிடும் அன்னையாகையால் - அன்னபூரணியாக விளங்குகிறாள்.

இந்தக் கோயிலில் திருவாதிரை அன்று, ஸ்ரீநடராஜர் புறப்பாடு 'ஜே ஜே' என்று இருக்குமாம். நடராஜமூர்த்தியின் திருமேனியை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். 'சிதம்பரம் நடராஜாவை விட அழகு' என்று பெருமையாகக் கூறினார் அவ்வூர் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. ராஜாமணி ஐயர். அவர் அந்தக் கோயிலுக்கு அறங்காவலராக இருந்தவர். தற்போது சென்னையில் குடியேறியிருக்கிறார்.

'நடராஜர் வீதி வலம் போய்விட்டு வந்து கோயிலுக்கு வெளியே நிற்பார். லேசில் கதவைத் திறக்க மாட்டார்கள். அம்பாள் உத்தரவு கிடைத்த பின்தான் திறப்பார்கள். 'சுப்பிண்டு சாஸ்திரிகள்' என்றழைக்கப்பட்ட சுப்ரமணிய சாஸ்திரிகள் சாம வேதம் ஓதிக்கொண்டே பிராகாரத்தை வலம் வருவார். கேட்கவும் பார்க்கவும் பிரும்மானந்தமாக இருக்கும். கடைசியில் கோபுர வாசலைத் திறந்து சுவாமியை உள்ளே அழைத்து வருவார்கள்'' என்று சின்ன வயதில்தான் பார்த்த காட்சியை ஆர்வத்துடன் விவரித்தார் ராஜாமணி ஐயரின் நாட்டுப்பெண்.

'எங்களூர் ரேணுகா பரமேச்வரியின் தீமிதி உற்சவத்தின் போது, அக்கம் பக்கத்திலுள்ள அம்மன்களெல்லாம் தேரில் வந்து விடுவார்கள். பெரிய தேரும் சின்ன தேர்களுமாக வீதியில் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதற்காக வீதியிலுள்ள மரக் கிளைகளையெல்லாம் கூடக் கழித்து விடுவார்கள்' என்று அந்த அம்பாள் தனது இள வயது அனுபவங்களை உற்சாகத்துடன் விவரித்தபோது மானசீகமாக அந்தக் காலத்துக்கே போய் விட்டார்.

இப்படியெல்லாம் சிறப்புப் பெற்ற ஊர், தற்போது வறுமைக் கோலம் பூண்டு, வெறிச்சோடிப் போயிருப்பதை நினைத்து மருகிப் போனார் அந்த அம்மாள். எங்க ஊருக்கு ஏன் இப்படியொரு நிலைமை வந்ததோ தெரியலையே, யார் இட்ட சாபமோ?'' என்று கண் கலங்காத குறையாக வருத்தப்பட்டுக் கொண்டார். நான் கோமலுக்குச் சென்றிருந்த விவரத்தைக் கூறி, சிவன் கோயிலும் பெருமாள் கோயிலும் இருக்கும் நிலைமையை விவரித்த போது, ராஜாமணி ஐயர் கண் கலங்கிப் போனார்.

கோமல் ஸ்ரீ கிருபா கூபாரேச்வரர் கோயிலைக் காண்பவர்கள் யாராயிருந்தாலும் கண்ணீர் வடிக்கத்தான் செய்வார்கள். அந்த ஊர்க்காரராயிருக்க வேண்டிய அவசியமில்லை. அத்தனை பெரிய ஊரில், சிவாலயத்திற்கு இப்படி ஒரு கதியா?

கிழக்குப்புறம்தான் பிரதான வாயில். ஆனால், அப்பக்கம் நுழைய முடியாது. தென்புறமாகத்தான் நுழைய வேண்டும். மண்டிக் கிடக்கும் மூட்புதர்களையும், இடிந்த மதிற் சுவர்களின் சிதறிக் கிடக்கும் செங்கற்களையும் தாண்டித்தான் நாம் தரிசனத்திற்குச் செல்ல வேண்டும், வலம் வரும்போது குமுறும் நெஞ்சையும், பீரிடும் கண்ணீரையும் அடக்கிக் கொண்டு நடக்கிறோம். மேற்குப்புறம்

பிள்ளையார், சுப்ரமணியர், லட்சுமி சந்நிதிகள். வடக்கே நடராஜர் சந்நிதி. உற்சவமூர்த்தி தேரமுந்தூர் சிவாலயத்தின் காவலில் இருக்கிறார். பாவம்! இங்கு ஒரு காலத்தில் கோலாகலமாகக் கோலோச்சியவருக்கு, பாதுகாப்புக்குக் கூட வழியில்லாமல் போய் விட்டது. கிழக்குப் பிராகாரத்தில் ஸ்ரீ விசுவநாதர், விசாலாட்சி, நவக்கிரகம், சூரியன் பைரவர் முதலியோர் அவரவர் ஸ்தானத்தில் இருக்கின்றனர். ஸ்ரீ நந்திகேச்வரர் இருக்கிறார். முன் மண்டபத்தினுள் நுழைந்தால், வடபுறத்தில் அம்பாள் சந்நிதி. தென் திசை நோக்கியவாறு திருமுருக மண்டலம். கருவறைக்கு வெளியே மண்டபத்தில் ஸ்ரீ ராமர், சீதை லட்சுமணர் இருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கோயிலுக்குச் சொந்தமானவர்கள் அல்லர். முன்பிருந்த ஸ்ரீ ராமர் கோயில் சிதிலமடைந்து போய் விட்டதால் நல்ல மனம் படைத்த ஒருவர் அந்த மூர்த்திகளை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார். ராமர் கோயில் இருந்த நிலத்தில் தற்போது யாரோ ஒருவர் வசித்துக் கொண்டிருக்கிறார்! இங்குள்ள துர்க்கை அம்சமாக இருக்கிறாள். விமானங்களெல்லாம் அதிகமாக பழுதடையாமல் கலசங்களோடு இருந்தாலும் அவற்றில் செடிகள் மண்டிக் கிடக்கின்றன. 'இவற்றையாவது களைந்தெறிவோம்' என்று ஒருவரும் முன்வருவதாகத் தெரியவில்லை.

மதிற்சுவர்களோடும், நந்தவனத்தோடும் அத்தனை திருவிழாக்களோடும் சீரும் சிறப்போடும் திகழ்ந்த கோயில் காலவெள்ளத்தில் தக்க கவனிப்பும் ஆதரவுமின்றிக்கரைந்து விட்டிருக்கிறது. இந்தக் கோலமும் தமது திருவிளையாடல் தான் என்பது போல் உள்ளே மௌனமாக அமர்ந்திருக்கிறார் கருணா சமுத்திரமூர்த்தி.

கோமலில் 'மொட்டை லிங்கம்' என்று வெகு ஆண்டுகளாகச் செல்லமாக அழைக்கப்படும் பெரிய சிவலிங்கம் வடக்கு ஒத்தைத் தெருவில் இருக்கிறது. அமிர்தகடேச்வரர் என்ற திருநாமம். முன்பு பெரிய கோயிலாக இருந்து அது

ஜீர்ணமாகி, தற்போது சிவலிங்கம் மட்டும் இருக்கிறது. சிவலிங்கமே இத்தனை பெரியது என்றால் அந்தக் கோயில் எத்தனை பெரிதாக இருந்திருக்க வேண்டும்!

அவ்வூர் பெருமாள் கோயிலைக் காணச் சென்றோம். அறநிலைய அதிகாரிகள் வந்திருப்பதாக நினைத்து ஓர் அம்மாள் எங்களிடம் ஓடி வந்தார். ''சாமீ, நான் இந்த ஊர் கோயில்லே சேவகம் பண்றவ. சம்பளமே கொடுக்க மாட்டேங்கறாங்க. ரொம்ப வறுமைங்க. வயத்துக்கில்லாத கொடுமையாலேதான் கேக்கறேங்க. நீங்கதான் பெரிய மனசு பண்ணி எப்படியாவது எனக்குக் கொஞ்சம் பணமாவது குடுக்க ஏற்பாடு பண்ணுங்க'' என்று பரிதாபமாக மன்றாடினார். நாங்கள் யார் என்று தெரிந்ததும். ''ஐயோ பாவம், உங்ககிட்டே சொல்லி என்ன பிரயோஜனம். நீங்க என்ன செய்வீங்க?'' என்று அந்த மாது நகர்ந்து விட்டார்.

பெருமாள் கோயிலின் அர்ச்சகர் இல்லத்தில் இல்லை; யாரோ ஒரு பெண்மணி வந்து கதவைத் திறக்கவே, பெருமாளைத் தரிசனம் செய்து கொண்டோம். சிவன் கோயிலுக்கே இந்தக் கதியென்றால், பெருமாளை யார் கவனிக்கப் போகிறார்கள்? எப்படியாவது இங்கு திருப் பணி செய்து குடமுழுக்குச் செய்துவிட வேண்டும் என்று சிலர் வைராக்கியமாக இருக்கிறார்களாம். முப்பது வருடங் களுக்கு முன் பாலாலயம் செய்ததோடு சரி. முன்னின்று பொறுப்பேற்றுக் கொண்டு செயலில் இறங்கக் கோமலில் யாரும் இல்லையா?

அப்படியானால், கோமலில் பிறந்து, அல்லது அவ்வூரைப் பூர்வீகமாகக் கொண்டு நாடெங்கும், கடல் கடந்தும் வசதியாக வாழ்பவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். தற்போது நல்ல நிலையிலிருப்பவர்கள், எங்களூர் கோயில்கள் மண்ணோடு மண்ணாகிக் கொண் டிருப்பதைப் பார்த்துக் கொண்டு நான் வசதியோடும்

வளமோடும், பெயரோடும், புகழோடும் வாழ்ந்து கொண்டிருப்பதா?' என்று உள்ளம் உருகி ஒரு கணம் நினைத்து முயன்றாலே போதும், பழடைந்து போயிருக்கும் கிராமக் கோயில்களெல்லாம் புத்துயிர் பெற்றுவிடும்.

பல காரணங்களால் கிராமங்களிலிருந்து வெளியேறி, உத்தியோகத்திலிருந்து விட்டுப் பட்டணத்திலேயே தங்கி விட்டவர்கள், வயதான காலத்தில் தங்கள் ஊர் கோயிலைப் பற்றிக் கவலைப்படுவதை நான் பார்த்து வருகிறேன். பணமும் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனால், வெளியூர்களில் குடியேறியவர்களுடன் தொடர்பு கொண்டு. கிராமத்திலிருப்பவர்களை ஒருங்கணைத்து, பொறுப்பானவர்களிடம் திருப்பணியை ஒப்படைக்க வழி புரியாமல் 'எப்போது வேளை வருமோ?' என்று காத்திருக்கிறார்கள். இந்நிலையில் இளைஞர்கள் தான் பொறுப் பேற்றுக் கொண்டு. துணிச்சலோடு செயலில் இறங்க வேண்டும். வாழ்க்கையில் நாம் எத்தனை சாதனைகள் புரிந்திருந்தாலும், நம்ம ஊர் கோயில் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சாதனைக்கு அவை ஈடாகாது. அந்தப் புண்ணியத்திற்கு ஈடிணையே கிடையாது.

நச்சினார் குடி—இடைக்கம் ஸ்ரீகண்டபுரம்

கோமலுக்கு அடுத்த ஊர் நச்சினார்குடி. பசு மாடுகளை மேய்த்துச் சென்ற பெருமாள், ஒரு நாள் தங்கிச் சமைத்துச் சாப்பிட்ட இடமாம் இது. அங்கு இரண்டு பிள்ளையார் கோயில்களும். ஒரு மாரியம்மன் கோயிலும் இருக்கின்றன.

அடுத்து நாங்கள் சென்றது இடைக்கம். இந்த ஊரை 'இடைக்கியம்' என்று கூறுகிறார்கள், பஸ்ஸுக்காக நின்று கொண்டிருந்த செல்லப்பா குருக்கள் எங்களை மகிழ்ச்சியோடு அழைத்துச் சென்று, கோயிலைத் திறந்து தரிசனம் செய்து வைத்தார். இடைக்காட்டுச் சித்தர் வழிபட்ட இடமாதலால் அந்தக் கிராமத்திற்கு இடைக்கம் என்ற பெயர் ஏற்பட்டது என்றார் அவர். சிறிய கோயில் தான். ஒரே பிராகாரம். கிழக்குப் பார்த்த சந்நிதி. பிராகாரத்தில், தென்கிழக்கு மூலையில் விநாயகர் சந்நிதி உண்டு. அம்பாள் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறாள். சுவாமி—வன்மீக நாதர், அம்பாள்— காமாட்சி.

கோயிலுக்கு எதிரில் ஒரு பெரிய ஏரி. முழுமையாக வற்றிப் போயிருந்தது. எதிர்க்கரையில் பம்ப்செட்டில் பெண்மணிகள் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். எங்களைப் பார்த்துவிட்டு கிராமச் சிறுவர்களும் சிறுமி களும் குதூகலமாக ஓடி வந்தார்கள். 'நம்ம ஊர் கோயிலைக்கூடப் பார்ப்பதற்கு யாரோ வந்திருக்கிறார் களே!' என்று அவர்கள் முகத்தில் ஒரே ஆச்சரியம்!

இடைக்கம் கோயிலுக்குத் தலபுராணச் சிறப்பு உண் டென்றும், இதைப்பற்றி திருவிடைமருதூர் புராணத்தில் கூறப்பட்டுள்ளது என்றும் செல்லப்பா குருக்கள் கூறினார்.

இடைக்கத்திற்கு அடுத்த கிராமம் ஸ்ரீகண்டபுரம், சுவாமி தமது ஞான திருஷ்டியால் பசுக்கூட்டத்தினிடையே அம்பாளை அடையாளம் கண்டு கொண்ட இடமாதலால் இது ஸ்ரீகண்டபுரம் ஆயிற்றாம். அம்பாள் திருப்பாதம் பட்ட மண்ணில் சிறிது காலாற நடந்தபடியே. கோயில் எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு, பாழடைந்து போயிருக்கும் அவ்வூர் சிவன் கோயில் இருக்குமிடத்தை அடைந்தோம்.

கோயிலுக்கு முன்னுள்ள குளத்தை வெட்டி ஆழப் படுத்திக் கொண்டிருந்தார்கள். வறட்சி நிவாரணப்

பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களிடம், ''கோயில் திறந்திருக்கிறதா?'' என்று விசாரித்தோம். ''எப்போதும் திறந்துதான் கெடக்கு. அதை யாரு மூடறாங்க. திறக்கிறாங்க?'' என்றார் ஒருவர். உண்மைதான். உள்ளே சென்று பார்த்தபோது, அங்கு பூஜை நடைபெறுவதற்கான அடையாளங்களையே காண முடியவில்லை. ஊர்க்கோடியில் இருக்கும் கோயிலுக்கு யாரும் வந்து போவதாகவும் தோன்றவில்லை. சுவாமி—அம்பாள் பெயர்களைச் சரியாகக் கூறவும் அங்கு ஒருவருமில்லை.

மாந்தை

பசு மந்தை நாட்கணக்கில் தங்கிய இடமும் ஸ்ரீகண்டபுரத்திற்குக் கிழக்கே இருக்கிறது. அது நட்டாற்றின் அக்கரையில் உள்ளது. அந்த ஊர் தற்போது மாந்தை என்று அழைக்கப்படுகிறது. சிவபெருமான் ரிஷப வடிவம் எடுத்து, இந்த இடத்தில்தான் பசு மந்தையோடு சேர்ந்து கொண்டாராம்.

அரசலாற்றிலிருந்து பிரியும் கிளை நதி நட்டாறு. பெரிய வாய்க்காலைப் போலிருக்கிறது. அதன் வடகரையில் மாந்தையும், இடக்கரையில் ஐயனார்குடியும் இருக்கின்றன.

நாட்டாறு வாய்க்காலின்மீது, மூங்கிலாலும், தென்னம் பிளாச்சுகளாலும் கட்டப்பட்ட ஒரு 'தொளதொள'பாலம். அதில் சற்று ஜாக்கிரதையாகவும் சாமர்த்தியமாகவும் ஏறி நடந்தால், அந்தப் பக்கம் மாந்தை என்ற அழகிய கிராமம்.

மாட்டு மந்தையை மேய்த்து வந்த ஆமருவியப்ப பெருமாள் இந்த ஊரில் ஸ்ரீநிவாசனாக, ஸ்ரீதேவி பூதேவியுடன் எழுந்தருளியுள்ளார். அக்கோயிலில் மாடுகள்

மேய்க்கும் சிறுவனாகக் கண்ணபிரான் காட்சி தருகிறார். காணக் காணத் தெவிட்டாத மூர்த்தி. இந்தத் தலபுராணக் கதையை மெய்யாக்கிக் கொண்டு இன்றும்கூட இந்த ஊரில் திருவிழா நடைபெற்றுவருதாக நான் முன்பே அறிந்திருந்தேன்.

எனக்குத் தெரிந்து, தீவிர ஈடுபாடும் மன உறுதியும் விடா முயற்சியும் கொண்ட சில அர்ச்சகர்கள் தங்கள் நல்ல உதாரணத்தால் பக்தர்களைக் கவர்ந்து, கோயில் கைங்கரியங்களில் அவர்களை ஈடுபடுத்தி, திருப்பணிகளை நடத்தி சிறிய அளவில் குடமுழுக்கு கூடச்செய்திருக்கிறார்கள்.

இத்தகைய அபூர்வ அர்க்சகர்களிடம் குடிகொண்டுள்ள ஆர்வத்தையும் துடிதுடிப்பையும் மாந்தை பெருமாள் கோயில் அர்ச்சகர் ஸ்ரீ ரங்கசுவாமி பட்டாச்சாரியாரிடமும் கண்டேன். இளம் வயதானதால் சுறுசுறுப்புடன் இருக்கிறார். ஒப்பிலியப்பன் ஆலயத்திலும் தளராத சேவை செய்து கொண்டு, இந்தக் கிராமக் கோயிலையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறார்.

மாந்தைக் கிராமத்துள் நுழைந்ததும் மங்கள விநாயகரின் அருட் பார்வை நம்மீது விழுகிறது. இவர் முன்பு குளக்கரையில் குடியிருந்தாராம். அவருக்குத் தோப்புக் கரணம் போட்டு விட்டு, பெருமாள் கோயிலை நோக்கிச் செல்கிறோம். சிறிய கிராம வீதி. அழகாக இருக்கிறது.


சின்னஞ்சிறிய கோயில், பளிச்சென்றிருக்கிறது. மூலவர், ஸ்ரீதேவி, பூதேவியுடன் உறையும் ஸ்ரீநிவாசர். உற்சவர் ஸ்ரீவெங்கடாசலபதி. அக்கோயிலில் இருக்கும் ஸ்ரீநவநீத நர்த்தன கிருஷ்ணன் விக்ரகம்தான் மாட்டுப் பொங்கல் அன்று மாலை புறப்பாடாகிறது. சுவாமி புறப்பட்டு நேர் கிழக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவாலயம் வரை செல்கிறார். அக்கோயிலில் ஸ்ரீ செளந்தரேச்வரரும் அபிராமி அம்பாளும் எழுந்தருளியுள்ளனர்.

பெருமாள் கோயிலிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் புறப்பட்டதும், கூடவே கிராமத்தின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மக்கள் தங்கள் பசுக்களையும் ஓட்டி வருகின்றனர். கோபாலன் அவற்றை மேய்த்துக்கொண்டு போவதாக ஐதீகம். சாதி வேற்றுமையின்றி அனைவரும் சிவலாயத்திற்கு அடுத்துள்ள திடலில் கூடுகிறார்கள். வாத்தியங்கள் முழங்குகின்றன. தாரை தப்பட்டைகள் ஒலிக்கின்றன. வயோதிகர் முதல் சிறுவர் சிறுமியர் வரை ஒரே கும்மாளக் கூச்சல்தான். ஸ்ரீ கிருஷ்ண பகவான் சிவாலயத்திற்கருகில் போய் நின்றுவிடுகிறது. அங்குள்ள ஒரு சிறு மண்மேடையில் கிராமத்தார் பொங்கல் தயாரிக்கிறார்கள். சுவாமிக்கு நைவேத்தியம், தீபாராதனைகள் ஆனதும், அந்தப் பொங்கலைப் பிரசாதமாக விநியோகிக்கிறார்கள். சிவாசாரியார் ஆலய மரியாதைகளோடு கோபாலனை எதிர்கொண்டு அழைத்துவிட்டு, பதில் மரியாதைகளைப் பெற்றுச் செல்கிறார்.

ஆண்டுதோறும், மாட்டுப்பொங்கல் தினத்தன்று நடைபெறும் இந்த உற்சவம், அம்பாள் பசுவாக மாறிய தல புராணத்துடன் தொடர்பு கொண்டது. கோபாலன், தன் சகோதரி அடங்கிய பசுக் கூட்டத்தை மேய்ப்பதும், சிவபெருமானும், பெருமாளும் ஒற்றுமையுடன் உறவாடி அன்பில் பிணைந்து மகிழ்வதும், கிராம மக்கள் எல்லா வேற்றுமைகளையும் மறந்து, ஒருங்கிணைந்து அந்தப்பேரின்பத்தில் திளைப்பதும், ஒருவரோடு ஒருவர் இணைந்து குதூகலிப்பதும் சமுதாயத்தின் கட்டுக்கோப்யைப் பலப்படுத்த உதவுகின்றன. இந்த ஒற்றுமையுணர்வை வளர்க்கும் நோக்கத்துடன் தான் அக்காலத்தில் ஆலய திருவிழாக்களும் தேரோட்டங்களும் நடைபெற்று வந்திருக்கின்றன. சில இடங்களில், அடிப்படை உணர்வுகள் மாறாமல் அந்தத் திருவிழாக்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. காலத்தின் கட்டாயத்தால் மறைந்து விட்ட திருவிழாக்களும் மீண்டும் தொடங்கப்பட்டு, மக்கள் அனைவரும் சேர்ந்து




ஸ்ரீவேதபுரீச்வரர் ஆலயம்
(தேரழுந்தூர்)



ஸ்ரீகிருபா கூபாரேச்வரர்
ஆலயம்
(கோமல்)



ஸ்ரீஆமருவியப்பன் ஆலய
இந்திரவிமானம்
(தேரழுந்தூர்)



மாந்தை சிவன் கோயில்




அருள்வள்ளநாதர் ஆலயம்
(திருமணஞ்சேரி)



ஸ்ரீகோமுக்தீச்வரர் ஆலயம்
(திருவாவடுதுறை)




மூவலூர்
ஆலய ராஜகோபுரம்



குத்தால ஆலயத்தில் உத்தால மர்ம்




ஸ்ரீகோகுரேச்வரர் ஆலயம்
(திருக்குளம்பியம்)



ஸ்ரீமணவாளேச்வரர் ஆலயம் (திருவேள்விகுடி)

…ம் முனீச்வரர்



கோனேரிராஜபுரம் நடராஜர்





திருவைகல் சாஸ்தா







ஒப்பிலியப்பன் கோயில்
(திருக்குளம்)



ஸ்ரீசந்திரமௌளீச்வரா் ஆ
(மேலூர்)



ஸ்ரீ ஆபத்சகாயேச்வரா ஆலயம்
(துக்காச்சி)

படங்கள்—நன்றி: ஆனந்த விகடன்



ஸ்ரீநாகநாத சுவாமி ஆலயம்



ஸ்ரீ ஐயராவதேச்வரர் ஆ
ராஜகோபுரம்
(ஆடுதுறை-மருத்துவகு

ஆன்மநேய, மனித நேய உணர்வுடன் ஒத்துழைத்து அவற்றை நடத்தி வந்தால், சாதி சமய சச்சரவுகள் பெரு மளவு மறைவதற்கு வாய்ப்பிருக்கிறது. நம் முன்னோர்கள் சமய வாழ்வோடும், ஆலய வழிபாட்டோடும், சமுதாய நலத்தையும் ஒற்றுமையையும் இணைத்தே சிந்தித்திருக் கிறார்கள். அமைதியான வாழ்வுக்கான பழக்க வழக்கங் களை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். கதைகளை உரு வாக்கி, நல்ல கருத்துக்களைப் பரப்பி வந்திருக்கிறார்கள்.

சோமாசிமாறநாயனார் செய்த யாகத்தில் திருவாரூர் தியாகேசன் புலையன் வேடத்தில் வந்த நிகழ்ச்சி இன்றும அம்பர் மாகாளத்தில் ஆண்டுதோறும் திருவிழா வடிவத்தில் நினைவுப்படுத்தப் படுகிறது. அதைப் போன்றே, மாந்தை யில் கிருஷ்ணன் எல்லோருடனும் சேர்ந்து மாடு மேய்த்த வரலாறு ஒவ்வொரு மாட்டுப் பொங்கல் அன்றும் மீண்டும் மீண்டும் நடத்திக் காட்டப்படுகின்றது.

ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் ஒரு தாயார் சிலையுள்ளது. மார்கழி மாதம் கூடாரவல்லியன்று மண மாகாத பெண்கள் மட்டும் வந்து, தாயாருக்குப் பூஜை செய்து, பக்திப் பாடல்கள் பாடி மகிழ்கிறார்கள். இக் கோயிலில், ஊருக்குக் கிழக்கே, ஒதுங்கியிருக்கும் சாஸ்தா கோயிலின் உற்சவமூர்த்தி வைக்கப்பட்டிருக்கிறது. சாஸ்தா கோயிலுக்குப் பால் காவடி எடுத்துச் செல்வது சிறப்பான பிரார்த்தனையாகும். இக்கிராமத்திற்கு மட்டுமின்றி, பிற பகுதியில் வாழ்பவர்களுக்கும் இந்த ஐயனார் குலதேவதையாக விளங்குகிறார். எதிரிலுள்ள ஒரு புற்றில் ஒரு நல்லபாம்பு வாழ்கிறது. அபிஷேகத்தன்று அதற்குப் பால் வார்க்காமல் யாரும் திரும்புவதில்லை.

பெருமாள் கோயிலுக்குத் தெற்கில் ஒரு குளம் இருக்கிறது. அது சூர்ய தீர்த்தம். இதில் முறைப்படி

நீராடினால், குழந்தைப் பேறு உண்டாகிறதாம். அது மட்டுமல்ல; அதிகமான குழந்தைகளும் பிறப்பதில்லையாம். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஏற்றவகையில், அந்தக் கிராமத்தில் எந்த வீட்டிலுமே இரண்டு மூன்று குழந்தை களுக்கு மேல் இல்லையென்று ரங்கசாமி பட்டாச்சாரியார் ஒரு புள்ளி விவரமும் தந்தார்!

பில்லூர்

அடுத்து, நாங்கள் பில்லூர் என்று அழைக்கப்படும் புல்லூருக்குச் சென்றோம். மயிலாடுதுறை—திருவாரூர் ரயில்பாதையில், கொல்லுமாங்குடி ரயில் நிலையத்திற்கு அருகே உள்ள ஊர்.

பசுக்கள் அங்கே புல் மேய்ந்த காரணத்தால் அப்பெயர் ஏற்பட்டிருக்கிறது.

சோழ மன்னன் ஒருவன் தன் வெற்றிக்கு அடையாள மாகக் கட்டிய கோயில் அது. அதனால் சுவாமிக்கு ஜயசோழேச்வரர் என்றும், அம்பாளுக்கு ஜயாம்பாள் என்றும் பெயர்கள். இங்கு சோழ அரசனின் சிலை இருக் கிறது.

இந்த கிராமக் கோயில் மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளது. விமானங்களில் மரங்கள் ஆழமாக வேர் விட்டுப் படர்ந்திருக்கின்றன. ஒரு பலமான வேர் மண்டபத்தையே இரண்டாகப் பிளந்துள்ளதைக் கண்டபோது நம் இதயமே பிளந்தது.

சென்னையில் வசிக்கும் அக்கிராமத்துக்காரர் ஒருவர், பத்து ஆண்டுகளுக்கு முன்னால் திருப்பணி செய்ய முன் வந்தும் சில காரணங்களால் அது பாதியிலேயே நின்றிருக்

கிறது. அதற்குப் பிறகு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை. கிராம மக்களிடம் கோயிலில் திருப்பணி ஏதாவது செய்ய வேண்டுமென்று ஆர்வம் இருப் பதைக் கண்டேன்.

மேக்ரிமங்கலம் — திருக்குளம்பியம்

தேரழுந்தூரிலிருந்து திருவாவடுதுறை செல்லும் வழியில் மேக்கிரிமங்கலம் என்று ஓர் ஊர். அங்கு, ஊருக்கு ஒதுக்குப் புறமாக வயல்வெளிகளுக்கு நடுவே ஒரு சிவன் கோயில் இருக்கிறது. தஞ்சைத் தரணியில் பாழடைந்து, பூஜை நின்று போய்விட்ட கிராமக் கோயில்களில் இதுவும் ஒன்று. சிவலிங்கம் இருக்கிறது. ஆனால், அம்பாள் விக்ர கத்தையே காணோம். அருகில் வயல் ஓரமாகப் புதைந்து போன சிவலிங்கத்தின் மீது விநாயகர் ஹாய்யாகச் சாய்ந்த படி அமர்ந்திருக்கிறார்! இருபது வருடங்களுக்கு முன்னால் அங்கு பூஜை நடந்து பார்த்திருப்பதாக ஓர் உள்ளூர் அன்பர் கூறினார்.

மேக்கிரிமங்கலத்திலிருந்து திருக்குளம்பியம் என்ற தலத்திற்குச் செல்கிறோம். மேய்ந்து கொண்டிருந்த பசுவின் பாதத்தில் ஒரு கல் இடறியது. பார்த்தால், அது ஒரு சிவலிங்கம். அம்பாளின் குளம்பு பாதம் சிவலிங்கத்தின்மீது பட்டதால் இந்த இடம் திருக்குளம்பியம் ஆனது. சிவா பராதம் செய்து விட்டதால் பசு மிரண்டு ஓடியதாம்! திருமால் அதைச் சமாதானம் செய்து அழைத்து வந்தா ராம். இங்கு சுவாமியின் திருநாமம் ஸ்ரீ கோகுரேச்வரர் என்பதாகும். 'குரா' என்றால் மாட்டுக்குளம்புச் சுவடு என்று பொருள். அம்பாள் திருநாமம். ஸ்ரீசௌந்தரநாயகி.

முன்னால் கருங்கல் மொட்டைக் கோபுரம். அடுத்துள்ள கோபுரத்தில் செடிகள் முளைத்திருக்கின்றன. இப்போதே

அவற்றை வேரோடு களைந்து விட்டால் அவை வேருன்றிக் கோபுரத்தைப் பிளக்காமல் காப்பாற்றலாம். நந்திகேச்வர ருக்கு வடக்குப்புறம் தெற்கு நோக்கி அம்பாள் திருச் சந்நிதி.

சுவாமி கோயிலைச் சுற்றியுள்ள கோஷ்டங்களில் விநாயகர், அகஸ்தியர், சட்டநாதர், தட்சிணாமூர்த்தி, பிரும்மா, அர்த்தநாரீச்வரர், துர்க்கையம்மன், பிட்சாடனர் முதலிய மூர்த்திகள் உள்ளன. மேற்குப் பிராகாரத்தில் சுப்ரமணியர், நாவுக்கரசர், சிவலிங்கம், கஜலட்சுமி சிலைகள் இருக்கின்றன. கிழக்குப் பிராகாரத்தில் சூரியனும் பைரவரும் எழுந்தருளியுள்ளனர். கருவறை விமானம் நல்ல நிலையிலுள்ளது.

செம்பியன்மாதேவியார் கட்டிய திருக்கோயில் இது.

திருவாவடுதுறை

திருக்குளம்பியத்திலிருந்து வடக்கே மூன்று கிலோ மீட்டருக்குள் திருவாவடுதுறை திருத்தலம் உள்ளது. மயிலாடுதுறை — கும்பகோணம் ரயில் பாதையில் நரசிங்கன்பேட்டை ரயில் நிலையத்திற்குக் கிழக்கே ஒரு மைல் சென்றால் இந்தக் கோயிலை அடையலாம். குத்தாலத்திற்கும் கும்பகோணத்திற்கும் இடையே பஸ் பாதையிலேயே 'திருவாவடுதுறை ஆதீனம்' என்ற அலங்கார வளைவுக்குள் நுழைந்தால் நேரே கோயிலைச் சென்று அடையலாம். பேருந்தில், மயிலாடுதுறையிலிருந்து பத்து மைல்; குடந்தையிலிருந்து பன்னிரண்டு மைல்.

சாபத்தால் பசு வடிவம் பெற்ற அம்பாள், மீண்டும் சுய உருப்பெற்ற ஊர் திருவாவடுதுறை.

சிவபெருமான் மகாவிஷ்ணுவிடம், ''தங்கள் சகோதரியை (பசுவாக இருக்கிற அம்பாளை) இப்படி மேய்த்துக் கொண்டே அழைத்துப் போய் காவேரியில் நீராடச் செய்யுங்கள். உடனே அவள் பழைய வடிவம் பெறுவாள். பின்னர் அவளை எப்போது, எங்கே, எப்படித் திருமணம் செய்துகொள்வது என்பதைப் பற்றிச் சொல்கிறேன்'' என்றார்.

ஈச்வரன் சொன்னபடியே, பசு காவேரியாடி, மீண்டும் பெண்ணுருப் பெற்றாள். ஆ — அடு — துறைதான் திருவாவடுதுறை ஆயிற்று. எந்தக் காவேரித் துறையிலே ஆ(பசு) ஆடி (நீராடி) சேர்ந்ததோ அந்த ஊர் என்று அர்த்தம். கோவுக்கு முக்தி கிடைத்த தலமாகையால், சுவாமி ஸ்ரீ கோமுக்தீச்வரராக விளங்குகிறார். அம்பாளின் திருநாமம், ஒப்பில்லாமுலையம்மை.

கோபுரத்திற்கு முன்னுள்ள திருக்குளம் கோமுக்தி தீர்த்தம். இத்தீர்த்தத்திலிருந்து சுவாமி, அம்பாளை அணைத்தெழுந்த கோலமாக எழுந்தருளியதால், உற்சவ மூர்த்தி 'அணைத்தெழுந்த நாயக'ராகத் திகழ்கிறார். உற்சவ காலத்தில் இவர் கோமுக்தி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளுகிறார்.

கோபுர வாயிலின் தென்புறம், துணைவந்த விநாயகர் காட்சி தருகிறார். அம்பிகை பசு வடிவம் தாங்கிப் பூலோகம் வந்தபோது துணையாக வந்த விநாயகர் இவர். தல விநாயகர். 'அழகிய விநாயகர்.' இவர் அகத்திய முனிவருக்குப் பஞ்சாட்சரம் உபதேசித்தருளினார். கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்திக்கு அருகில் உள்ளார்.

கோபுர வாயிலுக்குள் நுழைந்த உடன், வடகிழக்கில் ஸ்ரீ ஆதிமுக்தீச்வரர் சந்நிதியும், தென்கிழக்கில் நால்வர் சந்நிதியும் உள்ளன. இத்தலத்திற்கு மூவரின் தேவாரத் திருப்பதிகங்கள் உள்ளன. சம்பந்தர் ஒரு பதிகமும்,

நாவுக்கரசர் ஐந்து பதிகங்களும், சுந்தரர் இரண்டு பதிகங்களும் பாடி மகிமை சேர்த்திருக்கின்றனர்.

இக்கோயிலில் மிகப் பெரிய நந்தியும், மிக உயரமான கொடிமரமும், மிகப் புகழ்வாய்ந்த பலிபீடமும் உள்ளன இவற்றை அடுத்துள்ள மண்டபத்தில் ஸ்ரீ மாசிலாமணீச்வரரும் ஒப்பில்லா முலையம்மையும் தரிசனம் தருகிறார்கள்.

ஒரு சமயம் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் இங்கே பெருமானைத் தரிசனம் செய்துவிட்டு, பத்திரலிங்கமாகிய பலி பீடத்திற்கு அருகில் வந்தபோது சற்றே நின்றார். சுற்றுமுற்றும் நோக்கினார். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று. ''இங்கு தமிழ் மணம் கமழ்கின்றது'' என்று பூரிப்புடன் கூறினார். அருகிலிருந்தவர்கள், பலி பீடத்தை நகர்த்தி வைத்தார்கள். அதனடியில் திருமந்திரத் திருமுறைகள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். உள்ளத்தில் உவகை பொங்க அவற்றைத் தம் திருக்கரத்தால் எடுத்துத் தலையின் மீது வைத்துக் கொண்டார். பின்னர், அங்கு குழுமியிருந்தவர்களிடம், ''திருமூல நாயனார், இக்கோயிலின் மேற்கேயுள்ள அரசமரத்தடியில் மூவாயிரம் வருடங்கள் சிவயோகத்தில் ஆழ்ந்திருந்தார். அச்சமயம் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் இயற்றினார். சிவபெருமானுடைய அருளாசியால், சிவாகமங்களில் உணர்த்தப்பட்ட மெய்ப் பொருளை ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் பாதங்களாகச் செய்தருளினார். இது தமிழுக்குக் கிடைத்த பெரும் செல்வமாகும்'' என்று கூறியருளினார்.

ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் பட்டீச்வரத்தில்தரிசனம் முடித்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்து, ஸ்ரீகோமுக்தீச்வரரை வழிபாடு செய்து கொண்டிருந்த நாளிலே, ஒரு சமயம் தந்தை சிவபாத இருதயர் சபம்ந்தரை நோக்கி, ''நான் யாகம் ஒன்று செய்யப்

போகிறேன். அதற்குத் தேவையான பொருளுக்கு நீதான் ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதைக் கேட்ட சம்பந்தப்பெருமான், கோயிலுக்குள் சென்று திருச்சந்நிதி முன் நின்று, 'இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உன் கழல் தொழு தெழுவேன்' என்னும் திருப்பதிகம் பாடினார். அக்கணம் சிவ பூதம் ஒன்று விரைந்து வந்து, பொற்கிழி ஒன்றைப் பீடத்தின் மீது வைத்துவிட்டு, ''இது சிவபெருமானால் உமக்கு அளிக்கப்பட்ட பெருநிதியாகும்'' என்று சொல்லிவிட்டு மறைந்தது. ஆண்டவன் அருள் வெள்ளத்தின் மகிமையைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தவராய் சம்பந்தர் அந்த நிதியை எடுத்து தமது தந்தையாரிடம் தந்து, ''நீங்களும் பிறரும், சிவபெருமானையே தலைவராகக் கொண்டு வேத விதிப்படி யாகங்கள் செய்யும் பொருட்டு ஈசன் எனக்கு ஈந்தது இது. இதை எடுத்துக் கொண்டு சீர்காழி போய் வாருங்கள்'' என்று அன்புடன் வழியனுப்பி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின், வேதாரண்யம், திருநாகைக்காரோணம். திருவீழிமிழலை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருநாவுக்கரசர் திருவாவடுதுறை வந்தடைந்தார். அப்போது ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு சிவபெருமான் ஆயிரம் செம்பொன் அளித்த செய்தியை அறிந்து, ''மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும் ... கழுமல வூரர்க் கம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே' என்று பாடிப் பரவசப் படுகிறார்.

வழியில் உள்ள பல பதிகளை வழிபட்டுக் கொண்டே ஸ்ரீசுந்தர மூர்த்தி நாயனாரும திருவாவடுதுறையை அடைகிறார். தமக்கு ஒரு கண்ணில்லாமை குறித்து மனம் மிக வருந்தி சுவாமியை நோக்கி, 'கங்கை வார்சடை யாய்கண நாதா' என்னும் திருப்பதிகத்தைத் தொடங்கி ஐந்து

பாட்டுகள் பாடுகிறார். ஆறாவது பாட்டை, 'குறைவிலா நிறைவே குணக்குன்றே கூத்தனே குழைக்கா துடையானே' என்று தொடங்குகிறார். அக்கணமே ஸ்ரீகோமுக்தீச்வரர், திருவாரூர் தியாகேசனாக சுந்தரருக்குத் திருக்காட்சி அளித்து அபயம் தந்தருளினார். அந்தப் பேரானந்தக் காட்சியைக் கண்டதும் சுந்தரர் 'சிறை வண்டார் பொழில் சூழ் திருவாரூர்ச் செம்பொனே' என்று பரவசமடைந்து திளைத்துப் போகிறார்.

திருக்கயிலாயமலையில், திருநந்தி தேவர் அருள்பெற்ற யோகிகளில் ஒருவர் அட்டமாசித்திகளில் வல்லவராயிருந் தார். அவர், அகத்திய முனிவருடன் சில காலம் தங்குவ தற்கு விருப்பம் கொண்டு, தமிழ்ப் பொதிய மலையை நோக்கிப் புறப்பட்டார். திருக்கேதாரேச்வரர். பசுபதிநாதர் முதலிய ஆலயங்களை வழிபட்டு, கங்கையில் நீராடி, விந்தியமலையைக் கடந்து, ஸ்ரீசைலத்தைத் தரிசித்துக் கொண்டு காளத்தீச்வரரை வழிபடுவதற்காக திருக் காளத்தித் திருத்தலம் அடைந்தார். காளத்திநாதரை வழி பட்ட பின்னர், திருவாலங்காடு, திரு ஏகம்பரம் தரிசித்து, காஞ்சியில் சில நாட்கள் தங்கி திருவதிகை தரிசித்து, சிதம்பரம் கண்டு, காவிரியாற்றின் கரையை அடைந்தார். அங்குள்ள திருப்பதிகளை தரிசித்துக் கொண்டே திருவாவடு துறையைச் சென்றடைந்தார். மாசிலாமணியீசரை வழி பட்டு, அவரது திருநோக்கிலிருந்து பிரிய மனமின்றிச் சின்னாட்கள் அங்கேயே தங்கினார். பின்னர், பொதிய மலை செல்லும் எண்ணத்துடன் பயணத்தைத் தொடர்ந் தார். வழியில், காவிரிக் கரையோரமாகப் பசுக் கூட்டம் ஒன்று நின்று கதறியழுவதைக் கண்டார், மனமிளகவே, நின்று கவனித்தார்.

அருகிலுள்ள சாத்தனூரைச் சேர்ந்த பசுக்கள் அவை. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன் மூலன் என்பவன். அவன் ஆயுள் முடிந்து அங்கேயே உயிர் துறந்து நிலத்தில்

கிடந்தான். அவன் சடலத்தைச் சுற்றித்தான் அப்பசுக் கூட்டம் அழுது கொண்டிருந்தது. இந்தக் காட்சி சிவயோகி யாரை உலுக்கிவிட்டது.

மூலன் உயிர் பெற்று எழுந்தால் தான் பசுக்களின் துயர் நீங்கும் என்று உணர்ந்தார். சிவபெருமானின் துணைக் கொண்டு பசுக்களின் துயர் துடைப்பது என்று உறுதி கொண்டார். கூடு விட்டுக் கூடு பாயும் தமது சக்தியைப் பயன்படுத்தினார். அதன்படி, தமது உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாகப் பத்திரப் படுத்திவிட்டு, இறந்து கிடந்த உடலுக்குள் தமது உயிரைச் செலுத்தினார். மூலன் உயிர் பெற்று எழுந்தான். திருமூலர் ஆனார். படுத்திருந் தவர் கண் விழித்தெழுந்ததும் பசுக்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தன. அவரைத் தீண்டி மகிழ்ந்தன. நாவி னால் தீண்டி அன்பைப் பொழிந்தன.

பசுக் கூட்டம் வழக்கம்போல் மேய்ந்து விட்டு, காவிரியில் நீரருந்தி விட்டுத் திரும்பும்வரை திருமூலர் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். பொழுது சாய்ந்தது. பசுக்கள் சாத்தனூரை நோக்கி நடந்தன. திருமூலர் அவற்றின் பின் சென்றார்.

பசுக்களெல்லாம் தத்தம் மனை ஏறின. ஆனால் சிவயோகியான திருமூலர் தன் இல்லம் செல்லவில்லை. மனைவியுடன் உறவு கொண்டாடவில்லை. பொது மடம் ஒன்றில் சென்று இரவு தங்கினார்.

'கணவ'னின் செயல் கண்டு மனைவி திகைத்தாள். ஊர்மக்கள் பலருக்கு இம்மாற்றத்தின் உட்கருத்துப் புலப் படவில்லை. ஆனால், பெரியோர் சிலர், யோகியாரின் தன்மையை உணரலாயினர்.

'மூலனுக்குப் பித்துப் பிடிக்கவில்லை. இவர் பந்தபாசங் களைத் துறந்து, ஆசாபாசங்களைக் கடந்து ஞானியாகத் திகழ்கிறார். இந்நிலை இவருக்கு எப்படியோ திடீரென்று

வாய்த்திருக்கிறத. முக்காலமும் உணர்ந்த மோன நிலையில் ஆழ்ந்திருக்கும் இவரை இனி குடும்பப் பற்றுக்குள் அடக்கி வைக்க முடியாது' என்று கூறிய அவர்கள், மூலனின் மனைவியை அங்கிருந்து அழைத்துச் சென்று விட்டனர்.

பின்னர் திருமூலர், தான் முதல் நாள் மறைத்து வைத்த உடலைத் தேடிவந்தார். அதுஅங்கு காணவில்லை. எங்கோ மறைந்து விட்டிருந்தது. அதுவும் சிவபெருமானின் திருவருட் சித்தம் என்று புரிந்து கொண்டார். ஆகமப் பொருளைத் திருமூலர் திருவாக்கால் இப்பூவுலகத்திற்காக தமிழில் வகுத்துத் தர வேண்டும் என்று பரம்பொருள் திருவுளம் கொண்டு விட்டது. திருமூலருக்குத் தம் திருப் பணி புரிந்து விட்டது. ஆநிரை மேய்க்கும் குலம் இதை உணரும்படிச் செய்தார். அவர்கள் சிவயோகியாரைத் தனிமையில் விட்டுவிட்டு, அங்கிருந்து அகன்றனர். தம் எதிர்காலத்தை நன்குணர்ந்த திருமூலர், சாத்தனூரை விட்டு மீண்டும் திருவாவடுதுறை சென்றடைந்தார்.

அங்கு மாசிலாமணி ஈசரையும் ஒப்பில்லா முலை அம்மையையும் வழிபட்டு, கோயிலின் மேற்குப்புறம் உள்ள அரச மரத்தினடியில் அமர்ந்து சிவயோகத்தில் நிலைத்தி ருந்து, இதயகமலத்தினுள் உறையும் இறைவனைக் குறித்து தியானத்தில் ஆழ்ந்தார். உலகிலுள்ள மக்கள் யாவரும், பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் பொருட்டு ஞானம் யோகம், கிரியை, சரியை முதலிய நான்கு நிலைகளையும் விளக்கும் திருமந்திர மாலையால், ஆண்டுக்கு ஒரு பாடலாக சிவபெருமானைப் பாடியருளினார். 'ஒன்றவன்றா' என எடுத்து, மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து விட்டு, மீண்டும் திருக்கயிலையடைந்து திருவருளுடன் கூடி என்றென்றும் பேரின்பத்தில் திளைத்திருந்தார்.

இவ்வாறு சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் கூறியிருக்கிற்ார். திருவாவடுதுறை ஆதீனத் தைச் சேர்ந்த ஸ்ரீசாமிநாத முனிவரால் இயற்றப் பெற்ற

துறைசைப் புராணத்தில், திருமூலரைத் தடுத்தாட் கொண்ட அத்தியாத்தில் இது எழுபத்தாறு செய்யுட் களால் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியில்,

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூல
னாகின்ற அங்கணனே!''

என்று அருளிச் செய்திருக்கிறார்.

தமிழின் அரிய நிதியான இம் மூவாயிரம் பாடல்களும் பலிபீடத்திற்கடியில் பாதுகாக்கப்பட்டு, 'தமிழ்மணம் கமழ்கிறது' என்று ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானால் உணரப்பட்டுக் கண்டெடுக்கப்பட்ட செய்தியை முன்பே கண்டோம்.

வெளிப் பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் திருமூல நாயனார் கோயில் உள்ளது. நாயானாரின் திருவுருவச் சிலை. அமர்ந்த திருக்கோலத்தில் இருக்கிறது.

உள்மண்டபத்தில் ஸ்ரீ மெய்கண்டதேவர், அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் முதலியோரது உருவச்சிலைகளைக் காணலாம்.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ மெய்கண்ட சந்தானம் ஆகும். திருநந்தி மரபு என்றும் வழங்கப்படும். இது சீகண்ட பரம்பரை, கயிலாய பரம்பரை எனப் பெறும். சீகண்ட முதல்வர் கயிலாயத்துள்ளவர். அவர் சீடர் வழி

யில் வந்ததே திருவாவடுதுறை ஆதீனம். அகச் சந்தானம், புறச் சந்தானம் என இருவகைச் சந்தானம் உண்டு. அகச் சந்தானத்தார் திருநந்திதேவர், சனற் குமார முனிவர் சத்திய ஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர் என்பவர்கள்.

புறச்சந்தானந்தார் ஸ்ரீ மெய்கண்ட தேவர், அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் என்னும் நால்வர். சந்தானம் இடையறாது வந்து கொண்டிருப்பது. அதாவது வழிவழியாக வருவது. புறச்சந்தானம் நிலவுலகத்திலுள்ளது. ஸ்ரீ மெய்கண்ட தேவர் புறச்சந்தான முதற் குரவர். அவர் பிரசித்தமாக வாழ்ந்த காலம் பதின்மூன்றாவது நூற்றாண்டாகும்.

உமாபதி சிவத்தின் மாணவர் அருள் நமசிவாயர். அவர் மாணவர் சித்தர் சிவப்பிரகாசர். அவர் மாணவராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளே திருவாவடுதுறை ஆதீனத்தில் முதற்குரவர்.

அம்பிகை பசுவாகப் பூலோகத்தில் அலைந்து, திரிந்து, திருமாலால் பாதுகாக்கப்பட்டு, திருவாவடுதுறையில் சாபம் நீங்கப் பெற்று, திருமணஞ்சேரியில் மீண்டும் சிவ பெருமானின் திருக்கரம் பற்றிய தல புராண நிகழ்ச்சிகள் மயிலாடுதுறையை அடுத்துள்ள பல தலங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதைப் படித்து இறும்பூதெய்தி கொண்டிருக்கிறோம், கிட்டத்தட்ட பதினாறு தலங்களில் பத்து தலங்கள் எழுதிவிட்டேன். இன்னும் ஆறு ஊர்கள் எழுதப்பட வேண்டும்.

பேராவூர் — கருப்பூர்

நச்சினார்க் குடியிலிருந்து, வீரசோழன் நதிக்கரையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும், ஆடுதுறையிலிருந்து

பத்து கிலோ மீட்டர் தொலைவிலும் இருக்கிறது பேராவூர் என்ற சிற்றூர். சாத்தனூரிலிருந்து இரண்டு மூன்று கி. மீட்டருக்குள் உள்ளது. அங்கு ஸ்ரீ ஆதித்தேச்வரர், ஞானாம்பிகா சமேதராய் எழுந்தருளியிருக்கிறார், இங்கு தான் சிவபெருமான் பெரியதோர் எருதின் வடிவம் தாங்கி, பசு வடிவிலிருந்த ஸ்ரீதேவியைப் பின்தொடர்ந்ததாகக் கர்ண பரம்பரைக் கதை ஒன்று கூறப்படுகிறது.

நாங்கள் காலையில் சென்றபோது சிவாலயத்தைத் தரிசிக்க இயலவில்லை. அந்தணர் வீதியில் சென்று விசாரித்த போது, அர்ச்சகர் அக்கரையிலுள்ள 'காஞ்சி வாயில்' இருப்பதாகவும், தகவல் சொல்லியனுப்பித்தான் அவரை வரவழைக்க வேண்டும் என்றும் மதியம் இரண்டு மணிக்கு மேல் வரும்படியும் கூறியனுப்பி விட்டார் பெருமாள் கோயில் அர்ச்சகர். வேறு வழியில்லாமல், மதியம் சுமார் மூன்றுமணிக்கு மறுபடியும் பேராவூர் போய்ச் சேர்ந்தோம்.

சிவன் கோயிலுக்குச் செல்லும் வழியில். அந்தணர் வீதி யின் கோடியிலிருந்த ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் கோயிலைத் தரிசித்தோம். ஐயோ பாவம் என்றிருந்தது. திறந்தே இருந்தது. விக்ரகங்களைப் பார்த்தால் பூஜை நடை பெறும் அடையாளங்களே தெரியவில்லை. மண்டபமும் வியானமும் இடிந்து, செடிகள் ஏராளமாக முளைத்துப் பாழடைந்து கிடந்தன. வேதனை தாங்க முடியவில்லை. சிறு கிராமம். வீதியில் ஏழெட்டு வீடுகள் தான். என்ன செய்ய முடியும்? எப்படிப் பராமரிக்க முடியும்?

சிவன் கோயிலும் நல்ல முறையில் பராமரிக்கப்பட வில்லை. மதிற்சுவர்கள் இடிந்துபோயிருக்கின்றன. சுவாமியின் திருநாமம் ஸ்ரீ ஆதித்தேச்வரர். அன்னையின் திருநாமம் ஞானாம்பிகை.

இக்கோயிலின் வடக்கே ஒரு குளம். அதன் வடகரையில் ஸ்ரீகாமாட்சியம்மான் கோயில் இருக்கிறது. அந்த மாரி

யம்மன் கோயில் சுற்று வட்டாரத்தில் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது. அன்னையின் எல்லையற்ற சக்திகளை விளக்குவதற்காக உடன் வந்த கிட்டப்பா மூன்று நான்கு உண்மை நிகழ்ச்சிகளைப் பரவசத்துடன் கூறினார்.

பேராவூர், பராசக்தி பீடங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அங்கு ஜகன்மாதா, ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு சச்சிதானந்த சிவ சக்தியாக எழுந்தருளியிருக்கிறாள். கரங்களில் கத்தி, டமருகம். சூலம், கபாலம்—ஏந்திப் கருணையுடன் வீற்றியிருக்கிறாள். முன் மண்டபத்தின் வடக்கில் மதுரை வீரனும், தெற்கில் பேச்சியம்மனும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

பங்குனி உத்தரத்திற்கு முன் லட்சார்ச்சனை தொடங்கி, உத்தரத்தன்று முடிவடைகிறது. அருகிலுள்ள கருப்பூரிலிருந்து நிறைய காவடிகள் வரும். அம்மன் திருவீதி உலா வருவாள். சித்திரை அமாவாசை கழிந்த வெள்ளியன்று பூச்சொரிதல் விழாவோடு உற்சவம் தொடங்கி, பத்து நாட்கள் நடைபெறுகிறது. கடைசி நாள் தீ மிதி. மறுநாள் மஞ்சள் நீர் விளையாட்டு.

உற்சவ காலத்தில் எதிர்ப்புறமுள்ள வயல்களில் தெருக்கூத்துகள் நடைபெறும். கும்பலும் குதூகலமுமாக கிராமமே கோலாகலமாக இருக்கமாம்.

1967-ம் ஆண்டில் பேராவூர் விஜயராகவன் என்ற கவிஞர் ஸ்ரீகாமாட்சியம்மனுக்குத்தோத்திர மாலை ஒன்று இயற்றிச் சிறு நூலாக வெளியிட்டார், அதில்,

காசியில் வாழும் விசாலாட்சி நீயே
மாசிலாக் காஞ்சி காமாட்சி நீயே
ஏசினும் எளியவர்க்கருள் பல புரியும்
ஆசிகூர் ஆலவாய் மீனாட்சி நீயே

என்று பரவசப்படுகிறார்.

பொய்யிருள் வாழ்வைப் புகழென எண்ணி
மெய்யருள் வாழ்வை ஒதுக்கிய சிறியேன்
செய்யும் செயல்கள் யாவும் பொய்யே
செந்தமிழ் அன்னையே நின்னருள் மெய்யே
நஞ்சினும் கொடிய தீமன முடையேன்
வஞ்ச நெஞ்சினன் வாழ்வு சிறந்திடத்
தஞ்சமென்று நின்பாதம் பணியாப்
பஞ்ச பாதகனின் பாவிக்கருள்வாய்

என்றெல்லாம் அழகுத் தமிழில் அகம்கரையக் கதறித் தீர்க்கிறார்.

பேராவூர் ஸ்ரீகாமாட்சியம்மனிடம், 'தாயே! உன்னருளால், பேராவூர் கிராமம் வளம் கொழித்து வளர வேண்டும். மக்கள் எல்லா செல்வங்களும் பெற்று சிவன் கோயிலையும் பெருமாள் கோயிலையும் புதுப்பித்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு திரும்பினேன். ஸ்ரீகாமாட்சியம்மனைத் தரிசிப்பவர்கள் அனைவரும், தங்கள் சொந்த நலனுக்காகப் பிரார்த்தனை செய்வதோடு, கிராம நலனுக்காகவும் மனப்பூர்வமாகப் பிரார்த்தித்துக் கொண்டால், அவளது அருட்கடாட்சம் பேராவூரை பூலோக சுவர்க்கமாக மாற்றி விடாதா?

பேராவூருக்கு ஒரு கிலோ மீட்டர் தெற்கில் கருப்பூர் என்ற கிராமம் இருக்கிறது. (தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் எத்தனை கருப்பூர்களோ?) பசு வடிவிலிருந்த அம்பாள் அவ்வழியே தான் திருகோழம்பம் என்ற திருக்கொளம்பியம் சென்றளாம். கருப்பூரில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்து, சிதைந்து, புதைந்து போயிருக்கிறது. முட்புதர்க் கிடையே சிவலிங்கம் மட்டும் பத்திரமாக இருக்கிறது!

அசிக்காடு

மல்லியம் ரயில்வே நிலையத்திற்குத் தெற்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் 'அசிக்காடு' என்ற ஒரு சிறு கிராமம். தேரழுந்தூர் ஸ்ரீவேதபுரீச்வரர் ஆலயம் அர்ச்சகர் ஸ்ரீசாமிநாத சர்மா உடன் வராவிட்டால், நாங்கள் அங்கு சென்றிருக்கவே முடியாது. சரியான பாதையில்லை. இருக்கும் பாதையும் சுற்றிச் சுற்றிப் போகிறது. சிரமப்பட்டுப் போனாலும், கோயிலைத் தரிசித்ததும் உள்ளத்தில் மகிழ்ச்சி துள்ளுகிறது. பழைமையான கோயில். பெரியவர் ஜகதீச குருக்கள் சிரத்தையுடன் ஆராதித்து வரும் கோயில். அந்தப் பகுதி அகில்மரக் காடாக இருந்ததாம். அதனால் அது அகருவனம் என்று அழைக்கப்பட்டது. அகில்காடுதான் அசிக்காடாக வழக்கில் மருவியிருக்கிறதோ?

கிழக்குப் பார்த்த திருச்சந்நிதி. சுவாமியின் திருநாமம். ஸ்ரீ சுவர்ணகிரீச்வரர். சிவலிங்கத்தின் பாணம் உயரமாக இருக்கிறது.

அம்பாளின் திருநாமம். ஸ்ரீவாத்ஸல்ய நாயகி. தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறாள்.

பசுவாக அலைந்து கொண்டிருந்த அம்பாள், இந்த இடத்திற்கு வந்ததும், தன் நகைகளையெல்லாம் களைந்து, சிவலிங்கம் மாதிரி குவித்து வைத்து சுவாமியை வழிபட்டாளாம். இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்த, மேல் தளத்தில் ஓவியம் ஒன்று வரைந்து வைத்திருக்கிறார்கள். சுவர்ணமயமான நகைகளால் மலை போன்று தோற்றமளித்த சுவாமி, சுவர்ணகிரீச்வரர் ஆனார்; அவரை வாத்ஸல்யத்தோடு வழிபட்ட தேவி, வாத்ஸல்யாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள்.

கோயிலுக்கு ஒரே பிராகாரம். கருங்கல் திருப்பணி. மேற்குப்புறம் கணபதி, சுப்ரமணியர் சந்நிதிகள் உள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் பைரவர், சூரியன், சனீச்வரர் உள்ளனர். கருவறை நுழைவாயிலில், சின்னஞ்சிறிய விநாயகரையும் தண்டாயுதபாணியையும் தரிசித்துக் கொள்கிறோம்.

தட்சிணாமூர்த்தி, ஞானமே வடிவாக, அழகே உருவாகக் காட்சி தருகிறார்.

அருகிலேயே, லட்சுமிநாராயணரை மூலவராகக் கொண்ட பெருமாள் கோயில் இருக்கிறது. ருக்மிணி — சத்யபாமா சமேத ஸ்ரீநவநீதபாலகிருஷ்ணனையும் தரிசித்துக் கொண்டோம்.

குத்தாலம்

திருவாவடுதுறையில் அம்பாள் பசு வடிவம் நீங்கப் பெற்று சுய உருவமடைந்ததும், ஈச்வரன் பிரத்யட்சமானார். ஆனால் திருமணம் நடைபெறவில்லை. சுவாமியின் லீலை முடியவில்லை. அம்பாளுக்கு இன்னொரு பணி காத்திருந்ததே!

அடுத்துள்ள குத்தாலத்தில், பரதமா முனி என்பவர், அம்பாளைப் பெண்ணாக வளர்க்க வேண்டும் என்று விரும்பினார். இவரது விருப்பத்தை நிறைவேற்றி வைக்க திருவுளம் கொண்டார் சிவபெருமான். பரதமா முனிவரது வேள்விக் குண்டலத்தில் ஒரு பெண்ணாகத் தோன்றும்படி அம்பாளைப் பணித்தார்.

பின்னர் அங்கு வந்து அவள் திருக்கரம் பற்றுவதாக வாக்கும் அளித்தார்.

அவ்வண்ணமே அம்பாள், முனிவரின் வேள்விக் குண்டத்தினின்றும் தோன்றினாள். பின்னர் ஈச்வரனைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு தினமும் சிவபூஜை செய்யத் தொடங்கினாள். அதற்காகக் காவிரிக்குச் சென்று நதியின் நடுவிலிருந்த மணல் மேட்டில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து, கருவறை, மதில்கள் அமைத்து, அபிஷேக ஆராதனைகள் செய்து வந்தாள்.

இவ்வாறு ஏழு நாட்கள் கடந்தன. எட்டாவது நாள் ஈச்வரனே அங்கு வந்து, அம்பாள் வந்து சேருவதற்கு முன்பே சுருங்கல்லால் ஆலயம் அமைத்து, இலிங்க வடிவமாய் அமர்ந்தருளினார். சற்றைக்கெல்லாம் அங்கு வருகை தந்த அம்பிகை, கருங்கல் கோயிலையும், இலிங்க வடிவத்தையும் கண்டு எல்லையற்ற ஆனந்தம் கொண்டு, வழக்கப்படி அபிஷேக ஆராதனைகள் புரிந்து, மெய்ம் மறந்த தியானத்தில் ஆழ்ந்து நின்றாள். இறைவன் இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு, அம்பிகையின் திருக்கரம் பற்றினார். அப்போது அம்பிகை நாணம் மிக அடைந்தவளாய். ''சுவாமி! சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள வண்ணம், தாய் தந்தையர் மகிழ, உற்றார் உறவினர் சூழ, என்னைத் திருமணம் முடிக்க வேண்டும்'' என்று வேண்டினாள். ''நம் திருமணம் உன்னிஷ்டப்படியே நடக்கும்'' என்று சுவாமி உறுதியளித்த பின் அம்பாள் தன்னில்லம் அடைந்தாள்.

குத்தாலத்தில் உறையும் இறைவனின் திருநாமம் உக்தவேதீச்வரர் — தமிழில் 'சொன்னவாறறிவார்' என்றழைக்கிறார்கள். இறைவன் தாமே சொல்லிய விதியின்படி தாம் திருமணம் செய்து கொள்வதாக அம்பாளிடம் வாக்களித்து, தாம் விதித்ததைத் தாமே அறிந்தமையால் இப்பெயர் பெற்றார். இறைவியின் திருநாமம், அமிர்தமுகிளாம்பிகை—அரும்பன்ன வனமுலையாள்.

ஆலயம் ஊருக்கு நடு நாயகமாக விளங்குகிறது. இரண்டு பிராகாரங்கள் கொண்டது. சுவாமி மேற்கு முகமாகவும், அம்பிகை தெற்கு முகமாகவும் எழுந்தருளி அருள் பாலிக்கிறார்கள். இவ்விரு கோயில்களும் தனித்தனியே வலம் வருமாறு தனிப் பிராகாரங்களோடு அமைந்துள்ளன. ராஜகோபுரம் மேற்குப்புறமுள்ளது.

கோபுர வாயிலில் நுழைந்ததும், கொடிமரம், பலிபீடம் தரிசனமாகின்றன. இடையில் சிறிய விநாயகரும், பலிபீடத்தையடுத்து நந்தியும் இருக்கிறார்கள். வலப்புறம் தல விருட்சமான உத்தால மரம் இருக்கிறது. அம்மரம் குடையாக அமைய, அம்மையாரைத் திருமணம் செய்து கொள்வதற்காக சுவாமி மணவாளநாதராக எழுந்தருளினார், அந்நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கொண்டு, அம்மரத்தினடியில் இன்றும் இரண்டு பாதுகைகள் இருப்பதைக் காணலாம்.

மணவாளநாதர் வருகை தந்த போது, அம்பிகை மணப் பெண்ணாக, மலர் மாலைகள், நறுமணம் கமழும் சாந்து முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தாள். எனவே, தென்கிழக்கில், பாதுகைகளுக்கு எதிரே, அம்பிகை 'நறுஞ்சாந்திள முலைநாயகி'யாகச் திருச்சந்நிதி கொண்டிருக்கிறாள்.

பரிமளசுகந்தநாயகிதான் நறுஞ்சாந்திளமுலைநாயகியாக தமிழ்ப் பெயர் பெற்றிருக்கிறார்.

இறைவன், பரிமளசுகந்த்நாயகியின் திருக்கரம் பற்ற வந்தபோது கயிலையிலிருந்து பலர் உடன் வந்தனர். அவர்களில் விநாயகரும் ஒருவர். துணை வந்த அந்தப் பிள்ளையார், வெளிப் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் திருச்சந்நிதி கொண்டுள்ளார். உட் பிராகாரத்தில் வலஞ்சுழி விநாயகரைத் தரிசிக்கலாம். கிழக்குப் பிராகாரத்தில் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சண்முகரைப்

பார்த்துப் பார்த்துப் பரவசமடையலாம். அத்தனை கலை யழகுடன் மிளிர்கிறார். மயிலின் திருமுகம் வலப்பக்கம் இருக்கிறது. பிராகாரத்தின் வடகிழக்குப் புறத்தில் நவக் கிரகங்கள், சப்தரிஷீச்வரர், சனீச்வரர். பைரவர் இருக்கின் றனர். அங்கே பஞ்ச லிங்கங்களையும் தரிசித்துக் கொள் கிறோம்.

சுவாமி கோயில் விமானத்திலுள்ள சுதை பிம்பங்கள் அனைத்தும் பெரியவையாகவும், கலைக் கண்ணோடு படைக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. விமானம் அதிக உயரமில்லாததால், எல்லா சிலைகளையும் நன்றாகப் பார்த்து ரசிக்க முடிகிறது.

பாம்பாட்டியின் சிலையொன்றைக் கண்டதும், ''இது என்ன கதை?'' என்று ஆலய அர்ச்சகரைக் கேட்டேன். அவர் பெயர் உக்தவேதீச குருக்கள். அங்கு உறையும் சுவாமியின் பெயரும் அதுவே.

அவர் சொன்னார்: ''உருத்திர சர்மா என்னும் அந்தணர், முக்தியளிக்கும் காசிக்குச் செல்லத் திட்டமிட்டு, மனைவி மக்களை விடுத்து, காவிரியைக் கடந்து சென்றார். விந்திய மலையை நெருங்கிவிட்டார். அப்போது சிவபெரு மான் அவருக்குக் குத்தாலத்தின் பெருமையை உணர்த்தத் திருவுளம் கொண்டார். குண்டோதரனை அழைத்து, 'நீ பாம்பு வடிவம் எடுத்து அவன் செல்லும் வழியில் குறுக்கே படுத்துக்கொண்டு, முன்னேற விடாமல் தடையாய் இரு' என்று உத்தரவிட்டார். அவ்வாறே குண்டோதரனும் பெரிய பாம்பாக மாறி வழியை மறைத்துக் கொண்டான். உருத்திர சர்மா பயந்து போனாலும், எப்படியாவது அப் பாம்பைக் கடந்து சென்று விடலாம் என்று முயன்றார். அதைக் கண்ட பாம்பு பெரிதாகப் படம் எடுத்து ஆடி, அவரை அச்சுறுத்தியது. அந்தணர் கருட மந்திரத்தை ஓதினார். பாம்பு மயங்கி, தலையைக் கீழே சாய்த்தது. அதன் மூச்சுக் காற்றால் காடுகளெல்லாம் கருகின. உயிர்

வர்க்கங்களெல்லாம் மயக்கமுற்றன. இதையெல்லாம் கண்ட உருத்திர சர்மா உண்மையை ஒருவாறு புரிந்து கொண்டார். இது குத்தாலநாதருடைய திருவிளையாடல் தான் என்று அவருக்குப் புலப்பட்டது. உதவிக்கு வரும்படி கோரி உக்தவேதீச்வரரின் பெயரை உரக்கக் கூவி அழைத் தார் உருத்திரசர்மா.

பக்தனின் ஓலம் கேட்டதும், பெருமான் ஒரு பாம்புப் பிடாரன் உருக் கொண்டு அந்தணர் முன் தோன்றினார். ''சாமீ' நான் குத்தாலத்தில் இருக்கும் ஈசரின் கட்டளைப் படி இங்கே வந்தேன்'' என்று கூறி மகுடியை எடுத்து ஊதி னார். மயங்கிக் கிடந்த பாம்பு மீண்டும் படமெடுத்து ஆடியது.

அந்தணருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பெருமான் தான் பாம்புப் பிடாரன் வேடத்தில் வந்திருக்க வேண்டும் என்று புரிந்துகொள்ள அவருக்கு அதிக அவகாசம் பிடிக்க வில்லை. 'ஒரு வேளை இது அவர்தானோ' என்று அந்தணர் நினைத்த மாத்திரத்திலேயே பகவான் தனது மாய வடிவத்தை விடுத்து மணவாளநாதராகக் காட்சி தந்தார். பாம்பு வடிவம் மறைய குண்டோதரன் சுய உருப் பெற்றான். இக்காட்சிகளைக் கண்ட உருத்திர சர்மா, பெருமானின் கால்களில் விழுந்து வணங்கினார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது.

சுவாமி அன்பொழுகப் பேசினார்? 'உருத்திர சர்மா! திருத்துருத்தி காசியைவிடச் சிறந்த தலமாயிற்றே. அப்படி யிருக்க இவ்விடத்தை விட்டு நீ ஏன் காசிக்குச் செல்லத் திட்டமிட்டாய்? அதனால்தான் உன்னையே திருப்பி அழைத்து வர, குண்டோதரன் உதவியை நாடினேன். கங்கையினும் காவிரி புனிதம் மிக்கது. அதன் கிழக்கே விசுவநாதர் எழுந்தருளியிருக்கிறார். அக்கினி திசையில் பைரவர் இருக்கிறார்' என்று அடையாளம் சொல்லி திருத் துருத்திக்குச் செல்லும்படி பணித்தார்.''

இதற்கு மேலும் கதை நீளுகிறது. 'ஆண்டவா! நான் எவ்வாறு அங்கு செல்வேன்? என் உடல் களைத்துப் போய் விட்டதே' என்று அந்த அந்தணர் கூற, சுவாமி அங்கு ஒரு குளத்தைத் தோற்றுவிக்க, அதில் உருத்திர சர்மா மூழ்கிக் குத்தாலத்தில் எழுந்து, உக்தவேதீச்வரரைத் தரிசித்து, சிலகாலம் அவருக்குச் சேவை செய்துவிட்டு முக்தியடைந்தார்.

கைலாசத்துக்குச் செல்லப் புறப்பட்ட அப்பர் சுவாமிகள், வழியில் திருக்குளம் ஒன்றில் மூழ்கித் திருவையாறு திருத்தலத்தில் எழுந்திருக்க, அவருக்கு ஆலய கோபுரத்தில் பெருமான் திருக் கைலாயக் காட்சி தந்தருளிய நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறதல்லவா?

திதியின் புதல்வன் வித்துவன்மாலி, சுக்கிரனிடம் சென்று, 'தலங்களில் சிறந்தது எது?' என்று வினவ, அவர் குத்தாலத்தைக் கூற, வித்துவன்மாலி இங்கு வந்து பத்ம தீர்த்தத்தில் நீராடி, இறைவனையும் இறைவியையும் ஆராதித்து. தவமியற்றத் தொடங்கினான். அவனது தவத்தை மெச்சிய சுவாமி, தரிசனம் தந்து, ''பக்தா! உனக்கு வேண்டிய வரம் யாது?'' என்று கேட்டார். அதற்கு வித்துவன்மாலி, ''நான் கதிரவனாக வேண்டும்; எனக்கும் ஒரு தங்கத் தேர் வேண்டும். நானும் கதிரவன் போல் மகாமேருவை வலம் வரவேண்டும்'' என்று வரம் வேண்டினான்.

விரும்பிய யாவையும் பெற்றுக் கொண்டான் வித்துவன் மாலி. ஆகாயத்திலெழுந்தான். உலகோரைப் பார்த்து, தக்கனது யாகத்திற்குச் சென்று சூரியன் குறையுற்றது முதலிய பல குற்றங்களைக் கூறிக் கொண்டு கிழக்கே உதித்தான். சூரியன் மேற்கே உதித்தான், வித்துவன்மாலி மேருமலைக்கு வடதிசையில் வந்தால், சூரியன் தென்புறம் வருவான். இரண்டு சூரியர்கள் மாறி மாறி வலம் வந்ததால் உலகில் இரவே இல்லாமல் போக, உயிரினங்கள்

இன்னலுற்றன. இதைக் கண்ட பிரகஸ்பதி, சூரியனிடஞ் சென்று, ''காலத்தை அளந்து காட்டும் கடவுளாகிய ம் காலத்தைக் காட்டாதிருப்பது முறையன்று ' எனக்கூறவும், சூரியனுக்குக் கோபம் வந்து விட்டது, வித்துவன்மாலி யுடன் போர் புரியத் தொடங்கினான்.

போரில் தோற்ற வித்துவன்மாலி தனக்கு வரமளித்த துருத்திநாயகனை அறைகூவி அழைத்து, 'ஓலம் ஓலம்' என்று அரற்றிக் கொண்டே நேரோடு மண்ணில் விழுந் தான். இறைவனின் நெற்றிக்கண் சிவந்தது. வித்துவன் மாலிக்கு அபயமளித்து சூரியனைச் சினத்துடன் நோக்கி னார். உடனே சூரியனின் தேர் கீழே விழ, வித்துவன் மாலியின் தேர் மேலே எழுந்தது.

சூரியன் தன் தந்தையிடம் சென்று முறையிட்டான். குத்தாலத்துக்குச் செல்லுப்படி ஆணையிட்டார் அவர். அவ்வாறே சூரியன் இத்திருத்தலத்திற்கு வந்து தலத்தின் தென்புறமுள்ள அரச மரத்தடியில் விநாயகப் பெருமா னைப் பிரதிஷ்டை செய்து அதன் மேற்கில் சிவப்பிரதிஷ்டை செய்து முறைப்படி ஆராதித்து வந்தான். அதுவே அக்னீச் வரர் திருக்கோயில்.

சிவபெருமானை ஆராதித்து விட்டுக் கடுந்தவத்தில் ஆழ்ந்தான் சூரியன். அந்த வெம்மையைக் கண்ட தேவர்கள் குத்தாலநாதனிடம் சிபாரிசு செய்தார்கள். கதிரவ னின் வடிவத்தை எடுத்துக் கொண்ட சுவாமி, சூரியனுக்கு எதிரில் தோன்றி, 'கதிரோனே, துருத்தி ஆலயத்திலுள்ள தாமரைத் தடாகத்தில் நீராடி ஓராண்டு எம்மை வழிபட்டு, பின்னர் இழந்த உன் தன்மையையும் நிலையையும் அடை வாயாக!' என்று அருளிவிட்டு மறைந்தார்.

சூரியன் பகவானை வணங்கி ''சுவாமி,' அவ்வாறே செய்கிறேன். கார்த்திகை ஞாயிறாகிய இன்று பத்ம தீர்த்தத்திலும் காவிரியிலும் நீராடி உம்மை வழிபடுபவர்

அனைவரும், விரும்பும் பேற்றை அடையும்படி தாங்கள் அருள வேண்டும். நான் தங்களைக் குறித்துத் தவம் செய்த இடம் கதிராமங்கலம் என்றழைக்கப்படவேண்டும்'' என்று வேண்டினான். இறைவனும் 'அப்படியே ஆகட்டும்' என்று வரம் அருளினார். பின்னர் சூரியன், சுவாமியை வணங்கிவிட்டுத் தன் பழைய நிலையை அடைந்தான். வித்துவன்மாலியும் கார்த்திகை ஞாயிறு அன்று நீராடி, சொன்னவாறறிவாரை ஆராதித்துப் பேரின்ப நிலையெய்தினான். அன்று முதல் கதிரவன் தவமியற்றிய திருத்தலம் 'கதிராமங்கலம்' என்று அழைக்கப்படுகிறது.

குத்தாலத்திற்குப் புராணப் பெயர் திருத்துருத்தி என்பதாகும். ஆற்றிடைக் குறையாகவுள்ள திருத்தலங்களுக்குத் துருத்தி என்று பெயர். தஞ்சை மாவட்டத்தில் இரண்டு துருத்திகள் உண்டு. ஒன்று, திருவையாற்றை அடுத்த திருக்கண்டியூருக்கு அருகிலுள்ள திருப்பூந்துருத்தி, மற்றொன்று, குத்தாலம்.

முன் காலத்தில் ஆலயத்தைச் சுற்றிக் காவேரி ஓடியிருக்கிறது. ஆலயத்திற்கு முன்னால் தெற்கேயிருந்து வடக்கே ஓடி, உத்தரவாகினியாக வலம் வந்திருக்கிறது. தற்போதும் ஆலயத்திற்கு நேர் மேற்கே, காவிரிப் படித்துறையிருந்ததற்கான அடையாளங்களைக் காணலாம். தற்போது காவேரி, ஆலயத்திற்கு வடப்புறம் கிழக்கு நோக்கி ஓடுகிறது.

திருத்துருத்தி, காவேரி ஆற்றின் நடுவேயிருந்தது என்பதற்குத் திருநாவுக்கரசரின் நேரிசைப்பாவில் வரும்,

உன்னியப் போது நெஞ்சுள்
ஒருவனையேத்துமின்னோ
கன்னியை யொருபால் வைத்துக்
கங்கையைச் சடையில் வைத்து
பொன்னியின் நடுவுதன்னுட்

பூம்புனல் பொலிந்துதோன்றுந்
துன்னிய துருத்தியானைத்
தொண்டனேன் கண்டவாறே.

என்ற வரிகளில் தெளிவுறக் காணலாம்.

குத்தாலத்தில் உக்தவேதீச்வரர் ஆலயத்தைத் தவிர வேறு சில ஆலயங்களும் உள்ளன. அவை அக்னீசம், ஓங்காளீசம், காமேசம், வருணீசம், முனீசம், சோம சேகரம் என்பனவாம். அக்னீசம் சோழனாலும் வழிபட்ட காரணத்தால் சோழிசம் என்றும் அழைக்கப்படுகிறது. காளியின் வரத்திற்கு எம்பெருமான் ஓமென்றருளினமை யால் ஓங்காளீசம் எனப் பெயர் பெற்றது. இதனை வழி பட்ட காளியம்மை, அக்கோயிலுக்குச் சிறிது வடக்கே கோயில் கொண்டு குத்தாலத்தைக் காவல் புரிந்து கொண் டிருக்கிறாள். வருணீசம், பரிச்சேபன் மகன் சிவபக்த னுக்குக் காசநோயை மாற்றியருளியது. தற்போது இது காமாட்சி கோயிலாகத் திகழ்கிறது. உத்திரசர்மனுக்கு ஸ்ரீ காசிவிசுவநாதனாகக் காட்சியளித்தவர், ஸ்ரீ சொன்ன வாறறிவாருக்கு எதிரில் எழுந்தருளியிருக்கிறார். பைரவ மூ த்தி, குத்தாலத்துக்குத் தென் கிழக்கே கோயில் கொண் டிருக்கிறார். அதுவே, தொழுதலாங்குடியை அடுத்துள்ள க்ஷேத்ரபாலபுரம்,

ஒரு வார்த்தை. தருமை ஆதீன நிர்வாகத்தின் கீழுள்ள ஸ்ரீ சொன்ன வாறறிவார் ஆலயம் மிகவும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தல புராணப்படி சுவாமிக்குத் தென் கிழக்கு எல்லையில் உள்ள பைரவர் கோயிலும் ஆதீனத்தின் முயற்கியால் திருப்பணி செய்யப்பட்டு, குட முழுக்கும் நடைபெறுவது பொருத்தமாக இருக்கும்; நாட்டுக்கு நலன் பயக்கும்.

ஓங்காளீசத்திற்குத் தென்பால் ஸ்ரீ ஆதிகேசவப் பெரு மாள் திருக்கோயில் கொண்டிருக்கிறார். எம்பெருமான்—

பார்வதி திருமணக் கோலத்தைக் கண்டு களித்த பெருமாள் இவர்.

திருத்துருத்தியை அகத்திய முனிவர் வழிபட்டிருக்கிறார். பல முனிவர்கள் தவமியற்றிப் பெரும் பேறு பெற்றிருக்கிறார்கள், அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் தரிசித்துப் பதிகங்கள் பாடியிருக்கின்றனர்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு இக் கோயில் புராணத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

திருத்தலங்கள் பலவற்றைத் தரிசித்துக் கொண்டு வந்த சுந்தரர், திருவெற்றியூரில், மகிழ மரத்தடியில் 'உன்னைப் பிரியேன்' என்று சபதம் செய்து சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்டு, சில நாட்கள் அங்கு தங்கிவிட்டு, திருவாரூர் தியாகேசனின் நினைவால் உந்தப்பட்டு, அவரைக் காணும் ஆவலோடு புறப்படுகிறார். சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து ஒற்றியூரை விட்டு அகன்றதால், அவரது இரு விழிகளிலும் ஒளி மங்கின. அப்பத்தூரை அடுத்த திருமுல்லைவாயிலை அடைந்து, பெருமானிடம் ஊன்றுகோல் பெற்று. காஞ்சி வந்து, ஏகாம்பரேசரை வழிபட, ஒரு கண்ணில் ஒளி மீண்ட, பின்னர், தல யாத்திரை செய்துகொண்டே திருவாவடுதுறை வந்து கோமுத்திநாதனை வழிபட்டு விட்டுப் புறப்பட்டார். அப்போது, அவர் உடலைப் பிணியொன்று பற்றிக் கொண்டது. அதனால் மேனியெங்கும் கருமை நிறம் படர்ந்தது. சங்கிலியாருக்கு செய்த துரோகம் தன்னைப் பழி வாங்குகிறது என்று உணர்ந்து உள்ளம் குமைந்தார். 'இத் தோற்றத்துடன் நான் எவ்வாறு பரவையாரின் முகத்தில் விழிப்பேன்?' என்று வேதனையுற்றார். திருத்துருத்தி சென்றால் 'பாவம் தொலையும், வினையகலும், நோய் குணம் ஆகும்' என்று நம்பினார். அடுத்து அங்கு வந்து சேர்ந்தார்.

கோபுர தரிசனம் செய்தார். உள்ளே சென்று வலம் வந்தார். செய்த தவற்றை மன்னித்தருளும்படி பெருமானிடம் கோரினார். அவரது கருணை வேண்டிக் கண்ணீர் சொரிந்தார்.

நம் உள்ளம் உண்மையாகத் திருந்தினால், இறைவனின் மனமும் இளகித்தானே ஆகவேண்டும்? சொன்னவாறறிவார் அன்பொழுகக் கூறினார்,

''அன்பனே, வருந்தாதே. எமக்கு வடபாகத்திலுள்ள தாமரைத் திருக்குளத்தில் நீராடினால் உன் உடற் பிணி மறைந்து விடும்.''

வன் தொண்டரான சுந்தரரும் அவ்வாறே செய்ய, நீரிலிருந்து எழும்பும் போது, முன்னிலும் பளபளக்கும் திருமேனியெழிலுடன் திகழ்ந்தார். அப்போதுதான் திருத்துருத்தியையும் திருவேள்விக் குடியையும் இணைத்து, 'மின்னுமா மேகங்கள்' எனத் தொடங்கி, பரவசத்துடன் ஒரு பதிகம் பாடினார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் பிணி தீர்ந்ததால் இத்தாமரைத் தடாகத்திற்கு 'சுந்தர தீர்த்தம்' என்ற பெயர் ஏற்பட்டது. குளத்தின் மேற்கரையில் சுந்தரரின் சிறு கோயில் ஒன்றும் இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் ஆடி சுவாதியன்று ஆதி சைவர்கள் சேர்ந்து சுந்தரருக்கு உற்சவம் நடத்தி வருகிறார்கள்.

கௌதம முனிவரின் புதல்வரான சதானந்த முனிவர் தமது தந்தையாரின் கட்டளைப்படி, இத் தீர்த்தத்தில் நீராடி, மெய்ஞானம் பெற்றார். வச்சனென்னும் முனிவர், மகப்பேறு பெற்றார். புலத்தியன் முதலிய முனிவர்கள் இதில் நீராடிப் பெறும்பேறும் பெற்றார்கள். இத்தனை மகிமைகள் நிறைந்த திருக்குளம் நாங்கள் சென்றிருந்த சமயம் வற்றி வறண்டு போயிருந்தது. தெப்போற்சவம் நெருங்கிக் கொண்டிருந்ததால் அருகிலுள்ள பம்ப் செட்டி

லிருந்து அதற்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந் தார்கள்! பின்னர், தேவையான தண்ணீர் நிரப்பப்பட்டு, 'ஜாம்ஜாம்' என்று தெப்போற்சவம் நடந்ததாகக் கேள்விப் பட்டேன்.

திருவேள்விக்குடி

பார்வதி தேவியை மகளாகப் பெறும் பேறுபெற்ற பரத முனிவரும், இந்தக் கல்யாணத்திற்காகவே வெகு நாட்களாகக் காத்துக் கொண்டிருந்த மகா விஷ்ணுவும், திருமணத்திற்காகத் தயாராய் வந்த சிவபெருமானை எதிர் கொண்டு அழைத்த இடத்திற்கு 'எதிர்கொள்பாடி' என்று பெயர். அது திருமணஞ்சேரிக்குச் சற்று மேற்கே இருக் கிறது. அது மேலத் திருமணஞ்சேரி என்றும் அழைக்கப்படு கிறது.

மாப்பிள்ளை அழைப்பு நடந்த தலத்தில் ஐராவதேச் வரர் திருக்கோயில் கொண்டிருக்கிறார். இந்திரனின் பட்டத்து யானை ஐராவதம், பெருமானை வழிபட்ட திருத்தலம் இது.

திருமணத்திற்கான கங்கணம் கட்டிக் கொண்டு, விரதம் என்ற வேள்வி செய்த இடம் திருவேள்விக்குடி.

இது காவிரியின் வட கரையில் உள்ள பாடல்பெற்ற தலங்களில் இருபத்து மூன்றாவது தலமாகும். குத்தாலத்தி லிருந்து வடகிழக்கே ஒன்றரை மைல் தொலைவிலுள்ளது. மயிலாடுதுறை—மகாராஜபுரம் பஸ் பாதையில் இருக்கிறது. ஞானசப்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடி யருளியுள்ளனர்.

அம்பிகைக்குத் திருமண கங்கண தாரணம் செய்ததால் இத் தலத்திற்குக் கௌதுகாபந்தன க்ஷேத்திரம் என்று பெயர் வழங்குகிறது.

இங்கு உறையும் இறைவனின் பெயர் ஸ்ரீ கல்யாண சுந்தரனார். மணவாளேச்வரர். ஸ்ரீ இவர் மணவாளக் கோலத்தில் இருந்து அருளுகின்றார். இறைவியின் பெயர் பரிமளசுகந்தநாயகி. அழகு தமிழில் 'நாறுசாந்துஇளமுலை அரிவை' என்று திருஞானசம்பந்தர் இவ்வூர்த் தேவாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இத் திருத்தலம், திருத்துருத்தி யோடு சேர்த்துப் பதிகங்களில் இடம் பெற்றுள்ளது. மொத்தம் மூன்று பதிகங்கள் உள்ளன. இங்கு உறையும் சிவபெருமான், இரவில் வேள்விக்குடியிலும் பகலில் திருத் துருத்தியிலும் எழுந்தருளியிருப்பதாகப் பதிகத்தில் கூறப் பட்டுள்ளது.

இத் தலத்திற்குத் தனித் தல புராணம் இல்லை. திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் தமது திருத்துருத்திப் புராணத்தில், 35–ஆவது திரு வேள்விக்குடிப் படலத்தில், பதினேழு செய்யுட்களில் இத் தலத்தைப் பற்றி விவரித்துள்ளார்.

சிவபெருமான் அம்பாளோடு மங்கள ஸ்நானம் செய்த அவ்விடத்தில் சிவலிங்கத்தில் எழுந்தருளினார் என்றும், பின்னர் வானவர் மயனை அழைத்து கோபுரம். மதில், கருவறை முதலியவற்றோடு ஒரு திருக்கோயில் அமைக்கச் செய்தனர் என்றும் கூறுகிறார். அங்கு வேள்வியை முடித்த படியால் அத்தலத்திற்குத் 'திருவேள்விக்குடி' என்று பெய ரிட்டதாகவும் ஈசனுக்கு கௌதுகேசன் என்றும், அவர்கள் ஏற்படுத்திய தீர்த்தம் என்றும் பெயரிட்டதாகக் குறிப் பிட்டிருக்கிறார்.

அரசகுமாரன் ஒருவனுக்கு மணம் புரிய நிச்சயித்திருந்த பெண்ணின் தாய் தந்தையர் திருமணத்திற்கு முன் இறந்து

விட்டனர். பின்னர் அவளது உறவினர் அக்கல்யாணத் திற்குச் சம்மதிக்கவில்லை. அரசிளங்குமரன் இத்தலத்து இறைவனை நோக்கித் தவம் செய்ய, சிவபெருமான் ஒரு பூதத்தை அனுப்பி அப்பெண்ணை எடுத்து வரச் செய்து அவனுக்குத் திருமணம் செய்து வைத்த திருத்தல மாகும் இது.

திருக்கோயில் ஊருக்கு மையமாகக் கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது. இரண்டு பிராகாரங்களைக்கொண்டது. முதல் பிராகாரத்தின் வட கீழ்ப் பகுதியில் அம்மன் கோயில் தெற்கு நோக்கிய திருவாசலுடன் திகழ்கிறது. அச் சந்நிதிக்குப் பின்புறம் மேற்குப் பார்த்து ஆதி இறைவன்—வேள்வக்குடி உடையார் - திருச்சந்நிதி இருக்கிறது.

மூன்று நிலை ராஜ கோபுரத்துடன் துலங்கும் அழகான நுழைவாயில். அதைச் சுற்றி வெளிப் பிராகாரம். வடக்குப் புறம் நந்தவனம். தென்மேற்கு மூலையில் வலம்புரி விநாயகர் இருக்கிறார்.

உள் பிராகாரத்தில் தென்புறம் கருவறையை யொட்டி னாற்போல் கல்யாண சுந்தரர் சந்நிதி. பின்புறமுள்ள கோட்டங்களில் அகத்தியர், நடராஜர், நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி முதலியோர் காட்சி தரு கின்றர்.

பிட்சாடனர் சிலை பார்க்க வேண்டிய ஒன்று. எட்டுக் கரங்களுடன் மஹிஷத்தின் மீது நின்ற திருக்கோலத்தில் காட்சி தரும் விஷ்ணு துர்க்கை — மகிஷாசுரமர்த்தனி — அருமையானதொரு சிலை.

கிழக்கிலுள்ள திருமாலைப்பத்தி மண்டபத்தில் பைர வரும் சூரியனும் இருக்கின்றனர். கருவறைக்குச் செல்லு முன், தென்புறம் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர், ஆஞ்ச நேயர் முதலியோர் எழுந்தருளியுள்ளனர். அவர்களுக்குத்

தெற்கே, வடக்குப் பார்த்தபடி நால்வரும், கிழக்கு நோக்கியவாறு ஸ்தம்ப விநாயகரும் உள்ளனர்.

திருக்கோயிலின் சந்நிதிக்கு வடகீழ் மூலையில் ஒன்றும், மேல் திசையில் ஒன்றுமாக இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. திருமணத்துக்கு முன்பு தேவி மங்கள ஸ்நானம் செய்த படியால் சந்நிதிக்கு வடகீழ் மூலையில் உள்ள தீர்த்தம் கௌதுகாபந்தன தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

இக் கோயிலில் பழைய கல்வெட்டுகள் நிறைய உள்ளன. கிட்டத்தட்ட ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புகழ்பெற்றுள்ள இக் கோயிலுக்குப் பெருமை சேர்க்கும் சரித்திரப் பின்னணியும் உண்டு. இக்கோயிலைக் கற்றளியாக எடுப்பித்தவன் முதற் ப்ராந்தக சோழமன்னன்.

இங்குள்ள ஸ்ரீ கல்யாண சுந்தரேச்வரர் விக்ரகம் திருமணஞ்சேரியிலுள்ளதை விடப் பெரியது. 1978-ஆம் ஆண்டு களவாடப் பட்ட ஸ்ரீ நடராஜர் சிலையும் மிக உன்னதமானதொரு கலைச் செல்வமாகும்.

குறுமுளைப்பாடி

ஸ்ரீ பரத முனிவரின் திருமகளாகிய அம்பிகையை சிவ பெருமான் திருமணம் செய்து கொள்ளத் திருவுளம் கொண்ட போது, முனிவர்கள் நல்ல பல விதைகளை ஊன்றி, குறுமுளையாகும்படி பாலிகை இட்டனர். அந்த இடத்திற்கு 'குறுமுளைப்பாலி' என்று பெயரிட்டனர். அங்கு தோன்றிய ஈசருக்கு 'குறுமுளைப்பாலீசர்' என்ற பெயர் வழங்கலாயிற்று.

இந்த ஊர் திருவேள்விக்குடிக்கு ஒரு மைல் மேற்கில் உள்ளது. தற்போது இந்த ஊரைக் குறுமுளைப்பாடி

என்றும், குணதலம்பாடி என்றும், கொள்ளாபாடி என்றும் அழைக்கின்றனர்,

தற்போது அங்கு கோயில் ஒன்றும் இல்லை. ஒரு வாழைக்கொல்லையில், முன்பு கோயில் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இடிந்த பழைய சுவரின் ஒரு பகுதியை இன்றும் காணலாம். ஈசானிய மூலையில் கிணறு ஒன்றிருக்கிறது. சற்றுத் தொலைவிலுள்ள ஐயனார் கோயிலில் பிள்ளையார் சிலைக்கு அருகில் ஒரு சிவலிங்கமும், தனியே இரண்டு பெரிய சிவலிங்கங்களும் உள்ளன. அவை, இடிந்து மண்ணோடு மண்ணாகியுள்ள குறுமுளைப்பாலீசர் கோயிலுக்குரியவையாக இருக்கலாம். எதிர்ப்புறமுள்ள மற்றொரு தோட்டத்தில் ஓர் அழகான சிறிய நந்தியைக் கண்டோம்.

ஊரார் அந்த நந்தியை எடுத்து வந்து இந்த லிங்கங்களுக்கு முன்னால் வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அந்த ஊரில் சிறிய சிவன் கோயில் ஒன்று தோன்றுவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபடுவது நற்பலன்களை விளைவிக்கும்.

அவ்வூரில் பாலிகை கரைத்த திருக்குளமும் இருக்கிறது - அது செப்பனிடப் பட வேண்டிய நிலையிலுள்ளது.

வில்லியநல்லூர்

குத்தாலத்திலிருந்து பந்தணை நல்லூர் செல்லும் பாதையில் செம்பியன் வில்லியநல்லூர் இருக்கிறது. அங்கு 'ஓம குளம்' என்ற திருக்குளம் இருக்கிறது. அது பிரும்மாவின் தலைமையில் யாகம் நடந்த இடமாகக் கருதப்படுகிறது.

அவ்வூரிலுள்ள சிவன் கோயிலில் உறைபவர் காளீச்வரர். அம்பாளின் திருநாமம் சிவகாமசுந்தரி. கோயில் இடிந்து, முட்செடிகள் மண்டிக் கிடக்கின்றன. விமானங்களில் கலசங்கள் இல்லை. விநாயகர், சுப்ர மணியர், தட்சிணாமூர்த்தி, சூரியன், சந்திரன், நந்தி முதலிய சிலைகள் இருக்கின்றன. நவக்கிரகங்களும் துர்க்கையும் இல்லை.

கோயில் முன் மண்டபத்தில், நான்கு முகங்கள் கொண்ட ஒரு சிலையைப் பார்த்தேன். கரங்களில் சூலம், மழு, அட்சமாலை, சிகண்டி முதலியவை இருக்கின்றன. வாயில் கோரைப் பற்களும் காணப்படுகின்றன.

வில்லியநல்லூரில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ நீல மேகப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார்.

சோழம்பேட்டை

காவிரிக்கு வடபால் மொத்தம் ஐந்து தான்தோன்றிச் வரர் ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று, சோழம் பேட்டை கோயில். குத்தாலத்திற்கும் திருமணஞ்சேரிக்கும் இடையேயுள்ளது. அம்பாளின் திருநாமம் அபிராமி.

கிழக்குப் பார்த்த திருச்சந்நிதி. அம்பாள் தெற்குப் பார்த்து எழுந்தருளியிருக்கிறாள். கோயிலுக்கு முன்புறம், வடக்கே பெரிய திருக்குளம் உள்ளது. முன்னால் கட்டை கோபுரம்.

சிவலிங்கம் பெரியது. பட்டைலிங்கம், கருங்கல் அடித் தளம், அம்பாள் தாமரை, அட்சமாலை, அபய வர ஹஸ்தங் களோடு திகழ்கிறாள்.

இக் கோயிலில் விநாயகர், சுப்ரமணியர், தட்சிணா மூர்த்தி, இடும்பன், கடம்பன், நால்வர், விச்வநாதர்—விசாலாட்சி, திருமால், கஜலட்சுமி, சப்த மாதர்கள், பிரும்மா, துர்க்கை, சூரியன், பைரவர், சனீச்வரர் முதலியவர்கள் இருக்கிறார்கள்,

நிர்வாக அதிகாரி, பக்தியும் பண்பும் நிறைந்த இளைஞர். கோயிலுக்கு உரிய நெல்லை வசூலிப்பதற்குத் தான் படும்பாட்டைப் பற்றி அழாத குறையாக விவரித்தார். ''அவர்களாகவே கொடுக்க வேண்டிய நெல்லை நான் அவர்களிடம் பிச்சை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்க வேண்டியிருக்கிறது. இதோ பாருங்கள், இந்தக் குதிரில் அன்றாட நைவேத்தியத்திற்குத் தேவையான நெல்லைச் சேர்த்து வைத்திருக்கிறேன்'' என்று அவர் கூறியதைக் கேட்டபோது, தேவையான சொத்துகள் இருந்தும் நம் ஆலயங்கள் போதிய வருமானம் இல்லாமல் தவியாய் தவிக்கும் காரணத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதே நேரத்தில், ஆலய நிர்வாக அதிகாரிகள் ஊராரையும் பகைத்துக் கொள்ளாமல், பக்தர்களையும் திருப்திப்படுத்திக் கொண்டு, மேலதிகாரிகளின் ஆணைகளையும் நிறைவேற்றிக் கொண்டு, ஆலய ஊழியர்களின் ஒத்துழைப்பையும் பெற்று, மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் பணி புரிய வேண்டிய பரிதாப நிலைமையையும் உணர முடிந்தது.

தெய்வ பக்தியம் கடமையுணர்வும் கொண்ட பல இளைஞர்கள் நிர்வாக அதிகாரிகளாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதைக் காணும்போது மகிழ்ச்சியாயிருக்கிறது. நம் ஆன்மிகக் கலாசாரத்தில் நம்பிக்கையும் ஆலய வழிபாட்டில் ஈடுபாடும் கொண்டவர்கள் நிச்சயம் ஆலயத்தை நல்ல முறையில் நிர்வகிப்பார்கள்.

மூவலூர்

தஞ்சை மாவட்டத்தில், மாயவரத்திற்கு ஒரு மைல் மேற்கில் மூவலூர் என்ற சிவத்தலம் இருக்கிறது. மாயவரம் — குத்தாலம் பஸ் பாதையில் செல்லும்போதே, இடப்புறம் அக்கோயிலின் கோபுரத்தைக் காணலாம். திருவாவடு துறை மடாலயத்து ஆதிகுருவான 'நமச்சிவாயமூர்த்தி'க்கும் கம்பருடைய தந்தையான குணாதித்தருக்கும் இத்தலம் தாயகமாக விளங்கியது.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள மார்க்க சகாயேச் வரரை, முன் காலத்தில் ருத்திரன், அயன், அரி மூவரும் வழி பட்டதால், இத்தலத்திற்கு 'மூவரூர்' என்று பெயர் ஏற் பட்டதாகவும், அப்பெயரே பின்னர் மருவி மூவலூர் ஆன தாகவும் கூறப்படுகிறது. பரமனை மூவர் வழிபட்டதைக் குறிக்கும் வகையில் ஆலயத்தில் தட்சிணாமூர்த்தி சந்நிதிக்கு கீழ்ப்புறத்தில், புடைச் சிற்பம் ஒன்று காணப்படுகிறது.

ஆதிகாலத்தில் இந்த இடம் புன்னை மரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால், இது 'புன்னாகவன க்ஷேத்திரம்' என்று அழைக்கப்பட்டது. இன்றும்கூட இத்தல விருட்சம் புன்னைமரமே. சுவாமிக்குப் புன்னாகவனேச்வரர் என்ற திருநாமமும் உண்டு. ருத்ரமூர்த்தி வடிவத்தில் அயனுக்கும் மாலுக்கும் அரன் வழிகாட்டியதால், பெருமான் வழித் துணைநாதர் ஆனார். மார்க்கசகாயேச்வரர் என்பதன் பொருள் இதுவே. இங்கு உறையும் அம்பிகையின் பெயர் அழகியநாயகி எனும் சௌந்திர நாயகி.

மகிஷாசுரனை அழிப்பதற்காகப் பார்வதிதேவி, துர்க் கையாகப் பயங்கர வடிவம் எடுத்தாள். சம்ஹாரம் முடிந்ததும், மீண்டும் தன் அழகிய உருவத்தைப் பெறும் பொருட்டு சிவபெருமானிடம் பிரார்த்தனை செய்தாள்.

''மூவலூருக்கு வந்து, கோயிலுக்குத் தென்பாலுள்ள தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீலிங்காகாரமாய் அமர்ந்திருக்கும் எம்மை வழிபட்டால் உன் விருப்பம் நிறைவேறும்'' என்று அருளினார் சிவபெருமான். அவ்வாறே துர்க்காதேவி பொய்கையில் மூழ்கி, ஒரு மண்டலம், மார்க்க சகாயேச் வரரை வழிபடவே, கோர வடிவம் நீங்கி, மீண்டும் அழகிய நாயகியாக விளங்கினாள். ''மகிழ்ச்சிதானே?'' என்று சிவ பெருமான் வினவ, ''இன்னும் ஒரே ஓர் ஆசை சுவாமி. தாங்கள் என்னை இத் திருதலத்தில் கரம் பற்ற வேண்டும்'' என்று விண்ணப்பித்தாள். இதைக் கேட்ட வழித் துணை நாதர். ''அன்பே! பங்குனி மாதம் சுக்லபட்சம் துவாத சியும் ஆயில்ய நட்சத்திரமும் கூடிய நன்னாளில் உன்னை நான் திருமணம் செய்து கொள்கிறேன்'' என்று நல்வாக்கு தந்துவிட்டு மறைந்து விட்டார்.

இன்றும் இக்கோயிலில் அப்பனுக்கும் அம்மைக்கும் பங்குனி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தன்று திருக்கல்யாண வைபவம் நடைபெற்று வருகிறது. துர்க்கை நீராடிய திருக்குளம் துர்க்கா புஷ்கரணி என்று அழைக்கப்படுகிறது.

குடகு மலைச் சாரலில், தொழு நோயால் அவதியுற்றி ருந்த ஒருவனுக்குத் தெய்வீக ஒலி கேட்கவே, அத் திசை யில் திரும்பிப் பார்த்தான். அங்கு ஒரு முனிபுங்கவர் வீணையை மீட்டி, இனிமையாகப் பாடிக் கொண்டிருந்த தைக் கண்டு அவரிடம் சென்றான். பாவங்கள் நிறைந்த தன் கடந்த கால வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறிக் கண்ணீர் சொரிந்தான். பாப விமோசனத்திற்கு வழி கேட்டான்.

முனிவர் ஒரு மந்திரத்தை உபதேசித்துவிட்டுச் சென்று விட்டார். தொழு நோயாளி அம் மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருக்கும் போது, அவன் முன் திருமால் தரிசன மானார். அவரிடம் தான் செய்த பாபங்களைக் கூறி கதறி

னான். பரந்தாமன் மனமிரங்கி, ''பக்தனே! வருந்தாதே. உன் கோடி பாபங்களும் தொலைய ஒரு வழியுண்டு. காவிரி நதியின் ஸ்நான கட்டங்கள் அனைத்திலும் நீராடிக் கொண்டு செல். எங்கு உன் நோய் தீருகிறதோ, அந்த இடத்திலேயே நீ பாப விமோசனம் பெற்று முக்தியடைவாய். தீர்த்தத்தில் மூழ்கி உன் பிணி ஒழிந்ததும், வட திசையை நோக்கினால், நமது விச்வரூப தரிசனம் உனக்குக்கிட்டும்'' என்று கூறியருளி மறைந்தார்,

காவிரியின் ஒவ்வொரு கட்டமாக நீராடிக் கொண்டு வந்தவன், மூவலூரில் பாயும் பொன்னி நதிக் கட்டத்தில் நிராடியதும் அவன் நோய் மறைந்து, குறைகள் அகன்று, உடல் பொன் மேனியாகி ஒளி வீசியது! அடுத்த கணம் நோயாளியாக இருந்தவர் தவயோகியாகக் காட்சியளித்தார், உடனே அவர், 'முகுந்தா, மாதவா, கேசவா, மதுசூதனா!' என்று அற்றியபடி வட திசையை நோக்க, அங்கு பூமிக்கும் வானத்திற்குமாகத் திருமால் விச்வரூப தரிசனம் தந்தருளினார். பின்னர், முனிவரை நோக்கி, ''பக்தா! புன்னாக வனத்திலே பொன்னி நதியிலே நீராடி, நிர்மலராகிய உம்மை இனி 'பிப்பலர்' என யாவரும் அழைக்கட்டும். நீர் நீராடி எல்லா பாவங்களும் நீங்கப் பெற்ற ஸ்நான கட்டம், 'பிப்பலர் கட்டம்' என்றே அழைக்கப்படட்டும். இனி இந்த ஸ்நான கட்டத்தில் முழுகுபவரின் உடற்பிணி, பாவப்பிணி, பிறவிப் பிணி ஆகிய இம் மூன்று பிணிகளும் நீங்கட்டும். நீர் புன்னாக வனேச்வரரை வழிபட்டு நற்கதி பெறுவீராக'' என ஆசி நல்கிவிட்டு மறைந்தருளினார்.

பிப்பல முனிவர் காசிக்குச் சென்று மகாலிங்கம் கொண்டு வந்து இத்தலத்தில் பிரதிஷ்டை செய்து, விச்வ நாதரையும் வழித்துணைநாதரையும் வழிபட்டு, பெருமானுடன் ஐக்யமானார்.

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் உள்ள கிணற்றுக்கு ‘உபமன்யுக் கிணறு’ என்று பெயர். உபமன்யு முனிவர் தல யாத்திரை செய்துகொண்டு இத்தலத்திற்கு வந்தார். அப்போது மழையின்றி ஊரெல்லாம் ஒரே வறட்சி நிலை. பெருமானை நினைத்தார். அதில் நீராடி, மார்க்க கசாயேச்வரரை மகிழ்ச்சியுடன் வழிபட்டார்.

நவக்கிரக மூர்த்திகளில் ஒருவரான சந்திரன் புன்னா கவன க்ஷேத்திரத்திற்குக் கிழக்கேயுள்ள திருக்குளத்தில் நீராடி, வழிகாட்டி வள்ளலாரை வழிபட்டு நற்பயனை யடைந்தார். இந்த சந்திர புஷ்கரணி, ஆலயத்திற்குக் கிழக்கேயுள்ள ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திற்கு எதிரே யுள்ளது.

ரதசப்தமியன்று சப்தமாதர்கள் வழித்துணை நாதரை வழிபட்டுப் பயனடைந்தனர். இதற்கு ஆதாரமாக, அம்மன் சந்நிதிக்கு மேல்புறத்தில் வடக்குப் பார்த்தவாறு, சப்த மாதர்களுடை.ய சிலைகளை பிரதிஷ்டை செய்யப்பட்டு நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

மூவலூர் சிறப்புப்பெற்ற சிவத்தலமாயினும், தேவாரம் பாடிய மூவரின் தனிப்பாடல் பெறும் சிறப்பு இதற்கு இல்லை. திருநாவுக்கரசரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேக்கிழாரும இதன் சிறப்பைக் குறிப்பிட்டிருக்கின்றனர். பூவனூர் திருப்பதிகத்தில் ஒரு பாடலும், திருநெய்த்தானம் திருத்தாண்டகத்தில் ஒரு பாடலுமாக இரு பாடல்களில் திருநாவுக்கரசர் மூவலூர் மேவிய பெருமானைப் போற்றி யுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் மூவலூர் முக்கண்ணனை குறித்து, திருவாவடுதுறைத் திருப்பதிகத்தில் ஒரு பாடலில் பாடியிருப்பதாகவும், அதில் வரும் ‘வழித்துணை மருந்தே’ என்ற வரி வழித்துணைநாதரைக் குறிப்பதாகவும் கூறப்படுகிறது.

திருஞானசம்பந்தப் பெருமான், திருவாவடுதுறை, திருத்துருத்தித் தலங்களைத் தரிசித்துவிட்டு காவிரிக்கரை மீதுள்ள மூவலூர் முக்கணரை மனமார பூஜித்தார் என்று சேக்கிழார பெரிய புராணத்தில் கூறியுள்ளார்:

திரைத்தடம் புனல் பொன்னி சூழ்திருத்துருத்தியினில்
வரைத் தலைப் பசும்பொன்னும் வண்டமிழ்ப்பதிகம்
உரைத்து மெய்யுறப்பணிந்து போந்துலவுமன்னிதியின்
கரைகண் மூவலூர் கண்ணுதலார் கழல் பணிந்தார்.

கிழக்கு நோக்கிய ராஜகோபுரத்துடன் கூடிய இச் கோயில், அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ளது. கிழக்குப் பிராகாரத்தில் கொடிமரத்தினடியிலிருந்து பார்க்குப்போது, இடப்புறம் மூன்று கலசங்களுடன் ஓர் உயர்ந்த கூரை தெரியும். உள்ளே சென்று பார்த்தால், அம்மன் சந்நிதிக்கு நேரேயுள்ள அது அஷ்டலட்சுமி கல்யாண மண்டபம் என்பதை அறியலாம். மிக உயரமான, அழகானதொரு மண்டபம் அது.

இக்கோயிலை நிதானமாகச் சுற்றி வந்து, பொறுமையுடன் ஆராய்ந்தால் பல சிறப்புகளைக் கண்டறியலாம். ஆறு கரங்களுடைய துர்க்கை—சங்கு சக்கர கத்தி கேடயம் அபய வரச் சின்னங்களுடன் திகழ்கிறாள். எழில் மிகுந்த வடிவம். மறக்காமல் காண வேண்டிய சிலை.

கோழ் குத்தி

மூவலூர் தலபுராணத்தில், அருகிலுள்ள கோடிஹத்தி, ஆனைமோலனகரம், அரையபுரம் ஆகிய மூன்று ஊர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

மூவலூர் ஆலயத்திற்கு நேரே வடக்குப்புறம், ஒரு பாதை பிரிகிறது. அதில் சென்றால், காவிரியைக் கடந்து பூம்புகார் — கல்லணை பஸ் சாலையை அடையலாம். அதையும் கடந்து வடக்கே சென்றால் சோழம்பேட்டையை அடையலாம்; மூவலூரிலிருந்து மொத்தம் இரண்டு கிலோ மீட்டர் தூரம்தான்.

சோழபேட்டை முன்காலத்தில் 'கோடிஹத்தி சாப விமோசனபுர'த்தைச் சேர்ந்த பகுதியாய் இருந்திருக்கிறது. பின்னர். கோடிஹத்தி 'கோழ்குத்தி' ஆகி, தற்போது 'கோரு ஊத்தி, என்று மருவியிருக்கிறது. அந்தக் காலத்தில் காவிரி, கோடிஹத்தி ஊர் வரை பெருகியிருந்ததாகத் தெரிகிறது. மூவலூர் புராணத்தில் நாம் படித்தறிந்தவாறு பிப்பல முனிவருக்குத் திருமால் காவிரிக்கு வடக்கே விச்வரூப தரிசனம் தந்தது இத்திருத்தலத்தில் தான்.

ஸ்ரீ தான்தோன்றீச்வரர் ஆலயத்தின் அருகிலேயே ஸ்ரீ வானளாவிய பெருமாள் ஆலயம் இருக்கிறது. அவரை 'வானமுட்டிப் பெருமாள்' என்றும் மானமுட்டிப் பெருமாள் என்றும் உள்ளூர்வாசிகள் அழைக்கிறார்கள்.

. பிப்பல முனிவருக்கு விச்வருப தரிசனம் தந்தருளிய பெருமாள், இங்கு இன்றும் காட்சி தந்து கொண்டிருக்கிறார். தாருமரத்திலான அந்தப் பதினைந்தடி உருவச் சிலை நம்மைப் பிரமிக்க வைக்கிறது. நான்கு கரங்கள் கொண்ட ஸ்ரீநிவாசப் பெருமாள் சங்கு, சக்ர, அபய கதைகளுடன் காட்சி தருகிறார். திருமார்பில் மகாலட்சுமி வீற்றிருக்கிறாள்.

அப்பிருமாண்டமான சிலைக்கு இடப் பக்கத்தில் இருக்கும் பூதேவியின் உருவம் சிறியது.

அந்தோ! புராணமகிமை பெற்ற இந்தப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் தற்போதைய நிலையைக் காண்பவர்கள் ரத்தக் கண்ணீர்தான் வடிப்பார்கள்.

பெருமாளுக்கு மேலே, வௌவால் பந்தல் ஒன்று போடப் பட்டிருக்கிறது! நாங்கள் தரிசனத்திற்குச் சென்றபோது, நூற்றுக்கணக்கான வௌவால்கள் இறக்கைகளைப் பட படவென்று அடித்து எங்களை வரவேற்றன. 'உள்ளூர்க் காரர்களே திரும்பிப் பார்க்காத எங்கள் பெருமாளைத் தேடிக் கொண்டு இத்தனை தொலைவு வந்திருக்கிறீர்களே' என்ற மகிழ்ச்சியா? அல்லது 'இப்படி ஒவ்வொருவராக வந்து கோயில் திருப்பணி தொடங்கிவிட்டால் நாங்கள் வெளியேறவேண்டியிருக்குமே' என்ற அதிர்ச்சியோ?

உயரமான கருவறை விமானம் புது வடிவில் அமைந் திருக்கிறது. அதற்கு சத்ர விமானம் என்று பெயராம். கலசம் இருக்கிறது. முன் மண்டபத்தில் பல்வேறு வகை யான செடிகள் மரங்கள் உயரத்திற்கு வளர்ந்திருக்கின்றன. விமானத்தின் வலப்புறத்தில் செடிகள் ஆழமாக வேர்விட்டு அதைப் பிளக்கத் தொடங்கியிருக்கின்றன. உடனடியாகக் கவனம் செலுத்தாவிட்டால், அருமையான அந்த விமானம் சிதிலமடைந்து போய்விடும். இதைப் போன்று நம்மால் இன்னொன்று நிச்சயமாகக் கட்ட முடியாது.

விமானத்தின் முன்புறத்தில் பின்னமான நரசிம்மர், ஸ்ரீனிவாசர் சுதை பிம்பங்கள் இருக்கின்றன, விமானத் தின் நான்கு புறங்களிலும் பழுதடைந்துள்ள நடனமாது களின் சிலைகள் காணப்படுகின்றன.

முன் மண்டபம் இடிந்திருப்பதால் மேல் தளத்தில் தாற்காலிகப் பூச்சு வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் உள்ளே நிற்கும்போது சற்று அச்சமாகத் தான் இருக்கிறது. கதவுகள் எந்த நிமிடமும் கழன்று விழுந்துவிடுமோ என்ற ஆபத்தான நிலையில் உள்ளன.

ஒரே ஒரு பிராகாரம். ஆனால், அதைச் சுற்றி வர முடியாது. சுற்றிலும் முற்புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. மார்கழி மாதத்தில் கிராம மக்கள் இவற்றைச் சுத்தம் செய்வதாக அருகில் நின்றிருந்த உள்ளூர் அன்பர் கலிய

பெருமாள் கூறினார். கோயில் கவனிக்கப்படாமலேயே இருப்பதைக் குறித்து மிக வருந்தினார் அவர். பணத்தை விரயம் செய்துவிட்டு, 'பெருமாள் கோயில் திருப்பணிச் செலவு' என்று கணக்கு எழுதி விட்டார்களாம்! இதைக் கூறி, வயிறெரியச் சிரித்தார் அவர். அதை முழுமையாக ஆமோதித்தார் மற்றோர் அன்பர்.

அக் கோயிலில் உற்சவ மூர்த்திகள் ஏதுமில்லை. மண்டபத்தினுள் திருமால், ஆஞ்சநேயர் சிலைகள் இருக்கின்றன. மண்டபத்தின் வெளிப்புறச் சுவரில் வடபுறமுள்ள பிறையில் விஷ்வக்சேனர், யோக நரசிம்மரும் இடப்புறத்தில் நர்த்தன கிருஷ்ணரும், ஒரு யதியும் உள்ளனர்.

இக்கோயிலுக்கு எதிரில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. ''குளம் எந்த கதியில் இருக்குன்னு வந்து பாருங்க!'' என்று கூறி எங்களை அழைத்துச் சென்றார் கலிய பெருாள். அதற்கு நான்கு புறங்களிலும் படித்துறைகள் இருந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன. இக்கோயிலும் குளமும் ஒரு காலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கியிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமேயில்லை. இத் திருக்குளத்திற்கு விச்வரூப புஷ்கரணி என்று பெயர். மகரசங்கராந்தியன்று இதில் நீராடினால் சகல பாவங்களும் நீக்கும் என்ற நம்பிக்கை இருந்து வந்தது. இப்போதோ...?

அரையபுரத்தைச் சேர்ந்த வாசுதேவ பட்டாச்சாரியார் தினமும் ஒரு வேளை வந்து வானமுட்டிப் பெருமாளுக்கு ஆராதனை செய்வதாகக் கூறினார். கோயில் இருக்கும் நிலையைப் பார்த்தால் அவர் எப்படி அதனுள் வந்து போகிறார் என்பதே ஆச்சரியமாயிருக்கிறது. அருகிலுள்ள ஸ்ரீ தான்தோன்றீச்சுவரர் கோயிலை நிர்வகிப்பவர்களே இந்தக் கோயிலையும் நிர்வகிப்பதாக அறிந்தபோது, அதைவிட ஆச்சர்யமாயிருந்தது. சிவன் கோயில் கவனிப்

பில் நூற்றில் பத்துப் பங்காவது பெருமாள் கோயிலில் இருக்கக் கூடாதா?

இக் கோயில் இருக்குமிடம் சோழம்பேட்டை. கோயிலுக்குச் சற்று மேற்கிலிருந்து கோழ்குத்தி கிராம எல்லை தொடங்குகிறது. முன்காலத்தில் இக் கோயிலைச் சுற்றியும் அருகிலும் நிறைய அந்தணர்கள் வசித்து வந்திருக்கிறார்கள். தற்போது அந்த வீதிகள், தோட்டங்களாகவும் பொட்டல்களாகவும் உள்ளன.

வாசுதேவ பட்டாச்சாரியார் மேற்கேயுள்ள 'கோழ்குத்தி' கோபாலகிருஷ்ணமூர்த்தி ஆலயத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். அது புராண ஆலயமல்ல. மூலவர், ஸ்ரீ தேவி, பூதேவியுடன் உறையும் ஸ்ரீ வரதராஜப் பெருமாள். உற்சவர், ஸ்ரீ கோபாலகிருஷ்ணன். உற்சவ மூர்த்தி மூவலூர் ஆலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

மண்டபத்தில் விநாயகரும் ஆஞ்சநேயமூர்த்தியும் உள்ளனர். புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சுதர்சன ஆழ்வாருக்கு மக்கள் பிரார்த்தனை செய்து கொண்டு அர்ச்சனைகள் செய்து வருகிறார்களாம். கேட்ட வரத்தை அளிக்கிறாராம் அவர்

'கோழ்குத்தி' கிராமத்தின் வடபுறமுள்ள ஸ்ரீ சபாபதீச்வரர் சிவகாமசுந்தரி உறையும் சிவன் கோயிலைத் தரிசித்தோம். ஒரு பிராகாரத்துடன் கட்டப்பட்ட கோயிலாகும் இது.

கிழக்குப் பார்த்த சந்நிதி தென் மேற்கு மூலையில் விநாயகரும் பக்கத்தில் பாலசுப்பிரமணியரும் இருக்கிறார்கள். கோஷ்டத்தில் விஷ்ணு துர்க்கை கொலுவிருக்கிறாள். ஈசானியத்தில் சிறிய நவக்கிரகங்களும் அருகில் ஒரு கிணறும் இருக்கின்றன.

கருவறை விமானத்திலுள்ள கதைச் சிற்பங்களும், பைரவர், நந்தி சிலைகளும் அழகுற அமைந்திருக்கின்றன.

ஆனைமேலகரம்

மூவலூரிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் மேற்கே இடப்புறம 'ஆனைமேலானகரம்' என்ற சிறு கிராமம் இருக்கிறது. அத்தலம், மூவலூர் தல புராணத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

திரிபுர தகனம் நடந்த பிறகு, திருமாலும் பிரும்மாவும் இந்திரனுடன் புறப்பட்டுத் திரிபுரத்தைத் எரித்த அம்பு இருக்குமிடத்தை நோக்கி — தெற்கு நோக்கி வர, சிவபெருமான் வேட உருவத்தில் அவர்களை எதிர்கொண்டழைத்து மூவலூர் பெருமான் உறையும் இடத்தைக் காட்டிவிட்டு மறைந்தார் அல்லவா? அப்போது இந்திரன் தான் தங்குவதற்காக அருகிலேயே ஒரு நகரம் அமைத்துக் கொண்டான். அது 'இந்திரபுரி' அல்லது 'ஆனைமேலானகரம்' எனப் பெயர் பெற்றது. வழக்கில் அது 'ஆனைமேலகரம்' ஆயிற்று.

அங்கு ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் கொண்டிருக்கிறார். இக்கோயில் 1942-ஆம் வருடம் கட்டப்பட்டது. பழைய கோயில், புதுக் கோயிலுக்குத் தெற்கே அரை பர்லாங் தொலைவில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஏனெனில், அங்குள்ள ஒரு வயலை உழும்போது கிடைத்தவைதான் புது ஆலயத்திலுள்ள உற்சவ மூர்த்தகள், அத ு பின்னர், ஸ்ரீ ரங்கத்தில் மூல விக்ரங்களைத் தயார் செய்து. குடமுழுக்குசெய்திருக்கிறார்கள். தமிழாசிரியர் வித்வான் கோபால கிருஷ்ண ஐயர், பர்மாஷெல் வெங்கட்ராமய்யர்,

டாக்டர் லட்சுமி நாராயண ஐயர் ஆகியோருடைய நன் முயற்சிக்கு ஊரார் அளித்த ஆதரவும் ஒத்துழைப்பும் இக் கோயில் தோன்றக் காரணமாயிருந்தன என்று கோயிலை நிர்வகித்து வந்த கிருஷ்ணமூர்த்தி கூறினார். அவர் கோபாலகிருஷ்ண ஐயரின் மகன்.

இக்கோயிலில் ஐந்தாண்டுகளுக்கு முன் மீண்டும் திருப் பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றிருக் கிறது. உள்மண்டபத்தில் ஆண்டாள், லட்சுமி, கருடன், ராமர், ஆஞ்சநேயர் விக்ரகங்கள் இருக்கின்றன. வெளி மண்டபத்தில் முச்னீவரர், கணபதி, நவக்கிரகம் முதலிய சந்நிதிகள் உள்ளன.

அரையபுரம்

ஆனைமேலகரத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் மேற்கே சென்றால் 'அரையபுரம்' என்ற கிராமத்தை அடையலாம். பஸ் பாதையிலிருந்தே வலப்புறத்தில் உள்ள சிவன் கோயிலைத் தரிசிக்கலாம்.

ஹரிஹரபுரம்தான் 'அரையபுரம்' என்று மருவியிருக் கிறது. தேரழுந்தூருக்கு வடகிழக்கிலும் இந்தளூருக்கு மேற்கிலும் இருக்கும் இந்தச் சிற்றூர். திரிபுர தகனம் ஆன பின்பு திருமாலும் பிரம்மனும் தேவேந்திரனோடு புறப் பட்டுத் திரிபுரங்களை எரித்த அம்புகளைத் தேடிக் கொண்டு வர, பரமேச்வரன் கிராத ரூபத்தோடு திருமால் முதலியவர்களை எதிர்கொண்டழைத்த திருத்தலமாகும்.

மூவலூர் தல புராண வரலாற்று நிகழ்ச்சிகள் சிவன் கோயில் மண்டபத்தின் மேற்புறத்தில் சித்திரங்களாகக் காட்சி தருகின்றன.

ஹரிஹரபுத்திரன் தோற்றம், பிருங்கி முனிவர் ஹரிஹரனைப் பூஜிப்பது, புன்னை மரத்தடியில் மார்க்கசகாயர், கிராத வடிவம் தரித்த பரமசிவன், விஷ்ணு, பிரும்மா, இந்திரன், பிட்சாடனர், திரிபுரம் எரித்த காட்சி முதலிய சித்திரங்களை அங்கே காணலாம்.

சிவன் கோயில், அந்தணர் வீதிக்கு வடகிழக்கே, காவிரியாற்றுக்குத் தென்கரையில் கிழக்குப் பார்த்த சந்நிதியோடு அமைந்திருக்கிறது. எதிரில் பெரிய குளமும் பின்புறம் சிறு அல்லிக் குளமும் இருக்கின்றன.

சுவாமியின் திருநாமம் அபிமுக்தீச்வரர்; அம்பாள் பெயர் அபிராமி.

முன் வாசலில் உள்ள சுதை பிம்பங்கள் பின்னமாகியிருந்தாலும் கோயில் நல்ல முறையில் காப்பாற்றப்பட்டு வருவதைக் குறிப்பிடத்தான் வேண்டும். ஆனால், காலையிலோ மாலையிலோ சென்றால் கோயில் திறந்திருக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தற்போது கிராமங்களிலுள்ள பெரும்பாலான கோயில்களில் இந்த நிலைதான்.

ஒரு முக்கிய காரணம், அர்ச்சகர்கள் வேறு கிராமங்களிலிருந்து வந்துபோக வேண்டியிருப்பதுதான். ஒரே அர்ச்சகருக்கு இரண்டு மூன்று கோயில்கள். நேரம் கிடைத்தபோது சைக்கிளில் வந்து பூஜை செய்து விட்டுப் பூட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள். அல்லது சிறு பையன்களை அனுப்பி நைவேத்தியம் செய்யச் சொல்கிறார்கள். அதுவும் காலை வந்தால், மாலை இல்லை. மாலை வந்தால் காலை கிடையாது. சில கோயில்கள் கிராமத்துக்கு வெளியே இருப்பதால் கோயில்களுக்கு அர்ச்சகர் வந்துபோகும் நேரம் கிராம மக்களுக்கே தெரிவதில்லை.

அர்ச்சகர்களையும் குறை கூற முடியவில்லை. கிராமத்தைச் சேர்ந்த சேவார்த்திகள் வந்தால்தானே அவர்

களுக்கு உற்சாகம் இருக்கும்? கிராம மக்கள் கோயிலில் அக்கறை காட்டினால், அர்ச்சகரும் சுறுசுறுப்பாக இருப்பார். கோயிலில் காத்திருப்பார். அர்ச்சகர்களோடு பேச்சுக் கொடுத்தால் தங்களுக்கு எத்தனை மாதம் சம்பளம் பாக்கி என்பதைப் பற்றித்தான் முதலில் பேசுகிறார்கள். வருமானம் இல்லாமல் வயிற்றுப் பசிக்கு அரிசி இல்லாமல் வறுமையோடு போராடும் அர்ச்சகர்களிடம் புகழ்த்துணை நாயனார் கதையைச் சொன்னால் அவர்கள் காதில் விழுமா?

தேரழுந்தூர் வேதபுரீச்வரர் ஆலய அர்ச்சகர் சுவாமி நாத சர்மாதான் அரையபுரம் சிவன் கோயிலிலும் பணி புரிகிறார் என்று அறிந்து, முதல் நாள் அங்கு சென்று அவரை வரச் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டு மறுநாள் ஸ்ரீ அபிமுக்தீச்வரரையும் ஸ்ரீ அபிராமி அம்மனையும் தரிசனம் செய்தோம்.

மூல சந்நிதிக்கு முன் ஸ்ரீ நந்திகேச்வரர் அமர்ந்திருக்கிறார். மண்டபத்தில் பைரவர், சந்திரன், சனி பகவான் ஆகியோர் இருக்கின்றனர்.

மேற்குப் பிராகாரத்தில், விநாயகர், பிட்சாடனர், சுப்ரமணியர், சுந்தரேச்வரர் — மீனாட்சி, கஜலட்சுமி முதலியவர்கள் எழுந்தருளியுள்ளனர். அம்மன் சந்நிதிக்கு நேரே மதிற்சுவருக்கு அப்பாலிருந்து தரிசனம் செய்ய வசதியாக ஒரு ஜன்னல் இருக்கிறது. அம்மன் விமானத்தில் நான்கு மூலைகளிலும் நந்திகள் இருக்கின்றன.

சிவன் கோயிலில்தான் ஆள் நடமாட்டம் இல்லையே தவிர, அந்தணர் வீதியிலேயே மேற்குப்புறம் அமைந்துள்ள லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம் கலகலப்பாக இருக்கிறது. அருகில் இருப்பதால் கிராம மக்கள் வந்து போகிறார்கள். பக்தர்களின் சிரத்தை குறையாமல் இருந்தால் எந்தக் கிராமக் கோயிலிலும் இருள் சூழ்ந்திருக்க வேண்டிய அவசியமிருக்காது. ஊரிலுள்ளவர்களும், வெளி

யூர்களிலும், வெளிநாடுகளிலும் வசிக்கும் அந்த ஊரைச் சேர்ந்தவர்களும் மனம் வைத்தால், தங்கள் ஊர்க் கோயில் களில் விளக்கெரியச் செய்து நைவேத்தியமும் பூஜையும் நிற்காமல் பார்த்துக் கொள்ளலாம். அர்ச்சகருக்கும் ஓரளவு படியளக்கலாம். பணமும் நிலமும் நகைகளும் மட்டுமே கோயில் சொத்துக்கள் ஆகமாட்டா. நம் இறை பக்தியும் தூய்மையான ஈடுபாடுதான் யாராலும் களவாட முடியாத உண்மையான, நிரந்தரமான சொத்துக்கள்.

அரையபுரத்தைச் சேர்ந்த பிள்ளையார் கோயில், பஸ் பாதையில் இருக்கிறது. 'கண் கொடுத்த விநாயகர்' என்ற அபூர்வ திருநாமத்தைத் தாங்கியுள்ள அவரது கோயில் மிகவும் பாழடைந்த நிலையிலிருக்கிறது. விமானத்திலுள்ள பிம்பங்கள் பின்னமாகியுள்ளன. கிராம மக்கள் உடனடி யாக இதன் திருப்பணியில் கவனம் செலுத்தி கும்பாபி ஷேகம் செய்வது நன்மை பயக்கும்.

அங்கிருந்து சற்று மேற்கே சென்றால் வலப்புறம் அரையபுரம் சீதாளதேவி மாரியம்மன் கோயில் இருக்கிறது. கடந்த ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, புதுமைக் கோலத்துடன் காட்சியளிக்கிறது கோயில். அங்கு மதுரை வீரன், பேச்சியம்மன், காளியம்மன் சந்நிதிகளும் உள்ளன.

வாணாதிராஜபுரம்

அரையபுரத்தில் வசிக்கும் ஸ்ரீவச்சுதேவ பட்டாச்சாரி யார் ஆர்வமும் உற்சாகமும் மிக்க ஓர் இளம் அர்ச்சகர். தந்தையின் உதாரணத்தைப் பின்பற்றி, இந்தக் காலத் திலும் ஓரளவு அனுட்டானத்துடனும், சிரத்தையுடனும் ஆலயப் பணிசெய்து கொண்டிருப்பவர். எங்களை மிகவும் வற்புறுத்தித் தனது கிராமமான வாணாதிராஜபுரத்திற்கு

அழைத்துச் சென்றார். அழகான கிராமம். டவுனின் சலசலப்பிலிருந்தும் சந்தடியிலிருந்தும் ஒதுங்கிஅமைதியாக, மௌனமாக, மிகவும் சாதுவாக இருக்கிறது அந்தக் கிராமம்.

பூம்புகார் — கல்லணை பஸ் பாதையில், கோழ்குத்தி என்ற கோடிஹத்தி, விமோசனபுரத்திற்கு மேற்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது வாணாதிராஜபுரம். பாணாசுரன் அங்கு ஏழு சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டது செவிவழிவந்த புராணச்செய்தியாகும். பாணாதிராஜபுரம் என்று முன்னர் அழைக்கப்பட்ட அந்தக் கிராமத்தில் தற்போது ஒரு சிவன் கோயில்கூட இல்லை. ஆனால், இருந்ததற்கான அடையாளங்கள் இருக்கின்றன.

வாணாதிராஜபுரத்திலுறுள ஸ்ரீலட்சுமி நாராயணப் பெருமாளைத் தரிசிக்கச் சென்றோம்.

ஸ்ரீநிவாச பட்டாச்சாரியாரின் மகன் ராகவ பட்டாச்சாரியார் அந்தக் கோயிலில் பூஜை செய்து வருகிறார். மூல சந்நிதியில் இரண்டு மூலவர்கள் உள்ளனர். பின்னால் இருப்பது பெரிய வடிவம், முன்னால் இருப்பது சற்றுச் சிறியது. இரண்டு மூலவர்கள் இருப்பது அபூர்வமாக இருக்கவே, விசாரிக்காமல் இருக்க முடியவில்லை.

இந்தக் கோயிலுக்கு மேற்கே, முன்பு எப்போதோ மற்றொரு ஸ்ரீலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் இருந்திருக்கிறது. அங்கிருந்த மூலவரை, யாரோ மயிலாடுதுறையையடுத்துள்ள இந்தளூருக்கு எடுத்துச் செல்லத் திட்டமிட்டுக் கருவறையிலிருந்து பெயர்த்து வண்டியிலும் ஏற்றி விட்டனர். ஆனால் நள்ளிரவில் வண்டியின் அச்சு முறிந்து விட்டது. எனவே, வேறு வண்டியில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள். ஆனால், வாணாதிராஜபுரத்

திற்கு வந்ததும் வண்டி நின்று விட்டது. பின்னர் எப்பாடு பட்டும் அந்த வண்டியை நகர்த்த முடியவில்லை. பெருமாள் அங்கேயே தங்கத் தீர்மானித்து விட்டார் என்று அறிந்து இந்தக் கோயிலிலேயே பிரதிஷ்டை செய்து விட்டார்கள். செவி வழியாக வந்துள்ள இந்த நிகழ்ச்சி, பல காலமாக அங்கங்கே குறைத்தும் கூட்டியும் விவரிக்கப்பட்டு பல்வேறு வடிவங்கள் எடுத்திருக்கிறது.

உற்சவமூர்த்தியான ஸ்ரீ நவநீதகிருஷ்ணன், ருக்மிணி சத்தியபாமாவுடன் எழுந்தருளியுள்ளார்.

முன் மண்டபத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீவிஷ்வக்சேனர் ஸ்ரீ விநாயகர் முதலிய சில வடிவங்கள் உள்ளன. எதிரில் ஸ்ரீ நடராஜர் சிவகாமசுந்தரி, சோமாஸ்கந்தர், தனி அம்பாள் முதலிய பெரிய பஞ்சலோக விக்ரகங்களைக் கண்டோம்.

இந்த விக்ரகங்கள் கிராமத்துக்கு மேற்கேயுள்ள நிலத்தை உழும்போது கிடைத்ததாகக் கூறினார்கள்.

இதைப் போன்றே பல ஊர்களில் கூறுகிறார்கள். பழைய விக்ரகங்களும் சிலைகளும் பூமிக்கடியில் கிடைப்ப தாகப் புதுப் புதுத் தகவல்கள் நாளும் வந்து கொண்டிருக் கின்றன. தொல் பொருள் ஆய்வுத் துறையினர் அவற்றின் அமைப்புகளைக் கொண்டு, எந்த நூற்றாண்டைச் சேர்ந் தவை என்று குறிப்பெடுத்து வைக்கிறார்கள். ஆனால், அவை அங்கு எப்படிப் புதையுண்டன என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடிவதில்லை. அங்கு கோயில் ஒன்று இருந்து அழிந்து போயிருக்கலாம்; மதப் பகைவர்களுக்குப் பயந்து புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம். எந்தக் கோயிலில் இருந்தோ வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வரப்பட்டிருக்கலாம்; பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று திருடர்கள் பூமியில் புதைத்து வைத்திருக்கலாம்— என்றெல்லாம் ஊகங்களாகக் கற்பனை செய்யத்தான் முடிகிறது.

ஒருபுறம் விலை மதிப்பற்ற பஞ்சலோக விக்ரகங்கள் களவு போவதாகச் செய்திகள் வருகின்றன; மறுபுறம் விலை மதிப்பற்ற புதுப் புது விக்ரகங்களை பூமித்தாய் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். தெய்விக சக்தியின் அற்புதத் திருவிளையாடல்களை யாரேயறிவார்?

வாணாதிராஜபுரம் ஸ்ரீ பெருமாள் கோயிலிலுள்ள பஞ்சலோக விக்ரகங்கள், முன்காலத்தில் இருந்து தற்போது அழிந்து போயிருக்கும் சிவன் கோயிலைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது ஓர் ஊகம்தான். அருகில் பெரிய சிவன் கோயில் ஒன்று இருந்ததற்கான வேறு அடையாளங் கள் இருப்பதாகத் தெரியவில்லை, ஆனால், அப்பகுதியில் ஏழு கோயில்கள் இருந்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கை சிலரிடையே உறுதியாக இருக்கிறது.

ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் கோயில் பளிச் சென்று ஜீவ ஒளியோடு திகழ்கிறது. கிராமத்தின் வளம் அங்கு உறையும் ஆலயத்தில் நிச்சயம் பிரதிபலிக்கிறது. வளம் என்பது செல்வச் செழிப்பு மட்டுமல்ல; அங்கு வாழும் மக்களின் மன வளமும் முக்கியம். அத்தகைய மன வளத்தோடு ஒருவரை வாணாதிராஜபுரத்தில் சந்திக்க நேர்ந்தது.

இருந்த நல்ல உத்தியோகத்தை விட்டு விட்டு, இருக்கும் நிலபுலன்களைக் கவனிப்பதற்காகக் கிராமத்தின் நிம்மதியான வாழ்க்கையைத் தேடிக்கொண்டு வந்து விட்டவர் அவர். ஈட்டும் செல்வத்தில், ஒரு பங்கை ஆலயத் தின் அன்றாடப் பூஜைக்காக ஒதுக்கி வைத்து விடுகிறார் அவர். பூமியில் கிடைத்த விக்ரகங்கள் கிராமத்தின் சொத்து என்றும், அதைக் காக்க வேண்டியது கிராமத்தினரின் கடமையென்றும் உணர்ந்து, சொந்தச் செலவில் ஆலயத் தில் அவற்றை தக்க பாதுகாப்பில் வைக்க ஏற்பாடுகள் செய்தவரும் இவரே. செல்வத்தோடு மனவளமும் மிக்க இவரைப் போல் கிராமத்திற்கு ஒருவர் இருந்துவிட்டால்

அங்குள்ள கோயில்களில் விளக்கெரியும், நைவேத்திய ஆராதனைகள் நிற்காமல் நடைபெறும். அர்ச்சகருக்கும் ஓரளவு தன்னம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும்.

நாம் எத்தனை பணம் சம்பாதித்தாலும் யார் யாருக்குக் கொடுத்தாலும். எத்தனையெத்தனை வகைகளில் அவற்றைச் செலவழித்தாலும், அதில் ஒரு சிறு பங்கையாவது தெய்வப் பணிக்கு அர்ப்பணம் செய்யும் போதுதான் எல்லையற்ற ஆத்ம திருப்தியும் அளவற்ற ஆனந்தமும் ஏற்படுகிறது. 'இல்லை' என்று யாராவது நெஞ்சில் கை வைத்துச் சொல்ல முடியுமா?

வாணாதிராஜபுரத்தில் குறைந்தது ஒரு சிவன் கோயிலாவது இருந்திருக்க வேண்டும் என்பதற்கான வேறு சின்னங்களையும் எங்களுக்குக் காட்டினார் ஸ்ரீவாசுதேவ பட்டாச்சாரியார்.

கிராமத்தின் வடக்கே, தெற்கே பார்த்து ஒரு பஜனை மடம் உள்ளது. அதனுள் ஒரு விநாயகரும் கோயில் கொண்டுள்ளார்.

அந்த மடத்தின் முன்புறம், பின்னமான ஒரு சிவலிங்கம் இருக்கிறது. எதிரே, ஓர் அழகிய பெரிய நந்தியும் இருக்கிறது. மடத்தின் பின்பகுதியில், விநாயகர் சந்நிதியை அடுத்து ஒரு பெரிய சிவலிங்கம் இருக்கிறது. அந்த மடத்திற்கு அப்பால் இருக்கும் பெரிய, அழகிய அல்லிக்குளம், அதையொட்டிப் பெரிய கோயில் ஒன்று இருந்திருக்கலாம் என்று ஊகிக்க வைக்கிறது. குளத்தின் கிழக்கே ஒரு சிவன் கோயில் இருந்ததாகக் கிராமத்தில் பேசப்படுகிறது.

திருவாலங்காடு

திருத்துருத்தி என்ற குத்தாலத் திருத்தலத்திற்கு மேற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தலம்

திருவாலங்காடு. திருத்துருத்தியின் தலபுராணம், திருவாலங்காட்டில் தொடங்குகிறது. பரத முனிவரும் அவரது மனையாள் சுபத்திரையும் தங்களுக்கு ஒரு மகவு பிறக்க வேண்டும் என்று மிக விரும்பி, திருவாலங்காடு சிவன் கோயிலில் உள்ள 'புத்திர தீர்த்தம்' என்ற திருக்குளத்தில் மூழ்கி, சிவபெருமானைக் குறித்து அருந்தவம் இருக்கிறார்கள். விரதம் ஏற்று வைராக்கியத்துடன் அவர்கள் பிரார்த்தனை செய்ததைக் கண்டு அத்திருத்தலத்தின் பெருமான் அவர்கள்முன் தோன்றி, ''உங்ஞக்கு ஒரு மகள் பிறப்பாள். கவலையை விடுங்கள்'' என்று அருளாசி வழங்கிவிட்டு மறைந்தார். அதன் பின்னர், பரத மூனிவர் வேள்வியொன்று நடத்த, அந்த வேள்விக் குண்டத்திலிருந்து பெண் குழந்தை ஒன்று தோன்ற, அப்போது ஓர் அசரீரி, 'உலக அன்னையாகிய ஜகதாம்பிகையே உங்கள் மகளாகப் பிறந்திருக்கிறாள்' என்று கூற, வானோரெல்லாம் பூமாரி பொழிய, தேவ வாத்தியங்கள் மங்கள கீதம் முழங்க, உலர்ந்த மரங்களெல்லாம் துளிர்த்துப் பூத்துக் குலுங்க, மலர் மணம் தாங்கிய தென்றல் இனிதே உலாவ, இல்லாதவரெல்லாம் உள்ளவராய் மகிழ, தீயோரெல்லாம் நல்லவர்களாக மாறினர்; தீமைகளெல்லாம் ஒழிந்து நானிலமெங்கும் நலமே சூழ்ந்தது.

திருவாலங்காட்டு ஈசனின் அருளால் பரத முனிவருக்கும் சுபத்திரைக்கும் ஸ்ரீ ஜகதாம்பிகை பெண்ணாகப் பிறக்கிறாள். திருத்துருத்தியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து நித்திய ஆராதனைகள் செய்து வருகிறாள். சிவபெருமான் அவள் கரம் பற்றத் திருவுளம் கொள்கிறார். கைலாயத்திலிருந்து நந்தியம் பெருமான் மூலம் திருமணம் முடிக்கச் சம்மதம் தெரிவித்து பரத முனிவருக்குச் செய்தி அனுப்புகிறார். பரத முனிவருக்கு மட்டில்லா மகிழ்ச்சி. சுபத்திரையோ, மாப்பிள்ளை பழைய கோலத்தை விடுத்து, ஆணழகனாக ஆடை அலங்கார அணிகளுடன் வர வேண்டும் என்று விரும்புகிறாள். தன் விருப்பத்தை நந்தி

தேவரிடம் கூறுகிறாள், அவரும் அச்செய்தியை சிவபெருமானிடம் தெரிவிக்கிறார். 'அப்படியே ஆகட்டும்' என்று ஆமோதிக்கிறார் பெருமான்.

சொன்ன சொல் தவறாத ஸ்ரீ பரமேச்வரன், மணவாள நாதனாகத் திருத்துருத்தியை நோக்கி வருகிறார். எப்படி வருகிறார்?

அறம் என்ற விடை மீதேறி, உத்தால மரம் நிழல் நல்க மூத்த பிள்ளையார் வழித்துணையாக வர, திருமால், பிரமன், இந்திரன் முதலிய அமரர்கள் தங்கள் ஊர்திகளில் முன் செல்ல, தேவகணங்கள் புடை சூழ, தேவ வாத்தியங்கள் முழங்க, கோலாகலமாய் வருகிறார்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருத்துருத்திப் புராண செய்யுட்களுக்கு, தமிழ்ப் பண்டிதர் திரு. ப. சிங்காரவேற் பிள்ளை எழுதிய உரைநடை அழகிற்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போமா?

'துணைவந்தார் முன்வர, உத்தாலமரம் பின் நிழல் செய்துவர, சிவபிரானார் வெள்ளி விடையை நடத்தி வந்தருளினர். முரசம், பம்பை, கல்லவடம் முதலிய அளவில்லாத வாச்சியங்கள் ஒளித்தெழுந்தன. சின்னம், அற்புதம் தோன்ற ஊதா நின்றன. முனிவர் பலர் வாழ்த்துக் கூற, மாகதர் வீரம் பாட, சூதர் புகழ் பாட, ஆரியப் புலவர் அனைவரும் ஆரிய மொழிகளால் புகழ்ந்திடத் தமிழ்ப் புலவர் அனைவரும் செந்தமிழ் மொழிகளால் செவ்வனே துதிக்கக் கொடிகள் பலவும் சுற்றிவர, இறைவனுடைய விடைக்கொடி நடுவண் வர, ஆயுதமெல்லாம் அடி புகழ்ந்து சூழ்ந்திட, வெற்றி பெற்ற பிரப்பம் படை முன்னாகச் செல்ல, மத்தளம், வேய்ங்குழல் முழங்க, நாடக மகளிர் திருமுன் நடித்து வரச் சிவகணத் தலைவர் குடை பிடித்து வெண்சாமரம் விசிறி பணிமாற, ஆலவட்டம், கோணத்தண்டு, கோணாத்தண்டு முதலியன காடு போல்

காண, மகர தோரணம், குஞ்சரம் முன்வரச் சங்கம், தாரை, கொம்பு முன் ஒலித்திட, அன்பரான தொண்டர்கள் இரு கண்ணாலும் இன்பக்கண்ணீர் சொரிந்து கைகொட்டிக் கூத்தாட, அமரர்கள் பூ மழை பொழிய, எம்பெருமான் எழுந்தருளிய இடபமும் தெற்குநோக்கி நடந்தது...'

இத்தகைய வைபவங்களோடு வருகை தந்த மணவாள நாதரை, அம்பிகையும் சர்வாலங்கார பூஷிதையாய், நாணிக் கோணிக் கொண்டு நாறுசாந்திளமுலை நாயகியாய்க் கொண்டு பூரித்துப் போகிறாளாம். இவையெல்லாம் இவர்களுக்கு ஒரு திருவிளையாடலன்றோ!

தல புராணப் பின்னணியோடு, அவற்றின் தற்காலச் சின்னங்களோடு ஆலயங்களைத் தரிசிக்கும்போது உள்ளத்தில் ஓர் உவகை பொங்கத்தான் செய்கிறது. அத்தகைய உள்ளத்தில் இறையுணர்வு ஓங்கத்தான் செய்கிறது.

திருவாலங்காடு ஆலயத்திற்குள் நுழையும்போது தல புராணக் காட்சிகளும் நம்மோடு தளிர் நடைபோடுகின்றன. மொட்டைக் கோபுரம் நம்மை வரவேற்கிறது. முன்பு அது மூன்று நிலைக் கோபுரமாக இருந்த செய்தி காதில் விழ பெருமூச்சுடன் உள்ளே நுழைகிறோம்.

கிழக்கே பார்த்த திருச்சந்நிதி. சிறிய மண்டபம். அதையெடுத்து துவஜஸ்தம்ப பீடம். பீடம்தான் இருக்கிறது. புதிதாகக் கொடி மரம் ஒன்று வைக்கப்பட வேண்டும்.

புத்திரகாமேஷ்டி யாகம் செய்தல்லவா பரத முனிவர் சந்தான பாக்கியம் பெற்றார்...? அந்த வேள்வியை நினைவு படுத்திக் கொண்டு தென்புறம் புத்திர காமேச்வர புஷ்கரணி இருக்கிறது. என்றுமே வற்றாத நீருற்று அது. ஆனால், மேலே பாசி போல் ஏதோ படிந்திருக்கிறது. அதை விலக்கிவிட்டு, ஸ்நானம் செய்யலாம். மீண்டும் அது

சேர்ந்து கொண்டு விடும்! எத்தனைதான் முயன்றாலும், எத்தனை முறை கற்றினாலும் அப்புனித நீரை அது எப்போதும் பச்சைப் போர்வையாகப் போர்த்திக் காத்து வருகிறதாம்!

முதல் பிராகாரத்திலிருந்து இரண்டாம் பிராகாரத்திற்குள் நுழையும்போது ஒரு கோபுர வாசலைக் கடந்து செல்கிறோம். கோபுரம் தெரிந்தால் நிமிர்ந்து பார்க்காமல் இருக்கமுடியுமா? பார்த்தபிறகு மேல் நிலையிலும் அதற்குக் கீழும் செடிகள் வளர்ந்து வருவதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியுமா? சுதை பிம்பங்கள் சிதைந்திருப்பதைக் கண்டு வேதனையடையாமல் இருக்கமுடியுமா? 'குடமுழுக்கு ஆகி எத்தனை ஆண்டுகள் இருக்கும்?' என்று கேட்டபோது, அர்ச்சகர், 'அது யாருக்குத் தெரியும்?' என்று பதில் கூறியபோது, 'அட, ஆண்டவா!' என்று உள்ளம் தா·· குமுறாமல் இருக்குமா?

முன் மண்டபத்தில் தெற்குப் பார்த்து அம்பாள் சந்நிதி-திருநாமம், வண்டார்குழலியம்மன்.

ஸ்ரீ வடவாரண்யேச்வரர் சந்நிதியின் நுழைவாயிலில் இடப்புறம் இரண்டு கணபதிகளுடன் ஒரு சந்நிதியும் வலப்புறத்தில் வள்ளி - தெய்வயானை சமேதராய் ஸ்ரீ முருகப் பெருமான் சந்நிதியும் உள்ளன. மண்டபத்தினுள் வடப்புறம் கஜலட்சுமியையும், நடராஜரையும், அவருக்குப் பக்கத்தில் அம்பாளின் பழைய சிலையையும், கிழக்குப் பார்த்தவாறு சரஸ்வதியையும் காண்கிறோம்.

உள் பிரகாரத்தை வலம் வரும் போது நிறைய சிவலிங்கங்களைத் தரிசிக்கிறோம். கிழக்கே பைரவர், சூரியன், சனீச்வரர் எழுந்தருளியுள்ளனர்.

தெற்குப் பிரகாரத்தில் இருக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்களின் சிலைகளுக்குக் கடைசியில் ஒரு சோழ மன்னரின் அழகிய திருவுருவத்தைக் காண்கிறோம். காலம்

காலமாக அதை 'சோழ ராஜா' என்றே குறிப்பிட்டு வந்தார்களாம். தொல்பொருள், கல்வெட்டு ஆராய்ச்சியாளரான கும்பகோணம் என் சேதுராமன் ஒரு சமயம் கோயிலுக்கு வந்திருந்தபோது, 'இவர் மூன்றாம் குலோத்துங்கன். இவர் காலத்தில் கோயிலில் திருப்பணி நடைபெற்றதற்கான கல்வெட்டு ஒன்று இங்கு இருக்கிறது' என்று கூறிய பிறகுதான் உண்மை தெரிந்ததாக அர்ச்சகர் கூறினார்.

ஸ்ரீ வடவாரண்யேச்வரர் லிங்கம் பளிச்சென்று ஜீவகளையோடு திகழ்கிறது.

இந்தக் கோயிலில் வெளிப் பிராகாரத்தில் வடகிழக்குப் பகுதியில் மேற்குப் பார்த்து புத்திரகாமேச்வர திருச்சந்நிதி இருக்கிறது. புத்திரகாமேச்வர தீர்த்தத்தைப் போன்றே இந்த சிவலிங்கமும் பரத முனிவரின் புத்திரகாமேஷ்டி யாகத்தை நினைவு படுத்துகிறது. தல புராணத்துடன் தொடர்பு கொண்ட சுவாமியும் தீர்த்தமும் இக்கோயிலின் முக்கிய அம்சங்களாகும். பங்குனி அமாவாசையன்று புத்திர காமேச்வரருக்கு, புத்திர காமேச புஷ்கரணியில் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படவேண்டும். புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் பங்குனி அமாவாசையன்று இங்குள்ள புஷ்கரணியில் நீராடி, புத்திரகாமேச்வரரை ஆராதிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தலாம்.

இக்கோயிலில் தற்போது பிரம்மோற்சவம் நடைபெறுவதில்லையாம். கடைசி நாளான பங்குனி உத்தரத்தன்று மட்டும் ஸ்ரீ வடவாரண்யேச்வரர் காவேரியில் தீர்த்தம் கொடுத்துவிட்டு வீதியுலா வருகிறார்.

இந்தக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தது. புதிதாகப் பட்டத்திற்கு வந்துள்ள ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள், ஆதீனத்தைச் சேர்ந்த கோயில்

களில் திருப்பணி நடத்துவதில் மிகவும் ஆர்வமாக இருப்ப தாக அறிந்தேன். திருவாலங்காட்டிலுள்ள பழைய தேரை ஓட்டுவதற்கும் முயற்சிகள் எடுக்கும்படி மகா சந்நிதானம் கூறியுள்ளதாக மானேஜர் ஜகந்நாதன் கூறியதைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது.

இக்கோயிலின் விமானங்களைப் பழுது பார்த்து, பூச்சு வேலைகள் செய்து, திருக்குளத்தையும் ஸ்நானத்திற்கு ஏற்ற வகையில் சீர்ப்படுத்தி, எளிதாகக் குடமுழுக்கு செய்து விடலாம் என்று தோன்றியது.

நரசிங்கப் பேட்டை

திருவாலங்காட்டிலிருந்து மேற்கில் மூன்று கிலோ மீட்டர் சென்றால் நரசிங்கம்பேட்டை என்றழைக்கப் படும் நரசிங்கம்பேட்டையை அடையலாம்.

தென் கங்கையாகிய காவேரியின் தென்புறம், ஸ்ரீ கோமுக்தித் திருத்தலமான திருவாவடுதுறைக்கு மேற் கிலும், ஆடுதுறை எனும் திருக்குரங்காடுதுறைத் தலத்தின் கிழக்கிலும், கஞ்சபுரம் என்னும் அக்னீச்வர தலத்தின் தெற்கிலும், சாத்தனூர் எனும் ஸித்தபுரத்திற்கு வடக் கிலும் இருக்கிறது நரசிங்கம்பேட்டை. புராண காலத்தில் இது பிரம்மபுரம் என்றும் நரசிம்மபுரம் என்றும் அழைக்கப் பட்டது.

முன்காலத்தில், இங்குகோயில் கொண்டுள்ள ஸ்ரீசுயம்பு நாதரை பிரும்மா வழிபட்டிருக்கிறார். மகா விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ நரசிம்மமூர்த்தி, தமது வீரஹத்தி தோஷம் நீங்குவதற்காக ஸ்ரீ யோகநரசிம்மராய் எழுந் தருளி, சுயம்புநாதரைப் பூஜித்தார். திருமூலநாயனார் தாம்

அடைந்த மாறுவேடத்தை நிவர்த்தி கொள்ளும் பொருட்டு ஸ்ரீ சுயம்புநாதரைத் தரிசித்து சிவஞான மோட்ச சாயுஜ்ய பதவியை அடைந்தார்.

நரசிம்மவர்மன் என்ற அரசன் தனது மனைவியின் கொடிய நோய் குணமாவதற்காக, சிவாலயத்தின் எதிரே பிரம்ம தீர்த்தம் எனவும் நரசிம்ம தீர்த்தம் எனவும் வழங்கும் புண்ணிய தீர்த்தத்தில் அவளுடன் நீராடி, நன்மையடைந்தான்.

இந்த விவரங்களெல்லாம் 1929-ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது வெளியிடப்பட்ட பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஊருக்குள் நுழைந்ததும் பெருமாள் கோயில் நம்மை வரவேற்கிறது. ஒரே மண்டபத்தோடு கூடிய சிறிய கோயில் தான். ராஜகோபுராம் இல்லை. கோவிந்த புரத்திலிருந்து அர்ச்சகர் வந்து ஒருவேளை பூஜை செய்து விட்டுப் போவதாக அறிந்தேன்.

மூலவர், ஸ்ரீ யோகநரசிம்ம சுவாமி, ஸ்ரீதேவி. பூதேவி சமேத ஸ்ரீ பிரஹலாத வரதராஜர் உற்சவர். சங்கு சக்ர, அபய, ஊரு கரங்களுடன் திகழ்கிறார். கிழக்குப் பார்த்த சந்நிதி. எதிரில் கருடாழ்வார் இருக்கிறார்.

இந்தக் கோயில் 1911-ஆம் ஆண்டு நவம்பரில் கட்டப்பட்டதாக, ஸ்ரீ யோகநரசிம்ம சுவாமி ஸம்ப்ரோக்ஷணப் பத்திரிகையிலிருந்து தெரிகிறது. இந்தப் பழைய பத்திரிகையை எனக்குக் கொடுத்து உதவியவர் அவ்வூர் 'அன்னை ஜானகி நூலக'த்தின் நிர்வாகி திரு. டி.வி. ராமதாஸ் அவர்கள். பள்ளி ஆசிரியரான அவர், பழைய நூல்களையும் பத்திரிகைகளையும் விக்ரகங்களையும் சேர்த்து வைத்து அவற்றை அரும்பெரும் செல்வங்களாகக் காத்து வருகிறார். பிறருக்குப் பயன்படும் வகையிலும் அந்த நூலகத்தை நடத்தி வருகிறார். அவரது துணைவியாரும் இந்த

நற்பணியில் அவருக்கு உறுதுணையாக இருந்து வருவது பாராட்டத்தக்கது.

தல புராணம் மட்டுமல்ல; பழைமையான செல்வங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டியவை. அது யாருக்காவது எப்போதாவது பயன்படும், இந்த ஸம்ப்ரோக்ஷணப் பத்திரிகை எனக்குப் பயன்பட்டது போல.

ஸ்ரீயப்பதியாகிய பகவான் நரசிம்மாவதாரம் எடுத்து இரணிய வதம் செய்த பின்னர் யோகத்திலிருந்த தலம் நரசிங்கம் பேட்டை என்றும், இத்தலத்தில் நரசிம்மப் பெருமாளோடு வேறு சில விஷ்ணு ஆலயங்களும் இருந்து அழிந்து போயின என்றும் இப்பத்திரிகையில் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வூர் மிராசுதாரர்களும் வியாபாரிகளும் சேர்ந்து பொருள் திரட்டி இந்தப் பழைமையான மூல விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து, ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் கூடிய ஸ்ரீ வரதராஜப் பெருமாளை உற்சவ மூர்த்தியாக எழுந்தருளச் செய்திருக்கிறாக்கள்.

ஊருக்குள்ளே, வடகோடியில் இருக்கிறது சிவாலயம். அதைத் தேடிக் கொண்டு, மேடு பள்ளங்கள் நிறைந்த சந்து பொந்துகளில் நுழைந்து சென்றோம்.

இதுவும் கிழக்குப் பார்த்த கோயில்தான். முன் மண்டபத்தின் மேற்பகுதியில், ஸ்ரீநரசிம்மர், ஸ்ரீசுயம்புநாதரை வழிபடுவது போன்ற சுதை பிம்பம் இருக்கிறது. ஆனால், அது சிதைந்து போயிருப்பதைக் காணும்போது மிகவும் வேதனையாயிருந்தது. பெரிய அளவில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்ய முடியாவிட்டாலும், இம்மாதிரி பிம்பங்களையாவது கவனித்துச் சீர் செய்வது இயலாத செயல் அல்லவே! கோயிலின் தல புராணத்தோடு தொடர்பு கொண்ட சிற்பங்களைப் பாதுகாப்பதில் நமது ஆலய நிர்வாகிகள் அதிக கவனம் செலுத்துவது அவசியம்.

ஆலய வழிபாட்டின் அடிப்படையே இறை பக்திதான். அந்த பக்திக்கு ஆணிவேர் போல் அமைந்துள்ளவை தல

புராண நிகழ்ச்சிகள். தங்கள் குடும்பத்தின் பெருமைகளை அறிந்து கொள்வதில் ஆர்வமும் அக்கறையும் காட்டுவது போலவே, தங்கள் ஊரைப் பற்றியும் அங்கு உறையும் தெய்வங்களைப் பற்றியும் அங்கு வாழ்ந்த சான்றோர்கள் பற்றியும் அறிந்து கொள்வதில் மக்கள் அக்கறையும் ஆவலும் கொண்டிருக்கிறார்கள். அறிஞர் பெருமக்களும் ஆத்திகப் பெரியார்களும் வருங்கால சந்ததியினருக்காக இந்த அரிய சொத்துக்களைத் தேடி வைக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

பாடல் பெற்ற கோயில்களில் தேவார, திருப்புகழ்ப் பாடல்களை எழுதி வைத்துள்ளது போல், தல புராணம் இருக்கும் கோயில்களில் அதை எழுதி வைப்பதை வழக்க மாகக் கொள்ள வேண்டும். அதுவும் தல புராண நிகழ்ச்சி களைக் குறிக்கும் சிற்பங்களுக்கு அருகிலேயே அந்த போர்டை வைப்பது சிறந்தது.

ஸ்ரீ நரசிம்ம சுவாமி, சுயம்புநாதரை வழிபடுவது போன்ற புடைச் சிற்பம் ஒன்று உள் மண்டபத்திலும் இருக்கிறது. மக்களது கவனத்தைக் கவரும் வகையில் அதை ஒரு சிறு சந்நிதியாக்குவதைப் பற்றியும் சிந்திக்க லாம். அங்கேயே தல புராண வரலாற்றையும் எழுதி வைப்பது பொருத்தமாய் இருக்கும்.

ஸ்ரீ சுயம்புநாதர், பெரிய பாணலிங்கமாக எழுந்தருளி யுள்ளார். ஆவுடையார் சிறியது. சுவாமி சுயம்பு.

கருவறையின் அடித்தளம் கருங்கல்லால் ஆனது. துவிதள விமானம் வட்ட வடிவமாக இருக்கிறது.

அம்பாளின் திருநாமம் லோகநாயகி. பெரிய சிலை. கோயிலின் மேற்குப் பிராகாரத்தில் ஞானாம்பாள், அட்ச யாம்பாள் என்ற இரு அம்பிகைகளும் இருக்கின்றனர்.

மேற்குப் பிராகாரத்தில் தல விநாயகர் வீற்றிருக்கிறார். சோழலிங்கம், அட்சயநாதர், ராகு, கேது, சூரியன், சாஸ்தா சிலைகள் உள்ளன. கஜலட்சுமி இருக்கிறாள். அப்பர் பெருமான் இருக்கிறார்.

நடராஜர் சிலை திருட்டுப் போன கோயில்களில் இதுவும் ஒன்று. ஒரு வருடம் ஆயிற்றாம். அது தற்போது இங்கிலாந்தில் இருப்பதாகத் தெரியவந்திருக்கிறதாம். அவர் அருளாலே விரைவிலேயே அவர் இங்கு வந்து சேர வேண்டும்!

திருவாலங்காட்டு ஆலயத்தைப் போன்றே இந்தக் கோயிலும் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்ததாகும்.

ஸ்ரீ சுயம்புநாதர் கோயிலிலிருந்து சற்று வடமேற்கில் ஒரு சிவன் கோயில் இருந்திருக்கிறது. அது சிதிலமடைந்து, இடிந்து பாழான கோபுரம் மட்டும் இப்போது நின்று கொண்டிருக்கிறது. கருவறைப் பகுதியில் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டோம்.

சாத்தனூர்

நரசிங்கம்பேட்டைக்கு அடுத்த கரையில் உள்ளது சாத்தனூர். பெரிய கிராமம், பண்டைய செழிப்பின் அடையாளச் சின்னங்கள் இன்னும் முழுமையாக அழிந்து விடவில்லை. சாஸ்தா ஊர், சாத்தனூராக மருவியிருக்குமோ?

அங்கு புராதன ஐயனார் கோயில் ஒன்று இருக்கிறது. தர்மசாஸ்தா பூர்ண புஷ்கலையுடன் மூல சந்நிதியில் வீற்றிருக்கிறார். முன் மண்டபத்தின் வெளிப் பகுதியில் ஒரு சுதை வடிவம் இருக்கிறது. சுவாமிக்கு ஸ்ரீ கஜநாதர்,

'ஆயிரந்தில் ஒருவர்' என்ற திருநாமங்களும் உண்டு வெளிப்புறம் மதுரைவீரனும், செல்லி. பொன்னி அம்மன் களும் இருக்கின்றனர். முன் மண்டபத்தில் நந்தி இருக்கிறார். இங்கிருக்கும் பெரிய துவாரபாலகர் சிலைகள் அருமையாக இருக்கின்றன. மண்டபத்திலிருக்கும் குதிரை வாகனம் நல்ல வேலைப்பாடுகளுடன் உருவாக்கப்பட்டு, கலை அழகுடன் நம்மைக் கவருகிறது. உற்சவமூர்த்திகள், அருகில் உள்ள சிவன்கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

மூல சந்நிதிக்கு இருபுறமும் துவாரபாலகர்கள் இருக்கிறார்கள். உள் மண்டபத்தின் இடப்புறம் ஓர் இருட்டு மேடையில் பிள்ளையாரைத் தவிர, வேறு இரண்டு சிறு உருவச் சிலைகள் இருப்பதைக் கண்டோம். விசாரித்த போது, ஒன்று மூலன் என்றும் மற்றொன்று திருமூலர் என்றும் அறிந்தோம். கைலாசத்திலிருந்து திருவாவடுதுறை வந்த முனிவர், மாடு மேய்க்கும் மூலன் சடலத்துக்குள் பரகாய பிரவேசம் செய்து திருமூலநாயனார் ஆனார் அல்லவா? அந்த மூலனுக்குச் சொந்த ஊர் சாத்தனூர் ஆயிற்றே! இந்த வரலாற்றை நினைவுபடுத்தத்தான் இவ்விரு சிலைகளையும் சாஸ்தா கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

சில வருடங்களாக. திருமூலரின் வரலாற்றை நினைவு படுத்தவும், அவரது திருமந்திரங்களைப் பரவச் செய்யவும் அவ்வூரில் ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்தில் ஒரு விழா நடத்துகிறார்கள்.

இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள், மூவாயிரம் திருமூல மந்திரங்களையும் கைப்பட எழுதுகிறார்கள். அதைப் பாராயணம் செய்து கொண்டே சாத்தனூரிலிருந்து மூன்று நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவாவடுதுறை வரை நடந்து செல்கிறார்கள். அவர்களோடு நாற்பது ஐம்பது பேர் பாராயணம் செய்துகொண்டு

போகிறார்கள். திருவாவடுதுறை ஆலயத்திற்குச் சென்று நந்திகேச்வரருக்கு அடுத்துள்ள அரச மரத்தடியில் அமர்ந்து, மீதி உள்ள மந்திரங்களை மாலைவரை பாராயணம் செய்து முடிக்கிறார்கள். அறிஞர்கள், திருமூல நாயனாரைப் பற்றியும் திருமந்திரங்களின் சிறப்புப் பற்றியும் சொற்பொழிவாற்றுகிறார்கள்.

சாத்தனூர் வடக்குத் தெருவிலுள்ள சாம்பசிவம் அவர்கள் இல்லத்தில்தான் திருமூலரின் அடியார்கள் கூடி, சாஸ்தா கோயிலில் அபிஷேக ஆராதனைகளை முடித்துக் கொண்டு, மூலன், திருமூலர் சிலைகளை வணங்கிவிட்டு, கோஷ்டியாகத் திருவாவடுதுறைக்குச் செல்கிறார்கள். எல்லோரும் நடந்து செல்ல வேண்டும் என்பதை முக்கியமாகக் கடைப் பிடிக்கிறார்கள். இதை முன்னின்று நடத்தி வருபவர் சென்னைவாசியான திரு. பாலசுப்ரமணியன். அவர் இந்தத் தகவலை ஓராண்டுக்கு முன் என்னிடம் கூறிவிட்டு, ''காஞ்சிப் பெரியவர்தான் இப்படிச் செய்யும்படி அனுக்கிரஹித்தார். ஆனால் விளம்பரமோ, ஆடம்பரமோ இன்றி இதை ஆத்மார்த்தமாகச் செய்யச் சொன்னார்'' என்றார்.

நம் மகான்களையும் ஞானிகளையும் அவர்களது மாபெரும் பணிகளையும் சிந்தனைச் செல்வங்களையும் இந்தத் தலை முறையினருக்கு நினைவுபடுத்தவும், பிற்காலச் சந்ததிகளுக்காக அவற்றைக் காத்துத் தரவும் இம்மாதிரி பலப் பல திட்டங்களை உருவாக்கி, அதைச் செயல்படுத்தத் தகுந்த நபர்களாகத் தேர்ந்தெடுத்து, தமது அருளாசியால் அவர்களுக்கு உறுதியும் ஊக்கமும் அளித்து, நம் பண்டைய ஆன்மிக கலாசாரத்தையும் தெய்விகக் கலைகளையும் பக்தி இலக்கியங்களையும் ரட்சித்து வரும் பெருந்தகை காஞ்சிப் பெரியவர், சாத்தனூரிலும் திருவாவடுதுறையிலும் திருமூலரின் நினைவை நிலைக்கச் செய்து வரும் இந்த இயக்கத்தைப் பற்றி அறியாதவர்கள் அறிய

வேண்டும். மேலும் பல நல்ல உள்ளங்கள் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் இதைப் பற்றி இங்கு குறிப்பிடுவது என் கடமை என்று தோன்றியதால் இதை எழுத நேர்ந்தது.

திருமந்திரங்களைப் படித்தறிய வேண்டும் என்ற இயக்கத்தில் கலந்து கொண்டு, ஆண்டு விழா எடுத்து வரும் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க அனுமதி கோருகிறேன். சாத்தனூர் ஐயனார் கோயிலின் முன் நுழைவாயில் இடிந்து போய் பாழடைந்து பரிதாப நிலையில் இருக்கிறது. வலம வர முடியாமல் பிராகாரத்தில் முட்புதர் மண்டிக் கிடக்கிறது. மதிற்சுவர்கள் இடிந்து சரிந்து போயிருப்பதால் அது பொது வழியாகி விட்டிருக்கிறது. அக்கோயிலில் மூலனும் திருமூலரும் இருப்பதால், அது பழுது பார்க்கப்பட்டு, திருப்பணி செய்யும் பொறுப்பைத் திருமுலநாயனாரின் பக்தர்கள் ஏற்றுக் கொண்டால், கிராம மக்களும் ஒத்துழைப்பார்கள். மலைக்குச் செல்லும் ஐயப்பபக்தர்கள் இந்நற்பணியில் முனைந்து செயல் பட்டால் குடமுழுக்கும் எளிதாக நிறைவேறிவிடும்.

ஐயனார் கோயிலுக்குத் தெற்கில் ஸ்ரீ சித்தேச்வரர் சுவாமி கோயில் இருக்கிறது. அம்பாளின் திருநாமம் ஆனந்தகௌரி. தென்புறம் பார்த்த நுழைவாயில், கிழக்குப் பார்த்த கருவறை. அம்பாள் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறாள்.

சிவலிங்கம் நல்ல உயரமாக இருக்க ஆவுடையார் சதுர வடிவில் உள்ளது.

ஸ்ரீ அம்பாள் சந்நிதியின் மீதுள்ள விமானத்தின் நான்கு மூலைகளிலும் உள்ள நந்திகள் வழக்சமான போஸில் ஒரே மாதிரி உட்கார்ந்து கொண்டிராமல், ஒன்று தலையைத் தூக்கியும், மற்றொன்று தொங்கபோட்டுக்

கொண்டும், வேறொன்று கொஞ்சுகிற பாவனையிலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி இயல்பாகவும் இயற்கையாகவும் இருப்பது ஒரு புதுமை என்றே கூறவேண்டும். சிற்பியின் கற்பனைத் திறனைப் பாராட்டித்தான் ஆக வேண்டும். பள்ளியறை விமானத்தைச் சுற்றி காமதேனுவின் வடிவங்கள் இருக்கின்றன.

சிவன் கோயிலுக்கு வடக்கே சித்தாமிருத தீர்த்தக் குளம் இருக்கிறது.

சாத்தனூரில் கிழக்கு அந்தணர் வீதியின் கோடியில் சிவன் கோயில்; மேற்கு வீதியின் மேற்புரம் பூதேவி, ஸ்ரீதேவி உடனுறை வரதராஜப் பெருமாள் கோயில் இருக்கிறது.

கிராமத்தின் தென்மேற்கில் கைலாசநாதர் கோயில் இருக்கிறது. அங்கு உறையும் அம்பாள் காமாட்சியன்னை. மதிற்சுவர் இடிந்துபோய் இருக்கிறது. கோயில் பூட்டப் பட்டிருந்தது. ஊருக்குச் சற்று வெளியே இருப்பதால் அதிகக் கவனிப்பு இல்லாமல் இருக்கிறது.

கைலசாநாதர் கோயிலுக்குச் சற்றுத் தள்ளி, தென் மேற்கில் மாரியம்மன் கோயில் இருக்கிறது.

திருநாகேச்வரம்

திருநாகேச்வரம் சமயக் குறவர்களான நாயன்மார்கள் தோன்றவில்லையெனில் சைவமில்லை. பெரிய புராணம் இல்லையெனில் நாயன்மார்கள் வரலாறு நமக்குத் தெரியாமலேயே போயிருக்கும். திருமுறைகளில் ஒன்றாக மேன்மை பெற்றுள்ள பெரிய புராணத்தைப் படைத்துத் தந்தவர் சேக்கிழார் பெருமான். அவர் திருவடி ஞானம் பெற்ற

தலம் திருநாகேச்சுரம். அந்தப் பேரருளாளரின் திருக் கரங்களால் திருப்பணிகள் செய்யப்பெற்ற திருக்கோயில் இது. இப் பழம்பெரும் சிறப்புகளுக்கேற்ற வகையில் இது பராமரிக்கப்படாதது வருந்தத்தக்கதாகும்.

'உயரும் நறவார் பொழில் நாகேச்சுர நகருள் அறவா என வல்வினை யாசறுமே' என்று திருஞானச்சம்பந்தப் பெருமானால் போற்றப்பெற்ற இத் திருத்தலம், கும்ப கோணத்துக்குக் கிழக்கே இரண்டரை மைலில் இருக்கிறது. திருநீலக்குடிக்கு மேற்கிலும் அரசலாறு என்ற அரிசொல் ஆறுக்கு வடகரையிலும் திருவிடைமருதூருக்குத் தென் மேற்கிலும் அமைந்துள்ளது.

ஸ்ரீநாகராஜன் பூஜித்த தலம் இது. ஒரு சிவராத்திரி புண்ணியத் தினத்தன்று, நாகராஜன் முதல் ஜாமத்தில் வில்வ வனமான திருக்குடந்தைக் கீழ்க் கோட்டமான ஸ்ரீநாகேச்வரசுவாமி கோயிலிலும், இரண்டாம் ஜாமத்தில் சண்பகவனமான இத் திருநாகேச்சுரத்திலும், மூன்றாம் ஜாமத்தில் வன்னி வனமான திருப்பாம்பரத்திலும், நான்காம் ஜாமத்தில் புன்னை வனமான நாகைக் காரோணத்திலும் வழிபட்டுப் பெரும்பேறு பெற்றான். இந்த நான்கு தலங்களும் நாகராஜன் பெயராலேயே வழங்கப்படுகின்றன.

இன்றும், காலையில் குடந்தையிலும், உச்சிக் காலம் திருநாகேச்வரத்திலும், மாலையில் திருப்பாம்பரத்திலும் அர்த்தஜாமத்தில் நாகப்பட்டினத்திலும் வழிபடுவது சிறப் புடையது என்று கருதப்படுகிறது.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், ஸ்ரீசேக்கிழார் பெருமான் அநபாய சோழனிடம் முதலமைச்சராகப் பணி புரிந்து கொண்டிருந்த நேரத்தில், திருநாகேச்சுரம் வந்து தரிசனம் செய்து, ஸ்ரீநாகநாத சுவாமியைத் தனது ஆத் மார்த்த வழிபாட்டுக்குரிய தெய்வமாக்கிக் கொண்டார்.

திருப்பணிகள் செய்து கருங்கல் மண்டபத்தைக் கட்டினார், பின்னர் தனது பிறந்த ஊரான, சென்னைக்கடுத்த குன்றத்தூரில் இந்த சுவாமியின் பெயரிலேயே ஓர் ஆலயத்தை எழுப்பி, அத்தலத்துக்கு வடநாகேச்சுரம் என்று பெயரிட்டார்.

பதினாறாவது நூற்றாண்டில் செம்பியன்மாதேவி இங்கு திருப்பணிகள் செய்து மானியங்கள் அளித்தார்.

திருநாகேச்சுரத்தின் பெருமைகளைக் குறிக்கும் வரலாறு வடமொழியில் பௌடிய புராணத்தில் உத்தர பாகத்தில் காணப்படுகின்றது. ஸ்ரீபரமேச்வரரே இத்தலத்தின் மகிமைகளைப் பார்வதி தேவியாருக்கு எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இதைக் குற்றாலம் வீரராகவாச்சாரியார் அவர்களைக் கொண்டு தமிழாக்கி, மூவல் ப. சிங்காரம் பிள்ளையவர்கள், பாடல்களுடன் கூடிய உரைச் செய்யுட்களடங்கிய ‘திருநாகேச்சுரப் புராணம்’ ஒன்றைப் படைத்தார். அரிமழம் அ. அரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் இக்கோயிலில் 1929-ம் ஆண்டு திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு செய்வித்தபோது, இப்புராணத்தை அச்சேற்றினார்.

அப்புராணத்தின்படி, இத்தலத்தில் பலரும் வழிபட்டு நற்கதியடைந்துள்ளனர். ‘நத்திசேரும் திருநாகேச்சுரம்’ என்று தேவாரம் புகழ் பாடியுள்ளது. சூரியன் இங்கு வழிபட்டுப் பேறுபெற்றான். வினாயகர் வழிபட்டு, கணங்களுக்குப் பதியானார். கௌதமர் வழிபட்டு, அகலிகையை அடைந்தார். நளன் இங்கே முறைப்படி வழிபட்டு, இழந்த மனைவியைப் பெற்றான். பாண்டவர்கள் வழிபட்டு, இழந்த செல்வங்களை மீண்டும் பெற்றதோடு, கார்த்திகை மாதத்தில் திருவிழாவினையும் நடத்தித் தந்தனர். வசிட்ட முனிவனும், இந்திரனும், பிரம்மனும், பகீரதனும் வழிபட்டுள்ளனர். சித்திரசேனன் என்னும் மன்னன் வைகாசியில் விழா எடுத்து, வழிபட்டு நற்புத்திர

னைப் பெற்றான். ஒரு சிவயோகி கோயிலிலுள்ள புற்பூண்டுகளை அகற்றி புனிதமடைந்தார். நாக மன்னர்களான ஆதிசேடன், தக்ககன், கார்க்கோடகன் ஆகியோரும் வழிபட்டுள்ளனர். சௌனக முனிவர் காம மயக்கத்தில் சிக்கிய பாவத்திற்கு இங்கு பிராயச்சித்தம் தேடிக் கொண்டார். நற்குணம் என்னும் முனிவர், கார்த்திகை சோமவாரங்களில் விளக்கேற்றி நோன்பிருந்து பாம்பு கடித்து இறந்த தன் மகனைப் பிழைக்கச் செய்தார். இவர்களைத் தவிர இராக்கதம், பைசாசம், வேதாளம் முதலிய தொல்லைகளிலிருந்து விடுதலை பெற்று உய்ர்ந்தோர் பலப்பலர்.

தப்புராணத்தில் காணப்படாத, செவிவழி வந்துள்ள ஒரு கதையும் உண்டு.

சம்புமாலி என்ற கேரளநாட்டு மன்னன் அறங்கள் செய்வதிலும் மன்னனாகத் திகழ்ந்தான். ஒருநாள் காலங்கிரி முனிவர் அவனிடம் உதவி நாடி வந்தார். முதல் நாளே மன்னன் அறங்களை முடித்து விட்டானாகையால் அவனால் ஏதும் அளிக்க முடியவில்லை. கோபமடைந்த முனிவர் 'பேயுருக் கொண்டு அலைக' என்று மன்னனைச் சபித்தார். பதைபதைத்துப் போன மன்னன், 'சாபம் நீங்க என்ன பிராயச்சித்தம் செய்யவேண்டும்' என்று மன்றாடிக் கேட்டான். மனமிரங்கிய முனிவர். பேயுருவுடனேயே ஆயிரத்தெட்டு சிவத்தலங்களையும் கண்டு தரிசித்து, இறுதியில் சண்பகவனம் என்னும் திருநாகேச்சரத்திற்கு வந்து, சூரிய புட்கரணியில் நீராடி ஸ்ரீநாகநாதப் பெருமானையும், குன்று மாமுலையம்மையையும் வழிபட்டு, சாப நீக்கம் பெறுமாறு அருளாசி வழங்கினார். அவ்வாறே சம்புமாலி மன்னன் சிவப்பதிகளை வழிபட்டு, இறுதியாகத் திருநாகேச்சுரம் வந்து, சூரிய புட்கரணியில் நீராடி' ஸ்ரீநாகநாத சுவாமியையும் அம்பாளையும் வழிபட்டுச் சாப விமோசனம் பெற்றான். பேயுருக் கொண்ட சம்புமாலியின் உருவம் ஆலயத்தின் அலங்கார மண்டபத்

தூண் ஒன்றில் வடிக்கப் பெற்றுள்ளது. ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் புதுத் தெருவில் சம்புமாலியின் சரித்திரத்தை நாடகமாக நடத்தி வருகிறார்கள்.

இவையும் இன்னும் எத்தனையோ மகிமைகளையும் பெற்ற ஸ்ரீநாகநாதசுவாமி ஆலயத்தை இப்போது தரிசிக்கப் போகிறோம்.

இக்கோயில் நான்கு கோபுரங்களும், மூன்று பிரகாரங்களும், மடவிளாகமும், தேரோடும் நான்கு வீதிகளும் அமையப் பெற்று விளங்குகிறது.

அலங்கார வளைவைக் கடந்து, அழகிய, சிறு சந்நிதித் தெரு வழியே நடந்து, கிழக்கு நோக்கி நிமிர்ந்து நிற்கும் ஐந்து நிலைகளுடைய ராஜகோபுரத்தை அண்ணாந்து பார்த்து, கரம் குவித்துக் கும்பிட்டு உள்ளே நுழைகிறோம்.

நிருத்த கணபதி, நந்திதேவர், விநாயகர், காட்சி தருகின்றனர். கொடிமரம் கம்பீரமாக நிற்கிறது.

நமக்கு இடப்புறம் சூரிய புட்கரணியும் வலப்புறம் நூற்றுக்கால் மண்டபமும் இருக்கின்றன. திருக்குளத்தைச் சுற்றிலும் அழகிய மண்டபம் காணப்படுகிறது. அதன் தென்மேற்குப் பகுதி இடிந்து நொறுங்கி விழுந்து கிடப்பதைப் பார்க்கும்போது மனம் வெதும்பித் துடிக்கிறது.

புட்கரணியருகில் மழுப்பொறுத்த விநாயகர் சந்நிதி இருக்கிறது. இது நேராக இல்லாமல் தென்கிழக்கை நோக்கி அமைந்திருக்கிறது. மழுப்பொறுத்த விநாயகர் சந்நிதியில் நின்று,

நறைகமழ் தேன் மல்கு
திருநாகேச்சரம் வாழ்
பிறைநுதலென் றாய்மாலை
பேச — நிறைகூர்

மழுப்பொறுத்தானீன்ற
மழகளிறு கொற்ற
மழுப் பொறுத்தான்
தாள் வணங்குவாம்.

என்று பாடி வணங்குகிறோம்.

ஸ்ரீ சதாசிவபிரும்மேந்திராள் பிரதிஷ்டை செய்த கணபதி யந்த்ரம் ஒன்று உள்கோபுர வாசலுக்கருகில் இருக்கிறது. இதற்குக் கோயில் ஆகமப்படி பூஜைகள் உண்டு. கார்த்திகை மாதம் முதல் ஞாயிறும் மாட்டுப் பொங்கல் அன்றும் இதற்கு முக்கியமான நாள். அன்று யந்த்ரத்திற்கு புனுகுச் சட்டம் சாத்தப்பட்டு பூஜை நடைபெறுகிறது. தினம் விளக்கேற்றி, ஒரு மலராவது வைக்கலாம் என்று அர்ச்சகர் கிருஷ்ணமூர்த்தியிடம் யோசனை கூறினேன்.

தென்புறக் கோபுர வாசலுக்கு இடப்புறம் துவார பாலகர்களுடன் ஸ்ரீ விநாயகர் சந்நிதி ஒன்று இருக்கிறது. அந்த கணபதியின் பெயர் கணநாதர். அவர் ஸ்ரீ சதாசிவப் பிரும்மேந்திரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர் என்றும், இவர் சம்பந்தப்பட்ட யந்த்ரத்தைத்தான் அம் மகான் கிழக்குப்புறம், உள் கோபுரத்தினருகில் பிரதிஷ்டை செய் துள்ளதாகவும் கூறினார். இதன் வரலாறும் சிறப்பும் மகிமையும் ஆராய்ச்சிக்குரியன.

கிழக்குக் கோபுர வாசலில் துவார பாலகர்களும், தெற்குக் கோபுர வாசலில் கணநாதரும் காவல் தெய்வங் களாக இருப்பது போல், வடக்குக் கோபுர வாசலில் அகோர வீரபத்திரரும் பத்ரகாளியும் மேற்குக் கோபுர வாசலில் முனீச்வரரும் காவல் தெய்வங்களாக எழுந்தருளி யுள்ளனர்.

இக்கோயிலில் தற்போது பிரபலமாகி வருவது இரண்டாம் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையிலுள்ள ஸ்ரீராகு பகவான் திருசசந்நிதி. புராணத்தைப் பார்ப்போம்.

சுசில முனிவர் என்பவர் தனது ஆச்ரமத்தில் ஒரு வேள்வியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதற்கான சமித்து, பழவகைகள், மாவிலை, வாழையிலை. தர்ப்பை மற்ற பொருட்களைக் கொண்டு வருவதற்காகத் தன்னுடைய மகனைக் காட்டுக்கு அனுப்பி வைத்தார். எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு அவன் திரும்பி வரும்போது, தச்சகன் என்ற நாகம் தீண்டி, அந்த இடத்திலேயே அவன் இறந்து விட்டான்.

மகன் வருவதற்கு நேரமானதால், கவலை கொண்ட முனிவர் ஞானதிருஷ்டியின் மூலம் அவன் இறந்ததை அறிந்துகொண்டு காட்டுக்குச் சென்றார். மகனின் உயிரைக் குடித்த தச்சகனைப் பார்த்து, 'நீ மானிட சர்ப்பமாகப் பிறக்கக் கடவாய்' என்று சபித்துவிட்டு, மகனை உயிர்ப் பித்து அழைத்துச் சென்று வேள்வியை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

பின்னர், தச்சகன் சுசில முனிவர் இருக்குமிடம் தேடி வந்து, தனது சாபம் நீங்குவதற்கு என்ன வழி என்று கேட்டபோது முனிவர் கூறினார்: ''நீ பூலோகத்தில் மானிடப் பாம்பாக பிறந்து மிகவும் கஷ்டப்படுவாய். பல ஆலயங்களுக்குச் சென்று தரிசித்ததும் சாபம் நீங்கப் பெறுவாய்.''

அதன்படி தச்சகன், பல ஆலயங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டான். பின்னர், ஒரு சிவராத்திரி யன்று முதல் ஜாமத்தில் குடந்தை ஸ்ரீநாகேச்வரரையும், இரண்டாம் ஜாமம் செண்பகாரண்யத்தில் சுயம்புவாக விளங்கும் ஸ்ரீநாகநாத சுவாமியையும், மூன்றாம் ஜாமத்தில் சேஷபுரி என்ற திருப்பாம்பரத்திலுள்ள சுவாமியையும்

நான்காம் ஜாமம் நாகப்பட்டினம் ஆலயத்திலும் வழிபட்டுத் தன் சாப நிவர்த்திக்காகப் பிரார்த்திததான். அப்போது சுவாமி, ''நீ மீண்டும் திருநாகேச்வரம் செல்வாயாக'' என்று அருளினார். எனவே, தச்சகன் திருநாகேச்வரத்தை யடைந்து, சாபவிமோசனம் பெற்று, தனது பழைய உருவத்தை திரும்பப் பெற்றான். அப்போது பொழுது விடிந்து விட்டது. சுவாமி, நாகராஜனைப் பார்த்து 'நீ இங்கேயே தங்கி விடு' என்று அருட் கட்டளையிட்டார்.

உடனே நாகராஜா, ''எனக்கு இத் திருத்தலத்தில் சாப விமோசனம் ஏற்பட்டதால், தாங்களும் இந்த ஊரும் என் பெயரிலேயே விளங்க வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ளவே, சுவாமி, ''அப்படியே ஆகட்டும்'' என்று அருளினார். ''என் சாபம் இங்கு நீங்கப் பெற்றதால், ராகு தோஷமும் நாக தோஷமும் உடையவர்கள் என்னைத் தேடி வந்து எனக்கு அபிஷேக, அர்ச்சனைகள் செய்து வழிபட்டால் நான் அவர்களுடைய குறைகளைத் தீர்த்து வைக்கிறேன்'' என்று வாக்களித்து, சுவாமிக்குத் தென் மேற்கு மூலையில் அமர்ந்துவிட்டான் நாகராஜா.

இது ராகு ஸ்தலமாகக் கருதப்படுகிறது. இந்த ராகு பகவானுக்குப் பால் அபிஷேகம் செய்யும்போது அது நீல நிறமாக நம் கண்ணுக்குத் தெரிகிறது. அந்த சந்நிதியில் வழிபட்டுப் பிரார்த்தனை செய்து கொள்பவர்களுக்கு திருமணமாவதோடு, சந்தான பாக்கியம் இல்லாதவர்கள் குழந்தைகளும் பெறுகிறார்கள் என்று கிருஷ்ணமூர்த்தி குருக்கள் கூறினார்.

ராகு பகவானுக்குத் தென்புறம் ஜேஷ்டா தேவியும், வலப்புறம் கஜலட்சுமியும் நர்த்தன கணபதியும் இருக்கிறார்கள்.

உட்பிராகாரத்தில், தென்புறக் கோஷ்டங்களில் அகஸ்தியர், சேக்கிழார், நடராஜர், நர்த்தன கணபதி,

தட்சிணாமூர்த்தி ஆகியோர் உள்ளனர். தட்சிணா மூர்த்திக்கு எதிரில் சப்தமாதாக்கள் இருக்கின்றனர். தென் பிராகாரத்தில் சுயம்புமூர்த்தியான தல விநாயகர் சந்நிதி இருக்கிறது.

இவர் நாகநாத கணபதியென்றும், சண்பக விநாயகர் என்றும், சான்று விநாயகர் என்றும் அழைக்கப்படுகிறார். சிவபெருமான் கட்டளைப்படி நாகராஜா முதலில் தன்னை வழிபட்டதற்குச் சான்றாக விளங்கியதால் 'சான்று விநாயகர்' என்று அழைக்கப்படுகிறார்.

கருவறைக்குப் பின்னால் திருப்புகழ் பெற்ற ஆறுமுகக் கடவுள் திருச்சந்நிதியுள்ளது. வெளியே அருணகிரியாரின் திருப்புகழ் எழுதி வைக்கப்பட்டுள்ளது. ''நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமாளே'' என்று அம்முருகனை அன்புடன் அழைக்கிறார் அருணகிரியார். 'ஞானோப தேசப் பிரசித்த சற்குருவடிவான' முருகக் கடவுளைப் பற்றிய திருப்புகழில் பல்வேறு துட்டர்களைப் பட்டியல் போட்டுக் காட்டிச் சாடுகிறார் அவர்.

ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்
மாதாபிதாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவி னூனைச் செகுத்த துட்டர்கள் பரதாரம்
ஆகாதெனாமற் பொசித்த துட்டர்கள்
நானாவுபாயச் சரித்ர துட்டர்கள்
ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள் தமியோர் சொல்
கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாழ்விற் செருக்கு துட்டர்கள் குருசேவை
கூடாத பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமாள நாயிற் கடைப்பிறப்பினில் உழல்வாரே

ஸ்ரீசுப்ரமணிய சுவாமி சந்நிதிக்கு அடுத்துமகாலட்சுமி, சரஸ்வதி இருக்கிறார்கள். வடக்குப் பிராகாரத்தில்

அறுபத்துமூவர், நடராஜப் பெருமான் சந்நிதிகளும் கருங்கல் மண்டபத்தின் தென்புறம், சேக்கிழார் பெருமான், சகோதரர் பாலறாவாயர், தாய் அகழம்மை வடிவங்களும், அடுத்து நால்வர் சிலைகளும் உள்ளன. வலப்புறத்தில் அதிகார நந்தியின் அரியதொரு சிலா விக்ரகம் இருக்கிறது. இத்தலத்தில் சுவாமியைப் பூஜித்து அவர் அருளால் வீர வாள் பெற்ற தலமாதலால், இங்கு வீரவாளுடன் நந்தி கேச்வரர் காட்சியளிக்கிறார்.

சுவாமி கோயில் ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தியின் அமைப்புடையது. பெருமான், முருகன், பிறையணி வாள்நுதல் அம்மை சந்நிதிகள் அந்த வரிசையில் உள்ளன.

சந்திரன் கார்த்திகை மாதம் பௌணமி அன்று பூஜை செய்ததால் அம்பாளுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. இப்பொழுதும் கார்த்திகை மாதம் பௌணர்மி அன்றும் அம்பாளின் மீது சந்திர ஒளிவிழும் வேறு எந்த மாதத்திலும் விழாது.

இது நள மகாராஜாவுக்கு ஏழரை நாட்டான் சனி நீங்கிய தலம். சுவாமி, அரசனுக்கு வேண்டிய சதுரங்கப் படையையும் அறம், பொருள், வீடு இன்பம் அனைத்தையும் அவருக்குக் கொடுத்து அருள் புரிந்தார். அதன் காரணமாக சனீச்வர பகவான் ஈச்வரனை நோக்கித் தனிச் சந்நிதி கொண்டுள்ளார். நவக்கிரக சந்நிதியும் தனியாக இருக்கிறது. அம்பாள் சந்நிதிக்கு எதிரில் சிவசக்தி, நாராயணி, சூரியன், சந்திரன், பைரவர் முதலியோரைக் காணலாம்.

திருநாகேச்வரம் ஸ்ரீ நாகநாத சுவாமி திருத்தலப் புராணத்தில் பெருமானுக்கு இரு வடிவங்களும், அம்பிகைக்கு இரு வடிவங்களும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. சண்பக மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நாகநாதர் சந்நிதியும், அர்த்தநாரீச்வரர் சந்நிதியும், பிறையணி

வாள்நுதல் அம்மையின் சந்நிதியும் வடபுறம் தனிக் கோயில் கொண்டுள்ள கிரிகுஜாம்பிகை என்ற குன்றுமா முலையம்மை சந்நிதியும் ஆகும்.

ஸ்ரீ பிருங்கிமாமுனிவர் அர்த்தநாரீச்வர வடிவத்தை வழிபடாமல், சக்தி பாகத்தை நீக்கிச் சிவ வடிவத்தை மட்டும்தான் தரிசனம் செய்வது என்ற வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார். ஒரு சமயம் பரமேச்வரன், உமா மகேச்வரனாக அமர்ந்து கொண்டிருக்கும்போது, அவரைத் தரிசிக்க வந்த பிருங்கி முனிவருக்குப் பெரிய தர்ம சங்கடமாகிவிட்டது. ஒரு தந்திரம் செய்தார். வண்டு வடிவம் எடுத்து, இருவருக்குமிடையே துளையொன்று போட்டு சுவாமியை மட்டும் வலம் வந்து வழிபட்டார். இதைக் கண்ட பார்வதி தேவிக்கு அவமானம் தாங்கவில்லை. கடுமையான கோபம் வந்தது. 'உமது தசைப் பகுதிகள் சக்தியிழந்து போகட்டும்' என்று முனிவரைச் சபித்தார். ஆனால், பரமேச்வரன் தன் பக்தருக்கு ஊன்றுகோல் ஒன்று கொடுத்து உதவினார். அந்த ஊன்றுகோலைப் பயன்படுத்தி அவர் பரமேச்வரனை வலம் வரத் தொடங்கினார். தற்போது கணவன் மீது கோபமடைந்த பார்வதி, பூலோகத்துக்கு வந்தார். கூடவே, லட்சுமியும் சரஸ்வதியும் வந்து விட்டனர். ஆரண்யங்களில் சிறந்த சண்பகாரண்யம் வந்து ஸ்ரீசக்கர மேருவின் மீது நின்று தவமியற்றத் தொடங்கினார். அருகில் லட்சுமியும் சரஸ்வதியும் இருந்தபடி, தேவியின் தவத்துக்கு தேவையான உதவிகள் செய்தனர். தவத்துக்கு எவ்வித இடையூறுகளும் நேராவண்ணம் சங்க நிதியும் பதும நிதியும் பைரவரும் பால சாஸ்தாவும், விநாயகரும், பாலசுப்ரமணியரும், துர்க்கா தேவியும் காவல் காத்து வந்தனர்.

அம்பாள் தவக்கோலத்தில் இருப்பதையும், சகலமூர்த்திகளும் சுற்றியிருப்பதையும் திருநாகேச்வரம் ஸ்ரீ நாகநாத சுவாமி ஆலயத்தின் வலப்புறம் காணலாம். வடக்குப்

பிராகாரத்திலுள்ள ஒரு கோபுரத்தைக் கடந்து கிரிகுஜாம்பாள் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

இங்கு எழுந்தருளியிருக்கும் தேவி சுயம்புமூர்த்தியாகத் திகழ்கிறாள். மலைமகள், அலைமகள், கலைமகள் மூவரும் ஒன்றாக எழுந்தருளியுள்ளசக்திபீடம். அம்பாளுக்கு அபிஷேகம் கிடையாது. புனுகுச் சட்டம்தான் சாத்தப்படுகிறது.

கௌதம முனிவரின் மனைவி அகலிகை. தினமும் நதிக்குச் சென்று ஆற்று மண்ணை எடுத்து, தனது சக்தியினால் ஒரு குடம் செய்து அதில் நீரை எடுத்து வருவாள். அதுதான் முனிவரின் பூஜைக்கு அபிஷேகத் தீர்த்தமாகப் பயன்படுத்தப்பட்டது.

ஒரு நாள், அகலிகையை எப்படியாவது அடைய வேண்டும் என்று தணியாத மோகம் கொண்ட இந்திரன், அவள் ஆற்றங்கரையில் குடம் செய்து கொண்டிருக்கும் போது இந்திர விமானத்தில் சஞ்சரித்தான். அவனை அகலிகை பார்த்து விட்டதால் குடம் செய்யும் சக்தியிழந்து தவித்தாள்.

பூஜைக்கு நேரமாகி விட்டதால், அபிஷேகத் தீர்த்தம் வராததைக் கண்டு சினம் கொண்ட கௌதம ரிஷி, ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்து, ''நீ துர்நாற்றமுடைய ஒரு பூனையாக மாறக் கடவாய்'' என்று இந்திரனைச் சபித்தார். அதன் காரணமாக, இந்திரன் பூனை வடிவமாகி, பல தலங்களுக்குச் சென்று சுவாமியைத் தரிசனம் செய்தான். இறுதியாக சண்பகாரண்யம் வந்து திரிகுஜாம்பாளை அர்த்தஜாம பூஜை முடிந்ததும் தரிசனம் செய்தான். அடுத்த கணமே இந்திரன் தனது சாபம் நீங்கப் பெற்றுத் தன் பழைய உருவத்தைப் பெற்றான். அதன் காரணமாக இந்திரன் தை மாதம் முதல் தேதி (மகர சங்கராந்தி) யன்று அம்பாளுக்குப் புனுகு சாத்தி ஒரு மாதம்

வழிபட்டானாம். இப்போதும் மகரசங்கராந்தி இரவு அம்பாளுக்குப் புனுகு சாத்தி, லட்சுமி, சரஸ்வதிக்கு சாம்பிராணித் தைலம் சாத்துவார்கள். அன்று முதல் சந்நிதி திரையிட்டு மூடப்படும். திரைக்கு முன்புதான் பூஜைகள் நடைபெறும். உள்ளே இந்திரன் பூஜை செய்வ தாக ஐதீகம். அன்றிலிருந்து மாசி மாதம் முடியும் வரை அம்பாளுக்கு லட்சார்ச்சனை நடைபெறும்.

அம்பாள் கோயிலின் சுற்றுப் பிராகாரத்தில் சமண முனிவர்களின் சிலைகள் காணப்படுகின்றன, இத்தலம் ஒரு காலத்தில் சமணரின் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந் ததை இவை நினைவூட்டுகின்றன. ஊரின் கிழக்கேயுள்ள சன்னாபுரமும் இதனை உறுதிப்படுத்துகின்றது. உள் பிராகாரத்தில் பாலசாஸ்தா, நவசக்திகள், சுரம் தீர்த்த விநாயகர் முதலியவர்கள் உள்ளனர்.

ஸ்ரீ நாகநாதசுவாமி கோயிலில் நித்திய பூஜைகள் தவிர கார்த்திகை மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமையில் தொடங்கி பத்து நாட்கள் பிரும்மோற்சவம் நடைபெறு கிறது. ஒன்பதாம் நாள் திருத்தேரும், கடைசி ஞாயிறன்று சூரிய புஷ்கரணியில் தீர்த்தவாரியும் நடைபெறும். மார்கழித் திருவாதிரைநாளில் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவீதி உலா வருவார். மாசி மாதம் சிவராத்திரியில் இரண்டாம் காலத்தில் நாகராஜன் சுவாமியை வழிபடும் விழா நடைபெறும். சித்ரா பௌர்ணமியன்று ஸ்ரீ சிங்கார வேலர் புறப்பாடும், வைகாசி விசாகத்தன்று ஸ்ரீ சோமாஸ்கந்தர் புறப்பாடும் உண்டு. ஆடிப் பதினெட் டன்று அம்மன் நாட்டாற்றுக்குப் போய்த் தீர்த்தம் கொடுக்கும்.புரட்டாசியில் நவராத்திரி பௌர்ணமிதோறும் நிறைபணி விழா. இவற்றைத் தவிர கந்த சஷ்டி, சூர சம்ஹார விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற திருத்தலம்

இது. அருணகிரியாரின் திருப்புகழ் பெற்ற முருகன் உறையும் ஆலயம்.

ஆலயத்துக்கு மேற்கு மாடவீதியில், மேல் கோபுரத் துக்குப் பின்புறம் ஸ்ரீ ஆதிதேவி மாரியம்மன் கோயில் உள்ளது. ஊர் மக்கள் அதை நல்ல முறையில் நிர்வகித்து வருகிறார்கள், சற்று வடக்கே ஐயனார் கோயில் இருக் கிறது. அது சிதிலமடைந்து போயிருக்கிறது. ஊருக்குச் சற்று ஒதுங்கியிருப்பதால் பக்தர்கள் தேவையான கவனம் செலுத்த முடியாமல் இருக்கலாம். இருப்பினும். எல்லைத் தெய்வங்களை நல்ல முறையில் பாதுகாத்து வழிபட வேண்டியது ஊர் மக்களின் முக்கிய கடமையாகும்.

ஸ்ரீ உப்பிலியப்பன் கோயில்

கும்பகோணத்திலிருந்து கிழக்கேமூன்றாவது மைலில், திருநாகேச்வரத்துக்குதெற்கே, வெகுஅருகில் ஸ்ரீவைஷ்ணவ திவ்விய க்ஷேத்திரங்கள் நூற்றெட்டில் ஒன்றான திருவிண் ணகர் இருக்கிறது. அது தற்போது ஸ்ரீ உப்பிலியப்பன் கோயிலாகப் புகழ் பெற்றுள்ளது. நான்கு ஆழ்வார்களின் பாசுரங்கள் பெற்ற தலம் இது. அங்கு பேருந்தில் சென்ற டையலாம். ரயிலில் வருபவர்கள் திருநாகேச்வரம் ரயில் நிலையத்தில் இறங்கி, தெற்கே ஒரு மைல் செல்ல வேண்டும்.

ஒப்பில்லா அப்பன், உப்பில்லா அப்பனாகி, உப்பிலி யப்பன் ஆனார். திருவிண்ணகர் அப்பன், தன்னொப்பாரில் லப்பன், ஸ்ரீநிவாசன், ஸ்ரீவேங்கடாசலபதி என்ற திருநாமங் களுடனும் அழைக்கப்படுகிறார் பெருமாள்.

பிராட்டிக்குப் பூமிதேவி, பூதேவி, பூமி நாச்சியார், தரணிதேவி, வசுந்தரை என்ற திருநாமங்கள் வழங்கு கின்றன.

இனி, பிரமாண்ட புராணத்தில் காணப்படும் இத் தல புராணத்தைப் பார்ப்போம்.

மார்க்கண்டேய க்ஷேத்திரம் என்ற திருவிண்ண கரத்தைப் பற்றி நாரதருக்குப் பிரமதேவன் கூறுவதாகப் புராணம் அமைந்துள்ளது.

அமுதத் திவலையிலிருந்து பிறந்தவள் திருத்துழாய்த் தேவி என்ற துளசி. அவள் ஒருநாள் எம்பெருமானிடம் ''இலக்குமிக்குத் திருமார்பில் இடமளித்துள்ள தாங்கள் எனக்கும் அந்த ஸ்தானத்தை அளித்துப் பெருமைப்படுத்த வேண்டும்'' என்று வேண்டினாள்.

இதைக் கேட்ட எப்பெருமான் ''இலக்குமி அருந்தவ மிருந்து என் திரு மார்பில் இடம் பெற்றாள். அதற்கு நிகரான பெருமையை நீயும் அடையப் போகிறாய். காவிரி யாற்றின் தென் கரைக்குச் சென்று அங்கு செடி உருவில் தங்கிவிடு. இலக்குமி உன் நிழலில் பூமிதேவியாக அவ தரிப்பாள். அவளை மார்க்கண்டேயர் எடுத்து வளர்ப்பார். பின்னர், அங்கு நான் வந்து அவளைத் திருமணம் முடித்து, அங்கேயே நிரந்தரமாக எழுந்தருளப் போகிறேன். அப்போது உனக்குப் பல பெருமைகள் ஏற்படும். உன் இதழ்களால் என்னை அர்ச்சிப்பவன் சகல செல்வங் களையும் பெறுவான். ஓர் இதழை அர்ச்சித்தால் அசுவ மேத வேள்வியின் பலன் கிட்டும், நீ உறையும் இந்தக் காடு 'திருத்துழாய்க் காடு' என்றும் 'துளசி வனம்' என்றும் புகழ் பெறும். அங்கு வசிக்கும் மானுடர்களுக்கும் விலங்குகளுக் கும் பறவைகளுக்கும் நான் வைகுண்டப் பதவியை அளிக்கப் போகிறேன். உன் தலத்தை நான் உறைவிடமாகக் கொள்ளப் போவதால் மண்ணுலகில் ஒரு விண்நகரமாக

அது விளங்கப் போகிறது. இதை விட உனக்கு வேறென்ன பெருமை வேண்டும்?'' என்று கேட்டார். துளசி தேவி எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்தாள்.

இந்தத் துளசிவனத்தில் ஸ்ரீ மார்க்கண்டேய மகரிஷி அருந்தவம் மேற்கொண்டார். பூமி தேவியை மகளாகப் பெற்று எம்பெருமானை மணவாளப் பிள்ளையாகப் பெற வேண்டும் என்று ஓர் அவா அவர் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்தது.

பக்தனின் திருவுள்ளத்தை அறிந்த எம்பெருமான், திருமகளைப் பூவுலகுக்கு அனுப்பி, திருத்துழாய்ச் செடிக் கூடியில் சிறு பெண்ணாகத் தோன்றச் செய்தார். அழகின் வடிவான அத்தெய்வக் குழந்தையை எடுத்து, அன்புடன் வளர்த்து வந்தார் மகரிஷி. உரிய பருவம் வந்ததும் அவளுக்கு ஏற்றதொரு மணாளனைத் தேடி அலைந்தார். பெண்ணைப் பெற்றவனின் கவலை அவரைப் பற்றிக் கொண்டது.

மார்க்கண்டேயரது கவலையைப் போக்குவதற்கு ஸ்ரீநாராயணன் திருவுளம் கொண்டார். ஆனால், முனிவரைச் சோதித்து, கபட நாடகம் புரிந்த பிறகே பூமி தேவியின் கரம் பற்ற வேண்டும் என்று தீர்மானித்தார். வயது முதிர்ந்த அந்தணர் வேடம் பூண்டு, கந்தையுடுத்தி, ஒரு கரத்தில் ஊன்றுகோலும், மற்றொரு கரத்தில் கமண்டலமும் ஏந்தி, தள்ளாடித் தள்ளாடி நடந்தபடி துளசி வனத்துக்கு வந்து, மார்க்கண்டேயரின் குடிலுக்கு எழுந்தருளினார். அது பங்குனி மாதம். ஏகாதசி, திருவோணம் நட்சத்திரத்துடன் கூடிய நடுப்பகல் நேரம்.

முதியவரான அந்தணர் ஒருவர் தம் இல்லம் நாடி வந்ததால், விருந்தோம்பல் பண்பு அறிந்த முனிவர் முறைப்படி அவரை வரவேற்று உபசரித்து, ஆசனம் அளித்து,

'சுவாமி, தாங்கள் வந்த காரணத்தை அறியலாமா?' என்று வினவினார்.

இதைக் கேட்டு அந்த முதியவர், ''முனிவரே! நான் திருமணமாகாதவன். மனைவியில்லாததால் கிரஹஸ்த னுக்கு உரிய அக்னியற்றவனாயிருக்கிறேன். இல்லறம் இல்லாதவனுக்கு வீடு, தான்யம், செல்வம், பசுக்கள் முத லியவை ஒன்றும் விளங்குவதில்லை. எனவே, எனக்காக இல்லறம் யாசிக்கவே தங்களிடம் வந்துள்ளேன். தாங்கள் இக் கன்னிகையை எனக்குத் திருமணம் செய்து வைக்கும் படி கோருகிறேன். வயோதிகன் என்று என்னை நிராகரித்து விடாதீர்கள். சரீர சௌக்கியக் குறைவால் வயதானவன் போல் தோற்றமளிக்கிறேன். வேறொன்றுமில்லை. என் கோரிக்கையை மறுத்து விடாதீர்கள்'' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

முனிவர் சிந்தை கலங்கினார். இது பொருந்தாத் திரு மணம் என்று அவர் உள்ளம் கூறிற்று. இக்கன்னிகையை வயோதிகருக்கு மணம் முடிப்பதால் தனக்கு மட்டுமல்ல, அவருக்கும் பாவம் உண்டாகும் என்று தர்மத்தை எடுத்துக் கூறினார். வந்தவர், இதைக் காதில் போட்டுக் கொள் ளத் தயாராயில்லை. ''தங்கள் மகளையே திருமணம் செய்து கொள்வது என்று நான் முடிவு செய்து விட்டேன், இதற்குத் தாங்கள் குறுக்கே நின்றால் நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன். அந்தப் பாவம் உங்களையே சாரும்'' என்று கூறி பிடிவாதம் பிடித்தார்.

அப்போது ''என் பெண்ணுக்கு வீட்டுக் காரியமே செய்யத் தெரியாது. உப்பு போட்டுச் சமைக்க வேண்டும் என்று கூட அவளுக்குத்தெரியாது. அப்படிப் பட்டவளைக் கல்யாணம் செய்து கொண்டு என்ன பயன்?'' என்று கேட்டார். ''அதுமட்டுமல்ல வீட்டுக் காரியம் சரியாகச் செய்யத் தெரியவில்லை என்றுநீங்கள் கோபித்துக் கொண்டு மனைவியைப் போட்டு அடிப்பீர்கள். அதைக் கண்டு நான்

கோபம் கொண்டு தங்களைச் சபிக்க நேரிடும். இதையெல்லாம் கருதித்தான் என் மனம் இந்தத் திருமணத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறது'' என்றும் கூறினார். பின்னர், பெருமாளை நினைத்து 'பகவானே! இந்தச் சோதனையினின்றும் என்னைக் காப்பாற்ற மாட்டாயா?' என்று அழாதக் குறையாக வேண்டினார்.

அடுத்து அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'மகளையும் ஒரு வார்த்தை கேட்டு விடுவோமே' என்று கேட்டார். அவள் கண்டிப்பாக மறுத்து விட்டாள். ''இதையும் மீறி இவரைத் திருமணம் செய்துகொள்ளும்படி நீங்கள் கட்டாயப் படுத்தினால், நான் உயிர்த்தியாகம் செய்து விடுவேன். இது நிச்சயம்.''

முனிவருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. 'திருமணம் செய்து தராவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன்' என்கிறார் முதியவர். 'திருமணம் நிச்சயம் செய்தால் உயிரை விட்டு விடுவேன்' என்கிறாள் பெண். தவமுனி, சம்சார பந்தத்தில் சிக்கிக்கொண்டுவிட்ட காரணத்தால், பெரும் துயரத்துக்கு ஆளாகி, திக்குமுக்காடிப் போனார்.

''ஆபத்பாந்தவா, அநாத ரட்சகா, நீ தான் இத்துன்பக் கடலிலிருந்து என்னைக் கை தூக்கிவிட வேண்டும். எனக்கு வேறு புகலிடம் இல்லை'' என்று கதறியழுதார்.

தியானத்தில் ஆழ்ந்திருந்த மார்க்கண்டேய மகரிஷி கண்களைத் திறந்து பார்த்த போது, எதிரில் நின்றிருந்த வயோதிக அந்தணரைக் காணவில்லை. அவர் நின்ற இடத்தில் சாட்சாத் எம்பெருமான் காட்சியளித்தார். பெண் கேட்டு வந்தவர் யாரென்று புரிந்துகொண்ட மகரிஷி, பக்திப் பரவசத்தில் மெய்சிலிர்த்துப் போனார். ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

மார்க்கண்டேயரிடம் பகவான், ''மகரிஷியே, எனது எத்தனையோ மாயாஜால லீலைகளில் இதுவும் ஒன்று. நான்தான் தங்களுக்கு மாப்பிள்ளை ஆகவேண்டும் என்று விரும்பினேன். தங்கள் புதல்வியான பூமி தேவியை எனக்குக் கன்னிகாதானம் செய்து தாருங்கள். அனுபவமற்ற உமது பெண்ணுக்குச் சமையலில் உப்பு சேர்க்கக் கூடத் தெரியாது என்று கூறினீர்கள். பரவா யில்லை. உப்பில்லாமல் அவள் அளிக்கும் உணவை நான் அமிருதமாக உட்கொள்வேன். திருமணத்துக்குப் பின்னர் நான் உப்பை அறவே விலக்கி விடப் போகிறேன். தங்கள் தவத்தையும் பக்தியையும் கண்டு ஆனந்தித்தேன். தாங்கள் கோரும் வரங்களை அளிக்கவும் சித்தமாயிருக்கிறேன்'' என்றார்.

மார்க்கண்டேய முனிவருக்கு எல்லை கடந்த மகிழ்ச்சி. பகவானின் தரிசனம் கிடைத்ததே அவர் பிறவியில் பெரும் பயனாகி விட்ட பின்னர் அவருக்கு வேறென்ன தேவை யிருக்க முடியும்? இருப்பினும் மூன்று வரங்கள் கேட்டார். 'சுவாமி, என் புதல்வியை மணந்து தாங்கள் என்றென்றும் இங்கேயே தங்கிவிட வேண்டும். இத்தலம் என் பெயரால் அழைக்கப்பட வேண்டும். உப்பில்லாமல் நீங்கள் உட் கொள்ளும் உணவின் மிச்சத்தை உண்ணும் அடியார்களுக்கு அது மிக்க சுவையுடையதாக இருப்பதோடு, அதனால் அவர்களுக்குப் புண்ணியமும் கிட்ட வேண்டும்'' என்று மூன்று வரங்களைக் கேட்க, பகவானும் அவற்றை உவகை யுடன் தந்தருளினார். பரந்தாமன் விண்ணுலகிலிருந்து இத்தலத்துக்கு வந்து உறைவதால் திருவிண்ணகரம் என்றும், மார்க்கண்டேயரும் துளசியும் தவமியற்றியதால் 'மார்க்கண்டேய க்ஷேத்திரம்', 'துளசி வனம்' என்றும் பெயர்கள் பெற்று விளங்கலாயிற்று.

பின்னர் பகவானின் திருவுள்ளப்படி மார்க்கண்டேயர் ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தன்று திருமணத்தை

நடத்தி வைக்க ஒப்புக் கொண்டார். ஆனால், பகவா னுக்கோ, பூமிதேவிக்கோ உற்றார் உறவினர் யாரும் இல்லாத காரணத்தால், எல்லா தேவர்களையும் அவர் களது மனைவிமார்களையும் அழைத்து அவர்கள் உதவி யுடன் திருமணத்தை ஆடம்பரமாக நடத்த வேண்டும் என்று விரும்புவதாக மார்க்கண்டேயர் கூறியவுடன் பகவான் கருடாழ்வாரை நினைத்தார். அடுத்த கணம் அவர் பூவுலகுக்கு வந்து, பரந்தாமன் தன்னை அழைத்த காரணத்தை வினவினார்.

எம்பெருமான் நடந்தவற்றையெல்லாம் கருடனுக்கு விரிவாக எடுத்துக் கூறி, திருமண அழைப்பிதழ் ஒன்றை அவரிடம் கொடுத்தனுப்பினார். அப்படியே திசைக் காவலர்களையும் மற்றுமுள்ள தேவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து திருமணத்தை நல்ல முறையில் நடத்தித் தரும்படி கூறி விடை கொடுத்து அனுப்பினார்.

கருடாழ்வாரும் அழைப்பிதழை எடுத்துக் கொண்டு பிரமனிடம் செல்ல, உளம் மகிழ்ந்த நாமகள் நாயகன், அதை மற்ற தேவர்களுக்குப் படித்துக் காட்டினான். குதூகலமடைந்த தேவர்கள் தங்கள் இல்லத்தரசிகளுடன் துளசி வனம் வந்து சேர்ந்தனர். கலைமகளும் இந்திராணி யும் மணமகளுக்கு அணிகலன்கள் அணிவித்து, அலங் காரங்கள் செய்து அழகுக்கு அழகூட்டினர்.

ஐப்பசித் திருவோணத்தன்று, குறித்த வேளையில், முனிவர்கள், தேவர்கள், அவர்களது தேவியர் முன்னிலை யில் மார்க்கண்டேயர் தமது புதல்வியைத் திருமாலுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். பின், எம்பெருமான் 'கௌதுகம்' என்ற மங்கல நாணைப் பூமிதேவியின் திருக் கரத்தில் கட்டி, அவள் கைத்தலம் பற்றி, மும்முறை அக்னியை வலம் வந்து, வைகாநஸ ஸூத்திரத்தில் கண்டுள் ளபடி பூமிதேவியைத் திருமணம் புரிந்து கொண்டார். கிடைத்தற்கரிய அக்காட்சியைக் கண்டு புளகிதம் அடைந்த

அனைவரும் தங்கள் பிறவியின் பயனைப் பெற்றுவிட்ட பூரிப்பில், தெய்வீகத் தம்பதியிடம் விடைபெற்றுத் தத்தம் இருப்பிடம் திரும்பினர்.

பின்னர், எம்பெருமானின் கட்டளையின்படி விச்வகர்மா ஓர் ஆலயம் அமைத்துக் கொடுக்க, அதில் பூமிதேவியுடன் எழுந்தருளினார் பெருமாள். திருவிமானத்திற்கு 'சுத்தானந்த விமானம்' என்று பெயர் சூட்டினார்.

ஒரு சமயம் பிரம்மா இத்தலத்துக்கு மீண்டும் வந்து எம்பெருமானை வலம் வந்து, பலவாறாகத் தோத்திரம் செய்து வழிபட்டார்.

பின்னர், அக்கோயிலில் திருவிழா எடுக்க வேண்டும் என்று விரும்புவதாகவும் அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் திருவிண்ணகரப்பனாகிய ஸ்ரீநிவாசனிடம் விண்ணப்பித்துக் கொள்ள, எம்பெருமானும் பெருமகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்தார்.

அதன்படி பிரமன், பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று கொடியேற்றி, எட்டு நாள் உற்சவத்தை நடத்தி, ஒன்பதாவது நாள் ஏகாதசி கூடிய திருவோணத்தன்று ரதோற்சவம் கண்டு ஆனந்தித்தான். பின்னர் புரட்டாசியில் மீண்டும் சித்திரை நட்சத்திரத்தன்று கொடியேற்றி எட்டு நாள் உற்சவம் செய்வித்து, ஒன்பதாவது நாள் திருவோணத்தன்று ரதோற்சவம் கண்டருளச் செய்து. தட்சிண கங்கையெனும் நாட்டாற்றில் அவப்ருத ஸ்நானம் செய்து தேவர்களுடன் சத்ய லோகம் எழுந்தருளினார். இதன்படி இரண்டு பிரம்மோற்சவங்களும் இன்றும் நடை பெற்று வருகின்றன.

தட்சிண கங்கையெனும் நாட்டாற்றின் தென்புறத்தில் தட்சிண கோதாவரி என்னும் கீர்த்திமான் ஆறு ஓடுகிறது. இதன் தென்புறத்தில் தட்சிண யமுனை என்ற அரிசொல் ஆறு (அரசலாறு) செல்கிறது. வடக்கேயுள்ள கங்கை,

யமுனை, கோதாவரி ஆகிய மூன்று புண்ணிய நதிகளும் மார்க்கண்டேய க்ஷேத்திரத்தில் பாய்ந்து, திருவிண்ணகரப் பனின் சேவையில் ஈடுபட்டுப் புண்ணியம் பெறுகின்றன.

ஆலயத்தினுள், வடபால் 'அகோராத்ர புஷ்கரணி' என்ற திருக்குளம் உள்ளது. இங்கு இரவு பகல் பாராமல் எந்த வேளையில் ஸ்நானம் செய்தாலும் பலனுண்டு.

பரத்வாஜ முனிவரின் மரபில் பிறந்த தேவ சர்மா என்பவன், ஜைமினி முனிவரால் சபிக்கப்பட்டுக் கிரௌஞ்சப் பறவையாகி, அவர் திருவாக்குப்படி, இத் திருக்குளத்தின் கரையில் உள்ள ஒரு மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்தான். ஒரு நாள் நள்ளிரவில் பெரும் புயல் அடித்து, அம் மரக்கிளை ஒடிந்து குளத்தில் விழ, அத்துடன் நீரில் மூழ்கிய தேவசர்மா, முனிவரின் சாபம் நீங்கப் பெற்று, பறவையுருவை விடுத்து, விஷ்ணு தூதர்கள் கொண்டு வந்த விமானத்தில் ஏறி ஸ்ரீவைகுந்தம் சென்றான். அதன் பிறகுதான் எந்த வேளையிலும் நீராடலாம் என்ற சிறப்பை இந்தப் புஷ்கரணி பெற்றது.

இத்திருக்குளத்தின் மேற்புறத்தில் உள்ள துளசிச் செடியின் கீழ் அமர்ந்து திருவஷ்டாட்சரத்தை ஜபித்து, தாம்பூலம், தட்சணை இவற்றுடன் அறுசுவை உண்டியைப் பிறருக்கு அளிப்பவன் எல்லாப் பாவங்களும் நீங்கப் பெற்று வைகுந்தம் அடைவான். செவ்வாய், வெள்ளி, சனிக் கிழமைகளிலும், திருவோண நட்சத்திரத்தன்றும், ஜன்ம நட்சத்திரத்தன்றும் இந்தக் குளத்தில் நீராடுபவன் வைகுந்தப் பெரும் பதவியை அடைவான் என்று தல புராணம் கூறுகிறது.

அகோராத்ர புஷ்கரணியைத் தவிர ஆலயத்தின் தென் மேற்குத் திசையில் சார்ங்க தீர்த்தமும், அதன் வடபுறத்தில் சூர்ய தீர்த்தமும் ஆலயத்தின் வடகிழக்கில் இந்திர தீர்த்தமும் அதன் தென்புறத்தில் பிரும்ம தீர்த்தமும்

உள்ளன என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், தற்போது அவை உபயோகிக்கக்கூடிய நிலையில் இல்லை.

ஒப்பில்லா அப்பனாகிய ஒப்பிலியப்பனை, நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், பேயாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளார்கள். நம்மாழ்வாருக்கு எம்பெருமான் ஐந்து வடிவங்களுடன் காட்சியளித்ததாகக் கூறுவது உண்டு. பொன்னப்பன் — மணியப்பன் — முத்தப்பன் — என்னப்பன் — திருவிண்ணகரப்பன் என்று ஐந்து பெயர்களையும் சேர்த்து ஒரு பாசுரம் பாடியுள்ளார்.

''என்னப்ப னெனக்காயிகுளாய்
என்னைப் பெற்றவளாய்ப்
பொன்னப்பன் மணியப்பன்
முத்தப்ப னென்னப்பனுமாய்
மின்னப் பொன்மதில்சூழ்
திருவிண்ணகர்ச் சேந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன்
தந்தனன் தனதாள் நிழலே''

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பிரார்த்தனைத் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது ஸ்ரீ ஒப்பிலியப்பன் சந்நிதி. எப்போது சென்றாலும் ஆலயத்தில் 'கலகல'வென்று பக்தர்கள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் மாதம்தோறும், பெருமாள் அவதரித்த நட்சத்திரமும், திருக்கல்யாணம் செய்து கொண்ட நட்சத்திரமுமான திருவோணத்தன்று சுற்றுப்புறங்களிலிருந்து பெரும் கூட்டம் வருகிறது. பக்த கோடிகள் புஷ்கரணியில் நீராடி, பெருமாளைத் தரிசித்துச் செல்கின்றனர். அன்று பகல் பதினோரு மணிக்கு வால்பந்தத்துடன் சிராவணதீபம் எடுப்பது மிக விசேஷமாகக் கருதப்படுகிறது.

அவ்வப்போது பிரார்த்தனையாகப் பெருமாளுக்குத் திருக்கல்யாண உற்சவம் செய்து வைக்கப்படுகிறது.

பெருமாளும் தாயாரும் வெளி மண்டபத்துக்கு எழுந்தருளி, மாலை மாற்றி, திருமாங்கல்யதாரணம் ஆகிறது. திருக் கல்யாண உற்சவம் தவிர, பிரார்த்தனையாகக் கருட சேவை, பிரம்மோற்சவம், டோலோற்சவம், நித்தியாரா தனம், கண்ணாடி அறை சேவை, தர்பார் உற்சவம் முதலியனவும், மூலவருக்குத் திருவாபரணங்களைக் களைந்து திருமுழுக்கும், உற்சவப் பெருமாளுக்குத் திருவடி திருமஞ்சனமும் செய்யப்படுகின்றன.

ஸ்ரீ ஒப்பிலியப்பன் கோயில் ராஜ கோபுரத்தைக் கடந்து சென்றால், கருடன் சந்நிதி, கொடிமரம், பலிபீடம் முதலியவற்றைக் காணலாம். அருகிலேயே கண்ணனது சிறிய திருச் சந்நிதி ஒன்றும் உள்ளது.

வடபுறத்தில் அகோராத்ர புஷ்கரணியைக்காண்கிறோம். அதில் ஜாக்கிரதையாக இறங்குவது நலம். படிக்கட்டு களைப் பாசியில்லாமல் வைத்துக் கொண்டால் பக்தர்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

திருக்குளத்தின் தென் கரையில் எட்டுக்கால் மண்டபம் ஒன்று உள்ளது. தெப்போற்சவம் ஐந்து நாட்களிலும் பொங்கல் பண்டிகையன்றும், தீர்த்தவாரி தினங்களிலும் ஸ்ரீநிவாசப் பெருமாள் பூமி நாச்சியாருடன் இதில் எழுந் தருளுகிறார்.

திருக்குளத்தின் வட கிழக்கு மூலையில் மதிற்சுவரை யொட்டி ஒரு வில்வ மரம் இருக்கிறது. அதற்கு ஒரு சிறப்பு உண்டு. அது மதிற்சுவரின் உயரத்துக்கு மேலே வளருவதே யில்லையாம். அதைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் பொருட்டு வயதான சிலரிடம் விசாரித்துப் பார்த்தேன். கண்ணால் காண்பதைத் தவிர இதைக் குறித்து வேறு விவரங்கள் தெரியவில்லை என்று அவர்கள் கூறிவிட் டார்கள்.

வெளிப் பிராகாரத்தில் வலம் வரும் போது, தென்புறம் கிழக்கு நோக்கி மணியப்பன் சந்நிதி உள்ளது. அதைப்

புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் வடபுறம் என்னைப்பன் திருச்சந்நிதி உள்ளது.

உட்பிராகாரத்தில் வலம் வரும்போது வெளி மண்டபத்தில் வடபுறம் ஆழ்வார்கள் சந்நிதியும், அடுத்து கண்ணன் சந்நிதியும், அதற்கும் கிழக்கே ஸ்ரீராமர் சந்நிதியும் இருக்கின்றன. ஸ்ரீராமர், இளையபெருமாள், சீதாபிராட்டியார், ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி நால்வரும், நம் உள்ளத்தில் குடியேறி விடுகிறார்கள். அவர்களைச் சிறைப்படுத்தி விட்ட மகிழ்ச்சியுடன் அங்கிருந்து நகருகிறோம். பக்கத்தில் கண்ணாடி அறை இருக்கிறது.

இந்தக் கோயிலில் ஸ்ரீவேதாந்த தேசிகருக்குச் சிறப்பிடம் உண்டு. உற்சவ காலங்களில் பெருமாள்—பிராட்டி இவர்களுடன் பெரும்பாலும் ஸ்ரீதேசிகரும் எழுந்தருளும் பழக்கம் இருந்து வருகிறது. கருவறைக்கு வெளியே, ஸ்ரீதேசிகரின் திருச்சந்நிதி உள்ளது.

ஸ்ரீராமர் சந்நிதிக்கருகே ஸ்ரீபாஷ்யக்காரர் சந்நிதியிருக்கிறது.

உட்பிராகாரத்தில், மூலஸ்தானத்துக்கு மேற்புறத்தில் பெருமாள் பஞ்சபர்வங்களில் சில நிமிடங்கள் எழுந்தருளுவதற்காக அழகியதொரு சலவைக்கல் மண்டபம் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

அதே போல் வெளி மண்டபத்தின் வடபுறத்தில் பெருமாளின் டோலோற்சவத்திற்காக மற்றொரு சலவைக்கல் மண்டபம் உள்ளது. அதற்கு மேற்கே சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த திருப்பள்ளி அறை அமைந்திருக்கிறது. பிரும்மோற்சவ காலங்களில், புறப்பாடு முடிந்த பின்னர் பெருமாளும்—பிராட்டியும் திருப்பள்ளி அறையில் எழுந்தருளியிருக்கும் எழிற்கோலம் கண்கொள்ளா அருங்காட்சியாகும்.

முன்புறமுள்ள வாகன மண்டபத்தில் வெள்ளியினாலான யானை, குதிரை, சூரிய பிரபை, கருடன், அன்னப் பறவை, கமலம், முதலிய வாகனங்கள் இருக்கின்றன.

கருவறையில், ஸ்ரீநிவாசப்பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். உயரமான திருமேனி, கண்கவர் அணிகலன்கள், கருணை பொழியும் கண்கள், அடைக்கலம் தந்து காக்கும் திருக்கரம்—பார்த்துப் பார்த்துப் பரவசத்தில் லயிக்கிறோம். பெருமாளுக்கு முன் புறம் பூமி நாச்சியார், வடக்கு நோக்கி அமர்ந்த திருக் கோலத்தில் காட்சி தருகிறாள். எதிரே, ஸ்ரீ மார்க்கண்டேய மகரிஷி தென்புறம் நோக்கி அமர்ந்திருக்கிறார்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் மூலவர், சுதை பிம்பமாக எழுந்தருளியிருந்தாராம். அது சிறிது பின்னமாகிவிட்ட தால், இப்புதிய கல் விக்ரகம் செய்து வைக்கப்பட்டதாகவும் அதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர்களில் அப் போது அறங்காவலராக இருந்த அண்ணு ஐயங்கார்என்பவர் முக்கியமானவர் என்றும் சைதாப்பேட்டையிலிருந்து ஆர். வரதாச்சாரி என்பவர் கடிதம் எழுதியிருந்தார். பெருமாள், பிராட்டி, மார்க்கண்டேயர். துவார பாலகர் விக்ரகங்கள் மைலம் அருகில் இருக்கும் ஒரு குன்றிலிருந்து கொண்டு வரப்பட்ட கற்களால் ஆனது என்றும், இத்திருப் பணி முடிந்து 1919-ம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற போது தனக்கு எட்டு வயது என்றும் அக்கடிதத்தில் குறிப் பிட்டிருக்கிறார். பின்னர், மொட்டைக் கோபுரமாக இருந் ததை இடித்து, வாசலை உயர்த்தி, ராஜகோபுரம் கட்டி மீண்டும் 1926-ம் ஆண்டிலோ அல்லது 27-ம் ஆண்டிலோ மற்றொரு கும்பாபிஷேகம் நடந்ததாகவும் தெரிவித்து' பாழடைந்து, நெருஞ்சி முட்புதர்கள் மண்டிக் கிடந்த கோயிலைப் புதுப்பிக்கவும், பங்குனி மாத பிரும்மோற்சவத் தைத் தொடங்கி வைக்கவும், பக்தர்களின் உதவியை நாடிப் பெற்று, அல்லும் பகலும் பாடுபட்ட தனது கொள்ளுப்

பாட்டனார் அண்ணு ஐயங்காரைப் பற்றியும் பெருமிதத்தோடு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் வரதாச்சாரி. அதற்குப் பின்னர் அக்கோயிலின் வளர்ச்சியில் மேலும் பங்கு கொண்டவர்கள் சிலரைப் பற்றி முதிய அர்ச்சகர் பொன்னப்ப பட்டாச்சார் நன்றியுணர்வோடு என்னிடம் நினைவு கூர்ந்தார்.

இக்கோயிலில் தினமும் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றன. முதலில் விச்வரூப சேவை. அச்சமயம் சுப்ரபாதம்—ப்ரபத்தி—மங்களம் இவை பதினைந்து நிமிடங்கள் ஒலிக்கும். பின்னர், திருப்பாவை, வேதபாராயணம், பிறகு பெரிய ஆராதனம் நடக்கும். அப்பொழுது மற்ற தெய்வ சந்நிதிகளிலும் நிவேதனம் நடைபெறும். அதற்குப் பிறகு உச்சி காலம். மாலையில் முதல் பூஜையின்போது நித்யானுசந்தானமும், வேத பாராயணமும் சாத்துமுறையும் நடக்கும். அடுத்து, இரண்டாம் கால பூஜை சிறப்பாக நடைபெறும். காலையில் நடைபெறுவது போன்றே அப்போதும் மற்ற சந்நிதிகளுக்கும் நிவேதனம் உண்டு. கடைசியாக அர்த்த ஜாம பூஜை.

இக்கோயிலில் பகவானுக்கு எல்லா நைவேத்தியங்களும் பிரசாதங்களும் உப்பில்லாமல் செய்யப்படுகின்றன. ஆனால், சந்நிதியின் விசேஷம், சாப்பிடும்போது அவை அமிருதமாக இருக்கும். உப்பையோ, உப்பு கலந்த பொருட்களையோ கருடன் சந்நிதியைக் கடந்து எடுத்துச் செல்லுவது பெருமாளுக்கு இழைக்கப்படும் பெரும் அபசாரமாகும். கருடன் சந்நிதிக்கு முன் அமைந்துள்ள திருவடிகளில் மிளகு கலந்த உப்பைச் சேர்த்தால் சரும நோய்கள் நீங்கும் என்று நம்புகிறார்கள்.

ஒப்பில்லா அப்பனான திருவிண்ணகரப்பன் திருக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் ஒரு சிறு நந்தவனம் இருக்கிறது. இதைத் தவிர, ஆலயத்துக்கு வெளியே தென்புறம்

ஒன்றரை பர்லாங் தொலைவில். மூன்று ஏக்கர் பரப்பள வில் மிகப் பெரிய நந்தவனம் ஒன்றிருக்கிறது. இதன் மத்தி யிலுள்ள பெரிய மண்டபத்தில், வசந்த உற்சவத்தின்போது பெருமாள் ஏழு நாட்கள் எழுந்தருளுகிறார். திருவோணத் துக்கு முந்திய விசாகத்தில் அந்த உற்சவம் தொடங்கு கிறது.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர், கோவை மாவட்டத் தைச் சேர்ந்த பக்தர் ஒருவர் நன்கொடையாக அளித்த அந்த நிலத்தில் பல்வேறு மலர்ச் செடிகளைக் கவனத் துடன் வளர்த்து வரும் பி. சீனிவாசன் என்பவரைச் சந்தித்துப் பேசினேன். அங்குள்ள தென்னை மரங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக பெருமாளுக்குத் திருத்துழாயும் புஷ்பமும் அளித்துக் கைங் கைரியம் செய்து வருகிறார் அவர். தொடுக்கப்பட்ட மாலை களோடு தினம் மாலை மூன்று மணிக்கு மேள மரியாதை யுடன் அவர் ஆலயத்துக்கு அழைத்து வரப்படுகிறார். தூய தொண்டு புரியும் இந்த அன்பர் உண்மையிலேயே பெரும் பாக்கியம் செய்தவர்

காலையிலிருந்து இரவு வரை இக்கோயில் கலகலப்பாக இருக்கிறது. மங்கள இசையும் மந்திர ஒலியும் மாதவனின் புகழ் பரப்புகின்றன. சூழ்நிலையில் தெய்வீக மணம் கமழ் கிறது. அர்ச்சகர்கள் சுறுசுறுப்பாயிருக்கின்றனர். சேவார்த் திகள் உற்சாகத்துடன் அலை அலையாக வரும்போது தானே நம் அர்ச்சகர்களுக்கும் உற்சாகம் பிறக்கிறது! ஒருவர் மாற்றி ஒருவர் தரிசனம் செய்து வைக்கிறார்கள். அவரவர் வாக்கு வன்மைக்கேற்ற வகையில், சொல் அலங்காரக் கோர்வையழகுடன் பெருமாளின் புகழ் பரப்பு கிறார்கள். அக்கறையோடு ஆராதனை செய்கிறார்கள். திருக்கல்யாண உற்சவங்களை மாலை மாற்றுதல், பொன் னூஞ்சல் ஆடல், திருமாங்கல்யதாரண வைபவங்களோடு

கண்கொள்ளாக்காட்சியாக, நெஞ்சை நிறைக்கும் நிகழ்ச்சியாக நடத்தி வைக்கிறார்கள்.

பெருமாளின் திருப்பள்ளியெழுச்சியின் முப்பதாவது பாசுரம் பறை சாற்றுகிறது :

திருவிண்ணகரப்பனே! உனக்குக் கைங்கரியம் செய்தல் —உன் திருக்கல்யாண குணங்களைப் புகழ்தல்—நீ அமுது செய்ததை உண்ணல்—உன்னிடமே பக்தி கொள்ளுதல்— ஆகிய இவற்றால் எங்கள் வாழ்நாள் முழுவதையும் பயன் படுத்த விரும்பும் எங்களை அன்போடு கடாட்சித்தருள்க. பூமிதேவி நாயகனே! நீ பள்ளி யெழுந்தருளாய்!

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய நூற்றெட்டு திருப்பதி அந்தாதியில் திருவிண்ணகரைப் பற்றிய வெண் பாவில் கூறியதையே நாமும் கூறி, அப்பனின் திவ்விய திருச்சந்நிதியிலிருந்து விடைபெறுவோம்.

'கையுமுரையுங் கருத்துமுனக் கேயடிமை
செய்யும்படி நீ திருத்தினாய் — ஐயா!
திருவிண்ணகராளா! சிந்தையிலு மெண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு.

திருவிண்ணகரப்பனே! மனம், மொழி, மெய் ஆகிய முக்கருவிகளாலும் உனக்கே கைங்கரியம் செய்யுமாறு என்னைத் திருத்தி நீ ஆட்கொண்டாய். இனி ஸ்ரீவைகுண் டத்தை ஆள்வதாகிய பேறு கிடைப்பதாயிருப்பினும் அதை மனத்தாலும் நினைக்க மாட்டேன்.

ஆலயத்திலிருந்து புறப்படும்போது, தென்புறம் வெகு அருகில் எழுந்தருளியிருக்கும் சந்தன மாரியம்மனின் பக்தர் கள் வந்து, அக்கோயிலுக்கு அன்புடன் அழைத்துச் சென் றனர். ஆலயம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. கருவறைத் திருப்பணியை மாரிமுத்து செட்டியார் ஏற்றிருப்பதாகக் கூறினார்கள்.

ஆடிமாதம் கடைசித் திங்களன்று தீமிதி சிறப்பாக நடைபெறுகிறது. அதற்கு முன் பத்து நாட்கள் உற்சவம். தீ மிதியன்று நிச்சயம் மழை தூறுமாம். அப்போது சந்தன மணம் கமழுமாம். மழை தூறிய பின்னர்தான் தீ மிதி தொடங்குமாம்.

ஒப்பிலியப்பன் கோயிலின் ஆர்வமிக்க நிர்வாக அதிகாரி சுப்பையா, பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள பழைய பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அப்பிள்ளையாரின் மீது அவர் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளார். தினம் வீட்டிலிருந்து வெளியே வந்ததும் அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுத்தான் புறப்படுவாராம். ''தினம் என்னைப் பார்க்கிறாயே, என் கோயிலைக் கொஞ்சம் கவனியேன்'' என்று விநாயகர் கூறியிருப்பார் போலிருக்கிறது! தற்போது ஊரிலுள்ள இளைஞர்களின் ஒத்துழைப்போடு, அங்கு திருப்பணி செய்து குடமுழுக்கும் செய்து விடவேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார் சுப்பையா. செய்து முடித்து விடுவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

பிள்ளையார் கோயிலில் பேசிக் கொண்டிருந்தபோது, பெருமாள் கோயில் சந்நிதித் தெருவில் தேர்முட்டிக்கு நேரே முன்பு ஒரு சிவன் கோயில் இருந்தது என்றும், அந்த இடத்தில் தற்போது வீடுகள் வந்து விட்டன என்றும் யாரோ ஒரு தகவலைக் கூற, அச்செய்தி சுப்பையாவுக்கே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. அர்ச்சகர் ஒருவர் வீட்டில் தான் சிவன் கோயிலைச் சேர்ந்த கிணறு இருப்பதாகப் புதுச் செய்தி வர, அதிகாரியுடன் அங்கு சென்று, அத் தீர்த்தத்தைப் பருகினோம். கிழக்கே ஒரு பர்லாங் தொலைவில், ஒரு குட்டைக்கருகில் வெகு காலமாக ஒரு சிவலிங்கம் இருப்பதாக அங்கு ஒரு தகவல் கிடைத்தது. 'அப்படியா, எனக்குத் தெரியவே தெரியாதே' என்று மறுபடியும் ஆச்சரியமடைந்த நிர்வாக அதிகாரியை அழைத்துக் கொண்டு,

முள்ளிலும் கல்லிலும் சிரமப்பட்டு நடந்து, அந்த இடத்தை அடைந்தோம்.

அங்கே சிவலிங்கம் ஒன்று, பாணம் மண்ணில் பாதி புதைந்து, தலைகிழாகக் கிடந்ததைக் கண்டதும் அனைவரது கண்களும் கலங்கிவிட்டன. சுற்றியிருந்த இளைஞர்கள் துடிதுடித்துப் போய்விட்டனர்.

''முதலில் இந்த சிவலிங்கத்தை எடுத்துச் சென்று பிள்ளையார் கோயிலில் வையுங்கள். இவர் இங்கு எப்படி வந்தார் என்ற விவரங்கள் போகப் போகத்தெரிய வரலாம். பின்னர், என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிப்போம்'' என்று நான் கூறிய யோசனை கூறி விட்டு உடன் வந்தவர்களிடமிருந்து விடை பெற்றேன்.

தண்டந்தோட்டம்

ஸ்ரீ ஒப்பிலியப்பன் கோயிலிலிருந்து தென்கிழக்கே மூன்றாவது மைலில் உள்ளது, தாண்டவன்தோட்டம் என்ற திருத்தலம். இது தண்டந்தோட்டம் என்றழைக்கப் படுகிறது. வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இக்கோயில், கும்ப கோணத்திலிருந்து பதினான்கு கிலோ மீட்டர் தொலைவில் அரசலாற்றங்கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் முருக்கங்குடி என்னும் சிற்றூரிலிருந்து தெற்கே நாலு பர்லாங் தொலைவில் உள்ளது.

இரண்டு பர்லாங் நடந்ததுமே, மணிகட்டிப் பிள்ளையார் நம்மை வரவேற்கிறார். சிவபெருமான், நர்த்தனம் ஆடி வந்தபோது அவரது காலிலிருந்து மணிகழன்று விழுந்ததாம். அதை பிள்ளையார் கண்டெடுத்து, தந்தையாரின் காலில் கட்டினாராம். அதனால் அவருக்கு 'மணிகட்டிப்

பிள்ளையார்' என்று பெயர் ஏற்பட்டதாம். நர்த்தனபுரி என்பது தாண்டவபுரியாகி, தாண்டவன்தோட்டம் என்று மாறியதாம்.

இந்தக் கிராமத்தில் மூன்று சிவாலயங்கள் இருந்திருக்கின்றன என்று கூறப்படுகிறது. ஒன்று முழுவதுமாக சிதிலமடைந்து விட்டது. ஸ்ரீ அகஸ்தீச்வரர் கோயில் இடிந்து போய் ஸ்ரீ அகஸ்தீச்வரர் மட்டும் ஒரு சிறு குடிசையில் எழுந்தருளி இருக்கிறார். அபிராமி அம்மன், எதிரிலுள்ள நடனபுரீச்வரர் கோயிலில் இருக்கிறார்.

ஸ்ரீ நடனபுரீச்வரர் கோயில், ஊரின் ஈசானியப் பகுதியில் இருக்கிறது. வரலாற்றுச்சான்றுகளுடன் கூடிய இந்தப் புராதனக் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

தண்டந்தோட்டம் செப்பேடுகள் புகழ் பெற்றவை. இந்த ஊர் பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் சிறப்புற்றுத் திகழ்ந்தது என்பதை இந்தச் செப்பேடுகள் மூலம் அறிகிறோம், இந்தச் செப்பேடுகள், 8-ம் நூற்றாண்டில் காஞ்சியை ஆண்டு வந்த இரண்டாவது நந்திவர்ம பல்லவனைப் பற்றிக் கூறுகிறது. இவன்தான் காஞ்சியிலுள்ள ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் கோயிலைக் கட்டினான் என்றும் அறிகிறோம். நந்திவர்மன், போரில் கங்கச் சோழனான ஸ்ரீபுருஷனை வெற்றி கண்டு, 'உக்ரோதயம்' என்ற ரத்தின மாலையையும் 'பட்டவர்த்தனா' என்ற யானையையும் கங்கச்சோழ அரசனிடமிருந்து அபகரித்துச் சென்றதைப் பற்றியும் செப்பேடுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. காஞ்சி ஸ்ரீவைகுண்டப் பெருமாள் கோயிலில் உள்ள சிற்பங்கள் இக்காட்சிகளைக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்றன. அங்குள்ள கல்வெட்டுக்கள் இந்நிகழ்ச்சிகளை விவரிக்கின்றன. வேத விற்பன்னர்களுக்கு நிலம் வழங்கியதைப் பற்றியும், இரு

கோயில்களிலும் மகாபாரதம் வாசிப்பதற்காக மான்னிய மாக நிலம் வழங்கப்பட்டதைப் பற்றியும் இச்செப்பேடுகள் நமக்குக் கூறுகின்றன.

ஸ்ரீ நடனபுரீச்வரர் ஆலயம் சதுர வடிவில் அமைந்துள்ளது. பல்லவர் காலத்துக்குப் பின்னர், சோழர் காலத்தில் கருவறையும் அர்த்த மண்டபமும் புதுப்பிக்கப் பட்டு, பின்னர் பழுதடைத்து போயிருக்கிறது. சுற்றுச் சுவர்களும் இடிந்து ஐம்பது வருடங்களுக்கு முன் ஒரு முறை கட்டியிருக்கிறார்கள்.

ஸ்ரீ நடனபுரீச்வரர் உயர்ந்த திருமேனி எழிலுடன் சிவ லிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஐம்பொன் திருமேனி தற்போது அங்கில்லை. 1972-ம் ஆண்டில் திருடு போய் விட்டது.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பழைமையான வடிவம். ரிஷிகள் தனியாக உள்ளனர். மேற்குப் பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியும், ஸ்ரீவள்ளி, தெய்வயானை உடனுறை சண்முகர் சந்நிதியும் உள்ளன.

வடக்குப்புறம் கருவறைக் கோஷ்டத்தில் வன துர்க்கை என்று சற்சிலையைக் காட்டினார்கள். வனத்துர்க்கை தானா என்பதும் அது அந்தக் கோஷ்டத்திற்கு உரியது தானா என்பதும் நிச்சயமாகத் தெரியவில்லை, நந்தியின் திருமுகம் இருக்கிறது. பக்கத்தில் மற்றொரு மங்கை இருக்கிறாள். இதே போன்று ஒரு சிற்ப வடிவத்தைத் திருவீழிமிழலைக் கோயிலில் மகாலட்சுமி சந்நிதிக்குப் பக்கத்தில் கண்டேன்.

இந்தக் கோயிலில் ஐம்பது வருடங்களுக்கு முன் கும்பா பிஷேகம் நடந்திருக்கிறது. தற்போது மீண்டும் திருப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் சென்ற சமயம் முன் மண்டப வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஆலயத்திற்கு வடமேற்கில் பிரும்ம தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. முன்னால் பிடாரி கோயில் இருக்கிறது. அங்கிருந்த சப்தமாதாக்கள், வீரபத்திரர், பிள்ளையார் சிலைகள் சிவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ நடனபுரீச்வரர் ஆலயத்திலுள்ள மாப்பிள்ளை சுவாமி என்ற ஸ்ரீ கல்யாண சுந்தரமூர்த்தி, பெயருக்கேற்றவாறு சுந்தரமேனியுடன் திகழ்கிறார். ஆனால், தக்க பாதுகாப்பில்லாததால் அவர் தற்போது ஸ்ரீகாத்யாயினி அம்பாளுடன் ஸ்ரீ ஒப்புலியப்பன் கோயிலில் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் எழுந்தருளியிருக்கிறார். கொடுத்து வைத்தவர். மைத்துனர் வீடாவது மாப்பிள்ளைக்குப் பாதுகாப்பாக அமைந்திருக்கிறதே!

வடக்கே கிடைக்காத சுவாமியின் திருக்கல்யாணக் கோலத்தைத் தெற்கே கண்டு களித்த அகத்தியர், ஸ்ரீ கல்யாண சுந்தரரிடம் இரண்டு வரங்களைக் கேட்டார்:

ஒன்று, வருடா வருடம் நடைபெறும் வைகாசி விசாகத் திருக்கல்யாணத்தைத் தரிசித்தால் திருமணம் ஆகாமல் கஷ்டப்படுபவர்களுக்கு உடனே திருமணம் நடைபெற வேண்டும்.

மற்றொன்று, இங்கு வந்து பெருமானை வணங்குபவர்களுக்கு கைலாசத்தில் தரிசிப்பதால் ஏற்படும் பலன் கிட்டும்படி அருள வேண்டும்.

சுவாமி இவ்விரண்டு வரங்களையும் தந்தருளினார்.

ஸ்ரீ அகத்திய மகரிஷி இவ்வூரில் தங்கி வணங்கி ஸ்ரீ அகஸ்தீச்வரர்தான், தற்போது ஸ்ரீ நடனபுரீச்வரர் ஆலயத்தின் தென்புறம், சிறு குடிலில் தங்கியிருக்கிறார். விரைவிலேயே அங்கு ஒரு கோயில் உருவாக வேண்டும்.

ஸ்ரீ நடனபுரீச்வரர் ஆலயத்தில் வெளிமண்டபத்தில் அன்னை சிவகாம சுந்தரி தெற்கு நோக்கி திருச்சந்நிதி கொண்டிருக்கிறாள். மிக அழகிய விக்ரகம். அம்பிகை, மேற்கரங்களில் பாசாங்குசமும், கீழ் வலக்கரம் அபய ஹஸ்தத்துடனும், இடக்கரம் இடுப்பில் ஊன்றியவாறும் காட்சியளிக்கிறாள்.

சிவாலயத்தின் தென்மேற்கே ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் எழுந்தருளியிருக்கிறார். உற்சவர் ருக்மிணி – சத்தியபாமா உடனுறை நவநீதக் கிருஷ்ணன். இங்கு ஸ்ரீ லட்சுமி நாராயணர், விஷ்வக்சேனர், ஸ்ரீ ஆஞ்சநேயர், உடையவர் உருவச்சிலைகளும் உள்ளன. அக்கோயிலுக்குத் தெற்கே இடிந்த கூரையுடன் விநாயகர் கோயில் இருக்கிறது. அக்கோயிலின் திருப்பணியும் விரைவில் நடைபெற்று, அதற்கும் குட முழுக்கு நடைபெற வேண்டும் என்று விக்னேச்வரனைப் பிரார்த்தித்துக் கொண்டோம்.

கிராம தேவதையாக விளங்கும் ஐயனார், சாதாரணமாக கிராம எல்லையில் வயல் வரப்புகளில் கோயில் கொண்டிருப்பது வழக்கம். தண்டந்தோட்டத்திலோ, கிராமத்தின் நடுவே ஸ்ரீ ஐயப்பன் எழுந்தருளியிருக்கிறார். மலையாள சாஸ்தா என்றழைக்கப்படும் இவரை, ஸ்ரீ வேலாயுதசுவாமியாக இக் கிராம மக்கள் வழிபடுகின்றனர். வரப்பிரசாதியான இவர், கலியுக வரதனாகவும், கண்கண்ட தெய்வமாகவும் பல குடும்பங்களின் குலதேவதையாகவும் விளங்குகிறார். இவரது அருட்கடாட்சத்தால் பயனடைந்து, மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்கள் பலப் பல, 'வேலாயுதம், வேலாயுதம்' என்று சொல்லித் தான் அந்தக் கிராமவாசிகள் எந்த நல்ல காரியத்தையும் தொடங்குகின்றனர். நேர்ந்து கொண்ட பிரார்த்தனைகளைச் செலுத்த வெளியூர்களிலிருந்து நிறையபேர் வருகின்றனர். மூலவரான சாஸ்தாவை வள்ளி தெய்வானை

யுடன் கூடிய முருகனாகத் தரிசிப்பதற்கு அடையாளமாகக் கையில் வேலும், பீடத்தில் மயிலும் செய்துவைத்திருக் கிறார்கள். ஒரே பீடத்தில் மூவர் சிலைகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. சுவாமியின் வலக்கரம் அபயஹஸ்த மாக இருக்கிறது. கிழக்கு நோக்கிய திருச்சந்நிதி. முன்னால் யானையும் பலிபீடமும் உள்ளன.

வெளிமண்டபத்தில், சிறிய வடிவில் பூர்ண, புஷ்கலை யுடன் மற்றொரு ஐயனார் எழுந்தருளியுள்ளார், இவர் வலக்கரத்தில் சாட்டை வைத்துக் கொண்டிருக்கிறார். இக்கோயிலின் வடக்கு நோக்கி இடும்பனும் சப்த கன்னிகைகளும் எழுந்தருளியுள்ளனர். சுதையிலான குதிரை ஒன்றும் இருக்கிறது. ஸ்ரீ நடனபுரீச்வரர் ஆலயத் தைப் போன்றே தற்போது இங்கும் திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ வேலாயுத சுவாமிக்கு சித்திரை மாதம் அமாவாசை யையடுத்த புதன் கிழமை பூச்சொரிந்து பத்து நாட்கள் சிறப்பான திருவிழா நடைபெறுகிறது. ஒன்பதாவது நாள் கோலாகலமாகப் பரிவேட்டைத் திருவிழா கொண்டாடப் படுகிறது. அன்று சுமார் இரண்டு மைல் தொலைவு வயல் வரப்புகளில் சுவாமி குதிரை வாகனத்தில் செல்லும் காட்சி, கண்டு ஆனந்திக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கும். மறுநாள் காவடி வைபவங்கள் வெகு பிரமாதமாக நடை பெறும். இக்கிராம மக்கள், இந்தத் திருவிழா நடத்தாமல் தை மாதம் அறுவடை செய்து முடித்த வைக்கோற்போர் களை அடிப்பதில்லை, ஒரு வருடம் ஒருவர் இதை மீறிப் போர் அடித்ததால் அவர் உயிருக்கே ஆபத்து ஏற்பட்ட தாம். அதனால் விழா முடிந்த பிறகே போர் அடிப்பதில் மக்கள் மிகமிகக் கவனமாய் இருக்கிறார்கள்.

ஸ்ரீ வேலாயுத சுவாமியின் மகிமையையும் சக்தியையும் விளக்கும் வகையில் அங்கு நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டேன்.

மயிலாடுதுறையில் வசித்த ஒரு குடும்பம் பெரும் சோதனையில் சிக்கித் தவித்தது. மகனுக்கு வேலை கிடைத்தால்தான் குடும்பம் தலை நிமிர முடியும். இந் நிலையில் தாயார், ஸ்ரீ வேலாயுதசுவாமியிடம் பிரார்த்துக் கொண்டார். ''வேலாயுதா! என் பிள்ளைக்கு சீக்கிரத்தி லேயே ஒரு வேலை கிடைத்தால், முதல் மாதச் சம்பளத்தில் உனக்கு ஒரு கிரீடம் செய்து வைக்கிறேன். உன் கருணை யைத்தான் நம்பியிருக்கிறேன்'' என்று கண்ணீர் மலர்களால் அர்ச்சித்தாள் அந்தத் தாய்.

இரண்டு மாதங்களுக்கெல்லாம் அந்தப் பையனுக்கு சென்னையில் ஒரு நல்ல வேலை கிடைத்தது. ஆனால், பிரார்த்தனை நிறைவேற்றப்படவில்லை. காரணம், மறதியல்ல. 'செய்தால் போகிறது' என்று அசிரத்தை யாக இருந்து விட்டார்கள். தன் சம்பளத்தில் பணம் மிச்சம் பிடித்து மகன் தாயாருக்கு ஒரு தங்கச் சங்கிலி செய்து கொடுத்து மகிழ்ந்தான். ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. தாயாருக்கு உடல் நலம் கெட்டது. வைத்தியம் செய்தும் பலனில்லை. அதற்காகத் தாயும் மகனும் ஸ்ரீ வேலாயுத சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வதற்குத் தண்டந்தோட்டம் வந்தார்கள். அச்சமயம் தாயின் மீது அருள் வந்தது. ''சம்பளத்தில் எனக்குக் கிரீடம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, தாயாருக்குச் சங்கிலி செய்து போட்டாயே, தெய்வத்துக்குத் தந்த வாக்கை மீறலாமா?'' என்று சுவாமி கேட்டார். இந்த அபசாரத்தின் காரணமாகத்தான் தாயாரின் உடல் நலம் பாதிக்கப்பட்டது என்று புரிந்து கொண்ட மகன், விரைவி லேயே சுவாமிக்குக் கிரீடம் செய்து போட்டு அபிஷேக ஆராதனைகள் செய்தான். தாயும் குணம் அடைந்தார்.

திருமணமாகி எட்டாண்டுகள் புத்திர சந்தானம் இல்லாத ஒரு தம்பதி, கனவில் இறைவன் வந்து கூறியபடி, ஒரு மண்டலம் இவரை வலம் வந்து, கடைசி நாளன்று

அபிஷேகம் செய்து அந்தப் பாலை அருந்தினர். அவர்கள் விரும்பியபடியே அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான்.

இன்றும் கேரளத்திலிருந்து நிறைய பக்தர்கள் வந்து ஸ்ரீ வேலாயுத சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, திருவீதி புறப்பாடு வைபவங்களெல்லாம் கண்டு களித்துச் செல்கின்றனராம்.

ஐவர்பாடி

தண்டந்தோட்டத்திலிருந்து நாங்கள் ஒப்பிலியப்பன கோயிலுக்கு வரும் வழியில், ஒரு கிலோ மீட்டர் முன்னால், 'அய்யாவாடி' என்ற போர்டு கண்ணில் பட்டது. விசாரித்ததில் அது 'ஐவர்பாடி' என்பதன் திரிபு என்று தெரிந்தது. தெற்கே திரும்பி அக்கிராமத்துக்குச் செல்ல வேண்டும். கார் திரும்பியது.

மிகச் சிறிய கிராமம். ஆனால், அங்குள்ள ஸ்ரீதர்மசம்வர்த்தினி உடனுறை ஸ்ரீ அகஸ்தீச்வரர் சுவாமி கோயில், தலப் புராணப் பெருமை பெற்ற புராதனக் கோயில். கும்பாபிஷேகம் ஆகி 65 வருடங்கள் ஆகின்றன. அதனால் தற்போது சிதிலமடைந்து போயிருக்கிறது. திருப்பணிகள் தொடங்கப் பெற்று, ஏதோ காரணத்தால் பாதியில் நின்று போயிருக்கின்றன. அர்ச்சகர் தண்டபாணி குருக்கள் தனது முயற்சியாலும் ஊர்மக்களின் பேராதரவாலும்தான் இந்த அளவாவது செய்ய முடிந்தது என்று கூறினார். கோயிலுக்குரிய சொத்துக்கள் கைக்கு வந்து சேர்ந்து விட்டால் திருப்பணிகள் விரைவில் முடிந்து குடமுழுக்கும் எளிதாகச் செய்துவிடலாம் என்று கூறினார் அவர்.

கிழக்குப் பார்த்த சந்நிதி. முன்புறமுள்ள கோபுரமும் நுழைவாயிலும் சிதிலமடைந்துள்ளன. முன் மண்டபச் சுவர்களிலும் விரிசல் விட்டிருக்கின்றன.

சுவாமி விமானம் புதிதாகப் பூச்சு வேலை செய்யப் பட்டுள்ளது. அம்பாள் விமானம் நன்றாக இருக்கிறது. பெரிய சிவலிங்கம். அம்பாளும் நல்ல உயரம்.

ஆலயத்துக்கு முன்புறம் ஒரு திருக்குளம் இருக்கிறது. அதற்குப் புத்திரகாமதீர்த்தம் என்று பெயர். அதன் கரையில் மேற்கே பார்த்து ஒரு விநாயகர் வீற்றிருக்கிறார். அருகில் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் புத்திரபாக்கியத்துக்காக இங்கு பூஜை செய்ய வந்தாராம். ஆனால் புஷ்பங்கள் கிடைக்க வில்லையாம். அப்போது சுவாமி, இலைகளினால் அர்ச்சிக்கும்படி கட்டளையிட்டாராம். அதற்காக ஸ்ரீ கிருஷ்ணன், இங்கு ஓர் ஆலமரத்தை உற்பத்தி செய்த தாகவும், அதன் இலைகளை சுவாமிக்கு அர்ச்சித்து பிரத்யும்னன் என்ற புத்திரனைப் பெற்றதாகவும் தல புராணம் கூறுகிறது. இன்றும் இங்குள்ள ஒரு ஆலமரத்தில் ஐந்து விதமான இலைகள் இருப்பதாகக் கூறிய தண்ட பாணி குருக்கள் கீழே விழுந்திருந்த சருகுகளை எடுத்துக் காட்டி ''இதைப் பாருங்கள் எப்படியிருக்கிறது? இந்த இலையைப் பாருங்கள். வேறு மாதிரியிருக்கிறது'' என்று ஒவ்வொன்றாகக் காட்டினார்.

இந்த ஆலமரத்தைத் தரிசனம் செய்தால் சகலவித மான பாவங்களும் போகுமாம். பிரும்மாவினால் ஸ்ரீகரிஷி என்ற முனிவருக்கு ஏற்பட்ட சாபம் இங்கு வழிபட்ட தனால் போயிற்று.

பார்வதி தேவியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவ லிங்கம். அகஸ்திய மகரிஷி வழிபட்டதால் அகஸ்தீச்வரர்

என்றழைக்கப்பட்டார். பஞ்சநதீச்வரர் என்ற பெயரும் உண்டு.

ஸ்ரீ அகஸ்தீச்வரரைப் பாண்டவர்கள் வழிபட்டு இழந்த ராஜ்யத்தை மீண்டும் பெற்றார்கள். இதனால் இதற்கு ஐவர்பாடி என்ற பெயர் ஏற்பட்டதாம். அருகிலுள்ள பாண்டவபுரத்தில்தான் பாண்டவர்கள் தங்கியிருந்தார்களாம். பாண்டவபுரத்தைத் தேடிக் கொண்டு போய் மிகச் சிரமப்பட்டுக் கண்டுபிடித்தோம்: அது ஏனாதிமங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஏனாதி மங்கலம்

ஏனாதிமங்கலம் இலந்துறையிலிருந்து தென்மேற்கே ஆறு கிலோ மீட்டரில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து ஆறாவது மைல். ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சிவாச்சாரியார், ''நான் ஏனாதிமங்கலம் கோயிலைப் பார்த்ததில்லை, உங்களுடன் நானும் வருகிறேன்'' என்று கூறி எங்களுடன் சேர்ந்து கொண்டார். அநேகருக்கு அருகில் உள்ள கோயில்களைத் தரிசிக்க வாய்ப்பில்லாமலேயே போய் விடுவது உண்டு. நமக்கு வழி காட்டும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சிலர் அக்கம்பக்கத்திலுள்ள கோயில்களை முதன் முறையாகத் தரிசிப்பது எங்கள் யாத்திரையில் சர்வ சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

ஏனாதிமங்கலத்தில் உள்ள சிவன் கோயில் மிகவும் பழமையானது. சிதிலமடைந்துள்ளது. மதிற்சுவர் இல்லை. முன் மண்டபம் இடிந்து போயிருக்கிறது. சுவாமி விமானத்தில் சுதைகளெல்லாம் பின்னமாகியிருக்கின்றன.

ஸ்ரீ சோமநாதரும் ஸ்ரீ சௌந்தரிய நாயகியும் உறையும் அக்கோயிலுக்கு நேர் எதிரே யமதீர்த்தக் குளம் இருக்கிறது சீனுவாசப் பிள்ளை என்ற வயதானவர், திருவிடைமருதூர் புராணத்தில் முப்பத்திரண்டாவது அத்தியாயத்தில் இந்த யம தீர்த்தத்தைப் பற்றிய விவரங்கள் காணப்படுவதாகக் கூறினார்.

இக் கோயிலின் தனிச் சிறப்பு, கோஷ்டங்களில் உள்ள தெய்வச் சிலைகள் அர்த்தநாரீச்வரர், பிட்சாடனர், கங்கா விசர்ஜனர், சண்டேச அனுக்கிரக மூர்த்தி, திரிபுர சம்ஹாரமூர்த்தி, கால பைரவர், தட்சிணாமூர்த்தி, பிரும்மா, துர்க்கை, விநாயகர் எல்லாமே அற்புதக் கலைச் செல்வங்களாக அமைந்திருப்பதுதான். ஆனால், அநேகமாக அனைத்துமே பின்னப்பட்டுப் போயிருக்கின்றன. முகப்பில் கைகள் உடைந்த ஓர் அழகான சிற்பம் இருந்தது. உடன் வந்த சிவாச்சாரியாருக்கும் அது என்ன மூர்த்தி என்று தெரியவில்லை. ஸ்ரீ ஜலந்தர சம்ஹார மூர்த்தி என்று சீனுவாசப் பிள்ளை கூறினார்.

சிற்பங்கள் உடைக்கப்பட்டிருப்பதைக் காட்டி, எங்களோடு வந்த உள்ளூர்க்காரர்களில் ஒருவர், ''எல்லாம் பள்ளிக்கூடப் பசங்க செஞ்ச வேலை'' என்று ஆதங்கத்துடன் கூறினார்.

''பையன்களால் இப்படி உடைத்திருக்க முடியுமா? பெரியவங்கதான் செய்திருக்க வேண்டும்'' என்று கூறினேன் நான்.

''இல்லே, பசங்கதான்'' என்றார் அவர் மறுபடியும் தீர்மானமாக.

''அதென்ன அத்தனை நிச்சயமாகச் சொல்றீங்க?'' என்று கேட்டேன் நான் விடாமல்.

''ஏன்னா, சின்ன வயசுலே நான்தான் இதுலே பாதி சிலைகளை உடைச்சேன். எனக்குத் தெரியாதா?'' என்றார்

அவர். மற்றவர்கள் சிரித்தார்கள். ஆனால், அவர் முகத்தில் வருத்தத்தின் நிழல் படர்ந்திருப்பதைக் கண்டேன். அதே நேரத்தில் உண்மையைக் கூற ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியும் இழையோடியது. மனச்சாட்சி உறுத்த, 'அறியாமல் செய்து விட்டோமே. அதற்கு இப்போது ஏதாவது பிராயச்சித்தம் உண்டா?' என்று அவர்வேதனைப் பட்டதையும் உணர முடிந்தது.

''வருத்தப்படாதீர்கள். மற்ற சிற்பங்களையாவது யாரும் உடைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். கோயிலைத் துப்புரவாக வைத்துக் கொள்ள முயலுங்கள். திருப்பணி நடந்தால் உங்களால் முடிந்த உதவியைச் செய்யுங்கள்'' என்று அவருக்கு ஆறுதல் கூறினேன். அவர் பெயர் ஜகதீசன்.

திருநீலக்குடி

கும்பகோணம் — காரைக்கால் பஸ் பாதையில் திருநாகேஸ்வரத்தைக் கடந்து சென்றால், பதினான்காவது கிலோ மீட்டரில் திருநீலக்குடி என்றபாடல்பற்ற திருத்தலம் உள்ளது. அது தென்னல்குடி என்றும் அழைக்கப்படுகிறது. இங்குள்ள ஆலயம் திருவாவடுதுறை ஆதீனத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அந்த இறைவன்மீது அப்பரடிகள் ஒரு பதிகம் பாடியிருக்கிறார். சுவாமியின் திருநாமம், ஸ்ரீ மனோக்ஞநாதர். நீலகண்டேச்வரர் என்றும் நீலகுடியீச்வரர் என்றும் வழங்கப்படுகின்றார். அம்பாள், உமையம்மை அல்லது அழகம்மை.

கிழக்குப் பார்த்த மொட்டைக் கோபுரத்தைக் கடந்து சென்றால், துவஜஸ்தம்ப பீடம் இருக்கிறது: த்வஜஸ்

தும்பம் இல்லை. நவக்ரக பீடத்தில், சனீச்வரர் மட்டுமே இருக்கிறார்.

தெற்குப் பிராகாரத்தில் பழைய வாகனங்கள் இருக்கின்றன. ரிஷபம், யாளி, யானை, அன்ன வாகனங்களைச் சிறிது பழுது பார்த்து வண்ணம் தீட்டி வைத்தால் மிக நேர்த்தியாக இருக்கும். தென்மேற்கு மூலையில் மார்க்கண்டேயர் இருக்கிறார்.

பிராகாரத்தை வலம் வரும்போது, சுவாமி கருவறை விமானத்தில் மண்டிக் கிடக்கும் புதரைக் கண்டு கண்ணீர் வடித்தோம்!

இக்கோயிலுக்குச் செல்பவர்கள், வடக்குப் பிராகாரத்தில் உள்ள மிகப் பெரிய பலாமரத்தைப் பார்த்துப் பிரமிக்காமல் திரும்ப முடியாது. அதன் வேர் எங்கெங்கோ ஓடியிருக்கிறது. முன் மண்டபத்தில் கூட அது ஊடுருவியிருப்பதைக் காணலாம். அதில் காய்க்கும் பலாப்பழத்திற்கு ஒரு சிறப்பு இருப்பதாகக் கூறுகிறார்கள். சுவாமிக்கு நிவேதனம் செய்து விட்டு எடுத்துச் சென்றால்தான் அதன் சுளைகளை ருசிக்க முடியும். யாருக்கும் தெரியாமல் அதை வெளியே எடுத்துச் சென்று அரிந்து பார்த்தால் பழத்தினுள் புழுக்கள் நெளியுமாம்.

இத்தலத்தைப் பற்றி ஸ்காந்த புராணத்தில் முப்பது அத்தியாயங்களில் குறிப்புக்கள் உள்ளன. திருநீலக்குடிக்கு 'பஞ்ச வில்வாரண்ய க்ஷேத்திரம்' என்ற பெயரும் உண்டு. பஞ்ச வில்வம், தலவிருட்சம். கோயிலுள்ள மரத்தில் பஞ்சதள வில்வம் இருப்பதாக அர்ச்சகர் சபேச குருக்கள் கூற, ஆர்வத்தோடு நாங்கள் சென்று பார்க்க, சுவரில் ஒரு சிறுவனை ஏறச் சொல்லிப் பறித்துக் காட்டும்படி அவர் சொல்ல, அந்தப் பையன் தேடித் தேடிப் பார்த்து விட்டுக் கீழே இறங்கி வந்து கையை விரிக்க, பஞ்சதள வில்வ தரிசனம் கிடைக்காமல் நாங்கள் திரும்ப நேர்ந்தது!

சூரபத்மனின் தொந்தரவு தாங்க முடியாமல் இந்திரன் பிரும்ம லோகம் சென்றான். அங்கிருந்து எல்லோருமாகச் சேர்ந்து கைலாசம் சென்றனர். அப்போது காமதேனுவும் உடன் சென்றது. யாகம் ஒன்று செய்வதில் முனைந்த வசிட்டர், காமதேனுவைக் காணததால் கோபமுற்றார். 'யாகத்திற்குத் தகுதியற்றதாகக் கடவாய்' என்று அதைச் சபித்தார். அதனால், தனது தவப் பலனை இழந்து வாடினார். அதைக் கண்ட நாரதர் வசிட்டரிடம், ''சிவபெருமானைப் பூஜிக்க காமதேனு பஞ்ச வில்வவனம் சென்றிருக்கிறாள். நீங்களும் அங்கு சென்று தவமியற்றுங்கள்'' என்று கூறவே வசிட்டரும் அவ்வாறே செய்தார். மனோக்ஞநாத சுவாமியை வழிபட்டதால் காமதேனுவுக்கு யாகத்திற்கான தகுதியும், வசிட்டருக்குக் கோபத்திலிருந்து சாந்தியும் கிடைக்கப் பெற்றன.

கைலாசத்திலுள்ள முக்தி மண்டபத்தில் ஊர்வசியைப் பார்த்து பிரும்மா சற்றுச் சலனமுற்றார். அதற்குப் பரிகாரமாக, பஞ்ச வில்வவனம் சென்று வெகுகாலம் பூஜை செய்து விட்டு மீண்டும் கைலாசம் வரும்படி பரமசிவன் பணித்தார். பிரும்மா பூஜை செய்த அந்த சிவலிங்கம்தான், பிரும்ம லிங்கம் என்ற பெயரில் ஆலயத்தின் முன் மண்டபத்தின் தென்புறம் காணப்படுகிறது.

மிருகண்டு மகரிஷி, தன் மகன் மார்க்கண்டேயன் சிரஞ்சீவியாக வாழ வசிட்டரிடம் வழி கேட்க, வசிட்ட மகரிஷி, மார்க்கண்டேயரை பஞ்ச வில்வவனம் சென்று பரமசிவனை வழிபடும்படி கூறுகிறார். அதன்படியே மார்க்கண்டேயர் திருநீலக்குடிக்கு வந்து தைலாபிஷேகம், சப்தஸ்தானம் முதலியன செய்து சிரஞ்சீவித் தன்மை அடைகிறார்.

மார்க்கண்டேயர் பூஜித்த தலமாதலால் இங்கு அவரது உற்சவ விக்ரகம் இருக்கிறது. உற்சவங்களின்போது,

சுவாமியைப் பார்த்துக் கொண்டு அம்மூர்த்தி எதிர்முக மாகப் போவது வழக்கம்.

கணவனின் சொல்லுக்கு மதிப்புத் தராமல் தாட்சாயணி, தன் தந்தை தட்சனின் யாகத்திற்குச் செல்ல, அங்கு அவமானத்திற்காளாகி, சரீரத் தியாகம் செய்து கொள்கிறாள். பின்னர், இமவானின் மகளாகப் பிறந்து பரமசிவனை மீண்டும் அடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறாள். அப்போது பரமசிவன், ''தட்சனின் நடத்தையால் ஏற்பட்ட தன் கோபாக்னி இன்னும் தணிய வில்லை. நான் வில்வாரண்யத்தில் இருப்பேன். நீ ஆயிரம் வருஷங்கள் தவம் செய்து என் கோபம் தணியும் வண்ணம் எனக்குத் தைலாபிஷேகம் செய்வித்து என்னை அடைவாய். உன் உத்தரவு பெற்றுத் தைலாபிஷேகம் செய்பவர்கள் எல்லா நன்மைகளையும் அடைவார்கள்'' என்று கூறி அருளினார்.

எனவேதான் இக்கோயிலில் சுவாமிக்குத் தைலா பிஷேகம் செய்வது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது. முன் காலத்தில் ஆறு மரக்கால் நல்லெண்ணெய் அபிஷேகம் செய்வார்களாம். உளுத்த மாவினால் கோமுகத்தை அடைத்து விட்டு, சிவலிங்கத்தின் சிரசில் எண்ணெயை ஊற்றிச் சிவாசாரியார் மெள்ள தேய்க்க, அத்தனை எண்ணெயும் சிவலிங்கத்திற்குள் இறங்கிவிடுமாம். அந்தக் கருங்கல் லிங்கத்தினுள் அது எப்படி இறங்குகிறது. எங்கே போகிறது என்பதெல்லாம் புரியாத புதிராக இருக்கிறது. அந்தக் காலத்தில் ஆலயத்திற்கு அருகிலேயே செக்கு ஆட்டி அந்த எண்ணெயால் அபிஷேகம் செய்வார்களாம். அதற்கு அடையாளமாக, கோயிலுக்கு வடகிழக்கே, குளக்கரை யில் செக்கு ஆட்டிய கல் மட்டும் இருக்கக்கண்டேன். செக்கு ஆட்டி ஆறு மரக்கால் எண்ணெய் அபிஷேகம் செய்வதாக பக்தர் யாராவது பிரார்த்தனை செய்து

கொண்டு அதை நிறைவேற்றினால் இந்தப் புராதன பழக்கம் மீண்டும் தொடங்க வாய்ப்பு ஏற்படும்.

இந்தக் கோயிலில் இரண்டு அம்பாள் சந்நிதிகள் இருக்கின்றன. அவை சுவாமி கோயிலுக்கு வடபிராகாரத்தில் உள்ள தனி மண்டபத்தில் அடுத்தடுத்து உள்ளன. அவர்களுடைய திருநாமங்கள் அநூபமஸ்தனீ, பக்தா பீஷ்டதயானீ. பிரமனை அடைவதற்காகக் கன்னிகையாகத் தவமிருந்த அம்பாள்தான் பர்தாபீஷ்டதயானீ. தைலம் தேய்க்கும் நாயகி. அபிஷேகத்திற்கு எடுத்துச் செல்லப்படும் எண்ணெய், முதலில் இந்த அம்பாளின் சந்நிதியில் வைக்கப்பட்ட பின்னர்தான் சுமாமி சந்நிதிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அம்பாளிடம் உத்தரவு பெறுவதாகப் பொருள். அம்பாளே எண்ணெய் தேய்ப்பதாகவும் ஒரு ஐகீதம் இருக்கிறது.

இக்கோயிலுடன் இணைந்த சப்த ஸ்தான க்ஷேத்திரங்கள் இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேச்வரம், திருபுவனம், திருவிடைமருதூர், மருத்துவக்குடி முதலியன. மனேக்ஞநாதருக்கு ஆதிமத்யார்ஜுனேசர் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. ரோமச மகரிஷி இங்கு அனேக ஆண்டுகள் தவம் இருந்து, பின்னர் மத்யார்ஜுன க்ஷேத்திரமான திருவிடைமருதூரில் ஈசனருள் பெற்றார். அதனால் திருநீலக்குடிக்கு ஆதிமத்யார்ஜுனேசர் என்ற சிறப்புப் பெயர் தோன்றியது. சுவாமிக்கு வில்வாரண்யேச்வரர், பிரும்மநாயகர், தைலாப்யங்கேசர் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

திருநாவுக்கரசர்,

'செய்ய மேனியன் றேனொடு பாறயிர்
நெய்ய தாடிய நீலக்குடியரன்
மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையி லாமல கக்கனி யொக்குமே'

என்கிறார். 'சிவந்த திருமேனியனாய்த் தேனும், பாலும், தயிரும், நெய்யும் கொண்டு திருமுக்காடி நீலக்குடி அரனின் மேல் காதல் கொண்டு மறவாத மனத்தினர்க்கு எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல அப்பெருமான் புலப்பட்டு அருள் புரிவான்' என்று கூறுகிறார். ஆனால், இங்கு எண்ணெய் அபிஷேகம் பற்றிக் குறிப்பிடவில்லை. மற்றொரு பாட்டில் மார்க்கண்டேயன் சிரஞ்சீவித் தன்மை பெற்றதை 'காலனார் உயிர் போக்கிய காலனே' என்று நினைவுபடுத்துகிறார்.

வேறொரு பாட்டால், 'சமணர்கள் என்னைக் கருங் கல்லோடு சேர்த்துக் கட்டி விரைந்து கடலில் அழுந்தும்படி செய்தபோது, நெற்கதிர்களையுடைய நீண்ட வயல் சூழ்ந்த நீலக்குடி அரனுடைய நல்ல நாமத்தைச் சொல்லி உயர்ந்தேன் என்று பெருமைப்படுத்துகிறார்.

கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வய னீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே!

விட்டலூர்

திருநீலக்குடி ஆலயத்தின் தல விருட்சமான பஞ்ச வில்வ மரத்தினருகில் நின்று கொண்டிருந்த போது, சிறுவனாகவும் இல்லாமல் இளைஞனாகவும் இல்லாமல் ஒரு பையன் வந்து, ''எங்க ஊருக்கு வந்துட்டுப் போங்க சார்'' என்று அன்புடன் அழைத்தான். ''நீ யாருப்பா?'' என்று கேட்டேன். ''நான் எங்க ஊர் கோயிலில் பூஜை செய்கிறேன்'' என்றான். திருநீலக்குடியிலிருந்து அங்கு செல்வதென்று முடிவு செய்தேன். இளைஞர்கள், அதிலும்

அர்ச்சகர் வீட்டு சின்னப் பிள்ளைகள் அழைத்தால் அங்கு தவறாமல் போவது என்று ஒரு வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறேன். வளரும் தலைமுறையினரின் உற்சாகத்தைக் குன்றாமல், குறையாமல் வளர்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அந்தப் பையனின் பெயர் ராஜகோபாலன். எல்லோரும் அழைக்கும் பெயர் ராஜு. பதினாறு பதினேழு வயது இருக்கலாம். ப்ளஸ் டு படித்திருக்கிறான். பரிதாபமான குடும்பச் சூழ்நிலை. வேறு வேலை கிடைக்கவில்லை. அதனால் கோயில் பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறான். கிராமத்தாரும் அவனுக்கு உறுதுணையாயிருந்து உதவிகள் புரிந்து வருகிறார்கள்.

அந்தக் கிராமத்தின் பெயர் விட்டலூர். திருநீலக்குடிக்கு இரண்டு கிலோ மீட்டர் தெற்கே உள்ளது. சோழ மன்னன் ஒருவன் ஏரண்ட ரிஷி மீது அம்பு விட்டதால் பிரும்மஹத்தி தோஷம் அவனைப் பற்றிக் கொண்டதாகவும் மன்னன் இந்தக் கிராமத்துக்கு வந்து நாட்டாறு வாய்க்கால் ஓரமாக நின்று தொலைவிலுள்ள திருவிடைமருதூர் மகாலிங்க ஆலய கோபுரத்தைத் தரிசித்து. அதனால் தோஷம் நீங்கிக் குணம் பெற்றதாகவும் கூறுகிறார்கள். மன்னனுக்குத் தோஷம் விட்ட ஊர், விட்டலூர் ஆகிவிட்டதாகவும் அதற்கு ஏற்றாற்போல் ஒரு விளக்கமும் தருகிறார்கள். அந்த ஊரில் சோழீச்சரம் என்று, இடிந்து பாழாகிவிட்ட ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அது அந்த மன்னன் கட்டிய கோயில். நந்தியும், சிவலிங்கமும் மட்டும் இருக்கின்றன.

விட்டலூரில் தற்போது ஸ்ரீ காசி விச்வநாதர்—விசாலாட்சி கோயிலும், ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலும் இருக்கின்றன.

ஸ்ரீ காசிவிச்வநாதர் கோயிலில் ராஜு பூஜை செய்கிறான். பெருமாள் கோயிலில் மாந்தை ரங்கசாமி பட்டாசாரியார் பூஜை செய்கிறார். சிவன் கோயில் சிறியதுதான். மேற்குப் பார்த்த சந்நிதி. மேற்குப் பிராகாரத்தில் விநாயகர், சுப்ரமணியர், நடராஜர் சந்நிதிகள் உள்ளன. மாதாந்தர, வருடாந்தர உற்சவங்கள் முடிந்தவரையில் முறையாக நடந்து வருகின்றன. 1976-ம் ஆண்டு இக் கோயிலில் குடமுழுக்கு நடந்திருக்கிறது.

ராஜு எங்களுடன் புறப்பட்டான். அந்தப் பகுதியில் உள்ள கோயில்கள் பற்றிய விவரங்களை ஓரளவு அறிந்து வைத்திருக்கிறான். அங்கெல்லாம் பணிபுரியும் அர்ச்சகர்களும் அவனுக்குப் பழக்கமானவர்கள்தான். இம்மாதிரி ஒரு 'லோக்கல்' வழிகாட்டி உடன் இருப்பது எங்களுக்கு எப்போதும் சௌகரியம்.

திருநீலக்குடி பெருமாள் கோயில் சற்று கிழக்கே இருக்கிறது. செல்லும் வழியில் ஆகாச சாஸ்தா கோயிலைத் தரிசித்துக் கொண்டோம். மேலே கூரையின்றி, தர்ம சாஸ்தா பூர்ண புஷ்கலையுடன் அமர்ந்திருக்கிறார்.

திருநீலக்குடி ஸ்ரீ வரதராசப் பெருமாளுக்குப் புதுக் கோயில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாலாலயம் செய்யப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகியும், ஏதோ காரணத்தால் கும்பாபிஷேகம் தடைப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. முன்பு அக் கோயிலில் ஸ்ரீ வரதராஜர், ஸ்ரீ கோபால கிருஷ்ணன் ஸ்ரீ விஷ்ணு துர்க்கை மூவருக்கும் மூன்று விமானங்கள் இருந்தனவென்றும் ஸ்ரீ கோபால கிருஷ்ணன் சந்நிதி தென்புறம் நோக்கி இருந்தது என்றும் கூட்டுறவுத் துறை முன்னாள் சப்- ரிஜிஸ்ட்ரார் டி.வி. சுப்பிரமணிய சர்மா கூறினார்,

இலந்துறை

திருநீலக்குடியிலிருந்து தெற்கே திரும்பி, கூத்துக்குடி வடகரை வழியாக வந்து, வடக்கே திரும்பி இலந்துறைக் குச் சென்றோம். சுமார் நான்கு கிலோ மீட்டர்தான் இருக்கும்.

இது தென் பத்ரிகாச்ரமம்.

இலந்தை மரம் இங்கு தல விருட்சம். அதன் நிழலில் வியாசரின் ஆச்ரமம். அங்கு மேற்கு பார்த்து ஒரு சிவ லிங்கம். ஸ்ரீ வியாசேச்வரர் என்று பெயர். ஸ்ரீ வியாச பகவான் வழிபட்டது. பக்கத்திலேயே வியாச புஷ்கரணி. ஆகா! என்ன அமைதி. எத்தனை ஆனந்தம்! நாம் புராண காலத்தில் இருப்பது போன்ற பிரமை தட்டுகிறது.

வியாச பகவான் தென்னகத்திற்கு வந்தபோது, தீர்த்வம் இயற்ற நல்ல இடம் ஒன்றைத் தேடி நடந்தபோது காவிரிக்குத் தென் கரையில் தென் குரங்காடுதுறைக்கும் திருநீலக்குடிக்கும் தெற்கிலும், திருநல்லம் என்ற கோனேரி ராஜ புரத்திற்கு மேற்கிலும், அம்மன்குடிக்கு வடமேற் கிலும், திருநாகேச்வரத்திற்குக் கிழக்கிலும், காவிரியின் கிளை நதியான கீர்த்திமான் ஆற்றின் தென்கரையிலும் உள்ள இலந்தை மரங்களடர்ந்த இந்தத் தலத்தைக் கண்டு அங்கேயே தங்கிவிட்டார். வடக்கே தமக்கு ஒரு பத்ரிகாச் ரமம் அமைந்தது போல் தெற்கிலும் ஒரு பத்ரிகாச்ரமம் கிடைத்ததில் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி.

இத்தலத்தில் அகிலாண்டநாயகி அபிராமியன்னை யுடன் ஸ்ரீ சுந்தரேச்வரர் எழுந்தருளியிருக்கிறார். ஆலயத் திற்குக் கிழக்கே வியாச புஷ்கரணியும், அதன் வடமேற்குக் கரையில் வியாசாச்ரமும் இருக்கின்றன.

கோபுர தரிசனம் செய்தபோது, அதன் மீது வளர்ந் திருந்த செடிகளின் தரிசனமும் செய்து கொண்டே உள்ளே சென்றோம்!

வலம் வரும்போது, மேற்குப் பிராகாரத்தில் பத்ரி நாராயணரைத் தரிசித்தோம். மேல் வலக் கையில் அட்ச மாலையும், மேல் இடக் கையில் துளசி செண்டும் ஏந்தி, அபய, வரஹஸ்தங்கள் விளங்க, ஸ்ரீதேவி பூதேவியுடன் எழுந்தருளியுள்ளார் பெருமாள். ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ர மணியர், ஸ்ரீ கஜலட்சுமி முதலியவர்களையும், கிழக்கே சூரியன், சந்திரன், நவக்கிரகங்கள் ஆகியோரையும் தரிசித்துக் கொண்டு, உட்பிராகாரத்தில் நுழைகிறோம். அங்கு ஸ்ரீ நந்திகேச்வரரும் ஸ்ரீ துவார கணபதியும் அருள்பாலிக்க அமர்ந்திருக்கிறார்கள்.

இத்தலத்தில் சூரியன் வழிபட்டிருக்கிறான். இன்றும் சித்திரை வருஷப் பிறப்பன்று சூரியனின் கிரணங்கள் சுவாமியின் மீதுபடுகின்றன. முதல் நாள் சிவலிங்கத்தின் வடமேற்கிலும், வருடப் பிறப்பன்று மத்தியிலும், மறுநாள் தென்மேற்கிலும் சூரியனின் கிரணங்கள் படுகின்றனவாம்.

இங்கு அங்காரகன் பூஜித்து பாவ நிவர்த்தி பெற்றிருக் கிறான். அதனால் இது அங்காரக க்ஷேத்திரம். இங்கு ஒவ்வொரு செவ்வாயும் விசேஷம்தான். செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்குப் பரிகாரத்தலமாகவும் இது விளங்கு கிறது.

ஆண்களானாலும், பெண்களானாலும் முதலில் வியாச தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஈர ஆடையுடன் வியாசேச் வரரை நூற்றெட்டு முறை வலம் வந்து, பின்னர் கோயிலுக்கு வந்து, அபிராமி அம்பாள் திருச்சந்நிதியின் முன், நெய் தீபம் போட்டு, இரண்டு மாவிளக்குகள் ஏற்றி வைத்து, முப்பழங்கள், தேன், நெய், சர்க்கரை முதலிய வற்றைப் படைத்து விட்டு, ஸ்ரீ சுந்தரேச்வரரையும்

அபிராமி அம்பாளையும் இருபத்தோரு முறை வலம் வந்து, அபிராமிக்கு வடை, பாயச நைவேத்தியத்தோடு சகஸ்ர நாம அர்ச்சனை செய்தால் சகல தோஷங்களும் நிவர்த்தியாகின்றனவாம். குழந்தையில்லாத பெண்மணிகள் மடியில் முப்பழங்களையும் வைத்துக் கொண்டு வியாசேச்வரரை நூற்றெட்டு முறை வலம் வரவேண்டும்.

நல்ல வைதீகக் குடும்பத்தில் பிறந்தவன் கலாதரன். அவன் ஒரு காமாந்தகன். ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தவன், சூரியனார்கோயிலை அடுத்துள்ள திருமங்கலக்குடிக்கு வந்து சேர்ந்தான். களைப்பு மிகுதியால் ஒரு வீட்டுத் திண்ணையில் போய்ப் படுத்தான். அது தாசி ஹேமாவதியின் இல்லம் என்பது அவனுக்குத் தெரியாது. அவள் திருக்கோயிலில் பரமனுக்குப் பணிவிடைகள் செய்யும் பரம பக்தை.

நடுநிசியிருக்கும். தாசி கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். திண்ணையில் அந்நியன் ஒருவன் படுத்திருந்ததைக் கண்டு அருகில் வந்து குரல் கொடுத்தாள். அவன் எழுந்திருப்பதாகக் காணோம். அவன் மயக்க முற்றிருந்தான். கவலையுடன் ஓடிச் சென்று வைத்தியரை அழைத்து வந்தாள். அவர் வைத்தியம் சொன்னார்: ''அன்னத்தைக் கஞ்சியாக்கி உடம்பிலே தேய்க்க வேண்டும். அப்படித் தேய்க்கும் போது கஞ்சி உடம்புக்குள் இறங்கும். அப்படி இறங்கினால் உடம்பு குணமாகி விடும்.''

கலாதரனை உள்ளே அழைத்துச் சென்றாள் ஹேமாவதி. தன் வீட்டிலேயே தங்கச் செய்து தன் கரங்களாலேயே வைத்தியம் செய்தாள். மெள்ள மெள்ள அவன் குணமடைந்தான். அவள் இல்லத்திலேயே சிறிதுகாலம் தங்கிவிட்டு கார்த்திகை மாதம் கடைசி செவ்வாய் அன்று கலாதரனும் ஹேமாவதியும் வியாசபுரமான இலந்துரைக்கு வந்தார்கள். மதியம் வியாச புஷ்கரணியில் ஸ்நானம்

செய்து நற்கதி பெற்றார்கள். கார்த்திகை கடைசி செவ்வாயன்று இத்திருக்குளத்தில் மதியம் 12 மணி முதல் 1-30க்குள் ஸ்நானம் செய்கிறவர்கள் மோட்சம் அடைவார்கள் என்று வியாச பகவானே கூறியிருக்கிறார்.

இத்தலப்புராணத்தின் அடையாளமான சுதை வடிவத்தை ஆலயத்தில் இன்றும் காணலாம். சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வழியில், முன் மண்டபத்தின் வாசற்படிக்கு மேலே அது இருக்கிறது. கலாதரன், வியாச பகவான் — ஸ்ரீ சுந்தரேச்வரர் — ஸ்ரீ அபிராமி அம்மன் — ஹேமாவதி முதலியோர் வரிசையாக இருக்கக் காணலாம். அம்பாள் முகம் பின்னமாகியிருக்கிறது.

'செல்வ திருமங்கலக்குடியினில்
திகழ் தாசி ஏமாவதி என்பவள்
பல்வித மாகவே பிராணேசர் சந்நிதியில்
பணிவிடை செய்யும் நாளில்
எல்லோரும் புகழ்ந்தேத்தும் மறை நாலும்
கற்றுள்ள வேதியன் வயிற்றுதித்த
கல்லாது நில்லாது பொல்லாது
பெயர்பெற்ற கலாதரன் காமாந்தகன்
ஏமாவதியுடனின்று காமாதிகள்
செய்து மா வியாசபுரம் வந்தனர்
ஏமக் கலாதரனும் தானாதிகள் செய்து
மா வியாசகுளம் மூழ்கினான்
சோமா சோமாவெனவே வந்ததே
வாகனம் மா வியாசர் குளக்கரையினில்
வியாசபுரத்தழகனின் பாகத்
தமர்ந்துறையும் அன்னை அபிராமி உமையே'

இந்தத் தலபுராணக் கதையை விளக்கும் இந்த விருத்தம். இலந்துறை ஸ்ரீ அபிராமி அம்பிகையின் மீது பாடப்பட்டுள்ள அருள் விருத்தத்தில் உள்ளது. பத்து செய்யுட்கள் அடங்கிய அந்த விருத்தத்தைப் பாடியது.

யார் என்று தெரியவில்லை. இலந்துறை ஓய்வு பெற்ற ஆசிரியர் ஈ. கே. கிருஷ்ணமூர்த்தி ஐயரால் சரி செய்யப் பட்டு, ஸ்ரீதட்சிணாமூர்த்தி சிவாச்சாரியாரால் அச்சுப்பிழை திருத்தி மலேசியா தீ. இராமசாமித் தேவர் அவர்கள் பொருட்செலவில் குடந்தை திரு. ஏ. டி. மூர்த்தி துணை கொண்டு 1-2-83 அன்று வெளியிடப்பட்டதாக ஒரு சிறு பிரசுரம் கூறுகிறது. மாதிரிக்கு மற்றொன்று:

'ஆற்றலறியேன் மிக்க போற்றலறியேன்
திகழ் ஆகம புராண மறியேன்
தூற்றனேனுன்னுடைய தோற்ற மறியேன்
தூயதோத்திரம் செய்யவறியேன்
ஏற்று நீ என்னுடைய இடர்களைத்
தீர்த்துவை எழிலிலந்துறையி னம்மா
பார்த்து மிக வாடினேன் வீழ்ச்சி
மிக செய்தெனை வாட்டி நீ எடுக்கலாமோ
ஏனென்றுங் கேளாது தானொன்றும்
பாராது ஏற்காது போலிருந்தால்
மீனென்ற கண்ணெனவும் கருணாம்பிகை
என்றும் காரணம் ஏன் வந்தது?
நினைவிலும் நினையாரின் கனவிலும்
வாராத நிழல் பதரி நகரின் மேய
வினையழித் தழகனின் பாகத்
தமர்ந் துறையும் அன்னை அபிராமி உமையே'

பதினோராவது விருத்தம் பலச்ருதியாக அமைந்துள்ளது:

'பொல்லாத வியாதியும் புகலாத கல்வியும்
புவியடங்காப் பிள்ளையும்
நல்லார்கள் இல்லாத நலங் குறைந்தோர்களும்
நாயகன் வராப் பெண்களும்
கல்லான கயவர்கள் நெஞ்சம் நெக்குருகவும்
கொல்லா விரதம் பூணவும்

எல்லா விதமான பூதப் பிசாசுகள்
சொல்லாமல் ஓடிவிடவும்
பல்லால் கடித்துப் பல துன்பங்கள்செய்கின்ற
பாம்பு முதலான விஷமும்
வல்லார்க ளென்று மார்தட்டி வழிப்பறிக்கின்ற
வறியன் வஞ்சகன் சூழ்ச்சியும்
வில்லாளின் சொல்லான அன்னை அபிராமியின்
விருத்தங்கள் பத்திலொன்றை
வியாசகுள நீர் மூழ்கி விதிப்படி படிப்பவர்கள்
வினையாவும் விலகும் பாரே!'

இலந்துறையில் உறையும் அன்னை அபிராமி அருள் மாரி பொழியும் அன்புத் தெய்வம். கடைக்கண் பார்வையாலேயே நம்மைக் கரையேற்றும் கருணை வடிவம். சந்தேகமில்லை.

திருநீலக்குடி சப்த ஸ்தானத்தில் முதல் ஊர் இலந்துறை. சுவாமி வரும்போது இங்கிருந்து விநாயகர் சென்று எதிர்கொண்டு அழைத்து வருவார். சுவாமி கோபுர வாசலில் பல்லக்கில் வந்து இறங்குவார். ஸ்ரீ சுந்தரேச்வர். ஸ்ரீ அம்பாள் தீபாராதனை ஆன பின்னர் ஸ்ரீ மனோக்ஞ நாதருக்குத் தீபாராதனை ஆகி மண்டப்படி நடைபெறும்.

அம்மன்குடி

கும்பகோணத்திலிருந்து. திருநாகேச்வரம் — உப்பிலியப்பன் கோயில் வழியாக திருநீலக் குடியைக் கடந்து சென்றால் கடலங்குடிபாதையில் ஏழு கிலோ மீட்டர்கள் சென்றால் அம்மன் குடியை அடையலாம்.

புராணச் சிறப்போடு, வரலாற்றுச் சிறப்பும் கொண்ட தலம் இது. ஒரு காலத்தில் இது சமணர்கள் தழைத்த

இடமாக இருந்ததால் 'அமணர் குடி' என்று பெயர் பெற்றுப் பின்னர் 'அமண் குடி' ஆகியிருக்கிறது. சரித்திர ஆசிரியர்களும், தொல் பொருள் ஆய்வாளர்களும் இது "அமண் குடி' என்றே அழைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். தலபுராணத்தில் பற்றுக் கொண்டவர்கள், துர்க்கையம்மன் குடி கொண்ட இந்த ஊரை 'அம்மன் குடி' என்று அழைப்பதே பொருத்தம் என்று கூறுகிறார்கள். வழக்கில் அது 'அம்மங்குடி' ஆகியிருக்கிறது.

பழைய காலத்தில், காவிரிக்கும் அரசலாற்றுக்கும் இடைப்பட்ட இந்த ஊர், 'சோழ மண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டு, வெண்ணாட்டு அமண்குடியான கேரளாந்தகன் சதுர்வேதி மங்கலம்' என்று அழைக்கப் பட்டதாகக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஊர் சோழ மன்னர்களின் படைத்தளமாக இருந்திருக்கிறது. முதலாம் ராஜராஜான், அவனது மகன் முதலாம் ராஜேந்திரன், அவனது மகன் முதலாம் ராஜாதிராஜன் ஆகிய மூன்று அரசர்களின் கீழ் புகழ்பெற்றுவிளங்கியுள்ளது. அக்காலத்தில் பல கால்வாய்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விவசாயம் செழித் தோங்கியிருக்கிறது.

இந்த ஊரில் ஒரு சிவாலயம் உள்ளது. ஸ்ரீபார்வதி உடனுறை ஸ்ரீகைலாசநாதர் எழுந்தருளியுள்ள இக் கோயிலில் எட்டுக் கரங்களுடன் ஸ்ரீதுர்க்கா பரமேச்வரியும் திருச் சந்நிதி கொண்டு திகழ்கிறாள். இக்கோயிலைக் கட்டியவர், அந்த ஊரில் பிறந்த ஓர் அந்தணர். இவர் சோழர்களின் படைத் தளபதியாகவும், 'திருமந்திர ஓலை நாயகம்' என்ற தலைமைச் செயலராகவும் பணி புரிந்திருக்கிறார். ராஜராஜனின் ஆணைப்படி தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவரும்இவரே. இவரது இயற்பெயர் கிருஷ்ணன் ராமன். ராஜராஜன் காலத்தில், மும்முடிச் சோழ பிரம மாராயன் என்றும்,

ராஜேந்திரன் காலத்தில் இராஜேந்திர சோழன் பிரம மாராயன் என்றும் விருதுப் பெயர்களோடு அழைக்கப் பட்டார். தான் பிறந்த ஊரில் கட்டிய சிவன் கோயிலுக்கு 'இராஜராஜேச்வரம்' என்ற பெயரைச் சூட்டினார் இவர்.

ராஜராஜன், ராஜேந்திரன், ராஜாதிராஜன் ஆகிய மூவரிடமும் கிருஷ்ணன் ராமன் பிரம மாராயன் மொத்தம் சுமார் எழுபது வருடங்கள் பணிபுரிந்திருக்கிறார்.

இதைப் போன்றே விக்கிரம சோழன், குலோத்துங்கன் இரண்டாம் ராஜராஜன் ஆகிய மூவேந்தர்களது அவையில் கவிச்சக்கரவர்த்தி, ஒட்டக்கூத்தர் பெரும் புலவராக இருந் திருக்கிறார். பின்னர், செவ்வப்பன், அச்சுதப்பன், இரகு நாதன் ஆகிய மூன்று நாயக்க மன்னர்களிடம் கோவிந்த தீட்சிதர் என்பவர் மதியமைச்சராகவும், ஆசானாகவும் இருந்து அரும்பெரும் சாதனைகள் புரிந்திருக்கிறார்.

கிருஷ்ணன் ராமன் பிரம மாராயனின் அறப்பணிகள், கலைப்பணிகள் குறித்து தஞ்சாவூர், திருவையாறு, திருமழ பாடி, திருநாகேச்வரம், திருவெண்காடு கோயில்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

இவர் அதிகாரத்தில் இருந்தபோது, இவரது பெரு முயற்சியால் தெய்வ விக்ரகங்களை வடிப்பதில் புது முறைகள் கையாளப்பட்டன. தஞ்சைப்பெரிய கோயிலுக்கு ராஜராஜன் காலத்தில் இவர் அர்த்தநாரீச்வரரின் செப்புத் திருமேனி ஒன்று செய்தளித்துள்ளார். மூன்று கரங்கள் கொண்ட அந்தச் சிலையில் உமையவள் பகுதி மட்டும் பித்தளையால் பூசப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறு கின்றன.

திருவெண்காட்டுக் கோயில் பிராகாரத்தில், பூமியிலி ருந்து சில வருடங்களுக்கு முன் கண்டெடுக்கப்பட்ட பல அற்புத விக்ரகங்கள் தற்போது, தஞ்சைக் கலைக் கூடத்தில்

வைக்கப்பட்டிருகின்றன. அதில் உள்ள ஒரு செப்புத் திருமேனி, கிருஷ்ணன் ராமன் பிரம மாராயனுடையதாகத் தான் இருக்க வேண்டும் என்று சில புதைப் பொருள் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

எழுபது செ.மீ. உயரமுள்ள இந்தச் சிலை நின்ற கோலத்தில் இறைவனை வணங்கும் நிலையில், இடுப்பில் அரை ஆடையணிந்து, வலது கை மணிக்கட்டில் ஒரு மணி மாலையுடன் தோற்றமளிக்கிறது.

அம்மங்குடியின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாகக் கண்டோம். அடுத்து, அங்குள்ள கோயிலின் தலப் புராணத்தை அறிந்து கொள்வோம்.

இந்தக் கோயிலில் 1906-ம் ஆண்டு திருப்பணிகள் நடைபெற்றுக் குடமுழுக்காட்டியிருக்கிறார்கள்.

அந்தத் திருப்பணிப் பத்திரிகையில்...

'விந்திய — பர்வதவாசியாகிய பராசக்தியானவள துர்கா ரூபமாகக் கன்னிகா அவதாரம் செய்து சும்ப, நிசும்பன் என்னும் மகிஷாசுரர்களை வதம் செய்து பிறகு மகிஷாசுரமர்த்தனியென்னும் பெயரை வகித்து அவர்களை சம்ஹாரம் செய்த பிரும்மஹத்தியாதி பாவங்களையும் ஆயுதம் முதலானதுகளின் ரெக்த களும்புகளையும் விடாமல் பிடித்து வருகையில் நாரத மகா முனியுடைய உபதேசத்தினால் ஆபத்சகாயர் என்னும் ஈச்வரனைப் பூஜித்து அவரனுமதிப்படி தேவீ தபோவனம் என்னும் பேர் வகித்த அம்மங்குடி க்ஷேத்திரத்தில் பாபவிமோசன தீர்த்தம் என்னும் தடாகத்தில் தன்னுடைய பிரும்மஹத்தியாதி பாபங்களைப் போக்கடித்தும் வாசமாயிருக்கிற அம்பிகையானவள், அநேக ரிஷிகளுக்கும் ராஜாக்களுக்கும் அவரவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்துமிருக்கிற

மகிஷாசுரமர்த்தனி என்னும் அம்பாளுக்கு அடியிற்கண்டபடி கும்பாபிஷேகம் நடக்கிறபடியால்...'

அதன்பிறகு இக்கோயிலில் திருப்பணிகளோ கும்பாபிஷேகமோ நடந்ததாகத் தெரியவில்லை. மதிற்சுவர்கள் சிலமாகி, உடைந்து விழுந்து விட்டிருந்தன. முன்வாசலும் முன்மண்டபமும் இடிந்து போயிருந்தன. விமானங்களெல்லாம் பழுதடைந்து உதிர்ந்து போயிருந்தன. இந்தப் பரிதாப நிலையைக்கண்ட அவ்வூரைச் சேர்ந்த சிலர், கும்பகோணம் பாணாதுறை சந்நிதித் தெருவில் வசிக்கும் 'துர்காலயா' எஸ்.சேதுராமன் அவர்கள் தலைமையில் 1980-ம் ஆண்டு திருப்பணிக் கமிட்டியொன்று அமைத்து பலசோதனைகளுக்கிடையேயும் சிரமங்களுக்கிடையேயும் செயல்படத் தொடங்கினார்கள். தற்போது சுற்றிலும் மதிற்சுவர் கட்டப்பட்டுவிட்டது. முன் மண்டபவேலையும், விமானங்கள் திருப்பணியும் பெருமளவு முடிந்து விட்டன. மீதியிருக்கும் பணிகளும் விரைவில் முடிவடைந்து. குடமுழுக்கை நடத்தி விடவேண்டும் என்று அன்பர்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

1-9-80-ல் அவர்கள் வெளியிட்ட பத்திரிகையில் காணப்படும் தலபுராணத்தையும் அறிந்துகொள்வோம்.

ஸ்ரீஸ்காந்தம் க்ஷேத்திர காண்டம் 66-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் இத்தலத்தின் மகிமை தேவி—நாரத சம்வாதமாக அமைந்திருப்பது மிகச் சிறப்புடையதாகும். ஸ்ரீசூதபுராணிகர் சொல்வதாவது:

'மகிஷாசுரனை வதம் செய்தபோது அவனுடைய ரத்தத்தால் பூசப்பட்ட தன்னுடைய திரிசூலத்தை இங்கு கழுவியதால் 'பாபவிமோசன தீர்த்தம்' என்று பெயர் ஏற்பட்டது. எவனொருவன் செவ்வாய்க்கிழமையில் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தேவியை தரிசனம் செய்கிறானோ, அவன் விரும்பியதையெல்லாம் அடைகிறான்.

தேவியானவள், மகிஷாசுரனை கழுத்தில் இருந்த சிவலிங்கத்தைக் கைலாசேச்வரர் என்ற பெயருடன் ஸ்தாபனம் செய்து தன் தவத்துக்கு இடையூறு செய்தவர்களைத் தடுப்பதற்காக விநாயகரையும் எழுந்தருளச் செய்து பன்னிரண்டு ஆண்டுகள் கடுமையான தவமிருந்தாள். அதுமுதல் இந்த இடம் 'தேவீ தபோவனம்' என்று புகழுடைந்தது. பின்னர் கைலாசநாதர் திருவாய் மலர்ந்தருளியவாறு, தேவி இங்கேயே நிரந்தரமாகத் தங்கி, தரிசனத்துக்கு வருபவர்களின் குறைகளைத் தீர்த்து வைத்து, அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்'.

அம்மங்குடி கோயிலுக்குக் கிழக்குப்புறம் தான் பிரதான வாயில். ராஜகோபுரம் இல்லை. ஸ்ரீ கைலாசநாதர் சந்நிதிக்கு நேரே ஓர் அலங்கார வாயில் கட்டி சிவ-பார்வதி-விநாயகர்-முருகன் சிற்பங்களை அமைத்திருக்கிறார்கள். தென்புறம், ஸ்ரீ துர்க்கையம்மன் திருச்சந்நிதிக்கு நேரே, மதில் மீது துர்க்கையின் சிற்பம் செய்து வைத்திருக்கிறார்கள். வெளியிலிருந்து தரிசனம் செய்வதற்குச் சௌகரியமாகச் சுவரில் ஒரு ஜன்னல் வைத்திருக்கிறார்கள். சிற்பங்கள் எல்லாம் முடிவு பெறாத நிலையில் உள்ளன.

சுற்றிலுமுள்ள மதிற்சுவரை. முன்பிருந்த இடத்திலிருந்து ஆறடி முன்னுக்குக் கொண்டுவந்து பிராகாரத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். தென்புறம் ஒருசிறு நுழைவாயில் அமைத்து, இக்கோயிலில் துர்க்கைக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருப்பதைக் காட்டுவதற்காக இருபுறமும் சிம்மத்தை வைத்திருக்கிறார்கள்.

கோயிலுக்கு வடபுறம் பாபவிமோசனத் தீர்த்தக் குளம் இருக்கிறது.

முன் மண்டபத்தில், கிழக்குப் பார்த்து சுவாமி சந்நிதி. தெற்கு நோக்கி பார்வதியம்மன் எழுந்தருளியிருக்கிறாள். மூலக் கருவறையையொட்டி, துவாரபாலகர்கள் இருக்

கிறார்கள். அர்த்தமண்டபத்திற்கு வெளியே, நுணுக்க மான சிற்பங்கள் மண்டிக் கிடக்கும் கல் வாசற்படி இருக் கிறது. சுற்றிலும் இசை, நடனக் கலைஞர்களின் 'மினி' உருவங்கள் சிதறிக் கிடக்கின்றன. பொறுமையாகப் பார்த்தால், கலையுள்ளங்கள் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும்.

அதே மண்டபத்தில் ஸ்ரீ கைலாசநாதருக்கு தென்புறம் ஸ்ரீ துர்க்கையம்மன், மகிஷாசுரமர்த்தனியாக எழுந்தருளி யிருக்கிறாள். கிழக்கு நோக்கி, அதிலும் தனிச் சந்நிதி கொண்டு துர்க்கை எழுந்தருளியிருப்பது அபூர்வத்திலும் அபூர்வம். சுவாமி, துர்க்கை இரு சந்நிதிகளுக்கும் மண்ட பத்தில் தனித்தனி நுழைவாயில்கள் இருக்கின்றன.

அம்மனுக்கு எட்டுக் கைகள். நின்ற திருக்கோலம். இடதுபாதம் மகிஷனின் முதுகில் ஊன்றியிருக்கிறது. வலக் கையில் உள்ள சூலம் அவன் உடலில் பாய்ந்திருக்கிறது. இடது கீழ்க்கரம் மகிஷனின் சிரசைப் பற்றிக் கொண்டபடி இருக்கிறது. மகிஷனுக்கு மனிதத் தலை, மிருகத்தினுடைய உடல். அம்மனின் வலக்கால் அருகே சிம்மம் நின்றுகொண் டிருக்கிறது. இதர கரங்களில் சங்கு, பாணம், கேடயம், சக்கரம், வில், கத்தி முதலியவை வைத்திருக்கிறாள்.

தற்போது உள்ள அம்மனின் விக்ரகம் புதியது. பழைய விக்ரகம் சற்று சிறியது. அது கருவறையில் வடக்குப் புறம் வைக்கப்பட்டிருக்கிறது. வலக்கரத்தில் சக்கரம் பின்னப் பட்டுப் போயிருப்பதால், அதை அகற்றி புதிய சிலையை வைத்திருக்கிறார்கள். எப்போது என்று தெரியவில்லை. இரண்டு விக்ரகங்களுக்கும் சில வித்தியாசங்கள் இருக்கின் றன. முக்கியமாக, இதில் மகிஷனின் உடல் மனிதனுடைய தாகவும், தலை மிருகமாகவும் இருக்கிறது. அம்மனின் திருமுகமும், சிம்மத்தின் முகமும் சற்று திரும்பியிருக்கிறது.

பின்னமான இந்த விக்ரகத்திற்கு அபிஷேக, அர்ச்சனை. ஆராதனைகள் செய்யுமாறு சிலர் கேட்டுக்கொள்கிறார்

களாம். அவ்விதம் செய்வது முறையா என்பது விவாதத்திற்குரிய பிரச்னையாகும்.

அம்மங்குடி துர்க்காபரமேச்வரி பலருக்குக் குல தெய்வமாக இருந்து வருகிறாள். அவர்களெல்லாம் அவ்வப்போது வந்து தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்துகிறார்கள். நினைத்த காரியம் முடிவதற்காகப் பாலாபிஷேகம் செய்கிறார்கள். மணி குருக்கள் என்று அழைக்கப்படும் வெங்கடசுப்பிரமணி குருக்கள், அம்மன் சந்நிதியில் மந்திரித்துத் தரும் எலுமிச்சம் பழமும், ரட்சையும் விபூதியும் நற்பலன்களை அளிக்கின்றன என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

தென்பிராகாரத்தில், துர்க்கை சந்நிதியையொட்டினாற்போல் தபஸ் விக்னஹர விநாயகர் சந்நிதியிருக்கிறது. தனது தவத்திற்காக அம்மன் காவல் வைத்த கணபதி இவர். வழுவழுப்பான கருங்கல்லில் பளபளப்பாகத் திகழ்கிறார். தும்பிக்கை உடலோடு ஒட்டியிராமல், நமது கை உள்ளே நுழையும் அளவுக்கு இடைவெளியிருக்கிறது. இதே மாதிரியான ஒரு கல்லில் செய்யப்பட்டதுதான் புதிய துர்க்கையின் வடிவம். மண்டபத்திலுள்ள சூரியபகவானின் சிலையும் இந்தக் கல்லால் ஆனதுதான்.

கன்னிமூலை கணபதி இருக்கிறார். கருவறைக்குப் பின்னால் சுப்பிரமணியர் சந்நிதியிருக்கிறது. கஜலட்சுமி இல்லை. அதற்கான இடம் இருக்கிறது. பக்கத்தில் நந்தவனத்திற்காகச் சிறு இடம் ஒதுக்கி ஓரிரு பூச்செடிகள் வைத்திருக்கிறார்கள்.

முன் மண்டபத்தில் சரஸ்வதியின் சிலா வடிவம் இருக்கிறது. ஆலயத்தில் லட்சுமியும் இடம்பெற்றுவிட்டால், துர்க்கா, லட்சுமி, சரஸ்வதியுடன் கூடிய பரிபூரண சக்தி அருளாட்சி புரியும் ஆலயமாக ஆகிவிடும் இது.

மண்டபத்தில் சூரியனைத் தவிர, பைரவரும், சனீச்வரரும் இருக்கிறார்கள்,

வடக்குப் பிராகாரத்தில், நடராஜர் சந்நிதிக்குப் பின்புறம் பெரிய, பழைய ஒரு பாணலிங்கமும் நந்தியும் இருக்கின்றன. அவை இந்தக் கோயிலைச் சேர்ந்தவையா என்பது தெரியவில்லை. இதேபோல், முன்மண்டபத்திற்கு வெளிப்புறம் தனியே ஒரு சிவலிங்கம் இருக்கிறது.

சிலாலயத்திற்குத் தென்மேற்கில் பெருமாள் கோயில் இருக்கிறது. மூலவர் ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள், இதுவும் கிழக்குப் பார்த்த சந்நிதிதான்.

உற்சவமூர்த்திகள், ஸ்ரீ ராமர், சீதை, லட்சுமணர் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தி. இவற்றுக்கான மூலமூர்த்திகள். வடக்குப்புறம் உள்ள மேடையின் தென்புறம் பார்த்து எழுந்தருளியுள்ளன. சாதாரணமாக இரண்டு வெவ்வேறு மூல விக்ரகங்கள் ஒரே கருவறையில் இருப்பது வழக்கமில்லை. ஸ்ரீ ராமர் சந்நிதி முன்பு தனியாக இருந்திருக்கும் போலிருக்கிறது. அது சிலமாகி விட்டிருக்கலாம். பின்னர் அச்சிலைகளை இங்கு கொண்டு வந்து பிரதிஷ்டை செய்திருக்கலாம். அம்மங்குடியில் இராகதேவருக்கு (இராமனுக்கு) கோயில் ஒன்று இருந்திருக்கிறது என்பது சோழர்கள் கல்வெட்டுகளின் மூலம் தெரியவருகிறது.

ஆலயத்தின் மதிற்சுவரெல்லாம் இடிந்து, உள்ளே புதர் மண்டிக் கிடக்கிறது. முன்மண்டபச் சுவர்கள் விரிசல் விட்டு, அங்கேயே உடைந்து போயிருக்கின்றன. வெளியில் பின்னமான யோக நரசிம்மர் சிலையொன்று, தெற்கு நோக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அது ஏதோ ஒரு கிணற்றில் கிடைத்ததாம்.

சோழப் பேரரசர்கள் துர்க்கையம்மனை வழிப்பட்டதோடு அல்லாமல், தனிக்கோயில்களாகவும், சிவாலயங்களில் தனிச் சந்நிதிகளாகவும் அமைத்துப் பரமேச்வரியின்

அருளைப் பெற்றார்கள். தங்கள் வெற்றிக்காகவும், வெற்றியின் சின்னங்களாகவும் துர்க்கையை வெகுவாகக் கொண்டாடியுள்ளார்கள். அவ்வகையில் ஏற்பட்ட சந்நிதிகளில் அம்மன்குடி துர்க்காலயமும் ஒன்றாக இருக்கலாம்.

துக்காச்சி

அம்மன்குடிக்கு ஏழு கிலோமீட்டர் தென்மேற்கில் நாச்சியார் கோயில் - பூந்தோட்டம் பெருவழியில், 'துக்காச்சி' என்ற சிற்றூர் இருக்கிறது. 'துர்க்கை ஆட்சி' தான் 'துக்காச்சி'யாக மருவியிருக்கிறது என்று எண்ண இடமுள்ளது, அங்கு தற்போது துர்க்கைக்கு தனி சந்நிதி எதுவும் இல்லை. பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் சாமுண்டீச்வரி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அச்சிலை முன்பு எங்கிருந்தது, அது அந்தக் கோயிலைச் சேர்ந்ததுதானா என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரியவை. தற்போது சாமுண்டீச்வரி இருக்கும் மண்டபத்தின் மேற்சுவரையொட்டி, ஒரு பீடமும், துர்க்கையின் ஒடிந்த கரங்களும் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் பார்த்தால், மிக உயரமான அஷ்டபுஜ துர்க்கையொன்று அந்தக் கோயிலில் வழிபடும் தெய்வமாக இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. துர்க்கை கோயில் தனியாக, வெளிப் பிராகாரத்தின் வடகிழக்கில் இருந்திருக்க வேண்டும். அங்கு தற்போது பாழடைந்து, கற்பாறைகளெல்லாம் பெயர்ந்து விழுந்து, இடிபாடுகளுடன், புதர்களுக்கிடையே காணப்படும் பெரிய மண்டபத்திலிருந்து துர்க்கை ஒருகாலத்தில் ஆட்சிசெலுத்தியிருக்க வேண்டும். அந்த மண்டபத்தைச் சுற்றிலும்

காணப்படும் சிம்மம், யாளி போன்ற எண்ணற்ற சிற்பங்களைக் காணும்போது, சோழப் பேரரசன் தன் வெற்றியைக் கொண்டாட, துர்க்கைக்குத் தனிக் கோயில் அமைத்திருக்க வேண்டும் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

தற்போது அந்த மண்டபத்தினுள் நுழையவே பயமாயிருக்கிறது. எந்தக் கல் எப்போது தலைமீது விழுமோ என்று நடுங்கிக் கொண்டே உள்ளே சென்றால், கருவறை ஒரே இருட்டாக, 'அருகில் வராதே' என்று நம்மை எச்சரிக்கிறது. அங்கு பெரிய பள்ளம் தோண்டப்பட்டு, அந்த மண்ணும் கல்லும் வெளியே மலையாகக் குவிக்கப்பட்டுள்ளன. காணாமற் போன சிலையைத் தேடுவதற்காகச் சில வருடங்களுக்கு முன் போலீசார் இங்கு பூமியைத் தோண்டிப் பார்த்ததாக ஒரு பெரியவர் கூறினார்,

இந்தக் கோயில் 'தென்காளத்தி மகாதேவர் கோயில்' என்று சாசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திருபுவனம் ஆகிய சோழர்களின் கற்கோயில்களின் வரிசையில் இடம் பெறுகிறது இந்தப் பெருங்கோயில். ஸ்ரீ ஆபத்சகாயேச்வரரும் ஸ்ரீ சௌந்தரநாயகியும் எழுந்தருளியுள்ள இக்கோயில் ,விக்ரம சோழீச்சரம் என்ற பெயராலும் அழைக்கப்பட்டு வந்தது. முதற்குலோத்துங்கனின் புதல்வனான விக்கிரம சோழன் இங்கு திருப்பணிகள் செய்திருக்கிறான்.

''குலோத்துங்க சோழன் நல்லூர்' என்று அழைக்கப்பட்டு வந்த இந்த ஊர், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் 'விக்கிரம சோழ நல்லூர்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பெருமைமிகு வரலாற்றுச் சிறப்புகளுக்கு சிறிதும் சம்பந்தமில்லாமல், பரிதாபத்திற்குரிய ஓர் அழிவுச் சின்னமாகத் தற்போது நின்று கொண்டிருக்கிறது இந்தக்

கோயில். துருவித் துருவிப் பார்த்தால் அற்புதமான சிற்பங்கள் கண்ணில் படுகின்றன. முன் மண்டபத்தின் வெளிப்புறச் சுவரில் தென்புறம் காணப்படும் தாருகாவனத்து ரிஷிபத்தினிகளின் சிற்பவரிசை, உணர்ச்சி பாவங்கள் நிறைந்த உன்னதக் கலைச் களஞ்சியம். ஆனால், பிட்சாடன மூர்த்தியைத்தான் அங்கு காணவில்லை.

முன்மண்டபத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள நடன மாதர்களின் புடைச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவருகின்றன.

கருவறை கோஷ்டங்களில் தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீச்வரர், பிரமன், லிங்கோற்பவர், நடராஜர் ஆகிய கல் வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆடவல்லானின் கால் ஒன்று உடைந்திருக்கிறது. சிற்பச் செல்வம் சீரழிந்திருப்பதைக் காணும் நம் கண்ணிலிருந்து செந்நீர் கொட்டுகிறது.

மகாமண்டபத்தின் உட்பகுதியில் வடக்குப்புறம் சரபமூர்த்தியின் சிற்பம் ஒன்றிருக்கிறது. இதே போன்ற சிற்பம் திருபுவனத்திலும், தாராசுரம் கோயிலிலும் உள்ளது. இம்மண்டபத்தில் நர்த்தன விநாயகரும் இருக்கிறார்,

கிழக்குப்புறமுள்ள ராஜகோபுரம் பாழடைந்து போய்ச் செடி மண்டிக் கிடக்கிறது. சுற்று மதில்கள் இடிந்து விழுந்திருக்கின்றன.

உள்ளே நுழைந்ததும், மதிற்சுவருடன் இரண்டாவது கோபுரம் இருக்கிறது. கோயிலுக்குத் தென்புறம் ஒரு நுழை வாயில் இருக்கிறது. உட்பிராகாரத்தில், மேற்குப்புறம் எழுந்தருளியுள்ள கணபதி மிகப் பெரிய உருவில் வீற்றிருக்கிறார். சுப்ரமணியரும், லட்சுமியும் உள்ளனர். மதிற்சுவரை யொட்டி தெற்கேயும் மேற்கேயும் மண்டபங் இருக்கின்றன. கிழக்குப் பிராகார்த்தில் சூரியன், சந்திரன், சனீச்வரன் இருக்கிறார்கள்.

கோயில் நிலங்களைச் சாகுபடி செய்பவர்கள், விளைச்சலைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு ஆண்டவனைப் பட்டினி போடுவது இந்தக் காலத்தில் மட்டுமல்ல, அந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது என்பதற்கு இந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன. இத்தகவலைக் கூறும் குடவாசல் பாலசுப்ரமணியன், ஆட்சியாளர் எடுத்துக்கொண்ட மாற்று நடவடிக்கைகளும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்.

சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன், இவ்வூரைச் சேர்ந்த சேந்தமங்கலமுடையான் என்பவர் இக்கோயிலுக்கு நிலங்களை நன்கொடையாக அளித்தார். ஆனால், சாகுபடியாளர்கள் கோயிலுக்கு நெல் அளிக்காமல், ஏமாற்றித் தலைமறைவாக இருந்தார்கள். இந்நிலையைக் கண்ட சீராண்டான் முனையதரையன் எனும் அதிகாரி (காவல் காணியாளன்) முறைகேடாக நடந்து கொண்ட சாகுபடியாளர்களின் உரிமையை அகற்றி தானே நிலங்களுக்குப் பொறுப்பேற்று, நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி, கோயிலின் வருமானம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொண்டார். இந்த அதிகாரி கோயில் நிர்வாகங்களைக் கவனிக்கத் தனி நபர் ஒருவரை நியமித்ததோடு, ஆலய ஊழியர்களுக்கு வீடுகளும், பிற உரிமைகளும் அளித்தார்.

தற்போது நம் கோயில்களை நிர்வகிப்பவர்கள், முன் காலத்தில் எந்த தர்மத்தின் அடிப்படையில் கோயில்கள் நிர்வகிக்கப்பட்டு வந்தன என்பதை ஆழமாகவும் தெளிவாகவும் ஆராய்ந்தறிவது மிக மிக முக்கியம்.

துக்காச்சியில் உள்ளது போன்ற பழம் பெருமைகள் வாய்ந்த பாழடைந்த கற்கோயில்களைக் காணும்போது, வரலாற்றுச் சிறப்புக்களும், நம் முன்னோர்கள் பேணி வளர்த்த சிற்பக்கலையின் மேன்மையும் நம் சிந்தையில் புகுந்து பூரிப்படையச் செய்கின்றன. மகோன்னதமான

ஒரு கலாசாரத்தின் அழிவுச் சின்னமாக அவை நம் உள்ளத்தைக் குமுறவும் வைக்கின்றன.

ஆனால், மன்னர்கள் கட்டிய இத்தகைய கோயில் களைச் சீர்படுத்தி, திருப்பணிகள் செய்து, பழைய நிலை யில் பார்ப்பதென்பது நம்மால் முடிகிற காரியமல்ல. அதற் காக, பாதுகாக்கிறோம் என்ற பெயரில் இவற்றைக் காட்சிப் பொருளாக வைத்துவிடவும் கூடாது. ஆலயங் களைக் கலைக் கூடங்களாகவும் கட்டடக் கலையின் அற்புத சாதனைகளாகவும் மட்டும் கருதுவது நமது மரபுக்கு உடன்பாடான செயல் அல்ல. மக்களிடையே இறையுணர்வைத் தூண்டி, இறைவழிபாட்டை வளர்த்து, அதனால் அவர்கள் சித்தம் தூய்மையடைந்து நல்ல குடி மக்களாக வாழ வேண்டும் என்ற நோக்கத்துடனும்தான் அக்கால மன்னர்களும், மாமனிதர்களும் இத்தகைய பெருங்கோயில்களை எழுப்பியிருக்கிறார்கள்.

அத்தனை கலைகளையும் படைத்தவனுக்கே அர்ப் பணிக்கும் நோக்கத்தில்தான், இறைவன் உறையும் இல்லத் தைக் கலைக் களஞ்சியமாகவும் படைத்துத் தந்தார்கள் நம் முன்னோர்கள். கருவறையில் உறையும் பேரொளி யாலேயே ஆலயத்தை அலங்கரிக்கும் அத்தனை சிற்பங் களும் ஒளி பெறுகின்றன. சிற்பியின் கை வண்ணமும் கல்தச்சரின் கலைத்திறனும் மேன்மை பெறுகின்றன. அவர்களது படைப்புகளை வியக்கும்போது, அவர்களைப் படைத்த பரம்பொருளின் சக்தியையும் கருணையையும் வியக்கவும் அப்பேரருட் சக்தியுடன் நம் மனத்தை ஒன்றச் செய்து, உயர்ந்து, உய்யும் சாதனங்களாகக் கருதித்தான் நம் முன்னோர்கள் கோயில்களை நிர்மாணித்துத் தந்துள் ளார்கள். அதே நோக்கத்துடன்தான் சிற்பத் தேர்களையும் சித்திரத் தேர்களையும் வீதியில் ஓட விட்டார்கள்.

கலையுணர்வும், அழகுணர்ச்சியும் இறுதியில் தெய்வீக சந்நிதியில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இறைத்

தத்துவத்திலிருந்தும், கடவுள் பக்தியிலிருந்தும் தனியே பிரித்து, கலைகளைக் கலைகளுக்காகவே கொண்டாடுவதும், பாராட்டுவதும் நம் கலசாரப் பண்புகளுக்கு முற்றிலும் முரணானதாகும். நம் தெய்வமா கலைகர்கள் படைத்த சிற்பங்களையும் விக்ரகங்களையும் வெறும்'ஆர்ட் பீஸ்'களாக மட்டும் 'அப்ரிஷியேட்' செய்யும் பழக்கம் மேல் நாட்டு நாகரிகத்தின் வழி வந்த பாதிப்புகளில் ஒன்றாகும்

கிடைத்தற்கரிய கலைப் பொருட்களைக் கண்ணாகக் காப்போம். ஆனால், கலைகளின் பிறப்பிடமான தெய்வீக சக்தியை மறக்காமல் இருப்போம். அந்த சக்தியை ஆராதிக்கும் பழக்கத்தை விடாமல் தொடர்வோம். புராதன ஆலயங்களை முன்பிருந்த உன்னத நிலைக்கு மீண்டும் கொண்டுவர முடியவில்லையே என்று கலங்கத் தேவையில்லை. இடிந்த மண்டபங்களை மீண்டும் அதே போல் கட்ட முடியவில்லையே என்று ஏக்கமுறத் தேவையில்லை. நம்மால் கோயில் பிராகாரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள முடியாதா? சுவாமி சந்நிதியிலும் ஒரு எண்ணெய் விளக்காவது ஏற்ற முடியாதா? இரண்டு கால பூஜைக்காவது ஏற்பாடு செய்ய முடியாதா?

மனம் இருந்தால் முடியும். செய்ய முடியாத திருப்பணிகளை நினைத்து நினைத்துப் பெருமூச்சுவிட்டபடி வீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களைவிட, தினமும் எண்ணெய்த் திரியோடு அந்த ஆலயத்திற்கு செல்பவர்கள் பாக்கியம் செய்தவர்கள்.

இரண்டாம் கட்டளை

பாழடைந்துபோயிருக்கும் சோழகாலத்துத்துக்காச்சிக் கோயிலில் தொடர்ந்து பூஜைகள் நடந்துகொண்டிருப்பது மனத்துக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. ஆனால்,

அருகிலுள்ள இரண்டாம் கட்டளை என்ற கிராமத்தில் சிவன் கோயில் இடிந்து போய் இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பூஜையும் நின்று போயிருப்பதை அறிந்தபோது மனம் துடித்துப் போனோம். அக்கோயிலுக்குக் கொஞ்சம் நிலம் இருப்பதாகவும் ஆனால், அதிலிருந்து வருமானம் வந்து சேராத காரணத்தாலேயே இக்கோயிலுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது என்றும் கேள்வியுற்றபோது, நம் வேதனை பன்மடங்காயிற்று,

ஸ்ரீ கைலாசநாதர், காமாட்சி அம்மன் உறையும் அக் கோயிலைப் புதுப்பிக்க வேண்டுமானால் தஞ்சை மொழியில் 'ஜாடா' பிரித்துத் தான் கட்ட வேண்டும். பிராகாரம் ஒரே காடாக இருக்கிறது, முன்மண்டபம் இடிந்து சிதிலமாகியிருக்கிறது. கருவறை விமானத்தைச் செடி கொடிகள் மறைத்திருக்கின்றன.

இரண்டாம் கட்டளையில் உள்ள ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் ஐந்தாண்டுளுக்கு முன் கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ, ஒன்பது மாதங்களாக அங்கு பூஜை நின்று போய் விட்டதாம். அடப்பாவமே! 'லாக்கவுட்' ஆன தொழிற் சாலையைப் போல் கோயிலையும் மூடத் தொடங்கி விட்டார்களே! அதிலும் தஞ்சை மாவட்டக் கிராமங்களில் இப்படியொரு நிலை ஏற்பட்டதற்கு யார் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை! நாங்களும் உடன் வந்தவர்களும் அர்ச்சக இளைஞரிடம் கொஞ்சம் பணம் கொடுத்து, 'கோயிலை மூடிவைக்காதே. திறந்து வைத்து ஒரு விளக்காவது ஏற்றி வை. தரிசிப்பதற்காக உள்ளே நுழையும் யார் மனத்திலாவது பெருமாள் நுழைந்து, பூஜைக்கு ஏற்பாடு செய்து கொள்வார்' என்று கூறிவிட்டு விடைபெற்றோம்.

அம்மங்குடியிலிருந்து இரண்டாம் கட்டளை செல்லும் வழியில், பெருமாள் கோயிலுக்கருகிலுள்ள மாரியம்மன்,

கோயிலையும், குளக்கரையில் உள்ள 'சின்னப் பிள்ளை யாரையும், வயல்களின் நடுவிலுள்ள ஆகாச ஐயனாரையும் தரிசித்துக் கொண்டோம்.

புத்தகரம்

துக்காச்சிக்கும் இரண்டாம் கட்டளைக்கும், இடை யில், புத்தகரம் என்ற கிராமத்தைக் கண்டோம். கும்ப கோணம் என். காசிராமன் அவர்களின் ஊர் இது என்று உடன் வந்தவர் சொன்னார். அங்கே என்ன கோயில் இருக் கிறது என்று விசாரித்தபோது, முப்பது வருஷங்களுக்கு முன்னால் பாலாலயம் செய்யப்பட்டு, இன்னும் அப்படியே இருக்கும்ஓரிடத்தைக் காட்டினார்கள். பாலாலயம்செய்யப் பட்டிருக்கும் கட்டடத்தின் பக்கத்திலேயே பழைய கோயில் இருந்திருக்கிறது. அங்கு தற்போது காங்க்ரீட் அஸ்திவாரம் போடப்பட்டு, அப்படியே இருக்கிறது. மழைத் தண்ணீர் தேங்கிக் குளமாகக் காட்சியளித்தது. அங்குள்ள பெருமாள் கோயில் மண்டபம் விரிசல் விட்டிருந்தாலும் பூஜை நடப்ப தாக அறிந்தோம்.

புத்தகரத்தில் சிரித்த முகத்தோடு ஒரு அர்ச்சகரைக் கண்டேன். பெயர் கந்தசாமி குருக்கள். சிங்கப்பூரைச் சேர்ந்த வீரப்பன் என்பவர் அங்கு ஒரு பிள்ளையார் கோயில் கட்டியிருப்பதாகவும், பிள்ளையார் சதுர்த்தி அன்று அவர் பெரிய அளவில் அபிஷேக, ஆராதனைகள் செய்வதோடு, நிறைய பேருக்கு அன்னதானமும் செய்வ தாகவும் கூறினார். கோயில் பணிகளைக் கவனித்துக் கொள்வதற்காகக் குருக்களுக்கு மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் தருகிறாராம் வீரப்பன். அர்ச்சகர்களின் பட்டினி யைப் பற்றியே செய்திகள் விழும் என் காதுகளில் இந்தச்

செய்தி தேனாகப் பாய்ந்தது. கடல் கடந்து வாழும் அந்த நல்ல உள்ளத்தை நெஞ்சார வாழ்த்தினேன்.

நடார்

புத்தகரத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவி லுள்ளது நடார் என்ற கிராமம். அங்குள்ள ஸ்ரீமணி கண்டேச்வரர் சிந்தாமணி அம்மன் கோயிலில்தற்போது பூஜை நடைபெறுவதில்லை என்று கூறினார்கள். ஸ்ரீவரத ராஜப் பெருமாள் கோயிலில் பூஜை நடைபெறுகிறது.

மேலூர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய மடத்தில் இது வரை கைங்கரியம் செய்தவர்களும் இன்று வரை செய்து கொண்டு வருபவர்களும் பெரும் பாக்கியம் செய்தவர்கள். அவர்களில் மறக்க முடியாதவர்களில் ஒருவர், 'மேலூர் மாமா' என்றழைக்கப்பட்ட திரு. ராமச் சந்திர ஐயர். ஸ்ரீ சந்திரமௌலீச்வரர் பூஜை முறைப்பணிகளுக்கு ஆத்மார்த்தமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அவர் ஆற்றியுள்ள தூய தொண்டு, ஸ்ரீமடத்தின் சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. அவருண்டு, அவரது பணியுண்டு என்று பூஜை மேடை யிலேயே, ஸ்ரீ சந்திரமௌலீச்வரரின் திருவடி நிழலிலேயே எந்நேரமும் இருப்பார். இரவு அங்கேயேதான் உறங்கு வார். விடியற்காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந் திருந்து ஸ்நானத்திற்குச் சென்று விடுவார். 'ஹே ராமா!'

என்று அந்த நிசப்த வேளையில் அவர் குரல் கொடுக்கும் போது அது ஸ்ரீமடமெங்கும் எதிரொலிக்கும்.

பழுத்த பருவமானாலும், முதுகு வளைந்து போயிருந் தாலும், மங்கிய பார்வையில் ஓர் ஊடுருவலும் குரலில் அழுத்தமும் இருக்கும். மடி ஆசாரத்தில் யாராவது சிறிய தவறு செய்துவிட்டால் கோபாவேசமாகச் சீறுவார். சிம்ம கர்ஜனைதான். அச்சமயங்களில் சாட்சாத் நரசிம்மமூர்த்தி தான். வெண்தாடி மீசையுடன் அசப்பில் அப்படியேதான் இருப்பார்.

ராமச்சந்திர ஐயரின் ஊர், மதுரையை அடுத்துள்ள மேலூர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், ஒரு சமயம் திருநீலக்குடியிலிருந்து புதூர் செல்லும் போது, ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வலப்புறம் 'மேலையூர்' என்ற சிறு கிராமத்தின் பெயர்ப் பலகை கண்ணில்பட்டது. உடன் வந்த நண்பர் 'அதுதான் மேலூர் மாமா ஊர்' என்றார். அது நான் சற்றும் எதிர்பாராத செய்தி. ஸ்ரீ காஞ்சிப் பெரியவருக்கும் ஸ்ரீ சந்திரமௌலீச்வரருக்கும் உண்மையான ஊழியம் செய்து நற்கதி பெற்ற அந்தப் பாக்கியசாலியின் ஊர் இத்தனை அருகில் இருக்கிறது என்று அறிந்த போது மகிழ்ச்சியடைந்தேன்.

உன்னதபுரம் என்ற மேலூர் சிவாலயத்தில் நுழைந் ததும் ஓர் ஆச்சரியம். சுவாமியின் திருநாமம் சந்திர மௌலீச்வரர் என்று கேட்டதும் வியப்பிலாழ்ந்தேன். ஊரில் உறைபவர் ஸ்ரீசந்திரமௌலீச்வரர். ராமச்சந்திர ஐயர் உயிருள்ளவரை தொண்டாற்றியது ஸ்ரீசந்திரமௌலீச் வரருக்கு. எல்லோருக்கும் கிடைத்து விடக்கூடிய பாக்கி யமா இது?

சிறிய கோயில்தான். கிழக்குப் பார்த்த சந்நிதி. நல்ல முறையில் திருப்பணிகள் செய்யப்பட்டுச் செவ்வனே பாது காக்கப்பட்டு வருகிறது. அம்பாளின் திருநாமம், ஆனந்த

வல்லி. மேற்குப் பிராகாரத்தில் இரண்டு விநாயகர்கள், விச்வநாதர் - விசாலாட்சி, சுப்ரமணியர், சிவலிங்கம், அம்பாள், நாகர், கஜலட்சுமி முதலியவர்களும், வடகிழக்கு மூலையில் நவக்கிரகமும், கிழக்கே, மேற்கு நோக்கிய சனீச்வரர், பைரவர், சூரியன் முதலானோரும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

சிவாலயத்துக்குத் தென்புறம் ஸ்ரீராமச்சந்திர ஐயரின் இல்லம். வாரிசு இல்லாததால் அவர் அந்த இல்லத்தை ஸ்ரீமடத்துக்கு எழுதி வைத்துவிட்டார் என்று கேள்விப் பட்டேன். அவ்வீட்டுக்குள் சென்றோம். கிராம வீடு களுக்கே உரிய முற்றம், தாழ்வரத்துடன் கூடிய முன்கட்டு அமைந்த ஓட்டுக் கூரை வீடு. அங்கு தற்போது வசிக்கும் அன்பர், பின்கட்டில் கிடைத்ததாகக் கூறி ஒரு பழைய போட்டோவைக் கொண்டு வந்து காட்டினார். அது எந்த ஆண்டு எடுக்கப்பட்ட படம் என்று என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. காஞ்சிப் பெரியவர் நடுநாயகமாக அமர்ந் திருக்கிறார். பின்னால் சில சீடர்கள் நின்று கொண்டிருக் கிறார்கள். அவர்களில் யாரையும் எனக்குத் தெரிய வில்லை. வலது கோடியில் நின்றிருந்த ராமச்சந்திர ஐயரை மட்டும் அடையாளம்தெரிந்தது. சால்வையைப்போர்த்துக் கொண்டு, சுருட்டைத் தலைமுடியுடன், கண்களில் கூர்மை யான பார்வை பளிச்சிட, கையைக் கட்டிக் கொண்டு பவ்ய மாக நின்று கொண்டிருக்கிறார் அவர்.

மேலூரில் உள்ள பெருமாள் கோயிலில் மூலவர் ஸ்ரீ லட்சுமிநாராயாணப் பெருமாள். ஸ்ரீ ருக்மிணி – சத்திய பாமா உடனுறை ஸ்ரீநவநீத கிருஷ்ணன் உற்சவ மூர்த்தி.

சில வாரங்களுக்கு முன் புதூருக்கு அருகில் கோடி மங்கலம் என்ற கிராமத்திலுள்ள சிவாலயத்தைப் பற்றி எழுதியிருந்தேன். அதைப் படித்துவிட்டு ராமையா என்ற அன்பர் 'அக்கிராமத்துக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில்

'மேல அகலங்கண்' என்ற கிராமம் இருப்பதை உங்களுக்கு யாரும் சொல்லவில்லையா?' என்று சற்று மனத்தாங்கலுடன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கிராமம் இருக்குமிடத்தையும் தெளிவாக எழுதியிருந்தார் அவர்.

மேல அகலங்கண்

புதூரிலிருந்து வடமட்டத்துக்குப் பிரியும் பாதையில், நாட்டாறு வாய்க்கால் பாலத்தைக் கடந்து இடப்புறம் சென்றால் சோழ மங்கலம், வலப்புறம் சென்றால் மேல அகலங்கண். வடமொழியில் அதை விசால நேத்ரபுரி என்கிறார்கள். வாழைத் தோட்டத்தின் நடுவில் பழைமையான ஒரு சிறிய சிவன் கோயில் இருக்கிறது. தோட்டம் முழுவதும் சுவாமியின் சொத்துதான். சுவாமி அருணாசலேச்வரர். அபிதகுசாம்பாள், அஞ்சனாய தாட்சி என்று இரு அம்பாள்கள் இருக்கிறார்கள். மேற்குப் பிராகாரத்தில் கணபதியும் சுப்ரமணியரும். ஈசானியத்தில் கால பைரவரும் இருக்கின்றனர்.

ஆடுதுறை

தஞ்சை மாவட்டத்தில் குரங்காடுதுறை என்ற பெயரில் இரண்டு சிவத் தலங்கள் உள்ளன. காவிரிக்கு வடகரையில் உள்ளது, வட குரங்காடுதுறை. வாலி வழிபட்டது. திருவையாற்றை அடுத்த திருப்பழனத்திலிருந்து கிழக்கே நாலரை கிலோ மீட்டர். ஐயம்பேட்டையை அடுத்துள்ள திருச்சக்கரப்பள்ளிக்கு வடக்கே நாலரை கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. சுவாமியின் திருநாமம் ஸ்ரீ அழகுசடை

முடிநாதர்; அம்பாள், அழகுசடை முடியம்மை. திருஞான சம்பந்தர் தேவாரம் பெற்றது.

காவிரிக்குத் தெற்கே கும்பகோணம் — மாயவரம் பாதையில் திருவிடை மருதூருக்குக் கிழக்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது தென் குரங்காடுதுறை. சுருக்க மாக ஆடுதுறை என்றழைக்கப்படுகிறது. அப்பெயரிலேயே ரயில் நிலையமும் இருக்கிறது.

திருவிடைமருதூர், சூரியனார்கோயில், திருமங்கலக்குடி திருமாந்துறை, கஞ்சனூர், திருநீலக்குடி, திருவாவடுதுறை, சாத்தனூர் போன்ற தலங்களால் சூழப்பட்டது ஆடுதுறை. இது சுக்ரீவன் வழிபட்ட தலம். சுவாமியின் திருநாமம் ஸ்ரீ ஆபத்சகாயேச்வரர். அம்பாள், ஸ்ரீபவளக்கொடியம்மை. சம்பந்தரும் அப்பரும் பாடிப் பெருமை சேர்த்திருக் கிறார்கள்.

தில்லையம்பலத்தில் ஸ்ரீ நடராஜரின் ஆனந்த நடனத் தைக் கண்டு களிக்க முடியாத பல ரிஷிகளின் வேண்டு கோளுக்கிணங்கி, இத்தலத்தில் ஆனந்தக்கூத்து ஆடி அவர்களை ஆனந்தப் பரவசத்தில் மூழ்கச் செய்தார் ஆனந்தக் கூத்தன். அப்பகுதிக்கு நடராஜபுரம் என்று பெயர் தோன்றியது. ஆடுதுறை நடராஜபுரத்தில்தான் இருக்கிறது ஸ்ரீ ஆபத்சகாயேச்வரர் திருக்கோயில்.

கிழக்கு நோக்கிய திருச்சந்நிதி. கிழக்கிலுள்ள ராஜ கோபுரத்திற்கு நேரே திருக்குளம். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் 5, 6, 7 தேதிகளில் சூரியனின் கிரணங்கள் இத்தீர்த்தத்தில் பிரதிபலித்து நேரேசுவாமியின்மீது பட்டுத் தழுவுகின்றன. ஆதலால் இத்திருக்குளத்திற்கு சூரிய தீர்த்தம் என்று பெயர். இது சுவாமியால் தோற்றுவிக்கப் பட்டது. சுவாமி எழுந்தருளியிருக்கும் மட்டத்திற்கே அமையப் பெற்றிருப்பதால் மட்டக்குளம் என்ற பெயரும் பொருந்துகிறது.

இங்கு பவளக்கொடி அம்மனால் உண்டாக்கப்பட்ட அம்மன் குளமும் உண்டு. இது கோயிலுக்கு வடகிழக்கே உள்ளது. இது சந்திர தீர்த்தம் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது.

ஸ்ரீ ஆபத்சகாயேச்வரர் கோயிலில் சூரிய பூஜை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதம் மூன்று நாட்களும் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். கதிரவனின் கதிர்கள் பெருமானைத் தவழும் கண்கொள்ளாக் காட்சியைத் தரிசிப்பவர்களுக்கு சகல பாக்கியங்களும் ஏற்படுகின்றன.

சுக்ரீவன், தன் சகோதரன் வாலிக்குப் பயந்து கொண்டு இங்கு வந்து தஞ்சமடைந்து, இங்குள்ள பவழமல்லி மரத்தடியில் எழுந்தருளியிருந்த சிவலிங்கத்தை வழிபட்டு வந்தான். சிவசக்தி சொரூபமாக அங்குள்ள பவழமல்லி மரத்தையும் சேர்த்து சுக்ரீவன் வழிபட்டதால், சக்தி அம்சம் அம்மரத்தில் வியாபிக்கவே, இங்கு உறையும் அம்பிகைக்குப் பவளக்கொடி என்றும் ப்ரபாளவல்லி என்றும் காரணப் பெயர்கள் ஏற்பட்டன.

சுக்ரீவன் இங்கு ஒளிந்து கொண்டிருப்பதை அறிந்த வாலி, அவனைத் தேடி வந்தான். இச்செய்தி அறிந்த சுக்ரீவன், இந்த ஆபத்திலிருந்து தன்னைக் காத்தருளும்படி சுவாமியிடம் வேண்டினான். வாலி வரும் நேரம் பார்த்து சுவாமி சுக்ரீவனை அன்னப் பறவையாக மாற்றி விட்டார். சுக்ரீவனைக் காணாத வாலி ஏமாற்றத்துடன் திரும்பி விட்டான். அப்போது சுக்ரீவன் சுவாமியை நோக்கி, 'சர்வேச்வரனே, ஆபத்சகாயேச்வரனே, சரணம்' என்று அடிபணிந்தான்.

கோயிலின் முதல் வாயிலைக் கடந்து சென்று, இரண்டாம் வாயிலைக் கடக்கும் முன் நிமிர்ந்து பார்த்தால், சுக்ரீவன் சிவ பூஜைசெய்வதையும், சுவாமி அவனை

அன்னப்பறவையாக மாற்றியதையும் சிற்பக் காட்சியாகக் காணலாம்.

சிற்பங்களைத் தாங்கி, எழிலுடன் துலங்கும் ராஜ கோபுரத்தைக் கடந்து சென்றதும், துவஜஸ்தம்ப விநாய கரையும் ஸ்ரீ நந்திகேச்வரரையும் தரிசித்து விட்டு, மூத்த விநாயகரை வழிபடுகிறோம். வலப்புறம் பலளக்கொடி யம்மன் திருச்சந்நிதி. தெற்கு நோக்கி அமைந்திருக்கிறது.

வெளிப் பிராகாரம் வலம் வர முடியாத நிலையில் உள்ளதால் உட்பிராகாரத்தில் நுழைகிறோம். தென்புறம் நால்வர் சந்நிதியும், வடபுறத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்தி சந்நிதியும் இருக்கின்றன. வலம் வரும் போது. தட்சிணா மூர்த்தி, அகத்தியர், கன்னி விநாயகர், நடராஜர், செம் பியன் மாதேவியார் சிவ பூஜை செய்தல் ஆகிய சிற்பங் களையும், தென் மேற்கு மூலையில் மகாகணபதியையும், மேற்கில் ஆதி ஆபத்சகாயேச்வரர், ஆதி அம்பாள், சுக்ரீவன், காசி விச்வநாதர், ரிஷிகள் பூஜித்த சிவலிங் கங்கள், மகாலட்சுமி ஆகியோரின் சந்நிதிகளையும் காண் கிறோம்.

மேற்குப் பிராகாரத்தில் எழுந்தருளி இருக்கும் வள்ளி. தெய்வயானை உடனுறை முருகப்பெருமான், அருணகிரி யாரின் திருப்புகழ் பெற்றவர்.

வடக்குப் பிராகாரத்தில் பிரமன், விஷ்ணு, துர்க்கை, சிவதுர்க்கை ஆகிய அழகிய மூர்த்தங்கள் அமைந்துள்ளன. துர்க்கைக்கு மேற்கே புடைச் சிற்பமாக கங்காவிசர்ஜன மூர்த்தியும், கால பைரவரும் காட்சி தருகின்றனர். கங்கா விசர்ஜனமூர்த்தி இக்கோயிலின் கலைச் சிறப்புக்கு ஓர் அடையாளமாகும். இச்சிற்பத்திற்குக் கீழ்புறம் ஸ்ரீ சிவ துர்க்கையின் வடிவம் அமைந்துள்ளது.

இங்கு துர்க்கைக்கு வெள்ளிக்கிழமை இரவில் காரிய சித்தி பெற எலுமிச்சம் பழ தீபம் போடுகிறார்கள். ஒன்பது

வெள்ளிக்கிழமைகள் இவ்வாறு தொடர்ந்து தீபம் போட்டால், விவாக சம்பந்தமான தோஷங்கள் நீங்கப் பெற்று சுப விவாகங்கள் நடைபெறுகின்றன என்று கூறுகின்றனர்.

அடுத்துள்ள நடராஜர் சந்நிதியின் கீழ்ப்புறம் சூரியன், சனீச்வரர், சொர்ண பைரவர், நவக்கிரகங்கள், ஹரதத்தர் ஆகிய வடிவங்கள் இருக்கின்றன.

திருக்கோடிக்காவலில் கரை ஏற்றும் விநாயகரை வழிபட்ட அகத்தியர் ஆடுதுறைக்கு வந்து சொர்ண பைரவரை வழிபட்டதால் இங்கு பொன் கொழித்ததாம். அதனால்தானோ என்னவோ சம்பந்தப்பெருமான், "பொன் கொழிக்கும் புனல்சூழ் குரங்காடுதுறை" என்று பாடியுள்ளாரோ?

திருக்கோடிக்காவலையடுத்துள்ள கஞ்சனூரில் வைணவ குலத்தில் பிறந்து மகா சிவபக்தராகி, ஹரதத்த சிவாசாரியார் என்ற சிறப்புப் பெயர் பெற்ற மகான், நாள் தோறும்கஞ்சனூர், திருக்கோடிக்காவல், திருக்கோழம்பம், திருநீலக்குடி, ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை ஆகிய தலங்களை வழிபட்ட பின்னரே உணவருந்துவது வழக்கமாம். ஒரு நாள் ஹரதத்தர் ஆடுதுறை வந்தபோது காவிரியில் திடீரென்று நீர்பெருகி வெள்ளம் கரை புரண்டோடியது. அதனால் ஆற்றைக் கடக்க முடியாமல் அன்னார் இங்கேயே தங்கும்படி நேர்ந்து விட்டதாம். இந்தத் தலங்களைத் தரிசிக்க முடியாமல் போய் விட்டதே என்று ஹரதத்தர் மனம் வருந்தினார். அப்போது ஆபத்சகாயர், "கவலைப்படாதே. இன்று மற்ற தலங்களையும் தரிசித்த பலன் உனக்குக் கிடைக்கும்" என்று அசரீரியாகக் கூறவும், ஹரதத்தர் அன்று ஸ்ரீ ஆபத்சகாயரின் வழிபாட்டிலேயே மனச்சாந்தி பெற்றார். ஹரதத்தரின் உருவச்சிலை, கஞ்சனூரிலும் ஆடுதுறையிலும் மட்டும்தான் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அம்பாள் சந்நிதிக்கு எதிரிலுள்ள தூண் ஒன்றில் வானரம் ஒன்று சிவபூஜை செய்வதாக ஒரு புடைச்சிற்பம் இருக்கிறது. அது சுக்ரீவன் என்று ஒரு கருத்தும், ஆஞ்சநேய மூர்த்தி என்று மற்றொரு கருத்தும் நிலவுகிறது. தல புராணத்துடன் ஒன்றிய முதல் கருத்தை நம்மால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. பின்னதற்குத் தலபுராணத்திலோ வேறு புராணத்திலோ ஆதாரம் இருக்கிறதா என்பது தெரியவில்லை.

ஆடுதுறை ஸ்ரீ ஆபத்சகாயேச்வரரின் திருமேனி தரிசனம் நம் மனத்துக்கு சாந்திதரும் அருமருந்தாக அமைந் திருக்கிறது. நமக்கு ஆபத்து நேரிடும் காலங்களில் அவரை நினைத்துக் கொண்டாலே போதும், நம் துயர் துடைக்க ஓடோடி வருவார் என்ற நம்பிக்கை துளிர்க்கிறது. ஸ்ரீ பவளக்கொடியம்மையை வழிபடும்போது அவள் நிச்சயம் நம் வாழ்க்கைப் பாதையில் வழித்துணையாக இருப்பாள் என்று உள்ளத்தில் ஒரு தெம்பு பிறக்கிறது.

இக்கோயில் நித்திய பூஜைகளும் வார, மாத வழிபாடு களும் முறையாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருவ தைக் கேட்க மகிழ்ச்சியாயிருந்தது. பிரதி சங்கடஹர சதுர்த்தியன்றும் மூத்த விநாயகருக்குச் சிறப்பான பூஜை கள் நடைபெறுகின்றன. கிருத்திகை தோறும் வள்ளி, தேவசேனா உடனுறை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்குத் திருப் புகழ் பாடி வழிபாடு செய்கின்றனர். சனிக்கிழமை ஸ்ரீ அனுக்ரஹ ஆஞ்சநேயருக்குச் சிறப்பான வழிபாடும், மாதத்தில் ஒரு நாள் ஸ்ரீ சொர்ண பைரவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும், வெள்ளிக்கிழமைகளில் துர்க்கை வழிபாடும் நடைபெறுகின்றன. பங்குனி உத்தரத்தன்று ஒரு நாள் உற்சவமும் தீர்த்தவாரியும் நடைபெறுகின்றன.

சிவாலயத்தின் தென்புறம் ஸ்ரீவேங்கடாசலபதி கோயில் இருக்கிறது. இப்பெருமாள் கோயிலுக்கும் சிவன்

கோயிலுக்கும் இடையே ஸ்ரீமகா சாஸ்தா கோயில் அமைந்துள்ளது. ஹரிஹரபுத்திரன், ஹரிக்கும் ஹரனுக்கும் இடையே கோயில் கொண்டுள்ளது, இவ்வூரின் சிறப்புக்களில் ஒன்றாகும்.

ஸ்ரீ வேங்கடாசலபதி பெருமாள் கோயில் மண்டபத்தில் ஆழ்வார்கள் இருக்கிறார்கள். வடக்குப்புறம் தெற்குப் பார்த்து ஸ்ரீ ஆஞ்சநேயர் தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

சிவாலயத்திற்குக் கிழக்கே, திருமஞ்சன வீதியையடுத்து ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் ஒன்றுள்ளது. ஸ்ரீ ருக்மணி — சத்தியபாமாவுடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீ நவநீதகிருஷ்ணன் மூலவர். அங்கு லட்சுமி வேங்கடேச்வர யந்த்ரம் வைக்கப் பட்டுள்ளது.

மருத்துவக்குடி

ஆடுதுறையிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தெற்கில், திருநீலக்குடிக்கு முன்னே உள்ளது மருத்துவக் குடி கிராமம். அங்குள்ள ஸ்ரீ ஐராவதேச்வரர் — ஸ்ரீ அபிராமி ஆலயத்திற்குச் செல்லும் வழியில், பழைய நினைவுகளில் நிழலாடிய நிகழ்ச்சிகளில் ஆழ்ந்துவிட்ட என் மனம், கடற்கரையில் இறக்கிவிடப்பட்ட குழந்தையைப் போல் துள்ளிக் குதித்து அங்குமிங்கும் ஓடத் தொடங்கியது.

நினைவலைகள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் எட்டிப் பார்த்து எக்காளமிட்டன. விளையாட்டுச் சிறுவனாகப் பிள்ளையார் கோயில் தெரு மண்ணில் புரண்டு புளகிதம் அடைந்ததும், கிணற்றடித் தொட்டியில் குளித்துக் குதித்துக் கும்மாளமிட்டதும், ஜானகிப் பாட்டி

தயிராடை அணிவித்துத் தன் அன்புக் கரத்தால் வழங்கிய பழைய அமுதை அமிர்தமாக உண்டதும், கொள்ளுத் தாத்தா சாம்பசிவ சாஸ்திரிகள், ஆந்திராவிலிருந்து என் சின்ன அத்தை அனுப்பிவைத்திருந்த பங்கனபல்லி மாம்பழங் களைப் பொறுமையாக அரிந்து, பாரபட்சமற்ற முறையில் தன் கொள்ளுப் பேரன் பேத்திகளுக்குப் பங்கு போட்டுக் கொடுத்ததும்... சிறு வயது நினைவுகள் சுவையானவை!

அந்த உலகம்தான் எத்தனை சின்னது? அந்த மாடி வீடு, எதிர்ப்புறக் கொல்லை, தெருக்கோடியிலிருக்கும் பிள்ளையார் கோயில், மாலையில் பொழுது போவதற்கு ஆடுதுறை ரயில் நிலையம்... அங்கு போய் உட்கார்ந்து விட்டால் போதும், வரும் ரயிலையும் போகிற ரயிலையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு பொழுதைக் கழித்து விடலாம். சென்னையிலிருந்து திருச்சி செல்லும் ரயிலில் தெரிந்தவர்கள் யாராவது போவதைப் பார்த்துவிட்டால், அவருடன் இரண்டு வார்த்தைகள் பேசி விட்டால், ஜன்ம சாபல்யம்தான்! வீட்டுக்கு வந்ததும் கிடைத்தற்கரிய அந்த எதிர்பாராத சந்திப்பைப் பற்றிச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து போய் விடுவோம். எங்களைப் போலவே, கோடை விடுமுறையைக் கழிக்க, கும்பகோணத்திலி ருந்தும் புதுக்கோட்டையிலிருந்தும், திருநெல்வேலியிலி ருந்தும் உறவினர்கள் வந்து இறங்கி விட்டால், இமயத் தின் உச்சியில் குதூகலக் கொடி ஏற்றி வெற்றி விழா கொண்டாடுவோம். இரட்டை மாட்டு வண்டியில் அவர் களுடன் வீடு வந்து சேரும்வரை சின்னச் சின்னக் கதைகள் பேசிக்கொண்டு... ஆகா! 'அந்த நாளும் வந்திடாதோ' என்று பாடவேண்டும் போலிருக்கிறது.

சாம்பசிவ சாஸ்திரிகள் ஓர் ஆலமரம். பலப்பல விழுதுகள் விட்டு, அத்தனை குடும்பங்களையும் அத்தனை குஞ்சு குட்டிகளையும் அள்ளி, அரவணைத்து, அன்பைப் பொழிந்து இதமளித்து ஆதரித்த இதயமுள்ள பிரும்

மாண்ட ஆலமரம். கோடை விடுமுறை வந்து விட்டால் எங்கள் அத்தனை பேருக்கும் மருத்துவக்குடி மாடி வீடுதான் கோடைக்கானல்! பெரியவர்களும் குழந்தைகளுமாக முப்பது நாற்பது பேர் அந்த வீட்டில் வளைய வந்து கொண்டிருப்பார்கள். பொழுது புலர்ந்து பொழுது சாயும் வரை 'கஸின்'களின் ராட்சஸ ஆட்டி சகிக்கமுடியாது. எப்போதும் சமுத்திர இரைச்சல்தான். இத்தனை ரகளை யையும் எண்பதைக் கடந்த கிழவர் எப்படித் தாங்கிக் கொண்டார் என்பதை இப்போது நினைத்துப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. அவருக்காவது காது கேட்காது. பாவம், ஜானகிப் பாட்டி எப்படித்தான் அந்த வானர விஷமங்களுக்கு ஈடு கொடுத்தாரோ?

இளவயதிலேயே பட்ட மரமாகி, தனக்கென்று தனி யொரு குடும்பமோ வாழ்க்கையோ இல்லாமல், தந்தைக்குத் துணையாக இருந்து, தன் சகோதரிகள் குடும்பங்களின்மீது அன்பைக் கொட்டி, ஒரு சந்நியாசினி யாக வாழ்ந்து, சிரித்துச் சிரித்தே, உழைத்து உழைத்தே உடலைத் தியாக வேள்வியில் அர்ப்பணித்துக் கொண்ட தெய்வம் அவர்.

சுயபுராணமானாலும் என்னைப் பொறுத்தவரையில் இதுவும் ஒரு தல புராணமே! தெய்வங்கள் உறையும் இடங்கள் மட்டுமா ஆலயங்கள் ஆகின்றன? மனித தெய் வங்கள் வாழ்ந்த இடங்களும் ஆலயங்கள்தானே! என் தல யாத்திரையின் போது அன்னையாம் என் தெய்வத்தின் தந்தைவழிப் பாட்டனார் கல்யாணசுந்தரம் ஐயர் இல்லத் தைக் கதிராமங்கலத்தில் முதன் முறையாகக் கண்டு களிப் பெய்தினேன்; அன்னையின் தாய்வழிப் பாட்டனாரின் இல்லத்தை அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னர் மருத் துவக்குடியில் மீண்டும் கண்டு பூரித்துப் போனேன்.

மருத்துவக்குடி கிராமத்தில் நுழைந்ததும் நான் முதலில் சென்றது மறக்க முடியாத அந்த மாடி வீட்டுக்குத்

தான். கை மாறியிருந்தும் அது மாறாமல்; இருந்தது. முன்புறத் திண்ணையை மறைத்திருந்த மூங்கில் தட்டியைத் தவிர தோற்றத்தில் மாற்றமேயில்லை. உள்ளே சென்று பார்த்தேன். தற்போது அது ஓர் அரசு அலுவலகமாக மாறியிருந்தது. சுவாதீனமாக நெடுக நடந்தேன். ஒவ்வொரு இடமும் ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தது. கண்ணினின்றும் மறைந்து, என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வங்கள் புழங்கிய இடங்களைத் தூய சந்நிதிகளாகத் தரிசித்துக் கொண்டு, புனிதக் கண்ணீர் சிந்தையை நனைக்க, ஏதேதோ எண்ணங்களால் நெஞ்சம் கனக்க, வெளியே வந்தேன்.

தெருவின் மேற்குக் கோடியில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்றேன், அங்கு தங்கப்பா குருக்கள் வந்து சேர்ந்தார். எங்கள் குடும்பத்தை அறிந்தவராதலால் மறைந்த பெரியவர்கள் கோயிலுக்குச் செய்து வந்த கைங்கரியத்தை நினைவுப்படுத்தி அங்கு திருப்பணிகள் செய்யப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அந்தக் காலத்தில் ஜானகிப் பாட்டி தந்த எண்ணெயைக் கொண்டு வந்து குருக்களிடம் கொடுத்ததோடு சரி; அபிஷேகங்கள் இருந்தால், பிரசாதத்திற்காகக் காத்திருந்ததோடு சரி. உள்ளே எட்டிப் பார்த்ததே கிடையாது. தற்போது பழக்கம் காரணமாக உள்ளே எட்டிப் பார்த்தேன். நடுநாயகமாக மேடையில் ஸ்ரீமகாகணபதி எழுந்தருளியிருந்தார். அவருக்கு வலப்புறம் இரண்டு கணபதிகள் இருக்கக் கண்டேன். அக்கோயில் மும்மூர்த்திப் பிள்ளையார் கோயில் என்று அழைக்கப்படுவதாகவும் அறிந்தேன்.

அங்கிருந்து ஸ்ரீ நீலமேகப் பெருமாள் கோயிலுக்குச் சென்றோம். அதே பாதையில் கிழக்கே ஒரு பர்லாங் செல்ல வேண்டும். அந்தக் கோயிலில் கைங்கர்யம் செய்யும் இள அர்ச்சகர், நரசிங்கம் பேட்டையில் என்னைச் சந்தித்து.

இந்தக் கோயிலுக்கு வரும்படி ஆர்வமுடன் அழைத்திருந் தார். நல்ல வேளை, நான் சென்ற நேரத்தில் அவர் அங்கி ருந்தார். ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீ நீலமேகப் பெரு மானைத் தரிசனம் செய்து வைத்தார். அங்கிருந்த சிறிய விநாயகரை வழிபட்டோம். அவர் சக்தி வாய்ந்தவர் என்று அறிந்தோம்.

மண்டபத்தின் வலப்புறத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜயவீர ஆஞ்சநேய சுவாமி முற்றும் துறந்த முதிய துறவி யொருவரின் தூய்மை திருமேனியோடு துலங்க, முதிர்ந்த ஞானத்தின் வடிவமாக, ராமநாமமே தாரக மந்திரமாக, ஸ்ரீ ராமனின் சொரூப தியானமே யோக சாதனமாக, எளிமையும் பணியும் இணைந்த பண்புடன் பக்தியின் இலக் கணத்தைப் பறைசாற்றிக் கொண்டு தரிசனமளித்துக் கொண்டிருந்தார். எவரது திருவடித் தியானம் நம்மைத் தசரத குமாரனின் திருப்பாதங்களில் கொண்டு போய்ச் சேர்க்குமோ, அந்த பாகவதோத்தமரின் சந்நிதியில் நின்ற போது, திடீரென்று உலகெங்கும் சாந்தி நிலவி எல்லோரும் எல்லாமும் சௌக்கியமாக இருப்பது போன்ற ஒரு பேரமை தியை உணர முடிந்தது. கண்கள் ஈரமாயின.

சில மூர்த்தங்களுக்கு முன்பு நிற்கும் போதுதான் அந்த உணர்வு ஏற்படுகிறது. அவற்றில் இந்த மூர்த்தியும் ஒன்று, மருத்துவகுடிச் சந்தானம் வாத்தியாரின் மகன் (தற்போது நங்கநல்லூர்வாசி) ரமணி அவர்களின் பேருதவியால் இப் பிரதிஷ்டை நடைபெற்றது என்று கூறினார்கள். எப்படி யெல்லாமோ வாழ்க்கை நடத்தியவரை, தமது கடாட்சத் தால் ஆட்கொண்டு, ஆஞ்சநேய தாசனாக மாற்றிவிட்ட மாருதியின் மகிமையை முழுமையாக விளக்கும் ஆற்றல் பெற்ற சொல்லின் செல்வர் யார் உளர்?

தஞ்சை மாவட்டத்திலுள்ள பல புண்ணியத் தலங் களில் மருத்துவக்குடியும் ஒன்றாகும், அதற்கு வில்வாரண்யம்

என்ற புராணப் பெயரும் உண்டு. இத்தலத்தைப் பற்றி பிரமாண்ட புராணத்தில் பத்து அத்தியாயங்களும். கந்த புராணத்தில் பன்னிரண்டு அத்தியாயங்களும்! உள்ளன. இத்தலத்திற்கும் ஸ்வேதாரண்யம் என்ற திருவெண்காட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இத்தலத்தில் மருத்துவாசுரன் வசித்து வந்ததால் மருத்துவக்குடி என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணச் செய்தி. அந்த அசுரனை இங்கு உறையும் ஈச்வரன் திருவெண்காட்டில் தோன்றி வதைத்ததாகத் தல வரலாறு கூறுகிறது.

மார்க்கண்டேயர், நிருகர் என்றமகரிஷிக்குத் தெரிவித்தவாறு, சூதர், மருத்துவக்குடி தலத்தின் மகிமைகளை சௌனகருக்குக் கூறுவதைக் கேட்போம்:

காவிரியின் தென்கரையில் மத்யார்ஜுனமென்னும் திருவிடைமருதூருக்கு ஐந்து மைல் கிழக்கேயும், பாணபுரிக்குச சமீபத்திலும், கிழக்கு சமுத்திரத்திற்கு மேற்குப் பாகமாயும் தைலேச்சுரம் என்ற திருநீலக்குடிக்கு (தென்னலக்குடி) வடக்கிலும் 'வில்வாரண்யம்' என்ற சிவத்தலம் அமைந்திருக்கிறது.

அங்குள்ள வில்வ மரங்களைத் தரிசிப்பதாலேயே எல்லாப் பாவங்களும் நீங்கப் பெற்று, மனிதன் மங்கள சொரூபத்தை அடைகிறான். அந்த வில்வ மரத்தை ஒரு முறை வலம் வந்தால் பூமியைச் சுற்றி வந்த பலன் கிட்டுகிறது. அதன் நிழலில் அமர்ந்துள்ள சிவபெருமானுக்கு வில்வத்தால் அர்ச்சனை செய்தால், தானும் சிவனாக மாறி விடுகிறான். ஒரு நொடிப் பொழுது அந்தத் தலத்தில் வசிப்பவன் பிரும்மஹத்தி முதலான தோஷங்களிலிருந்து விடுபட்டு சிவனோடு இரண்டறக் கலந்து விடுகிறான். சந்தேகமில்லை.

ஒரு சமயம் பதஞ்சலிக்கும் வியாக்கிர பாதருக்கும்,பேய் மழையின் காரணமாக நீலோத்பல நகரத்திலிருந்து சிதம்

பரம் செல்ல முடியாமல் போய்விட்டது. அச்சமயம் வில்வாரண்யம் வெள்ளக்காடாகக் காட்சி தந்தது. இதைக் கண்ட இரு முனிவர்களும் சிதம்பரத்தை மனத்தில் எண்ணி எண்ணி மருகினார்கள். பொழுது விடிந்தால் திருவாதிரை நாள். இரவுக்குள் சிதம்பரம் செல்லுவது இயலாத செயல். 'ஆதிரை நாளில் சிற்சபேசனைத் தரிசிப்பது எப்படி?' என்று புரியாமல் இருவரும் வாடினார்கள்.

மறுநாள் காலை வில்வாரண்யத்திலிருந்தபடி வியாக்கிர பாதரும் பதஞ்சலியும் மானசிகமாக ஸ்ரீ நடராஜப் பெருமானை வழிபடலானார்கள். இதையறிந்த ஸ்ரீ நடராஜப் பெருமான், தேவர்களும், முனிவர்களும் புடை சூழ, வில்வாரண்யம் வந்து இருவருக்கும் நடனக்காட்சி தந்தருளினார். பின்னர் மூனிவர்கள் சந்திர புஷ்கரணிக் கரையில் சுவாமி நிரந்தர தரிசனம் தந்து கொண்டிருக்க வேண்டும் என்றும், அங்கு வசிப்பவர்களுக்கு சிவனருள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும், இத்தலம் சிதம்பரத்தை விட மேன்மை பெற்று விளங்க வேண்டும் என்றும் வேண்ட, பெருமானும் அந்த வரங்களைத் தந்தருளினார். அன்று முதல் அந்த இடம் நடராஜபுரம் என்று பெயர் பெற்றது, இந்த விவரங்களை ஆடுதுறை ஸ்ரீ ஆபத்சகாயேச்வரர் ஆலய வரலாற்றிலும் கண்டோம்.

மருத்துவக்குடியில் உறையும் பெருமான் ஸ்ரீ ஐராவதேச்வரர். அம்பிகையின் திருநாமம் ஸ்ரீ அபிராமி.

இங்குள்ள சிவபெருமானுக்கு ஸ்ரீ ஐராவதேச்வரர் என்ற பெயர் தோன்றக் காரணம் என்னவென்று நிருகர் மகரிஷி ஸ்ரீ மார்க்கண்டேயரைக் கேட்டார். அதற்கு மார்க்கண்டேயர் பதில் சொல்கிறார்...

ஒரு சமயம் இந்திரன், திக்பாலகர்கள் புடை சூழ, ஐப்பசி மாதம் சுக்ல பட்சம் தசமி திதியன்று வன்னிமரத்தைப் பூஜை செய்து விட்டு, தனது அமராவதிப் பட்டணத்திற்கும் புறப்பட்டுச் சென்றான். அதே சமயம் கைலாயத்

தில் துர்வாச மகரிஷி, சிவபெருமானை எருக்கு, செண்பகப் பூக்களாலே பூஜை செய்து விட்டு, பக்தியோடு கையில் ஒரு எருக்க மாலை எடுத்துக் கொண்டு வந்தார். எதிரில் வந்து வணங்கிய இந்திரனைக் கண்டு ஆசி வழங்கினார். பின்னர் கையிலிருந்த எருக்க மாலையை இந்திரனிடம் தந்து. ''முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தினால்தான் உனக்கு கிடைக்கிறது'' என்று கூறினார் துர்வாசார். அந்த மாலையை வாங்கி இந்திரன் ஐராவதத்தின் தலை மீது வைத்தான். மதம் பிடித்த அந்த யானை துதிக்கையால் மாலையை எடுத்து, அதைக் காலடியில் போட்டு மதித்தது. இதைக் கண்டு பெரும் கோபமடைந்த துர்வாசர், இந்திரனைப் பார்த்து, ''நீ ஐஸ்வரியம் இல்லாதவனாக ஆக வேண்டும்'' என்று கடுமையாகச் சபித்தார். பின்னர் ஐராவதத்தைப் பாாத்து, ''உன் உருவம் கறுத்துப் போய், பற்களெல்லாம் உதிர்ந்து, பூச்சி புழுக்களால் கடிக்கப்பட்டு, துர்நாற்றமுடையவனாகி, யானைக் கூட்டங்களால் விலக்கப்பட்டு காடுகளில் வசிப்பாயாக'' என்று சாபம் தந்தார்.

வெள்ளை யானையான ஐராவதம் இந்தச் சாபத்தைக் கேட்டு மனம் மிக வருந்தி, ''சிவபெருமானின் திருமேனியை அலங்கரித்த மாலையைக் கீழே போட்டு மிதித்தது பெரும் பாவமாகும். அறியாமல் செய்த இந்தக் குற்றத்தைப் பெரிய மனது பண்ணி தாங்கள் மன்னித்தருள வேண்டும்'' என்று மண்டியிட்டு மன்றாடிக் கேட்டுக் கொண்டது.

மனமிரங்கி, சாபவிமோசனத்திற்கான வழியைக் கூறினார் மகரிஷி: ''நீ மருத்துவக்குடி தலத்திற்குச் சென்று சந்திர புஷ்கரணியில் நீராடி, அங்குள்ள சிவபெருமானை வழிபட்டால் சாபம் நீங்கப் பெற்று பழைய நிலையை அடைவாய். ஸ்ரீ கிருஷ்ணன் இங்கு முறைப்படி ஸ்நானம், வழிபாடுகள் செய்துதான் ருக்மிணிதேவியை அடைந்தான். முன்னொரு காலத்தில் ஸ்ரீ ஆதிசேஷனும் இங்குள்ள

சிவபெருமானை ஆராதித்துத்தான்பூமிதேவியைத் தாங்கும் வலிமையைப் பெற்றான்.

ஸ்ரீ ஆதிசேஷன் ஸ்ரீ ஐராவதேச்வரரை வழிபட்டக் கதையைப் பற்றிசௌனகர் கேட்க, சூதர்சொல்லுகிறார்...

முன்பு ஒரு சமயம் சிவபெருமானை வழிபடுவதற்காக ஆதிசேஷன் கைலாயத்திற்குச் சென்றான். அச்சமயம் அவனுக்கு ஓர் அசரீரி கேட்டது:

''தற்போது சிவபெருமான் கைலாயத்தில் இல்லை. கதம்பவன நாயகியைத் திருமணம் செய்து கொள்வதற்காகத் தனது பரிவாரங்கள் புடைசூழ கதம்பவனம் சென்றிருக்கிறார். திருமணம் முடிந்து கைலாயம் புறப்படத் தயாராயிருக்கிறார். இக்கணம், நூறு கிளைகளோடும் நிறைய பூக்களோடும் விளங்குகின்ற கதம்ப மரத்தடியில் வீற்றிருக்கிறார். அங்குச் சென்று பெருமானைத் தரிசிப்பாயாக''

ஆதிசேஷன் மிகவும் ஆச்சரியம் அடைந்து, உடனே ஒரு குளத்தை உண்டு பண்ணி அதில் நீராடி, சிவபெருமானை முறைப்படி வழிபட்டார். மழ்ச்சியடைந்த சிவபெருமான், பூமியைத் தாங்கும் வரத்தை அளித்தார். அவர் கேட்டுக் கொண்டபடி அந்தத் தலத்திற்கு ஸ்ரீ ஆதிசேஷபுரம் என்ற பெயரும் ஏற்படலாயிற்று.

துர்வாசர் ஐராவதத்தைப் பார்த்து ''ஏ ஐராவதமே, காவிரிக்குத் தென் கரையிலும், சந்திர தீர்த்தத்திற்குத் தென்கரையிலும், யமதீர்த்தத்திற்கு வடக்கிலும், அகஸ்திய தீர்த்தத்திற்கு ஈசான பாகத்திலும் புஷ்ய ஐயனாருடைய முன் பாகத்திலும் சிவபெருமான் வீற்றிருக்கிறார். அங்கு சென்று சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பன்னிரண்டு வருஷங்கள் சிவபெருமானைப் பூஜித்தால் உனது கரிய உருவம் நீங்கப் பெற்று மீண்டும் வெள்ளை உருவத்தை அடைவாய். இந்திரனும் இங்கு வருவான். சித்ரா

பௌர்ணமி திதியில் இந்திரன் சிவபெருமானுக்குத் துவஜாரோகணத்துடன் ஒன்பது நாட்கள் உற்சவம் செய்து வைக்கப் போகிறான். உற்சவம் முடிந்த பின்னரே உன் சாபம் முழுமையாக நீங்கும்'' என்று கூறினார். பின்னர் ஐராவதம் பூலோகத்தை அடைந்தது.

துர்வாசரின் சாபத்தைப் பெற்ற ஐராவதம், உருமாறிய நிலையில் ப்ரயாகை, காசி முதலிய பல்வேறு புண்ணியத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு காவிரிக்குத் தென் கரையில் உள்ள பூகைலாசம் என்ற தலத்தை அடைந்தது. அங்கு வந்த உடனேயே அதன் உடலில் இருந்த துர்கந்தம் நீங்கியது. சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவிட்டுத் தனது துதிக்கையினாலேயே நீரைக் கொண்டு வந்து சிவ பெருமானுக்கு அபிஷேகம் முதலியவற்றைச் செய்தது. சகஸ்ரநாமம் முதலிய அர்ச்சனைகளைச் செய்து வழி பட்டது. இம்மாதிரி பன்னிரண்டு ஆண்டுகள் வழிபடப் போவதாகச் சங்கல்பம் செய்து கொண்டு ஒவ்வொரு தினமும் பூஜை முடிவில் இந்திரனின் வருகைக்காகப் பிரார்த்தித்துக் கொண்டது.

ஒரு நாள் சிவபெருமான் ஐராவதத்தின் முன் தோன்றி, ''ஐராவதமே, சிரத்தை மிக்க உன் பூஜையால் மகிழ்ச்சி யடைந்திருக்கிறேன். சித்திரை மாதம் உற்சவத்தை நடத்தி வைப்பதற்காக இந்திரன் இங்கு வரப்போகிறான். அவரோடு அவபிருதத்தன்று சந்திர புஷ்கரணியில் நீராடி னால் உனது சாபங்கள் நீங்கி பழைய நிலையை அடை வாய்'' என்று கூறியருளினார். உடனே ஐராவதம் பெரு மானிடம், நான் வழிபட்டதால் தங்கள் திருநாமம் ஐராவ தேச்வரர் என்று விளங்க வேண்டும். இந்த ஊர் ஐராவத க்ஷேத்திரம் என்று அழைக்கப்பட வேண்டும்'' என்று பிரார்த்திக்க, சிவபெருமானும் 'அவ்வாறே ஆகட்டும்' என்று ஆசி தந்தருளினார்.

முன்னொரு காலத்தில் மருத்துவான் என்ற அசுரன் மிகப் பெரிய சைன்ய பலத்தோடு திகழ்ந்தான். அவனுக்கு மேகவாஹன், மேகநாதன், மேகமாலீ, மகாமேகன் முதலிய ஐம்பது அமைச்சர்கள் இருந்தனர். அவர்கள் படைகளோடு சென்று அக்னி, நிருருதி, யமன் முதலிய தேவர்களைப் பிடித்துக் கட்டி வைத்து விட்டார்கள்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற ஈசான தேவர் போருக்குப் புறப்பட்டுச் சென்று மேகவாஹனைக் கொன்று மகாமேகனைச் சிறையிலிட்டார். பின்னர் இந்திரன் தன் சைன்யங்களோடு வந்து மருத்துவாசுரனோடு போரிட்டான். பயங்கரமான அஸ்திர யுத்தம் நிகழ்ந்தது. சில தேவர்கள் வாகனங்களை இழந்தனர். வேறு சிலர் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். இறுதியில் ஆதரவின்றித் தவித்த இந்திரனை மருத்துவாசுரன் பிடித்துத் தன் தேர்க் காலில் கட்டி சுவர்க்கலோகம் சென்றடைந்து சகல புவனங்களையும் தன் வயப்படுத்தி ஆட்சி செய்துவந்தான்.

இந்திரன் தன் புஜபல பராக்ரமத்தால் தேர்க் காலை உடைத்துவிட்டு, அசுரனிடமிருந்து தப்பித்துக் கொண்டு, பூலோகம் வந்தடைந்தான். பிரகஸ்பதியும் பூலோகம்வந்து, இழந்த ராஜ்ய லட்சுமியை தனது அரசன் மீண்டும் பெறுவதற்காகக் காவிரியில் ஸ்நானம் செய்து, நியமங்களோடு ஜபம் செய்யத் தொடங்கினார்.

இந்திரன் தன் பிடியிலிருந்து தப்பி ஓடிவிட்டதை அறிந்ததும், மருத்துவாசுரன் கடுங்கோபத்துடன். சைன்யங்களை அழைத்துக் கொண்டு பூலோகம் வந்து, கதம்பவனத்தில் தங்கி, இந்திரனைத் தேடுவதற்காகப் படைகளை நான்கு திசைகளிலும் அனுப்பி வைத்தான். துர்வாசரின் சாபத்தை நினைத்து மனம் வருந்திய இந்திரன், வில்வவனேச்வரரைக் குறித்துத் தோத்திரம் செய்து, 'வில்வவனேச்வரா, உன்னையே அடைக்கலம் அடைந்

திருக்கிறேன். அந்த அசுரனைக் கொன்று என்னைக் காப்பாற்றவேணும்'' என்று பிரார்த்தித்தான்.

சிவபெருமான் தனது தாசனான மாணி பத்ரனைப் போருக்கு அனுப்பி வைத்தார். விபூதி, ருத்ராட்சம் அணிந்தவனும், சிவ தீட்சை பெற்றவனும், ஆயுதங்களைத் தாங்கியவனுமான மாணிபத்ரன் மருத்துவாசுரனின் படைகளை அழித்தான். யானைகளைத் துவம்சம் செய்தான். அசுரனுக்குக் கோபம் தாங்கவில்லை. அத்தனை பலத்தையும் கொண்டு தன் கரங்களால் மாணிபத்ரனை மார்பில் தாக்கிக் கீழே சாய்த்தான். மயக்கமடைந்து தரையில் கிடந்த மாணிபத்ரனைப் பார்த்த வில்வவனேச்வரர், அகோரமூர்த்தியாய் உருவெடுத்து மருத்துவாசுரனை மார்பில் தாக்கினார். வலி பொறுக்க முடியாது அசுரன் சமுத்திரத்தை நோக்கி ஓட, பெருமான் துரத்திக் கொண்டு சென்று அசுரனை வதம் செய்தார். தேவர்கள் மலர் மழை பொழிய, கந்தர்வர்கள் இன்னிசை இசைக்க, அப்ஸரஸ் பெண்டிர் நடனமாட, சிவபெருமான் இந்திரனுக்கு இந்திர பதவியையும் அசுரனுக்குக் கைலாச பதவியையும் தந்தருளினார்.

மருத்துவாசுரன் இறந்த செய்தியை அறிந்து, தனது சாப நிவர்த்திக்கு இதுவே தக்க தருணம் என்று உணர்ந்து, பிரகஸ்பதியோடு மருத்துவ க்ஷேத்திரம் என்ற மருத்துவக் குடிக்கு வந்து சேர்ந்தான் இந்திரன். சிவபெருமானின் ஆசிகளைப் பெற்றுக்கொண்டு, கோபுரம், விமானம், பிராகாரங்கள் முதலிய திருப்பணிகள் செய்து, உற்சவத்திற்குத் தேவையான வாகனங்களையும் செய்து, சித்திரைமாதம். பிரும்மோற்சவத்தைத் தொடங்கி, பௌர்ணமியன்று சந்திர தீர்த்தத்தில் தீர்த்தவாரி செய்து வைத்தான். அடுத்து இந்திரன், ஐராவதம் சாபங்களைப் போக்கியருளினார். ஸ்ரீ ஐராவதேச்வரர். ஒவ்வோர் ஆண்டும் இம் மாதிரியே சிறப்பாக உற்சவம் செய்து வைப்பதாகக் கூறி

விட்டு இந்திரன் விடைபெற்று. அமராவதி பட்டணத்தை அடைந்தான். இந்திரன் தொடங்கி வைத்த உற்சவத்தை நடத்தி வைப்பவர்கள் சுவர்க்க லோகப் பதவியை அடைவார்கள் என்று தல புராணம் கூறுகிறது.

தட்சிண கைலாயம் என்றழைக்கப்படும் மருத்துவக்குடியில் உறையும் ஈச்வரனுக்குக் கைங்கரியம் செய்பவன் கைலாயத்தில் வெகு காலம் வசிப்பான் என்று கூறும் மார்க்கண்டேயர், ஒவ்வொரு கைங்கரீயத்துக்கும், ஒவ்வொரு தானத்துக்கும், ஒவ்வோர் அர்ச்சனைக்கும், ஒவ்வோர் அபிஷேகத்திற்கும், ஒவ்வொரு பலன் கூறுகிறார்.

மார்க்கண்டேயர் மேலும் மேலும் சொல்கிறார்; ஒரு சமயம் நாரத மகரிஷி பூலோகத்தில் ஐராவத க்ஷேத்திரத்தைத் தரிசிப்பதற்காக வந்தார். சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஜப, தியானங்களை முடித்துக் கொண்டு ஸ்ரீ ஐராவதேச்வரரை வழிபட்டார். பின்னர் பிரமதேவன் யாகம் செய்வதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து, நேரே சத்தியலோகம் சென்றார். அங்கு பரிவாரங்களோடு சபையில் வீற்றிருந்த தனது தகப்பனரை வணங்கி, மருத்துவக்குடி திருத்தலத்தின் மகிமைகளை விவரமாக எடுத்துரைத்தார்.

ஐராவதேச்வர தலத்தின் பெருமைகளை நாரதரிடமிருந்து கேட்டறிந்த பிரமன், அத்தலம் இருக்கும் திசை நோக்கி வணங்கினார். பின்னர், தனது பரிவாரங்களோடு புறப்பட்டு, வில்வவனம் வந்தடைந்து, சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அங்கு ஓர் அரசமரத்தை வைத்து அதனடியில் பஞ்சாட்சரத்தைப் பதினாயிரம் முறை ஜபித்தார். வேத மந்திரங்களால் துதி செய்தார். பெருமானுடைய உத்தரவைப் பெற்று, ஆவணி மாதம் பத்து நாட்கள் உற்சவம் நடத்தி வைத்தார். பின்னர் சித்திரை மாதத்தில்

யாகசாலையை நிர்மாணித்துப் பன்னிரண்டு வருஷங்கள் யாகம் செய்தார்.

அந்த யாக குண்டத்தைப் பின்னர் ஒரு திருக்குள மாக்கி, அதில் கங்கையைப் பிரவகிக்கச் செய்தார். அதுவே பிரும்ம தீர்த்தம் ஆயிற்று.

பிரமதேவனும் சரஸ்வதியும் அந்தப்புரத்தில் தனித்தி ருக்கும்போது, சந்திரனின் கிரணங்கள் உள்ளே நுழைந்த தால் பிரமதேவன் கோபம் கொண்டு, சந்திரன் ஒளியிழக்க வேண்டும் என்று சபித்தார். பின்னர் சாப விமோசனத்திற் காகச் சந்திரன் வேண்டிக் கொண்டபோது, வில்வாரண் யம் சென்று ஸ்ரீ ஐராவதேச்வரரை வழிபடும்படி பிரமன் பணித்தார். அவ்வாறே சந்திரன் ஐராவதேச்வரம் வந்து, சிவபெருமானுக்கு எதிரில் ஒரு குளத்தை ஏற்படுத்தி அதில் ஸ்நானம் செய்து பெருமானை வழிபட்டார். அப்போது சிவலிங்கத்திலிருந்து சுவாமி தோன்றி, சந்திரனுக்கு சாப விமோசனம் செய்தருளியதோடு, அந்தக் குளம் 'சந்திர தீர்த்தம்' என்றபெயரோடு விளங்கும் என்றும், அதில் ஸ்நா னம் செய்து தன்னைத் துதிப்பவர்கள் அனைத்து விருப்பங் களையும் அடைவார்கள் என்றும் வரமளித்து மறைந்தார் பின்னர்அகத்தியர் கூறியபடி, சந்திரன் மாசி மாதத்தில் ஒன்பதுநாட்கள் உற்சவம் செய்தான். அகத்திய முனிவர்சிவ பெருமானுக்கு வடக்கில் இருந்து கொண்டு தினந்தோறும் வழிபட்டு வந்தார். அதனால் இந்த சிவலிங்கத்திற்கு அகத்தியலிங்கம் என்ற பெயரும் உண்டு.

ஸ்ரீ ஐராவதேச்வரர், வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர்களுக்கு, நடனக் காட்சி தந்தருளிய சித்திரை திருவோணத்தன்று சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பெருமானின் ஆனந்த நடனத்தைத் தரிசிக்கிறவன் பெரும்பேறு அடைவான்.

புண்ய காலங்களில் சந்திர தீர்த்தத்தில் தர்ப்பணம் முதலியன செய்தால் பித்ரு தேவதைகள் திருப்தியடைகிறார்கள். சிவராத்திரியன்று அதில் ஸ்நானம் செய்து பெருமானை வழிபட்டு பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களை ஜபித்தாலும் ஸ்ரீருத்ரம் முதலிய வேத மந்திரங்களை ஜபித்தாலும் சிவரூபத்தையே அடைகிறான்.

கார்த்திகை சோமவாரத்தன்று சந்திர தீர்த்தத்தில் நீராடினால் செல்வத்தையும் நற்புகழையும் அடைவான். வெள்ளிக்கிழமை நீராடி, மாவு, வெல்லம், நெய், பால், பழம் இவற்றைக் கலந்து நிவேதனம் செய்தால் பிள்ளையில்லாதவன் பிள்ளைப்பேறு அடைவான். ஆடி மாதம், சுக்ல பட்சம் பஞ்சமிதிதியிலும், வைகாசிமாதம் சோமவாரம் அமாவாசையிலும், சித்திரை மாதம் குருவாரத்தோடு கூடிய பௌர்ணமியிலும், பௌர்ணமி, அமாவாசை, ஜன்ம நட்சத்திரம் இவற்றில் சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவன் பாவங்களிலிருந்து விடுபட்டு அஷ்ட ஐச்வர்யங்களையும் பெறுகிறான்.

குழந்தைச் செல்வமற்ற சகுந்தகன் சந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ ஐராவதேச்வரரையும் ஸ்ரீ அபிராமி அம்மனையும் வழிபட்டு. பிள்ளைச் செல்வம் பெற்றான். சுமுகி என்ற தாசி, தனது இசைச் செல்வத்தையும் வீணா கானத்தையும் அர்ப்பணித்து ஈச்வரன், அம்பாள் இருவரது கருணையும் பெற்று நற்கதியடைந்தாள்.

ராஜேசகரன் என்ற பாஞ்சால தேசத்து அரசன், வேட்டையாடியப்போது ஒரு பிராமணனைக் கொன்றதால் பிரும்மஹத்தி தோஷம் அவனைப் பற்றிக் கொண்டது. பின்னர் அவனது குருவான காச்யபர் கூறியபடி ஸ்ரீ ஐராவதப் பெருமானையும் ஸ்ரீ அபிராமியையும் வழிபட்டு. அந்த தோஷத்தைப் போக்கிக் கொண்டான்,

இத்தனை தல புராணப் பெருமைகள் பெற்ற மருத்துவக்குடி ஸ்ரீ ஐராவதேச்வரர் ஆலயத்தின் தற்போதைய

நிலை மிக மிகப் பரிதாபகரமானதாகும். செல்வச் செழிப்போடு வாழ்ந்து நொடித்துப் போன ஒரு குடும்பத்தினரின் பெரிய வீடு கவனிப்பாரற்று, கேட்பாரற்றுப் பாழாகிச் சிதிலமடைந்திருப்பது போல் இன்று அக்கோயில் காட்சியளிக்கிறது.

ஐந்து நிலை கோபுரம். செங்கல் கட்டடம். ஆனால் அங்கங்கே உடைந்து. உர்திந்து போயிருக்கிறது. செடிகள் மண்டிக் கிடக்கின்றன. ஏழு கலசங்களில் ஒன்றுகூட இல்லை.

உள்ளே செல்கிறோம். கொடிமர பீடம் மட்டும் இருக்கிறது; கொடி மரம் இல்லை. வலப்புறம், முன் மண்டபத்துடன் கூடிய அபிராமி அம்மன் திருச் சந்நிதி. அம்பாள் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறாள். மேற்கரங்கள் பத்மம், அக்ஷவாலைகளுடன் திகழ, கீழ்க்கரங்கள் வர், ஊரு ஹஸ்தங்களாக இருக்கின்றன.

உள்ளே நுழைந்தால் நூறுகால் மண்டபம். தென்புறம் மேல் தளம் பழுதாகி, கற்கள் உதிர்ந்து, மழைநீர் உள்ளே கொட்டிக் கீழேயெல்லாம் சேறாகியிருந்தது. அடுத்து, பதினாறுகால் மண்டபம். அதையடுத்து நடராஜர் மண்டபம். கர்ப்பக்கிரகத்தின் அடித்தளம் கருங்கல்லால் ஆனது. உள்ளே ஸ்ரீ ஐராவதேச்வரர் சுயம்பு லிங்கமாகக் காட்சியளிக்கிறார். மேலே கவசம் போடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நடராஜர் சந்நிதிக்கு, தென் பிராகாரத்திலிருந்து செல்ல தனி வாசல் இருக்கிறது. இந்த நுழைவாயிலை ஒட்டி ஒரு முன்மண்டபம் இருக்கிறது. மண்டபத்தின் வெளிப்புறத்தில் பதினாறுகால் மண்டபத்திலிருந்து அந்தராளம் வரை நிறைய கல்வெட்டுகள் இருக்கின்றன.

உள் அடங்கிய கருவறை கோஷ்டங்களில் கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர். பிரும்மா, துர்க்கை அனைவரும் இருக்கின்றனர்.

தட்சிணாமூர்த்தி சந்நிதியருகில் மகாகணபதி சந்நிதி யொன்று தனியாக உள்ளது. அதையொட்டினாற்போல் உள்ள சோமாஸ்கந்த மண்டபம் வெற்றிடமாயிருக் கிறது. அதே வரிசையில், அருணகிரியாரின் திருப்புகழ் பெற்ற சுப்ரமணியர். ஆடுதுறை சிவன் கோயிலில் உள்ளது போல், இங்கும் சுப்ரமணியர் சந்நிதியையும் லிங்கோத்ப வரையும் இணைத்து ஒரு மண்டபம் உள்ளது.

மேற்குப் பிராகாரத்தில், கிழக்குப் பார்த்து மூன்று சிறிய லிங்கங்கள் இருக்கின்றன. முதல் லிங்கத்தின் பாணம் மெல்லியதாக இருக்கிறது. அடுத்து ஓரடி உயரத்தில் ஒரு சின்ன லிங்கம், அதையடுத்து அரையடியில் ஒன்று. இவற்றைப் பற்றி விவரங்கள் கூற ஆலயத்தில் ஒருவரு மில்லை.

சண்டிகேச்வரர் சந்நிதிக்கு அருகில் கருவறைக்குச் செல்ல ஒரு நுழைவாயில் இருக்கிறது. நூறுகால் மண்ட பத்தின் வடகிழக்கு மூலையில் சுரங்கப் பாதை இருப்ப தாகக் கூறுகிறார்கள். அதையடுத்து மேற்கே பார்த்து, ஒரு லிங்கம், அம்பாள், பைரவர், சண்டிகேச்வரர், சூரியன் முதலானோர் இருக்கிறார்கள். பதினாறுகால் மண்ட பத்தின் வடமேற்கு மூலையில் தெற்குப் பார்த்து நவக்கிரக மேண்ட யிருக்கிறது.

தல புராணங்களில் கூறப்பட்டுள்ள பல தீர்த்தக் குளங்கள் தற்போது மறைந்து விட்டிருக்கின்றன. சில இடங்களில் அவை அசுத்தமான குட்டைகளாக மாறியிருக் கின்றன. இருப்பனவற்றையெல்லாம் பழைய நிலையில் காப்பாற்றுவது என்பது இயலாத காரியம். ஆனால், கோயிலுக்குள் இருக்கும் குளங்களையும், கிணறுகளையும், கோயிலையொட்டியுள்ள தீர்த்தங்களையுமாவது நல்ல முறையில் பராமறிப்பது நமது கடமையாகும்.

மருத்துவக்குடி தல புராணத்தில், சுற்றிலும் உள்ள பல தீர்த்தங்கள் குறிப்பிடப்பட்டிருகின்றன. சந்திர தீர்த்தம், பிரும்ம தீர்த்தம் தவிர, அக்னி தீர்த்தம், யம தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், காச்யப தீர்த்தம், கௌதம தீர்த்தம், மிருத சஞ்சீவினி தீர்த்தம் முதலியன உள்ளன.

சந்திர தீர்த்தத்துக்குத் தென் பக்கத்தில் அக்னி தீர்த்தம் அமைந்திருக்கிறது. அது அக்னி தேவனால் உண் டாக்கப்பட்டது. அதன் கரையில் வில்வ மரம் ஒன்று அக்னியால் வைக்கப்பட்டுள்ளது. அங்கு அன்னதானம் செய்வது மிகச் சிறந்தது. வைகாசி மாதம் வைசாக பஞ்சமி யன்றும், செவ்வாயோடு கூடிய அஷ்டமியன்றும் அக்னி தீர்த்த ஸ்நானம் செய்வது மிகச் சிறந்தது.

அக்னிதேவன் நிறைய நெய் உண்டதால் பாண்டு ரோகத்தால் பீடிக்கப்பட்டு, பின்னர் நாரத மகரிஷியின் ஆலோசனையின்படி ஐராவதேச்வரம் வந்து, சந்திர தீர்த் தத்தில் ஸ்நானம் செய்து, சிவனை வழிபட்டு ரோகம் நீங்கப் பெற்றார். சுவாமியின் ஆணையின்படி தன் பெயரில் ஒரு தீர்த்தத்தை உண்டு பண்ணினார். அந்த அக்னி தீர்த்தம் கோயிலுக்குத் தென் கிழக்கில் அமைந்திருக்கிறது.

அக்னி தீர்த்தத்துக்கு மேற்குப் பாகத்தில் யமனால் அமைக்கப்பட்ட யம தீர்த்தம் விளங்குகிறது, அங்குள்ள ஒரு பெரிய ஆலமரம் யமனால் வைக்கப்பட்டது. கிருஷ்ண சதுர்த்தசியிலும் அஷ்டமியிலும் ஸ்நானம் செய்து ஆராதிப்பது மிகச் சிறந்தது. புரட்டாசி அமாவாசை ஸ்நானத்துக்கு உகந்த தினமாகும்.

சிவபெருமானின் திருக்கல்யாணக் கோலத்தைக் கண்டு ஆனந்தித்த அகஸ்தியரின் வேண்டுக்கோளுக்கிணங்கி, தட்சிண கைலாயம் என்ற ஐராவதேச்வரத்தில் சுவாமி ஏற்படுத்திய தீர்த்தமே அகஸ்திய தீர்த்தம். கைலாயத்தி லிருக்கும் புஷ்பத் தோட்டத்திற்குக் காவலாளியான

மாணிபத்ரனை அழைத்து அவனுக்கு 'புஷ்ப சாஸ்தா' என்று பெயர் சூட்டி அத்தீர்த்தத்துக்குக் காவலர்கவும் வைத்தருளினார்.

பிரும்ம தீர்த்தம் பெருமானுக்கு வட மேற்குப் பாகத்தில் விளங்குகிறது. அதன் கரையில் புன்னை மரம் இருக்கிறது. ஆடி மாதம் சதுர்த்தசியன்று இந்ததீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது மிகச் சிறந்தது.

பிரும்ம தீர்த்தத்துக்கு முன்புறத்தில் காச்யப தீர்த்தம் இருக்கிறது. அதன் கரையில் காச்யப மகரிஷி வில்வ மரம் ஒன்றை வைத்திருக்கிறார்: பஞ்சமியோடு கூடிய செவ் வாய்க்கிழமையன்று அதில் நீராடினால் எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் நீங்கும்.

பிரும்ம தீர்த்தத்துக்கு முன் பாகத்தில் ஒரு பாணம் விழும் தொலைவில், பெருமானுக்கு வடக்கில் கௌதம தீர்த்தம் அமைந்திருக்கிறது. அதன் கரையில் நெல்லி மரம் விளங்குகிறது.

மாஹிஷ்மதி என்ற தேசத்தில் தேவவிருதன் என்ற அந்தணப் பண்டிதர் இருந்தார். அவருக்குச் சத்யவிருதன் என்ற பதினாறு வயது மகன் ஒருவன் இருந்தான். காவலர் என்ற மகரிஷியிடம் வேதாத்யயனம் செய்து வந்த அவன், தனது குருவின் யாகத்திற்குச் சமித்து தேடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். அங்கு புரசமரத்தில் குச்சிகளை உடைத்துக் கொண்டிருந்த போது பாம்பு ஒன்று சத்ய விருதனைத் தீண்டி விடவே, அவன் உயிரிழந்தான். செய்தி யறிந்த காவல மகரிஷி செய்வதறியாது திகைத்தார். பல முனிவர்கள் அவரிடம் வந்து, காவிரியின் தென்கரை யிலுள்ள வில்வாரண்யத்தில் இருக்கும் சேஷ தீர்த்தத்தில் சீடனை ஸ்நானம் செய்வித்தால் உயிர் பெற்று விடுவான் என்று கூறினார்கள்.

அந்த சேஷ தீர்த்தத்தின் சிறப்பென்ன?

முன்னொரு சமயம் கார்க்கோடகன் என்ற நாகராஜன் நள மகாராராஜாவைத் தீண்டி ராஜத்துரோகத்துக்கு ஆளானான். பின்னர், பூமியில் பல தலங்களில் சுற்றிவிட்டு, ஐராவதேச்வரம் வந்து சேஷ தீர்த்தத்தில் நீராடி ராஜத் துரோகத்தைப் போக்கிக் கொண்டான்.

காவல் முனிவரும் தன் சீடன் சத்ய விருதனின் சடலத்தைக் கொண்டு வந்து, சேஷ தீர்த்தத்தை எடுத்து அதன் மீது தெளித்தார். அப்புனித நீர் அதன்மீது பட்ட உடனேயே அவன் உயிர் பெற்று எழுந்து விட்டான். அது முதல் அத்தீர்த்தத்துக்கு மிருத சஞ்சீவினி என்ற பெயர் ஏற்பட்டது. காவலர் தம் சீடர்களோடு சில காலம் வில்வாரண்யத்தில் தங்கி, ஸ்ரீ ஐராவதேச்வரரை வழிபட்டுவிட்டுத் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

சிவராத்திரி, ஆவணி மாதம் சுகலபட்சம் சதுர்த்தி, மார்கழி மாதம் சப்தமி, வைகாசி மாதம் அட்சயம், கார்த்திகை மாத நான்கு சோம வாரங்கள் ஆகிய நாட்களில் சஞ்சீவினி தீர்த்தத்தில் நீராடுவது சிறந்த பயன் அளிக்கும்,

ஐராவதேச்வரம் என்ற மருத்துவக்குடியின் தல புராணத்தையும் இதர சிறப்புக்களையும், வியாச பகவானிடமிருந்து தெரிந்து கொண்ட மார்க்கண்டேய மகரிஷி, அதை நிருகர் என்ற அரசனுக்கு எடுத்துரைக்க, அதைக் கேட்ட மன்னன் சிவதீட்சை பெற்று ஸ்ரீ ஐராவதேச்வரப் பெருமானை வழிபட்டான். தனது ராஜ்யத்தில் பாதியைப் பெருமானுக்குக் கொடுத்தருளினான். அங்கு பல யாகங்களைச் செய்து, பின்னர் தன் ராஜ்யத்தை அடைந்து, தன் குமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து, சிவபதவியுடைந்தான்.

மருத்துவக்குடி தலத்தைப் பற்றி ஸ்ரீ பிரமாண்ட புராணத்திலும் கந்த புராணத்திலும் கூறப்பட்டுள்ள விவரங்களை முன்னர் கண்டோம், திருவெண்காட்டுத் தல புராணத்திலும், வில்வாரண்யத்தின் பெருமைகள் பேசப் படுகின்றன.

காமாட்சிக்குக் காஞ்சிபோன்றும், மீனாட்சிக்கு மதுரை போன்றும், அபிராமிக்கு மருத்துவக்குடி என்று நாரதர் கூறியதாக மார்க்கண்டேய புராணத்தில் காணப்படுகிறது.

மருத்துவக்குடி ஸ்ரீ ஐராவதேச்வரர் ஆலயத்தில் உறையும் முருகனை ஸ்ரீ அருணகிரியார் வழிபட்டுத் திருப் புகழ் பாடியுள்ளார் என்று கூறிய ஸ்ரீ கருமாரிதாசர், 'கருத்திதப்படு காமா லீலைகள்' என்று தொடங்கும் அத் திருப்புகழை என்னிடம் காட்டினார். ''திருப்புகழ் இருக்கும் கோயில்களுக்கு நிச்சயம் தேவாரப் பாடல்கள் இருக்கவேண்டும். எனவே மருத்துவக் குடியும் பாடல் பெற்ற தலமாகத்தான் இருந்திருக்க வேண்டும். பெரு மானின் அருளாலும் அம்பாளின் கருணையினாலும் அவை நமக்குக் கிடைக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப் போம்'' என்று கூறினார் அவர்.

அபிராமி அம்மனின் கடைக்கண் கருணையால் மருத்து வக்குடியின் மகிமை உலகெங்கும் பரவி அத்திருக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று விரைவிலேயே குடமுழுக்கும் நிறைவேறவேண்டும்.

கோனேரிராஜபுரம்

தமிழகத்தில், முக்கியமாகத் தஞ்சைத் தரணியில் பல சிற்றூர்களும், கிராமங்களும் புகழடைவதற்கு இசை,

நாட்டியக் கலைஞர்கள் புண்ணியம் கட்டிக் கொண்டார்கள். அந்த ஊர்களின் பெயர்கள் காதில் விழும்போதெல்லாம் அவை நமக்கு ஏற்கனவே பழக்கமான ஊர்கள் போல் பிரமை தட்டும். அந்த ஊருக்கோ கிராமத்திற்கோ செல்லும் போது, நம்மையுமறியாமல் ஓர் அந்நியோன்னியமும் அசாதாரண சொந்த பந்த உணர்வும் ஏற்பட்டு விடும். மகாராஜபுரம், செம்மங்குடி, குழிக்கரை, திருவீழிமிழலை, கீரனூர், வழுவூர், பந்தணைநல்லூர், திருப்பாம்பரம், வலங்கைமான், நாச்சியார் கோயில், செம்பனார் கோயில், உமையாள்புரம், முடிகொண்டான், திருக்கோடிக்காவல், மெலட்டூர், தஞ்சாவூர், ஊத்துக்காடு, சூலமங்கலம், திருவையாறு, மாங்குடி, இஞ்சிக்குடி, திருவிடைமருதூர், திருப்பூந்துருத்தி, ஆலங்குடி, நீடாமங்கலம், பாபநாசம், திருவாவடுதுறை, கும்பகோணம், ஸ்ரீவாஞ்சியம், பூதலூர்... கோனேரிராஜபுரம் இன்னும் எத்தனை எத்தனையோ...

நாங்கள் கோனேரிராஜபுரம் ஊருக்குள் நுழையும் வரை சரியான பாதையில்லாமல் சற்று அவதியுற்றோமே தவிர, கிராமத்திற்குள் நுழைந்ததும் ஒரு சிறு டவுனுக்குள் வந்து விட்ட உணர்வே ஏற்பட்டது. அழகிய நீண்ட வீதிகள். திண்ணை வைத்த பெரிய பெரிய மாடி வீடுகள்... அது ஒரு கிராமம் என்றே மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஒரு காலத்தில் செல்வம் கொழித்து, செல்வாக்கோடும் சற்று நியாயமான செருக்கோடும் வாழ்ந்த கிராமம் என்பதற்கான அடையாளங்கள் தெரிந்தன.

ஆலயத்தில் உச்சிகால பூஜைக்கான மணியோசை காற்றில் மிதந்து வந்து காதில் ஒலிக்க, ஓடோடிச் சென்று தரிசித்தோம்.

அத்திருத்தலம் இருக்குமிடத்தையும், தல புராண வரலாற்றுப் பெருமையையும் சுருக்கமாக அறிந்து கொண்டு பின்னர் ஆலயத்திற்குள் செல்வோம்.

திருவிடை மருதூருக்குத் தென் கிழக்கில் ஆறு மைல் தொலைவில் உள்ளது கோனேரிராஜபுரம். கும்பகோணத் திலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்துப் பாதையில் புதூர் என்ற ஊருக்குத் தெற்கில் ஒரு சாலை பிரிகிறது. அது வடமட்டம் செல்கிறது. அச்சாலையில் ஒரு கிலோ மீட்டர் சென்று இடப்புறம் திரும்பி கோனரிராஜபுரத் திற்குச் செல்ல வேண்டும்.

இதற்குப் புராணப் பெயர் பூமீச்வர க்ஷேத்திரம். இதன் மகிமைகளை ஸ்ரீ நந்திகேச்வரர், சனத்குமாரருக்குக் கூறுவ தாக ஸ்காந்த புராணத்தில் பத்து அத்தியாயங்கள் அமைந் திருக்கின்றன.

அசுரனால் பாதாள லோகத்திற்கிக் கொண்டு செல்லப் பட்ட பூமிதேவியை, மகாவிஷ்ணுவாக உருவெடுத்து மீட்டு வருகிறார். அன்னைக்கு ஷடாட்சர உபதேசம் செய்து ''நீ ஸ்திரமாயிருக்கும் பொருட்டு சிவபெருமானைப் பூஜை செய்'' என்று பணிக்கிறார். அதற்காக அவள் தேர்தெடுக்க வேண்டிய தலத்தையும் குறிப்பிடுகிறார். அதன்படி, காவிரி யின் தென்கரையில் ஓர் அரசமரமும் அதன்கரையில் பிரும்ம தீர்த்தக் குளமும் இருக்கக் கண்டு, அந்தத் தீர்த்தத்தில் நீராடி அங்கு வசிக்கும் வேதவிற்பன்னர்களிடம், தான் வந்தகாரியத்தை விண்ணப்பித்துக் கொள்கிறாள். பின்னர். அவர்களது ஆதரவோடும், ஆசியோடும் குளத்திற்குத் தென்புறம் ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, விச்வ கர்மாவை அழைத்து, ''சிற்பக் கலையில் உனக்குள்ள திறமையனைத்தையும் இந்தக் கோயில் நிர்மாணத்தில் காட்டு', என்று பணிக்கிறாள்.

விச்வகர்மா அவ்வாறே. கோபுர, பிராகார, கர்ப்பக் கிரக, மகாமண்டபங்களோடு ஓர் ஆலயத்தை நிர்மாணிக்க, பூமிதேவியானவள், வைகாசி மாதம், பஞ்சமியும் ரோகி ணியும் குருவாரமும் விருஷப லக்னமும் கூடிய சுபயோக சுப வேளையில், சகல லட்சணங்களும் பொருந்திய உமா

மகேச்வரரையும், உமாதேவியாரையும் மந்த்ர பூர்வமாகப் பிரதிஷ்டை செய்தாள். பூமிதேவியால் ஈச்வரன் பிரதிஷ்டை செய்யப்பட்ட அத்தலம் பூமீச்வரர் ஆயிற்று.

சிவபெருமான் பூமிதேவியின் முன் தோன்றி, ''பாவ மற்றவளே, உனக்கு இனி அசுரர்களால் தொந்தரவு இருக்காது. மேரு முதலான மலைகள் உனக்கு ஆதாரமாயிருக்கும். இந்தத் திருத்தலத்தின் கிழக்கில் நீ ஒரு தீர்த்தத்தை உண்டுபண்ணு. என் தலையில் இருக்கும் கங்கையும் இன்னும் அநேக புண்ணிய தீர்த்தங்களும் அதில் வந்து கலக்கும். பிருஹஸ்பதி முதலானோர் அதில் ஸ்நானம் செய்யட்டும். மூன்று வேளையும் அந்தத் தீர்த்தத்தில் நின்று, பூமி: பூம்னா' என்ற மந்திரத்தை ஜபித்து ஸ்நானம் செய்கிறவர்களுக்கு முக்தி நிச்சயம். வைகாசி மாதம் பௌர்ணமியும் விசாக நட்சத்திரமும் கூடியிருக்கும் போது இதில் ஸ்நானம் செய்வது கோடி கோடி பலனைத் தரும். இங்கு ஒரு மாதகாலம் நீ ஸ்நானம் செய்து, பிருஹஸ்பதி சொன்னபடி எனக்கு நீ முறையாகப் பூஜை செய்து வந்தால் எனக்கும் தேவிக்கும் எல்லையற்ற மகிழ்ச்சிடாகும். இந்தத் தீர்த்தத்தின் கரையில் நீ இதன் அதிதேவதையாயிரு. உன் உத்தரவு பெற்றே எல்லோரும் இங்கு ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்றார். பூமிதேவியும் அவ்வாறே எல்லாவித லட்சணங்களும் பொருந்திய ஒரு குளத்தை விச்வகர்மாவின் மூலம் நிர்மாணித்தாள். சிவபெருமான் கூறியபடியே முறைப்படி ஸ்நானம் செய்து, தானங்கள் செய்து பூஜைகள் செய்தாள்.

பின்னர் பூமிதேவி,

'நமோ நமஸ்தே ஜகதீச்வராய சிவாய லோகஸ்ய
ஹிதாய சம்பவே.

என்று தொடங்கும் ஐந்து சுலோகங்களின் மூலம் சிவபெருமானைத் தோத்திரம் செய்து ஆனந்தக் கண்ணீர் பெருக

நின்றாள். அக்கணம் பரமேச்வரன் அவள் முன் தோன்றி, ''என்ன வரம் வேண்டும்' என்று கேட்க, பூமிதேவி, ''உங்கள் தரிசனத்தைவிட பெரிய வரம் என்ன இருக்கிறது? உமது பாதங்களில் அசையாத பக்தி இருக்கும்படி எனக்கு அருளுங்கள். எனக்குக் காட்சி தந்த இத்தலத்தில் நீங்கள் என்றென்றும் உமாதேவியுடன் விளங்க வேண்டும். இங்கு வசிப்பவர்களுக்கு எல்லா செல்வங்களும் அளித்து, கடைசி காலத்தில் அவர்கள் காதில் ஐந்தெழுத்தை ஓதி, அவர்களுக்கு நற்கதியளிக்க வேண்டும். என் பெயரில் இருக்கும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்களுக்கு சகல காரியங்களும் கைகூடும்படி வரம் வழங்குங்கள்' என்று விண்ணப்பிக்க, 'அப்படியே ஆகட்டும், என்று அருளாசி வழங்கிவிட்டு பரமேச்வரனும் சிவலிங்கத்திற்குள் மறைந்தார்.

பூமீச்வரரைத் துதிப்பதற்காகப் பூமி தேவியால் இயற்றப்பட்ட பஞ்சரத்ன தோத்திரத்தை பிருஹஸ்பதி ஏற்றுக் கொண்டு, தமது சீடர்களான கண்வர் முதலிய ரிஷிகளுக்கு கூறினார். இவ்வாறு பரம்பரையாக வந்துள்ள இந்த தோத்திரத்தைப் படிப்பவர்களுக்கு எல்லா சித்திகளும் உண்டாகும். இதைப் புஸ்கத்தில் எழுதி பூஜை செய்தால் அது பூமீச்வரம் ஆகிறது. இதை ஈசனின் சந்நிதியில் படித்தால் வேதபாராயணம் செய்த பலன் உண்டாகும். ஆறு மாதங்கள் சுவாமிக்கு அர்ச்சனை செய்து இத்துதியைப் படித்தால் பல விதமான நோய்களிலிருந்தும் நிவாரணம் பெறலாம். இதர பலன்களும் பூமீச்வர புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பூமிதேவி இயற்றிய துதியை இங்கே காணலாம்.

1. நமோ நமஸ்தே ஜகதீச்வராய சிவாய
   லோகஸ்ய ஹிதாய சம்பவே
   அபார ஸம்ஸார ஸமுத்தராய
   நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய

2. விஸ்வாதிகாய அதிவிமானகாய ஸோமாய
ஸோமார்த்த விபூஷணாய
ஸ்ரீ காளகண்டாய க்ருபாகராய
நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய

3. ஆஸாம்பராய அம்பர வர்ஜிதாய
திகம்பராய அம்பிகாய யுதாய
குணத்ரயாத்யை அபவர்ஜிதாய
நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய

4. மாயாவிகாராதி விவர்ஜிதாய
மாயாதிருடாய தபஸ்திதாய
கலாதிருடாய கபர்திநே ச
நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய

5. கபாலினே காம விவர்ஜிதாய
கதம்ப மாலா கலிதாய பூம்னே
நிரஞ்சனாயாமித தேஜஸே ச
நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய

கோனேரி ராஜபுரம் என்று தற்போது வழங்கப்படும் ஸ்ரீ பூமீச்வர திருத்தலத்திற்குத் தேவாரப் பெயர் 'நல்லம்' என்பதாகும். 'நமையாள்வான் நல்லம் நகரானே' என்று புகழ்கிறார் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள். 'நமக்கு நல்லது நல்லம் அடைவதே' என்று அறிவுரை கூறுகிறார் நாவுக்கரசர் பெருமான்.

'நல்ல நல்லம் எனும் பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே'

என்று இத்தலத்தின் பெருமையைப் பறைசாற்றுகிறார் திருநாவுக்கரசர்.

இத் திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவர் ஸ்ரீ உமா மகேச்வரர். மேற்கே பார்த்த திருச்சந்நிதி. முன்புறம் இருக்கும் அழகிய பெரிய குளத்தின் பெயர் பிரும்மதீர்த்தம்.

முன் காலத்தில் முறையாக வேதம் ஓதிய உத்தம அந்தணர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்தத் திருக்குளம், ஊருக்கே அழகூட்டுகிறது. அமாவாசைதோறும் இந்த பிரும்ம தீர்த்தத்தில் நீராடி, அரிசி, பருப்பு முதலிய வற்றை தானம் செய்தால் பாவங்கள் நீங்கி சிவலோகம் சென்றடையலாம் என்று தலபுராணம் கூறுகிறது. வைகாசி மாதம் முழுவதும் சூரியன் உதிக்கும் முன்பும், திங்கள், வெள்ளிக் கிழமைகளிலும், சூரிய சந்திர கிரகணங்களிலும், பிறந்த நாளிலும் இக் குளத்தில் நீராடி ஸ்ரீ உமாமகேச்வரரைத் தரிசித்து, ஆலயத்தினுள் இருக்கும் ஞானக் கிணற்று நீரைப் பருகினால் எல்லா பாவங்களும் விலகும் என்றும், இந்தத் திருக்குளத்தின் வடகரையில் வசித்துக் கொண்டு எல்லோருக்கும் உணவளித்து உபசரித்து, ஸ்ரீ உமாமகேச்வரருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து வருபவர்கள் நிச்சயம் முக்தியடைவார்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆலயத்திற்குள் நுழைகிறோம். முதலில் கண்ணில் படுவது இடப்புறம் உள்ள ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி சந்நிதியின் மீதுள்ள ஓர் ஆளுயர மனித உருவம்தான் — பழைய கட்டடக் கலைக்கோ, சிற்பக் கலைக்கோ சிறிதும் சம்பந்தமில்லாமல் — திருஷ்டிப் பரிகாரமாக! இருபது வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது வைக்கப்பட்டதாம். எதற்காகவோ? அது பற்றி அங்கிருந்தவர்களுக்குத் தெரிய வில்லை. அடுத்த கும்பாபிஷேகத்தின் போது எடுத்து விட்டால் ஒரு குறைவுமிருக்காது; நிறைவாகவே இருக்கும்.

முன்மண்டபத்தினுள் செல்பவர்கள் தயவுசெய்து நிமிர்ந்து பார்க்க மறந்து விடாதீர்கள். மேலே அருமையான வண்ண சித்திரங்கள் இருக்கின்றன. கழுத்து வலியைப் பொருட்படுத்தாமல் பொறுமையாகப் பாருங்கள். எழுபது, எண்பது வருடங்களுக்கு முன் இருந்த பிரமுகர்களையும் கலைஞர்களையும் அவர்களது அந்தக் காலத்து

உடைகளையும் கலாசார நடைமுறைகளையும் அப்படியே ஓவியங்களாகத் தீட்டி வைத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல; ஆலயத்தில் நடை பெற்ற பிரும்மோற்சவத்தை, அந்தக் கால முறைகளும் வைபவங்களும் மாறாமல், முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் என்று அப்படியே எழுதி வைத்திருக்கிறார்கள். கலர்ப் புகைப்படம் எடுத்திருந்தால் கூட இத்தனை 'டீடைல்ஸ்' கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. மறுபடியும் பழைய பந்தாவுடன் திருவிழாக்கள் நடைபெறும் காலம் வந்தால்—வர வேண்டும் என்பதுதான் எல்லோர் பிரார்த்தனை—எப்படி நடத்த வேண்டும் என்பதை முன்னோர்கள் நமக்குக் காட்டி விட்டுப் போயிருக்கிறார்கள். அதற்காகவாவது, கோனேரிராஜபுரம் இளைஞர்கள், பெரியவர்களின் ஒத்துழைப்புடன் அதே அழகுடனும் மேன்மைகளுடனும் பிரும்மோற்சவத்தை நடத்திக் காட்ட முன்வருவார்களா?

வடக்கே உள்ள வாகன மண்டபத்திலும் பழங்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. அவை மிக வேகமாக அழிந்து கொண்டிருக்கின்றன. இப்போதாவது தக்க நடவடிக்கைகள் எடுத்து, முடிந்தவற்றைக் காப்பாற்ற வேண்டும். சாதாரணமாக ஆலயங்களில் தெய்வத் திருவிளையாடல்களும் புராண நிகழ்ச்சிகளும் அரண்மனைத் தர்பார்களும்தான் ஓவியங்களாகத் தீட்டி வைக்கப் பட்டிருக்கும். ஆனால், இந்தக் கோயிலில் திருவிழாக் காட்சிகளையும், சமுதாய நிகழ்ச்சிகளையும், கலைஞர்களையும் தீட்டி வைத்திருப்பது அபூர்வமானது; ஆலயத்திற்கு வட பகுதியில் இருக்கும் அம்பாள் கோயில் மண்டபத்திலும் இம் மாதிரியான ஓவியங்கள் இருந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன. கை தேர்ந்த ஓவியர்களைக் கொண்டு அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்க முடியுமா என்று முயன்று பார்க்கலாம். பழங்கலைகளை முடிந்தவரையில் பாது

காப்பது ஒவ்வொரு தலைமுறையினரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

அம்பாளின் திருநாமம் ஸ்ரீ தேஹ சுந்தரி. தமிழில், அங்கவள நாயகி.

வடக்குப் பிராகாரத்தின் கோடியில் ஸ்ரீவைத்தியநாதர் திருச்சந்நிதியுள்ளது.

புரூரவஸ் என்ற மாமன்னன் ஒரு சமயம் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தபோது, கர்க முனிவரின் கடுந்தவத்தைக் கலைத்ததோடு, அவரை நிந்திக்கவும் செய்தான். அந்தப் பாவத்திற்காகத் தொழுநோயால் கஷ்டப் படும்படி முனிவரால் சபிக்கப்பட்டான். அதனினின்றும் விமோசனம் பெறுவதற்காக அவன் காவிரியின் இருகரைகளிலும் உள்ள திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வரும்போது ஓர் அசரீரி கேட்டது.

''அரசனே, பூமீச்வரம் என்ற திருநல்லத் திருத்தலத்தையடைந்து, அங்கு உமாமகேச்வரருக்கு அருகில் ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தால் நீ முனிவரது சாபத்திலிருந்து விடுபடுவாய்.''

அவ்வாறே புருவரவஸ் இத்தலத்தையடைந்து பூமி தீர்த்தத்திலும் (தற்போது காளவாய்க் குட்டை) பிரும்ம தீர்த்தத்திலும் நீராடி, திருக்குளத்திற்கு மேற்கிலுள்ள 'பத்ரம்' என்ற தல விருட்சமான அரசமரத்தினடியிலுள்ள விநாயாப் பெருமானை வ்ணங்கிவிட்டு, ஆலயத்தினுள் சென்று, ஸ்ரீ உமாமகேச்வரரின் பெருமைகளையும் மகிமைகளையும் பலவறாகப் போற்றிப் புகழ்ந்து, தோத்தரித்துத் தரிசித்து, நெடுஞ்சாண் கிடையாக அவர் முன் விழுந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி மௌனமாக நின்றான்.

இதனால் மகிழ்ந்த ஈசன், சிவலிங்கத்தினின்றும் தோன்றி, தமக்கு வடகிழக்கே ஒரு சிவலிங்கத்தைப்

பிரதிஷ்டை செய்து ஆராதித்தால் நோய் நீங்கும் என்றும், அந்த சிவலிங்கம் 'வைத்தியலிங்கம்' என்று பெயர் பெற்று விளங்கும் என்றும் அருள்வாக்கு அருளிவிட்டு மீண்டும் லிங்கத்திற்குள் மறைந்தார்.

அரசன், கௌதம ரிஷியை ஆசாரியனாகக் கொண்டு, ஸ்ரீ வைத்தியநாதர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து முறைப்படி வழிபட்டார். அதன் பலனாகத் தொழுநோய் நீங்கப்பெற்று, பழைய அழகான சரீரத்தைப் பெற்றார். தன் நாட்டிலிருந்து செல்வங்களை வரவழைத்து, பெருமானுக்கு ரத்தினங்கள் இழைத்த நகைகளும், கவசங்களும் வகை வகையான வாகனங்களும் செய்ததோடு, வைகாசி மாதத்தில் பிரமாண்ட அளவில் பிரும்மோற்சவத்தையும் நடத்தி வைத்து விட்டு ஊருக்குத் திரும்பி, பல ஆண்டுகள் நல்லாட்சி புரிந்துவிட்டு நற்கதியடைந்தான்.

பிரும்மாவின் திருவாக்கு இதோ: 'சிறந்த அறிவாளியான புரூரவஸ் மன்னனால் நிறுவப்பட்டு மேற்கு நோக்கிக் காட்சியளிக்கும் ஆதிவைத்தியநாதரை அரைக்கணமாவது தரிசித்து பூஜிப்பவன் தொழுநோய் முதலான எல்லாவித நோய்களிலிருந்தும், பிறர் பொருட்களைத் திருடுகின்ற தோஷத்திலிருந்தும் உடனே விடுபடுகின்றான்; இதில் சந்தேகமேயில்லை,'

இக்கோயிலில் உள்ள மற்றொரு சிறப்பு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதிக்கருகில் உள்ள ஞான கூபம் என்ற ஞானக் கிணறாகும். அதன் மகிமையை நந்திகேசர், விவரிக்கக் கேட்போம்:

''ஞானக் கிணற்று நீரைப் பார்த்தாலும் பருகினாலும் ஈடில்லாத சிவஞானம் உண்டாகும். இதன் மகிமையைக் கேட்டுக் கௌட தேசத்திலிருந்து வேத விற்பன்னரான ஓர் அந்தணர் வந்தார். வடகிழக்கிலுள்ள நாகம்பாடியில் ஒரு

குடில் அமைத்துக் கொண்டு தவமியற்றி வந்தார். அவர் இக்கிணற்று நீரைப் பருகி வீடுபேறடைந்தார். அவருக்கு சுமதி என்றொரு பெண். அவள் அழகிய கிளி ஒன்று வளர்த்து வந்தாள். அதற்குப் பேசக் கற்றுக் கொடுத்து, உயர்ந்த ஞானத்தை அளிக்கும் பொருட்டு ஞானகூபத்தின் நீரையும் பருகச் செய்தாள். ஞானம் பெற்ற அந்தக் கிளி, தலவிருட்சமான அரச மரத்தில் வந்து அமர்ந்து, மக்களைப் பார்த்து 'இந்தத் தலத்திற்கு வாருங்கள். இங்கு ஞான கூபம் என்ற ஒரு புண்ணிய தீர்த்தம் உளது. அதன் நீரைப் பருகியதால் பறவையாகிய எனக்கே ஞானம் கிடைத்து விட்டது. நீங்களும் இத்தீர்த்தத்தின் ஒருதுளியை ஓம் எனும் மந்திரத்துடன் பருகுவீர்களானால் பஞ்சமா பாதகங்களும் பெற்று, சிவஞானம் கிடைக்கப் பெற்று சிவனுடைய ஸ்தானத்தை அடைவீர்கள். தேவர்களின் மேல் ஆணை, சந்தேகம் வேண்டாம்'' என்று முழங்கிற்று. அதைக் கேட்டுப் பலரும் இங்கு வந்து இந்த நீரைப் பருகி முக்தியடைந்தனர். ஆறாயிரம் ஆண்டுகள் பிரும்ம ராட்சஸாக இருந்த ஒருவனும், இந்நீரைப் பருகி சுய உருப் பெற்று உய்ந்தான்.

சிவபெருமானுடைய ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசிப்பதற்காக முன் காலத்தில் இந்த பத்ராஸ்வத்த வனத்திற்கு மூவாயிரம் மகரிஷிகள் வந்து தவமியற்றியிருக்கிறார்கள். அவர்களில் முதன்மையாய் விளங்கிய கௌதமர் அரசமரத்தடியில் அமர்ந்து சிவபஞ்சாட்சரத்தை ஓதி, நூறு ஆண்டுகள் தவமியற்றினார். அப்போது அந்த அரச மரத்திற்குத் தெற்கேயுள்ள 'ஹரிச்ருதர்' எனப்படும் அரசலாற்றின் கரையில் பவானி தேவியுடன் பகவான் காட்சி அளித்தார். அதைக் கண்டு ஆனந்தித்த கௌதமர் ஆனந்தத் தாண்டவத்தைக் காட்டியருளும்படி பகவானிடம் வேண்டினார். அதற்குப் பகவான், ''பின்னர் இங்கே பூமிதேவி என்னைப் பூஜிக்க வரும்போது என் நடனக் கோலத்தைக் காட்டப்போகிறேன், அதுவரை பொறுமையா

யிருங்கள்'' என்று கூற, ரிஷிகளும் அதுவரை காத் திருந்து, ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தை கண்டுகளித்தனர்.

இத்தலபுராண வரலாற்றின் இந்த அடிப்படையில், இங்கு செம்பியன் மாதேவியார் பிருமாண்டமானதொரு நடராஜர் சிலையையும், அதற்கேற்ப சிவகாமசுந்தரி விக்ரகமும் செய்து வைத்ததாகக் கூறப்படுகிறது. கண் படைத்தோர் ஒவ்வொருவரும் காணவேண்டிய வடிவங்கள் இவை.

ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்த செம்பியன் மாதேவியார் சிவபூஜை செய்வது போன்ற புடைச் சிற்பம் ஒன்று ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதிக்கருகில் இருக்கக் காணலாம்.

ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு 1969-ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். அங்குள்ள ராமர் சந்நிதி நம்மை 'வா வா' என்றழைக்கிறது. கருடாழ்வார். அனுமான் வாகனங்கள் நல்ல நிலையில் உள்ளன.

வனதுர்க்கையம்மனுக்குத் தனிக் கோயிலிருக்கிறது. கூரையில்லாமல் இருந்தவள் தற்போது கூரையோடு இருக் கிறாள்; ஆனால், மூலவருக்கு மேலே ஒரு துவாரம் வைத் திருக்கிறார்கள். கோனேரி ராஜபுரம் ஊர் மக்களின் இறை பக்தியும் ஈடுபாடும் மனதுக்கு இதமாக இருக்கிறது.

திருவைகல்

கோனேரிராஜபுரம் ஸ்ரீ உமாமகேச்வரர் ஆலயத்தைச் சுற்றி எட்டுத் திக்குகளிலும் உள்ள ஆலயங்களைத்தரிசனம்

செய்வோம் வாருங்கள். நாம் வடமேற்குத் திசையில் இருந்து புறப்படுவோம்.

திருவைகல் என்ற தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்; திருஞானசம்பந்தப் பெருமான் பதிகம் பாடிப் பெருமைச் சேர்த்த ஊர். மாயவரம்-கும்பகோணத்திற்கிடையில் உள்ள ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து தெற்கே மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ளது திருநீலக்குடித் தேவராத் தலம். அங்கிருந்து, காரைக்கால்செல்லும் பேருந்துப் பாதையில், புளியடி ஊரையடுத்துநாட்டார்வாய்க்காலைக்கடந்து, தெற்கே ஒரு கிலோமீட்டார் சென்றால் இத்திருத்தலத்தை அடையலாம். கும்பகோணத்திலிருந்து காரைக்கால் பாதையில் சொல்லும் பேருந்துகளில் ஏறினாலும் வைகல் வந்து சேரலாம்.

இங்கு மூன்று சிவாலயங்கள் இருக்கின்றன. ஊருக்கு வடக்கே உள்ள ஸ்ரீ பிருகந்நாயகி சமேத ஸ்ரீ பிரும்மபுரீச்வரர் ஆலயம் சிவபெருமானின் இடக்கண் போலவும், தெற்கே உள்ள ஸ்ரீ விசாலட்சி சமேத விச்வநாதர் ஆலயம், அவரது வலக்கண் போலவும், மேற்கே உள்ள ஸ்ரீ சாகாகோமளவல்லி சமேத ஸ்ரீ வைகல்நாதர் ஆலயம் அவரது நெற்றிக்கண் போலவும் திகழ்கின்றன.

பிருமாண்ட புராணத்தில் ஐந்து அத்தியாயங்களில் இத்தலத்தின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

திருமால் பூமிதேவியை மணந்ததால் திருமகளுக்குக் கோபம். சண்பகவனமான இந்த இடத்தில் அவள் சிவ பெருமானைக் குறித்துத் தவமியற்றினாள். பின்னர் திருமாலும் பூமிதேவியும் இங்கு வந்தனர். பிரம்மதேவனும் வந்து சிவபெருமானை வழி பட்டார். சிவபெருமானின் அருள் முயற்சியால் திருமால் ஸ்ரீதேவியுடன் மீண்டும் இணைந்து, ஸ்ரீதேவி, பூதேவியுடன் எழுந்தருளினார். அவர்களது திருமணக் கோலத்தை, சிவபெருமானும் பார்வதி சமேதராய்க் கண்டு களித்தார்.

அகத்தியரும் இந்திரனும் வழிபட்ட தலம் இது. ஆண் யானை ஒன்று, பெண் யானையைக் காணாமல் வருந்தி, அங்கிருந்த ஈசல் புற்றைச் சிதைத்தது. அதிலிருந்து புறப்பட்ட ஈசல்கள் அந்த யானையைக் கடித்துத் துன்புறுத்திக் கொன்றன. அதனால் வருந்திய அந்தப் பெண் யானையும், கொலை பாவத்தால் துயருற்ற ஈசல்களும் இத்தலத்து சிவ பெருமானை வழிபட்டு உய்ந்தன.

இம்மூன்று கோயில்களிலும் அதிகமாகப் புழக்கத்தில் உள்ளது வடக்கேயுள்ள பிரமன் வழிபட்ட பிரும்மபுரீச்வர சுவாமி கோயிலே. கிழக்கே பார்த்திருக்கும் சந்நிதி. முன்புறம் பிரும்ம தீர்த்தத் திருக்குளம் இருக்கிறது. கிழக்கே நுழைவாயில் இருந்தாலும் தற்போது அது அடைக்கப்பட்டுள்ளது. தென்புறம் உள்ள வாயில் வழியாகத்தான் கோயிலுக்குச் செல்ல வேண்டும். நேரே ஸ்ரீ பிருகந்நாயகி சந்நிதியுள்ளது. பெரிய நாயகியானாலும், சிறிய வடிவம்தான். பிரமன், நான்கு வேதங்களை நான்கு மாலைகளாக்கி சுவாமிக்கு அணிவித்தாராம். ராஜ கோபுரம் இல்லை. மதில் சுவர் ஆங்காங்கே பிளந்திருக்கிறது. வடக்குப்புறம் மிகவும் சிதிலமடைந்திருக்கிறது. யாகசாலையும், ஸ்டோர் ரூமும் இடிந்து போயிருக்கின்றன. இக்கோயிலில் திருப்பணியாகி இருபத்தைந்து வருடங்கள் ஆனாலும் எல்லா விமானங்களும் நல்ல நிலையில் இருக்கின்றன. கோஷ்டங்களில் தட்சிணாமூர்த்தி, துர்க்கை சிலைகள் மட்டும் இருக்கின்றன.

முன் காலத்தில் உற்சவங்களெல்லாம் சிறப்பாக நடந்திருக்கின்றன என்பதற்கு அடையாளமாக, மேற்குப்பிராகாரத்தில் வாகனங்கள் இருக்கின்றன. அந்தக் காலத்து வேலைப்பாடாயிற்றே. அதியற்புதமாக இருக்கிறது. ரிஷபம், குதிரை, மூஞ்சூறு, அன்னபட்சி, காமதேனு எல்லாமே, சிறிது ரிப்பேர் செய்து வண்ணம் பூசினால் புதிதாகிவிடும். ஓரிரு பல்லக்குகளும் இருக்கின்றன.

ஸ்ரீ விச்வநாதசுவாமி ஆலயம் ஊரின் தென்புறம் உள்ளது. இது திருமால் வழிபட்டது. சிறிய கோயில்தான். ஒரே பிராகாரம். இதுவும் கிழக்கே பார்த்த சந்நிதிதான். மண்டபத்தில் கணபதி, சுப்ரமணியர், சண்டேச்வர மூர்த்தி — மூவரும் இருக்கின்றனர்.

ஊருக்குப் பெருமை தரும் மாடக் கோயில் ஊரின் மேற்றிசையில் இருக்கிறது. கோச் செங்கட் சோழன் கட்டிய 64 மாடக் கோயில்களில் இதுவும் ஒன்றாகும். மகாலட்சுமி வழிபட்டது.

'கொம்பியல் கோதைமுன்
 அஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த
 துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ்
 வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்
 செங்கணான் செய் கோயிலே'

'பூங்கொம்பு போன்று அசைந்து நடக்கும் உமையம்மை அஞ்சுமாறு யானையை உரித்துப் போர்த்த இறைவர் விளங்குமிடம், சோலைகள் சூழ்ந்த வைகலின் மேற்றிசையில் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக் கோயிலாகும்' என்கிறார் ஞானசம்பந்தப் பெருமான்.

கொம்பியல் கோதை என்று ஞான சம்பந்தராலும், கொம்பிளங் கோதை என்று உமாபதி சிவாசாரியாராலும் அழைக்கப்படும் அம்பாளின் திருநாமம் சாகாகோமளவல்லி. சுவாமியின் திருநாமம் ஸ்ரீ சம்பககோமளேச்வரர், அல்லது ஸ்ரீ சம்பகாரண்யேச்வரர். தமிழில் வைகல்நாதர். வைகல் மணாளன் என்கிறார் அப்பர் சுவாமிகள்.

இதுவும் கிழக்குப் பார்த்த கோயில்தான். துவார விநாயகரைத் தரிசித்துக் கொண்டு கட்டைக் கோபுரவாச

லுக்குள்ளே நுழைந்தால் மாடக்கோயிலுக்கு அடையாள மாக உயர்ந்த மேடை. இந்த மேடைக்கு முன்புறம் படிகள் இல்லை. தெற்கிலும் வடக்கிலும் உள்ள படிகள் வழியாகத் தான் ஏறிப் போக வேண்டும். ஒரே பிராகாரம். வலம் வரும்போது, அம்பாள் சந்நிதியைச் சேர்த்தே சுற்று கிறோம். சுவாமி உயர்ந்த மேடையில் வீற்றிருக்கிறார். அம்பிகை, சுவாமிக்கு வலப்புறம் சற்றுத் தாழ்வான பகுதியில் கோயில் கொண்டிருக்கிறாள்.

கோஷ்டத்திலுள்ள தட்சிணாமூர்த்தி கலையழகும் தெய்வீக சோபையும் ஒருங்கிணைந்த அற்புத வடிவம், மேற்குப் பிராகாரத்தில் தலபுராணத்தை மெய்ப்பித்துக் கொண்டு ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார்.

வைகல் மணாளனைத் தரிசிக்கிறோம். நெஞ்சம் நிறை கிறது. பின்னர், கொடி போல் அசைந்தாடும் அம்பிகையின் அருளைப் பெறுகிறோம்.

வைகலில் உள்ள ஐயனாரையும் தரிசிக்கிறோம். அவர் இருந்த கோயில் இடிந்து போய், தற்போது ஓர் ஓலைக் கொட்டகையில் சுவாமி வாசம் செய்கிறார், பாவம்! விரை விலேயே கல் கட்டடத்தில் குடியேறி விடுவார் என்ற நம்பிக்கையோடு வைகல்வாழ் மெய்யன்பர்களிடமிருந்து விடைபெறுகிறோம்.

புதூர்

கோனேரிராஜ புரத்திற்கு வடக்கிலுள்ளது புதூர். இக் கிராமத்திற்கு 'திருத்தண்டிகைபுரம்' என்ற பெயரும் உண்டு. இந்த ஊர் ஐயனார், ஐந்து கிராமங்களுக்கும் பொதுவானதால், இது 'பொது ஊர்' என்றாகி பின்னர்'

வழக்கில் 'புதூர்' என்று மருவி விட்டதாகவும் கூறு கிறார்கள். பிற புதூர்களிலிருந்து பிரித்து அடையாளம் காண்பதற்காக 'செங்கரங்குடி புதூர்' என்று அழைக் கிறார்கள். சுருக்கமாக செ. புதூர் என்றும், ஆங்கிலத்தில் எஸ். புதூர் என்ற போஸ்டல் பெயரும் பெற்றுள்ளது இது.

ஐயனார் கோயில் பஸ் பாதையிலிருந்தே தெரியும்.

இங்கு ஸ்ரீசனத்குமாரேச்வர சுவாமி, உடனுறை சௌந்தர்யநாயகி ஆலயம் உள்ளது, மிகப் புராதனமான கோயில். ஒரு சாபத்தினால் குபேரன் செல்வமெல்லாம் இழந்து, வறுமையில் வாடி, அதற்குப் பரிகாரமாக மாசி மாதம் இத்தலத்திலுள்ள சோம தீர்த்தத்தில் நீராடி, சுவாமி தரிசனம் செய்து பழைய நிலையை அடைந்தான் என்பது தல வரலாறு.

கோடி மங்கலம்

அங்குள்ள கோயிலின் அர்ச்சகர், கோடி மங்கலத்தில் இருக்கிறார். புதூரை அடுத்துள்ள நாட்டாறு வாய்க் காலைக் கடந்து இடப்புறம் திரும்பினால் கோடிமங்கலம் குக்கிராமம். நாங்கள் சென்றபோது, அர்ச்சகர் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதியில் உள்ளூர்க்காரருக்குப் பிரசாதம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ விச்வநாதர் — விசாலாட்சி எழுந்தருளியிருக்கும் சிறிய கச்சிதமான கோயில் அது. மேற்கு பிராகாரத்தில் சிறிய விநாயகர், சுப்ரமணியர், லட்சுமி, மீனாட்சி - சுந்தரேச்வரர் முதலியோர் இருக்கிறார்கள். கிழக்கில் நுழைவாயில் இருப்பினும் தெற்கு வாசல்தான் திறந்திருக் கிறது. அவ்வூரில் ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயிலும்

இருக்கிறது. கருவறையில் தென்புறம் பார்த்து ஸ்ரீதேவி பூதேவியுடன் ஸ்ரீவரதராஜரின் பெரிய உருவச் சிலை இருக்கிறது.

அர்ச்சகரை அழைத்துக்கொண்டு புதூருக்கு வந்தோம். அறங்காவலர் தம்புசுவாமிப் பிள்ளையவர்களுக்கு எங்களை அறிமுகம் செய்துவிட்டு, அவர் அனுமதியைப் பெற்றுக் கொண்டு எங்களை ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார் அர்ச்சகர்.

மேற்குப் பார்த்த சுவாமி சந்நிதி; அம்பாள் தெற்கு நோக்கியிருக்கிறாள். சூரியன், சந்திரன், ஞானசம்பந்தர், அப்பர் உருவச்சிலைகள் இருக்கின்றன. கோஷ்டத்தில் லிங்கோற்பவர்- தட்சிணாமூர்த்தி. விநாயகர் இருக்கிறார்கள்.

விமானங்களும் மண்டபங்களும் இடிந்து பாழடைந்து போயிருக்கும் அந்தக் கோயிலைப் பெருமுயற்சி செய்து புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். உடைந்து போயிருக்கும் குதிரை, ரிஷப வாகனங்களைப் பார்த்தால் சுவாமி புறப்பாடு திருவிழாவெல்லாம் முறையாக நடைபெற்றுக் கொண்டிருந்த கோயில் என்பது விளங்குகிறது. தென்புறப் பிராகாரத்தில், புதர்களை அகற்றிக் காய்கறித் தோட்டம் போடப்பட்டிருக்கிறது. சுவாமி, அம்பாள், சுப்ரமணியர், பிள்ளையார், சண்டிகேச்வரர், நந்தி விமானங்கள் கட்டி முடிக்கப்பட்ட நிலையிலிருக்கின்றன. முன் மண்டப வேலை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் கை வைத்தால், செலவு இழுத்து விடும். தம்புசுவாமி செய்துவிடவேண்டும் என்று துடியாய் இருக்கிறார். வேலையை ஏற்றுக் கொள்ள கிராமத்திலுள்ள ஆட்கள் தயங்குகிறார்களாம். ஆனால் தம்புசுவாமி அதிகம் பேசாததிலிருந்து, அவர் எதையும் செய்து காட்டக் கூடியவர் என்பது புரிந்தது. விரைவிலேயே திருப்பணி வேலைகள் முடிந்து, குட முழுக்கும் நடைபெற்று விடும் என்பதில் சந்தேகமில்லை.

நல்லாவூர்

அடுத்தது நல்லாவூர்; அதுவும் நாட்டாற்றின் அக் கரையில்தான் உள்ளது. மூங்கில் பாலத்தைக் கடந்து சென்றோம். கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார் ஸ்ரீ பசுபதீச்வரர். உடனுறைபவள், சௌந்தர்யநாயகி.

ராஜ கோபுரத்துடன் கூடிய அழகிய கோயில். நாங்கள் சென்றிருந்த போது கோயில் தெய்விகக் களையுடன் பளிச் சென்றிருந்தது. பஞ்சாபகேச குருக்கள் சிரத்தையுடன் கோயிலைக் கவனித்துக் கொள்கிறார் என்பது புரிந்தது.

மேற்குப் பிராகாரத்தில் விநாயகருக்கு அடுத்தபடி, ஸ்ரீதேவி பூதேவியுடன் மிகப் பெரிய ஸ்ரீநிவாசர் காட்சி தந்து கொண்டிருந்தார். 'இந்த விக்ரகங்கள் நிச்சயமாக அந்தக் கோயிலைச் சேர்ந்தது அல்ல. இடிந்து போன வேறு ஏதோ ஒரு கோயிலிலிருந்து கொண்டு வந்து வைத்திருப் பார்கள் போலிருக்கிறது' என்று நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோதே, 'ஆமாம், பெருமாள் வேறு கோயிலில் இருந்தவர் தான்' என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வந்தார். அவர் புதூர் பள்ளியில் தலைமையாசிரிய ராகப் பணி புரிகிறார் என்று அறிந்து கொண்டோம். பெயர் நாகரத்தினம். ஆலயத்திற்கு எதிரிலேயே அவரது இல்லம். அவர் கண்பார்வையிலே எப்போதும் இருப்பதா லேயே, கோயிலும் முறையோடு இயங்கி வருவதை உணர முடிந்தது.

ஸ்ரீநிவாசப் பெருமாள் எப்போது சிவன் கோயிலில் குடியேறினார் என்று தலைமையாசிரியரால் உறுதியாகக் கூற முடியவில்லை. பெருமாள் அருகிலுள்ள நிலத்தில் புதையுண்டு இருந்ததாகவும், பல வருடங்களுக்கு முன் கண்டெடுக்கப்பட்டு இங்கு எழுந்தருளப் பண்ணப்பட்டிருக்

கிறார் என்றும் தெரிவித்தார். சிவன் கோயிலுக்குப் பின்னால் 'பெருமாள்களம்' என்று ஓரிடம் குறிப்பிடப்படுகிறது. அதனால் அந்த இடத்தில் ஒரு காலத்தில் ஸ்ரீநிவாசர் கோயில் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கிறார்கள்.

நாகம்பாடி

கோனேரிராஜபுரத்திற்குக் கிழக்கிலுள்ளது நாகம்பாடி. நல்லாவூரிலிருந்து கார் செல்ல வசதியான பாதை இல்லாததால், மீண்டும் நாட்டாற்றைக் கடந்து இக்கரை வந்து, பஸ் பாதையில் பாலையூர் வரை சென்று, அங்குள்ள கான்க்ரீட் பாலத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும் என்று கூறினார்கள்.

அவ்வாறே வந்து, கான்க்ரீட் பாலத்திற்குத் திரும்பும் முன், பரமேச்வரபுரத்தில் காரை நிறுத்தினோம். இடப்புறத்தில் பாழடைந்து போயிருக்கும் ஒரு புராதனக் கோயில். பக்கத்தில் குடிசை ஒன்றில் வசிக்கும் மூதாட்டி, புதர்களுக்கிடையே இருக்கும் சிவலிங்கத்திற்குத் தினம் நீர் ஊற்றி ஒரு மலர் வைத்துக் கொண்டிருக்கிறார். அப் 'பூஜை' தவறாமல் நடந்து கொண்டிருக்கிறதா என்று விசாரிக்கக் குடிசைக்குச் சென்றோம். நாங்கள் சென்ற போது மூதாட்டி ஊரிலில்லை. இளைஞர் ஒருவர் இருந்தார். வழக்கமான 'பூஜை' யோடு வாரம் ஒரு முறை எண்ணெய்க் காப்பும் நடைபெறுவதாகக் கூறினார் அவர். இவர்களின் உண்மையான பக்திக்குப் பெருமான் மனமிரங்கி, சிறிய அளவிலே தனக்கொரு கோயில் எழுப்பிக் கொண்டு, அக்குடும்பத்தினரின் உள்ளத்தில் பேரானந்தம் பொங்கச் செய்து ஊருக்கும் ஒளி வழங்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டோம்.

நாகம்பாடிக்குச் செல்லும் வழியில், எனக்கு மிகப் பழக்கப்பட்டிருந்த அப்பெயர் என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. ஸ்ரீகாஞ்சி காமகோடி ஸ்ரீமடத்துடன் தொடர்பு கொண்ட ஊர் அது என்ற நினைவு நெஞ்சில் இனிமை சுவை கூட்டியது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் காஞ்சிப் பெரியவர் கோனேரிராஜபுரத்திற்குக் கிழக்கிலுள்ள அன்னியூரில், (வன்னியூர்) முகாமிட்டிருந்த போது, தரிசனத்திற்குச் சென்றிருந்த சுவாமிநாதப் பிள்ளையிடம் ஸ்ரீ சந்திர மௌளீச்வரரின் சிவராத்திரி பூஜை கைங்கரியத்தை ஏற்றுக் கொள்ளும்படி அருட்கட்டளையிட்டிருக்கிறார் சுவாமிகள். அன்று முதல் இன்றுவரை, ஸ்ரீமடம் எங்கு முகாமிட்டிருந்தாலும், சிவராத்திரியன்று இந்தப் பண்ணையிலிருந்து பூஜா திரவியங்களும், மளிகைச் சாமான்களும், காய்கறி வகைகளும் ஸ்ரீ மடத்திற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறார் சுவாமிநாதப் பிள்ளை. பொருட்களை அனுப்பி வைப்பது மட்டுமின்றி, தமது நட்பும் சுற்றமும் சூழ சிவராத்திரி தரிசனத்திற்குச் சென்று, மறுநாள் பிரசாதம் பெற்றுக் கொண்டு திரும்புவதை வாழ்க்கையின் கிடைத்தற்கரிய பேறாகக் கருதி வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது வயதைக் கடந்த பெரிய பண்ணையாரான சுவாமிநாதப் பிள்ளையவர்கள்.

சிவராத்திரி பூஜை நடைபெறப் போகும் முகாம் பற்றிய தகவல் முன்பே பிள்ளையவர்களுக்கு வந்து விடுமாம். உடனே தம் உறவினர்களுக்கும் பிறருக்கும் தம் கைப்பட, 'அங்கு வந்து சேர்ந்துவிடும்படி' கடிதம் போட்டு விடுவாராம்.

நாங்கள் நாகம்பாடி சென்றபோது சுவாமிநாதப் பிள்ளை ஊரில் இல்லை. அக்குறையைத் தீர்த்து வைத்தார்கள், அவருடைய புதல்வர்களான கௌரி சங்கரும், முத்துக்குமாரும், அன்பைப் பொழிந்து உபசரித்ததிலும்,

தங்களூர் ஆலயத்திற்கு அமைதியாக அரும்பணியாற்றிக் கொண்டிருப்பதைப்பற்றி அடக்கமாகக் கூறியதிலும் பரம்பரைப் பண்பைக் கண்டு மகிழ்ந்தோம்.

தெய்வச் சிலைகளும் திருச்சந்நிதிகளும் முறையாக உள்ள அம்சமான கோயில் அது. உற்சவமூர்த்திகளில், சோமாஸ்கந்தரும் ஸ்ரீநடராஜர் — சிவகாமசுந்தரியும் வெகு நேர்த்தியாக இருக்கின்றனர்.

ஆலயத்திற்கு எதிரில் இந்திர தீர்த்தக் குளம் இருக்கிறது. இங்கு ஆனி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் நீராடி தானங்கள் செய்தால் தேவலோகம் சென்றடையலாம். அதன் வடப்புறத்தில் ஒரு பெரிய அரசமரம். ஏ.சி. அறையில் எப்போதும் ஒரு குளுமை. அந்தச் சூழ்நிலை உடலுக்கும் மனசுக்கும் இதமாக இருக்கிறது. சுற்றிலும் எத்தனையோ வகை மலர்ச் செடிகள். சுகந்தமும், அமைதியான சூழலும் சிந்தையை ஆட்கொண்டு, ஆயுள் முழுவதும் இங்கேயே கழித்துவிடமாட்டோமா என்று நம்மை ஏங்க வைக்கின்றன.

அன்னியூர்

புதூரிலிருந்து வடமட்டம் சென்று, அங்கிருந்து கிழக்கே நன்னிலம் செல்லும் பாதையில் திரும்பினால் அன்னியூரை அடையலாம். மொத்தம் ஆறு கிலோ மீட்டர். நன்னிலத்திலிருந்து வடமேற்கில் இரண்டு மைல்.

தற்போது அன்னியூர் என்று அழைக்கப்பட்டாலும் இத்திருத்தலத்தின் தேவாரப் பெயர் வன்னியூர் ஆகும். தல விருட்சம் வன்னி மரம். அப்பர் பெருமான் கூறுகிறார்,

'ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைத் தார்க்கெல்லாம்

தானங் காட்டித்தன் றாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னியூரரே
குணங் கொள் கோளெட்டு மூர்த்தி யிணையடி
இணங்கு வார்கட் கினியது மாய் நின்றான்
வணங்கி மாமலர் கொண்டவர் வைகலும்
வணங்கு வார்மனத்தார்வன்னி யூரரே'

சிறிய ராஜ கோபுரத்துடன் கூடிய, கிழக்கு நோக்கிய சிறிய அழகிய கோயில், மரகதப் பாய் விரித்தாற்போல், புல் படர்ந்த ஒரே பிராகாரம். கோஷ்ட தேவதைகளும் எல்லா சந்நிதிகளும் இருக்கின்றன. மேற்குப்புறம் ஜுவரதேவர் லிங்க வடிவில் எழுந்தருளியிருக்கிறார்.

கோயில் நல்ல நிலைமில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நடராஜ குருக்களும், மகன் சுப்ரமணியனும் முறையான பூஜைகள் செய்து வருகிறார்கள். விமானங்களெல்லாம் நல்ல நிலையிலுள்ளன. அங்குமிங்கும் மூளியாகியுள்ள சுதை பிம்பங்களைப் பழுது பார்த்து, குறைந்த செலவில் எளிதாகக் கும்பாபிஷேகம் செய்ய விடலாம்.

சுவாமி, அக்னீச்வர், அம்பாள், கௌரி பார்வதி, எதிரில் அக்னி தீர்த்தக்குளம்.

அன்னியூரில், சீதா லட்சுமணருடன் ஸ்ரீ கோதண்ட ராமர் எழுந்தருளியுள்ளார். சிவன் கோயிலுக்கு தென் மேற்கே யுள்ளது இக்கோயில்.

இக்கோயிலில் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் சீனிவாச ஐயங்கார் என்பவர் ஸ்ரீ ரகுவீர ஆஞ்ச நேயரைப் பிரதிஷ்டை செய்துள்ளார். வரப்பிரசாதியான அந்த ஆஞ்சநேயர், சிறுவர்கள் மூலம் அருள்வாக்கு அருளு கிறாராம். இன்றும் இந்த அதிசயம் நடைபெறுவதாகக் கூறுகிறார்கள். அச்சிறுவனின் காதில் மூலமந்திரத்தை ஓதுகிறார் பட்டாச்சாரியார். அவன் தீப ஒளியைப் பார்க்

கிறான். பக்தர்கள் குறைகளைக் கூறுகிறார்கள். பிரச்னைகளுக்குத் தீர்வு கேட்கிறார்கள். சிறுவனின் காதில் ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி ஏதோ கூற, அதைச் சிறுவன் அப்படியே கூறுகிறானாம்.

முன்பு பட்டாச்சாரியாரின் மகனே 'பேசினான்' தற்போது மாரியப்பன் என்ற சிறுவன் மூலம் அருள் பாலித்து வருகிறாராம் ஸ்ரீ ரகுவீர ஆஞ்சநேயர்.

அங்கு விளையாடிக் கொண்டிருந்த மாரியப்பனிடம் கேட்டபோது,

''அனுமார் என் காதிலே சொல்றதை நான் அப்படியே சொல்லுவேன்'' என்றான் சர்வ சாதாரணமாக.

பூங்குடி

அன்னியூரிலிருந்து வடமட்டத்திற்குத் திரும்பி வரும் வழியில், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் பூங்குடி என்ற குக்கிராமம் இருக்கிறது. பாதை ஓரமாகவே ஒரு சிறு கோயில் கண்ணில் தென்பட்டது. நின்றோம்.

புதிய கோயில், சிறிய கோயில். முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குமுன், கோனேரிராஜபுரம் ஆத்திக சகோதரர்களான சீனுவாச ஐயர், சாமிநாத ஐயர் இருவரும் சேர்ந்து கட்டிய கோயில் அது. சுவாமியின் திருநாமம் பவேச்வரர்; அம்பிகை, பார்வதி. பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் இரண்டாவது கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார்கள். அநேகமாகப் பல ஆண்டுகளாக முத்துசாமி குருக்களே பூஜை செய்து வருகிறார். ஆதி கணபதி, மகா கணபதி, பாலசுப்ரமணியர், லட்சுமிநாராயணப் பெருமாள்,

சூரியன், சந்திரன், சனீச்வரர் அனைவரும் இங்கு எழுந்தருளியிருக்கின்றனர். அங்கு ஒன்றரையடி உயரத்தில் நடராஜ உற்சவமூர்த்தி ஒன்றிருக்கிறது. இவருடைய விச்வரூப வடிவத்தைக் கோனேரிராஜபுரத்தில் பார்த்து அதிசயித்தோம்!

கோயிலுக்குத் தெற்கே ஓர் ஐயனாக கோயில்அங்குள்ள 'பாயும் குதிரை' வடிவம் பிருமாண்டமானதககவும், புதுமையாகவும் இருந்தது. கோயிலிலிருந்தே பார்த்துப் பிரமித்துப் போனோம்.

கருவேலி

வடமட்டத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தெற்கே சென்றால் 'கருவேலி' என்ற கிராமம். நாச்சியார் கோயிலிலிருந்து வந்தால் கிழக்கே ஆறு மைல். இங்கிருந்து இரண்டரை மைல் வட கிழக்கே கோனேரிராஜபுரம் இருக்கிறது. வடமட்டத்திலிருந்து முட்டையாற்றின் வடிகாலைக் கடந்து கரிவேலிக்குச் செல்லவேண்டும். அண்மையில் பெருகிய வெள்ளத்தில் அந்தக் கிராம் இடுப்பளவு தண்ணீரில் இரண்டு, மூன்று நாட்கள் மூழ்கியிருந்ததாம். நாங்கள் சென்றபோது வெள்ளம் அரித்த பாதையைச் சீர்செய்து கொண்டிருந்தார்கள்.

அது பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று. அப்பர் தேவாரத்தில் 'கருவிலி' என்றும் 'கொட்டிட்டை' என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

இறைவன் பெயர் சற்குண நாதர், இறைவி சர்வாங்க நாயகி. தலவிருட்சம் வில்வம். இந்திரனும் தேவர்களும்

பூஜித்த தலம். சற்குணன் என்ற அரசன் வழிபட்டு நற்நதி யடைந்த தலம். 'உருத்திர கணத்தினார் தொழுதேத்தும் கருவிலி' என்கிறார் அப்பரடிகள் தமது பதிகத்தில்.

ஊருக்கு சற்குணேச்வரம் என்ற பெயரும் உண்டு.

பழைய கோயில். மொட்டைக் கோபுரம். செடிகள் மண்டிக் கிடக்கும் பெரிய மதில் சுவர்கள் அங்கங்கே இடிந்து போயிருக்கின்றன. சுவாமி கோயிலுக்கு வடக்கே அம்பாள் கோயில் தனிப் பிராகாரத்துடன் விளங்குகிறது. பெரிய சிவலிங்கம். பெரிய அம்பாள். ஆறடி உயரமிருக்கும். திருப்பணி தொடங்கப்பட்டிருக்கிறது. விமானங்கள் வேலை முடிந்து, மற்றவையெல்லாம் அப்படியே நிற்கின்றன. எப்போது நிறைவேறப் போகிறதோ? எதிரில் பெரிய திருக்குளம். புராணப்படி, அது யமதீர்த்தம்.

அம்பாள் கோயில் மண்டபத்தில் சூரியன், சந்திரன், பாலசுப்ரமணியர், மூவர், மகாபலிச்சக்கரவர்த்தி (அர்ச்சகர் கூறியபடி) முதலிய வடிவங்கள் இருக்கின்றன.

பொதுவாகவே, இக் கோயிலிலுள்ள சிற்பங்களும் தெய்வச் சிலைகளும் கலையழகுடன் மிளிர்கின்றன. நின்ற கணபதி, அர்த்தநாரீச்வரர், தென் பிராகாரத்தில் உள்ள விநாயகர் எல்லாம் மிக நேர்த்தியான சிற்பங்கள். கவனிப்போ, பாதுகாப்போ இல்லாமல் இருக்கும் நம் புராதனக் கிராம கோயில்களில் இதுவும் ஒன்று.

பரவக்கரை

திரும்பும் வழியில், பரவக்கரையில் வெங்கடாசலபதி பெருமாள் கோயிலைத் தரிசித்துக் கொண்டு சிவன்

கோயிலுக்கு வந்தோம். அங்கு மாணிக்கேச்வரர் மரகத வல்லி எழுந்தருளியுள்ளார்கள். எப்படியாவது திருப்பணி செய்து விட வேண்டும் என்று முழுமூச்சுடன் முனைந் துள்ளார் அறங்காவவர் ராமசுவாமி. கோயில் நிலத்தி லிருந்து வரவேண்டிய வருமானம் வராததால் பூஜையே நின்றுவிடும் நிலைக்கு வந்துவிட்டதாக வருத்தத்தோடு கூறினார் அவர். 'நெல் அளக்க வேண்டியவர்கள் அளக்க மாட்டேன் என்கிறார்கள்' என்று உள்ளம் குமுறக் கூறினார்.

வடமட்டத்திற்குச் சற்று தென் கிழக்கே மிகப் பெரிய மதுரை வீரன் சிலை இருக்கிறது. அருகில் அக்னிவீரன், காத்தாயி அம்மன், முனீச்வரர் எல்லாம் இருக்கிறார்கள்.

வயலூர்

வடமட்டத்திலிருந்து திருநீலக்குடி செல்லும் குறுக்குப் பாதையில் மூன்றாவது கிலோ மீட்டரில் வயலூர் என்ற கிராமம் இருக்கிறது. உள்ளே நுழையும் போதே திருக் குளமும் திருக்கோயிலும் ஆனந்தக் காட்சியாக நம்மை வரவேற்கின்றன.

''இந்த நிருதி தீர்த்தத்தில் சித்திரை மாத புதன்கிழமை களில் 'ஓம்' என்று உச்சரித்துக் கொண்டே நீராடி, பலவித பூக்கள் உள்ள ஆடையைத் தானம் செய்தால், கெட்ட கனவுகளின் பலனும் எல்லா பாவங்களும் நீங்கி விரும்பி யதையெல்லாம் அடைவார்கள். இது சத்தியம்.''

இந்தத் தகவல், கோனேரிராஜபுரம எஸ். ஜானகி அவர்கள், சமஸ்கிருதத்திலிருந்து தமிழாக்கிய 'திருநல்லத் தல வரலாறு! என்ற நூலில் காணப்படுகிறது.

வயலூரில் உறையும் சுவாமி, ஸ்ரீகார்கோடகேச்வரர். உடனுறைபவள், ஸ்ரீ மங்களாம்பிகை. சிறிய கோயில். முறையான பூஜைகள் நடைபெற்று வருகின்றன. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு இக்கோயிலில் குட முழுக்கு நடைபெற்றிருக்கிறது. சிவாலயத்திற்குரிய கோஷ்ட தேவதைகளும் திருச்சந்நிதிகளும் முறையாக அமைந்திருக்கும் இக்கோயிலைப் பற்றிய பண்டைய பெருமைகள், திருவீழிமிழிலைப் புராணத்தில் காணப்படுவ தாக அக்கோயிலின் வயோதிக அர்ச்சகர் கூறினார்.

அருகிலேயே ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் இருக்கிறது.

சிவனாரகரம்

கோனேரிராஜபுரத்துக்கு தென்மேற்கில் இருக்கிறது வயலூர். அடுத்து மேற்கிலுள்ள சிவனாரகரம் திருத்தலத் திற்குச் செல்கிறோம்.

கீர்த்திமான் ஆற்றின் வடகரையில் அமைந்திருக்கும் அமைதியான கோயில் இது. இது முன்பு ஆற்றங்கரையி லேயே இருந்திருக்கிறது. ஏதோ ஒரு வெள்ளத்தில் அக் கோயில் கட்டடம் சிதிலமடைந்து விட்டதால், ஐம்பது ஆண்டுகளுக்கு முன், அதை இந்த இடத்தில் நிறுவியிருக் கிறார்கள்.

இங்கு உறைபவர் வாருணேச்வரர். அம்பாள், ஜலமுகன் நாயகி. தீர்த்தம், வருண தீர்த்தம்.

வயலூரில் வசிக்கும் அருணாசல குருக்கள் தினமும் இங்கு வந்து பூஜைகள் செய்துவிட்டுப் போகிறார். அவருக்கு வாருணேச்வரர் மீது எல்லையில்லா பக்தி மட்டு மில்லை. அபார நம்பிக்கையுமிருக்கிறது. மழை வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு இந்தப் பெருமானுக்குச் சிறிய அபிஷேகம் செய்தால் கூட மழை பொழியுமாம்!

வானம் பொய்த்துவிடும் சமயங்களில் கோனேரிராஜ புரத்தில் நிறைய பணம் செலவு செய்து வருண ஜபம் செய் வார்களாம். மிகுதியான பணத்தில் ஸ்ரீ வாருணேச்வரருக்கு அபிஷேகம் செய்த பின்னர்தான் மழை கொட்டுமாம். இதைத் தம் சொந்த அனுபவத்திலேயே கண்டிருப்பதாகக் கூறினார் அருணாசல குருக்கள்.

நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும், 'கோயிலுக்குச் சொத்து இருக் கிறது. ஆனால், வருமானம் இல்லை' என்ற பேச்சுதான் காதில் விழுகிறது. அடுத்தபடி, அர்ச்சகர்களுக்கு சம்பளம் ஒழுங்காகத் தரப்படுவதில்லை என்ற புகார். 'ஆறு மாதம், ஒரு வருடம் பாக்கி' என்று சொல்கிறார்கள். கேட்க பரிதாபமாயிருக்கிறது. 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளை யார் கோவில் ஆண்டி' என்ற பழமொழி தற்போது, 'ஊருக்கு இளைத்தவர் கோயில் அர்ச்சகர்' என்ற பொது மொழியாக மாறிவிட்டிருக்கிறது. அர்ச்சகர்கள் மட்டு மல்ல; பொதுவாக ஆலயத்தில் சிறு ஊழியம் புரிபவர்கள் பலர் தங்களுக்குச் சேர வேண்டியது, வந்து சேருவதில்லை என்றே குறைபட்டுக் கொள்கிறார்கள். ஆண்டவனின் ஊழியர்கள் சிறுமைப் பட்டுக் கொண்டிருக்கும்போது, ஆலயத்தின் பெருமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப் பதில் அந்த ஆண்டவனுக்கே உடன்பாடு இராது என்று நிச்சயமாகக் கூறலாம். இவர்களது குறைகளைக் கேட் டறிந்து, இவர்கள் நிலையை உயர்த்துவதற்கு உளமார

முயன்று, ஓரளாவாவது நிவாரணம் கிடைக்க வழி செய்வது உண்மையான பக்தர்களின் கடமையாகும். எல்லையற்ற அந்த அன்பு சாம்ராஜ்யத்தில் பட்டினிக்கு இடமளிக்க லாமா? அதுவும் ஆலயத்தில் — ஆண்டவனையும் சேர்த்துத் தான் சொல்கிறேன்.

உண்மைதான்! இன்று தன் சொத்திலிருந்து வருமானம் வராததால் — தரப்படாததால் — பல கோயில்களில் உறையும் தெய்வங்கள் ஒரு வேளை நைவேத்தியத்திற்குக் கூட வழியின்றித் தவிக்கின்றன. கோயில் நைவேத்திய ஆராதனைகளுக்காக அந்தக் காலத்தில் நிலங்கள் எழுதி வைத்து விட்டுப் போகிறார்கள் பல கொடையாளிகள். அந்த நிலங்களில் விளைவதிலிருந்து கோயிலுக்கு ஒரு பங்கு கூடக் கொடுக்காமல் இருப்பதும் அதற்குச் சட்டம் துணை போவதும் நமது பரம்பரை தர்மப் பண்புகளுக்கு மாறான செயல்களாகும்.

பரவக்கரை அறங்காவலர், 'நிலத்திலிருந்து வருமானம் வராததால், கோயில் நைவேத்தியமே நின்றுவிடும் நிலைக்கு வந்து விட்டது' என்று உள்ளம் குமுறினார். இவரைப்போல் எத்தனையோ பேர் கூறுகிறார்கள். சில நிர்வாக அதிகாரிகளோ மனம் வெதும்பி வெடித்துத் துடித்துப் போகிறார்கள். ஆலய தரிசன யாத்திரைகளின் போது, இத்தகைய செய்திகள் நம் உள்ளத்தில் ஏற்றும் பளுவைச்சுமந்து கொண்டு தான் ஒவ்வொரு முறையும் ஊர் திரும்புவது வழக்கம். ஆனால், இம்முறை அந்தப் பளுவைச் சற்று இறக்கி வைத்து, உள்ளத்தில் உவகையைக் குடியேற்ற முடிந்தது.

சிவலாரகரத்தில் சிவதரிசனம் முடித்துக் கொண்டு, கோயிலுக்கு அருகில் நின்றிருந்த சில குடியானவர்களிடம் பேச்சுக் கொடுத்தேன். கிராம நிலவரத்தைப் பற்றிப்

பேசிவிட்டு, ''கோயிலுக்கு நெல் அளக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''நாங்கள் பொய் சொல்லத் தயாராயில்லீங்க. எங்கள்லே ஒருத்தரும் நெல் அளக்கிறதில்லே. ஆனா, இந்த ஊர்லே ஒருத்தர் அளக்கிறார்'' என்றார் அவர்களில் ஒருவர். அவர் கூறியதை எல்லோருமே ஆமோதித்தார்கள்.

''யார் அந்தப் புண்ணியவான், எங்கேயிருக்கிறார்?'' என்று கேட்டேன், அவரைக் காண வேண்டும் என்ற ஆவலில்.

''அதோ அந்த மரத்தடியில் நெல் அளந்துக்கிட்டிருக்கிறாரே, அவர்தான். பெயர் சீனிவாசன்'' என்றார் மற்றொருவர்.

நேரே முதியவரான சீனிவாசனிடம் சென்று வணக்கம் தெரிவித்தோம். தோற்றத்தில் மிக மிக எளிமையானவர். நாங்கள்பேச்சுக் கொடுத்தபோது தன்னைப் பற்றி எதுவுமே பேச மறுத்து விட்டார். அவர்தன் கடமையைச் செய்வதற்குப் பாராட்டு எதற்கு' என்பதுபோல் அலட்சியமாக இருந்துவிட்டார்.

அவர் தம் வசமுள்ள ஐம்பது குழி கோயில் நிலத்தின் விளைச்சலில் பெரும் பங்கைக் கோயிலுக்குச் சேர்த்து விடுவார் என்று அர்ச்சகரும் கூறினார். ஒரு வருஷம் நெல் அதிக விலைக்கு விற்றால், அந்த லாபத்திலும் ஒரு பங்கை கோயிலுக்கு சேர்த்து விடுவாராம் சீனிவாசன்.

ஊருக்குத் திரும்பி வரும் வழியில் என்னுள் நினைத்துக் கொண்டேன்: 'சீனிவாசனைப்போல் 'கடமையிலும் நேர்மையிலும் தவறாத ஒரு சில 'நல்லார்'கள் இருப்பதால் தான் நாட்டில் இன்னும் மழைபெய்து கொண்டிருக்கிறதோ?'

★



மும்முடிச் சோழ பிரமமாராயன்
(தஞ்சைக் கலைக் கூடம்)